# அத்தி பூத்தது!



ராஜேஷ் குமார்

http://www.pustaka.co.in

# அத்தி பூத்தது!

# Athi Poothathu

Author:

ராஜேஷ் குமார்

Rajesh Kumar

For more books

http://www.pustaka.co.in/home/author/rajesh-kumar-novels

Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.
All other copyright © by Author.
All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

# அத்தி பூத்தது!

## உள்ளே

1. அத்தி பூத்தது!

2. அழகான நரகம்

3. கல் மனம்

4. அபிநயங்கள் ஊமையல்ல

5. சொப்னா எனும் ஒரு சொர்க்கம்

6. படியேறி வந்த கஸ்டமர்

7. குறிஞ்சிப்பூக்கள் எங்கும் பூக்கும்

8. என்றாவது ஒரு நாள்

9. கொடுத்து வைத்தவர்

10. நான் அவளைக் காதலிக்கிறேன்

11. பொறி

12. ஒரே ஒரு நாள்

13. பூவில் ஒரு ஆயுதம்

14. இதயா 2020

15. நடிப்பு

16. ஒரு பொய்யாவது சொல் கண்ணே!

17. நிழலும் சுடும்!

18. நிறங்கள்

19. நட்சத்திர மச்சம்

20. காற்று.

21. நானும் மேகாவும், ஒரு மெழுகுவர்த்தியும்!

22. நட்பே... நட்பே...!

23. இளம்பிறையின் இரவுகள்

24. அவன் உன்னைத் தொட்டதற்காக.

25. காதல் கட்சி

26. ஒரு ராத்திரி ஒரு தேவதை

27 நுனிப்புல்

28. வேலி

29. பனித்துளி கிரீடங்கள்

30. ஓர் அம்பு எய்யப்படுகிறது!

# 1. அத்தி பூத்தது!

ஹாஸ்பிடலின் முன்னறையில் போடப்பட்டிருந்த நீலவண்ணப் பாலிமர் நாற்காலிகளில் லட்சுமியும் குஞ்சிதபாதமும் உட்கார்ந்திருந்தார்கள். குடும்ப டாக்டர் ப்ரணேஷைப் பார்ப்பதற்காகக் கடந்த அரைமணி நேரமாய்க் காத்திருக்கிறார்கள்.

“என்னங்க..?”

லட்சுமியின் குரலில் தவிப்பு.

“ம்….”

“எனக்குப் பயமா இருக்குங்க...”

“எதுக்குப் பயம்...?”

“என்னோட ஸ்கேன் ரிப்போர்ட்டைப் பார்த்து விட்டு டாக்டர் என்ன சொல்லப் போறாரோன்னு தான்...”

“நீ பயப்படறமாதிரி எதுவும் நடக்காது லட்சுமி. மனசைப் போட்டு குழப்பிக்காமே தைரியமாயிரு...”

“இருக்க முடியலையே... என்னோட இருதயத்தைத் தொட்டுப் பாருங்க…! பாலத்து மேலே ரயில் ஒடற மாதிரி தடதடன்னு சத்தம்.

குஞ்சிதபாதம் தன் ஐம்பத்தைந்து வயது மனைவியை முறைத்தார். “இதோ பார் லட்சுமி... நாம யார்க்கும் எந்தக் கெடுதலையும் பண்ணலை. எல்லார்க்கும் நல்லதைத்தான் பண்ணியிருக்கோம்... டாக்டர் உன்னோட ஸ்கேன் ரிப்போர்ட்டைப் பார்த்துட்டு என்ன சொல்லப் போறார் தெரியுமா?”

“தெரியலையே…”

“பயப்படறதுக்கு ஒண்ணும் இல்லை... எல்லாமே நார்மலா இருக்குன்னு சொல்லப் போறார்...”

“அப்படிச் சொல்லிட்டா... அந்த அகிலாண்டேஸ்வரி அம்மனுக்கு அபிஷேகம் பண்ணிப் பட்டுப்புடவை சாத்திடுவேன்...”

“ரொம்பவும் காஸ்ட்லியா வேண்டிக்காதே லட்சுமி…! பட்டுப்புடவை

இப்போ என்ன விலை தெரியுமா..?”

“வேண்டுதல் பண்ணும் போது பழிக்கக் கூடாது. உங்க புத்தி ஏன் இப்படி போகுது..?” லட்சுமி சொல்லிக் கொண்டிருக்கும்போதே ஒரு நர்ஸ் குஞ்சிதபாதத்துக்கு பக்கத்தில் வந்து நின்றாள்.

“ஸார்... உங்களுக்குப் போன்...”

“போன்ல யாரம்மா..?”

“உங்க பெரிய மகன் தீபக்...”

குஞ்சிதபாதம் எழுந்தார். “லட்சுமி! நீ இங்கேயே இரு... நான் போய் பேசிட்டு வந்துடறேன்...”

ரிஸப்ஷன் கௌண்டருக்குப் போய் ரிஸிவரை எடுத்து காதில் கொடுத்தார்.

“ஹலோ...”

“அப்பா! நான் தீபக், ஆபீஸ்ல வேலையே பார்க்க முடியலை... அம்மாவோட ஸ்கேன் ரிப்போர்ட்டைப் பார்த்துட்டு டாக்டர் என்ன சொன்னார்...?”

“டாக்டரை இன்னும் பார்க்கலை...”

“என்னது... இன்னுமா பார்க்கலை...?”

“ஆமாண்டா... ஒரு ஆபரேஷனை அட்டெண்ட் பண்ணிட்டு டாக்டர் இப்பத்தான் ரூமுக்குள்ளேயே நுழைந்தார். எங்களுக்கு முன்னாடி ஓ.பி. பேஷண்ட்ஸ் ரெண்டு பேர் இருக்காங்க... அவங்களைப் பார்த்தப்புறம்தான் டாக்டர் எங்களை கூப்பிடுவார்…”

“ஸ்கேன் ரிப்போர்ட்டை நினைச்சா அம்மா ரொம்பவும் பயப்படறாங்களா அப்பா..?”

“அதையேன் கேக்கிறே... ஒரே புலம்பல்தான்...”

“டாக்டர் ஸ்கேன் ரிப்போர்ட்டைப் பார்த்துட்டு என்ன சொன்னார்ன்னு எனக்கு போன் பண்றீங்களாப்பா..?”

“ம்... பண்றேன்...”

குஞ்சிதபாதம் ரிஸீவரை வைத்துவிட்டுநகர்ந்த விநாடி - மறுபடியும்

டெலிபோன் கனைத்தது. ரிஸப்ஷனிஸ்ட் பெண் ரிஸிவரை எடுத்து செவிமடுத்துவிட்டு போய்க் கொண்டிருந்த குஞ்சிதபாதத்தைக் கூப்பிட்டாள்.

“ஸார்... போன் உங்களுக்குத்தான்...”

“போன்ல யாரு..?”

“கௌதம்!”

கௌதம் அவருடைய இளையமகன். தீபக்கைக் காட்டிலும் ஒரு வயது சிறியவன்.

குஞ்சிதபாதம் வேகவேகமாய் வந்து - ரிஸிவரை எடுத்து “ஹலோ” என்றார்.

“அப்பா! நான்... கௌதம்...”

“என்ன...?”

“ஆபீஸ்ல எனக்கு இருப்பே கொள்ளலை... அம்மா வோட ஸ்கேன் ரிப்போர்ட்டை பார்த்துட்டு டாக்டர் என்ன சொன்னார்?”

“டாக்டர் இன்னும் பார்க்கலை... எப்படியும் அரைமணி நேரம் ஆயிடும்... டாக்டர் பார்த்துச் சொன்னதும் உனக்கு போன் பண்றேன்...”

“அப்பா... அம்மாவுக்கு பெரிசா எதுவும் இருந்திடாதே?”

“ஒண்ணும் இருக்காது... டாக்டர் ‘நார்மல்’ன்னு சொல்லப் போறார்...”

“அரைமணி நேரம் கழிச்சு கண்டிப்பா எனக்கு போன் பண்ணுங்கப்பா... உங்க போனுக்காக நான் வெயிட் பண்ணிட்டிருப்பேன்.”

“ம்... பண்றேன்...”

குஞ்சிதபாதம் ரிஸிவரை வைத்து விட்டு மெல்ல நடைபோட்டு லட்சுமியை நெருங்கினார்.

அவள் கேட்டாள்.

“போன்ல யார்ங்க..?

“நம்ம பசங்கதான்... ஆபீஸ்ல ரெண்டு பேர்க்கும் இருப்பே

கொள்ளலையாம்... அம்மாவோட ஸ்கேன் ரிப்போர்ட்டைப் பார்த்து டாக்டர் என்ன சொன்னார்ன்னு கேட்டாங்க..?"

"உங்களுக்கோ... எனக்கோ ஏதாவது ஒண்ணுன்னா அவங்களால தாங்கிக்க முடியறதில்லை... இப்பேர்ப்பட்ட புள்ளைங்களை பெத்ததுக்கு நாம கொடுத்து வெச்சிருக்கணும்..."

லட்சுமி புலம்பிக் கொண்டிருக்கும் போதே - டாக்டர் அறைக்கதவை திறந்து கொண்டு - வெளியே எட்டிப் பார்த்த நர்ஸ் அவர்களைப் பார்த்து தலையசைத்தாள்.

"டாக்டர்... உங்களை வரச் சொன்னாங்க..."

குஞ்சிதபாதமும் லட்சுமியும் எழுந்து டாக்டரின் அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனார்கள்.

டாக்டர் ப்ரணேஷ் ஒரு சின்னப் புன்னகையோடு "வாங்க" எனச் சொல்லி நாற்காலிகளைக் காட்ட இரண்டு பேரும் உட்கார்ந்தார்கள்.

"ஸாரி... மிஸ்டர் குஞ்சிதபாதம்... ஒரு அவசர ஆபரேஷனை பண்ண வேண்டியிருந்தது... அதான் உங்களைகாக்க வெச்சுட்டேன்..."

"ஒரு டாக்டரையோ, வக்கீலையோ பாக்கறதுக்கு எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் காத்துட்டு இருக்கலாம்... என் ஒய்ஃப் லட்சுமிக்குத்தான் ஒரே டென்ஷன்.."

"எதுக்கு டென்ஷன்...?"

"ஸ்கேன் ரிப்போர்ட் எப்படியிருக்குமோன்னுதான்... உட்கார்ந்த அரை மணி நேரமும் புலம்பி தீர்த்துட்டா... மொதல்ல அந்த ரிப்போர்ட்டைப் பத்தி சொல்லிடுங்க டாக்டர்..."

டாக்டர் ப்ரணேஷ் தன் புன்னகையை அகலமாக்கி லட்சுமியிடம் திரும்பினார். "இதோ பாருங்கம்மா... நீங்க சொன்ன உடல் உபாதைகளை வெச்சு உங்களுக்கு கிட்னி ப்ராப்ளம் ஏதாவது இருக்குமோன்னு நினைச்சேன். அதுக்குத்தான் ரீனல் ஸ்கேன் எடுக்கச் சொன்னேன். ஸ்கேன் யூனிட்டிலிருந்து காலையிலே ரிப்போர்ட் வந்தாச்சு…"

லட்சுமி படபடப்பாய்க் கேட்டாள்.

"ரிப்போர்ட் என்ன சொல்றது டாக்டர்?"

"பயப்படறதுக்கு ஒண்ணுமே இல்லேம்மா... உங்க ரெண்டு கிட்னியும்

நல்லாத்தான் இருக்கு... உங்களோட உடல் உபாதைகளுக்கு காரணம் ஜெனரல் வீக்னஸ்தான். நான் இப்போ எழுதித் தந்த டானிக்கையும் மாத்திரைகளையும் ரெண்டு மாசத்துக்கு கண்டினியூ பண்ணுங்க சரியா போயிடும்."

லட்சுமி தன் நெஞ்சில் இரண்டு கைகளையும் வைத்துக் கொண்டு நீளமாய் ஒரு பெருமூச்சு விட்டாள். "அம்மாடி... நான் பயந்தே போயிட்டேன்... அம்மா அகிலாண்டேஸ்வரி உனக்கு பாலாபிஷேகம் பண்ணி பட்டுப்புடவை சாத்தறேன்..."

குஞ்சிதபாதம் மனைவியின் தோளைத் தட்டினார் மெல்ல.

"இப்ப சிரி…! காலையிலிருந்து என்னை எவ்வளவு படுத்தியிருப்பே?'

ப்ரணேஷ் குறுக்கிட்டார்." 'கிட்னி பெய்லியர்' என்ற விஷயம் இப்போ சர்வசாதாரணமாய் ஆயிடுத்தும்மா... கிட்னி பெய்லியர் ஆயிட்டா உடனே மாற்று சிறுநீரகத்தை பொருத்திக்க பழகிட்டா... ஒரு எந்திரத்துல ஒரு பார்ட் கெட்டுப் போயிட்டா ஸ்பேர் பார்ட்ஸ் வாங்கி பொருத்திக்கற மாதிரி… இந்த கலியுகத்துல மனுஷன் வியாதிகளைத் தாங்கிக்க பழகிக்கணும். உங்களுக்கு இப்போ... ரெண்டு கிட்னியும் பெயிலியராயிருக்குன்னு வெச்சுக்கலாம். என்ன பண்ணுவேன் தெரியுமா..?"

"எ... எ... என்ன. பண்ணுவீங்க... டாக்டர்...?"

"உங்க ரெண்டு பையன்களையும் வரவழைப்பேன். ஏன்னா அவங்க ரெண்டு பேர்க்கும் உங்கரத்த க்ரூப் டைப் ஆஃப் டிஷ்யூவும் ஒரே மாதிரிதான். ஸோ ரெண்டு பேர்ல யார் வேணுமின்னாலும் கிட்னி தரலாம். ஆரோக்கியமா இருக்கிற அவங்க கிட்னி ஒண்ணை பொருத்தினாலே... நீங்க இன்னும் ஒரு பதினஞ்சு வருஷம் உயிரோட இருக்கலாம்… ஆக உங்களுக்கு அப்படியொரு 'கிட்னி பெய்லியர்' நிலைமை ஏற்பட்டா... உங்க சன்ஸ் கிட்னி தர முன்வருவாங்களான்னு ஒரு சின்ன சந்தேகம்..."

லட்சுமி படபடப்பாய்க் குறுக்கிட்டாள். "என்ன சொன்னீங்க டாக்டர்... அவங்க கிட்னி தர மாட்டாங்களா..? எனக்கு ஏதாவது ஒண்ணுன்னா அவங்களாலே தாங்கிக்க முடியாது டாக்டர். எனக்கு உடம்பு சரியில்லைன்னா... இவர்கூட கல்லுளி மங்கன் மாதிரி உட்கார்ந்திட்டிருப்பார். ஆனா பசங்க ரெண்டு பேரும் 'அம்மா... உனக்கு என்னம்மா'ன்னு கேட்டு துடிச்சுப் போயிடு வாங்க... கொஞ்ச நேரத்துக்கு முந்தி கூட 'ஸ்கேன் ரிப்போர்ட் என்னாச்சு'ன்னு கேட்டு ஆபீஸிலிருந்து போன் பண்ணியிருந்தாங்க…"

டாக்டர் சிரித்தார். “வாய்ல பேசறதுக்கும் அதை செயல்ல காட்டறதுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கம்மா... நான் என்னோட இருபது வருஷ டாக்டர் சர்வீஸ்ல எத்தனையோ, அப்பா அம்மாக்களையும் அவங்க செய்த புன்னகைகளையும் பார்த்துட்டேன். அவங்க மத்தியிலே பாசம், அன்பு அதெல்லாம் இல்லாம இல்லை. இருக்கு... ஆனா... கிட்னியை கொடுக்கிற அளவுக்கு இல்லை…”

“டாக்டர்! மத்தவங்க புள்ளைங்க எப்படியோ இருந்திருக்கலாம். ஆனா, என்னோட புள்ளைங்க அப்படி இருக்க மாட்டாங்க…”

“உங்களுக்கு அப்படியொரு நம்பிக்கை இருந்தா எனக்கு சந்தோஷம்தான்.”

“எனக்கு இருக்கிற நம்பிக்கை உங்களுக்கும் வரணும் டாக்டர்... அதுக்காக ஒரு பரீட்சை வேணுமின்னா நடத்தி பார்த்துடலாம்…”

“பரீட்சையா?”

“ஆமா. பாசப் பரீட்சை...”

“அம்மா... நீங்க என்ன சொல்றீங்க..?”

“என்னோட ரெண்டு மகன்களுக்கும் இப்போ இந்த ஸ்கேன் ரிப்போர்ட் பற்றி எதுவும் தெரியாது இல்லையா டாக்டர்…”

“ஆமா...”

“அவங்க ரெண்டு பேர்க்கும் நீங்க இப்போ போன் பண்றீங்க..?”

“போன் பண்ணி...?”

“உடனடியா இங்கே வரச் சொல்லுங்க. வந்ததும் என்னோட ஸ்கேன் ரிப்போர்ட்டைப் பத்தி ஒரு பொய்யான தகவல் குடுங்க.”

“என்னான்னு...?”

“உங்க அம்மாவுக்கு ரெண்டு கிட்னியும் பெயிலியர். உடனடியா மாற்று சிறுநீரக ஆபரேஷன் ஒண்ணை பண்ணியாகணும். உங்க ரெண்டு பேர்ல யாராவது ஒருத்தர் சிறுநீரகம் கொடுத்தா உடனே ஆபரேஷன் பண்ணிடலாம்ன்னு சொல்லுங்க…”

டாக்டர் புன்னகைத்தார்.

“சொன்னா என்ன ஆகும் தெரியுமோ..? ரெண்டு பேரும் ஏதாவது ஒரு

காரணத்தைச் சொல்லி தங்களை கழட்டிக்கப் பார்ப்பாங்க...”

“என் புள்ளைங்க அப்படிகழட்டிக்க மாட்டாங்க... நீங்க வேணுமின்னா போன் பண்ணி அவங்களை வரவழைங்க... நாங்க அவங்களுக்குத் தெரியாமே பக்கத்து ரூம்ல இருக்கோம்... நீங்க விஷயத்தை சொல்லிப் பாருங்க...”

“வேண்டாம். எதுக்கு இந்த விஷப்பரீட்சை... உங்க உடம்புக்குத்தான் ஒண்ணும் இல்லைன்னு ஆயிடுச்சே...”

“இல்ல டாக்டர் இது விஷப்பரீட்சை இல்லை... எனக்கு நிதர்சனமா தெரியற உண்மை... உங்களுக்கும் அந்த உண்மை தெரியணும். தயவு பண்ணி என் மகன் களுக்கு போன் பண்ணி வரவழைங்க...”

“குஞ்சிதபாதம் குறுக்கிட்டார். “டாக்டர்! லட்சுமி சொல்றது சரிதான்... ரெண்டு சன்ஸ்ஸும் எங்க மேல எவ்வளவு பிரியம் வெச்சிருக்காங்கன்னுதெரிஞ்சுக்க இது ஒரு சந்தர்ப்பம்... அவங்களுக்கு போன் பண்ணி வர வழைங்க...”

டாக்டர் புன்னகையோடுரிஸிவரை எடுத்தார். “ஜெயிக்கப் போறது... நீங்களா... நானா பார்த்துடலாம்... இந்தக் காலத்துப் பசங்க பெத்தவங்க மேல எவ்வளவு பாசம் வெச்சிருக்காங்கன்னு எனக்குத் தெரியாதா என்ன..? கொஞ்ச நேரத்துல உங்க பாசத்தோட சாயம் வெளுத்துடப் போவுது... பசங்க போன் நம்பர் என்ன..?”

குஞ்சிதபாதம் சொன்னார்.

அடுத்த அரைமணி நேரத்துக்குள்ளாக மூத்தவன் தீபக்கும் இளையவன் கௌதமும் ஹாஸ்பிடலுக்கு வந்து டாக்டர் ப்ரணேஷ்க்கு முன்பாய் பதட்டம் பரவிய முகங்களோடு உட்கார்ந்திருந்தார்கள்.

பக்கத்து அறையில் லட்சுமியும், குஞ்சிதபாதமும் மூச்சுவிடாமல் நாற்காலிகளில் சாய்ந்திருந்தார்கள்.

தீபக் படபடத்தான்.

“டாக்டர்! போன் பண்ணி எங்களை அவசரமா வரச்சொன்னீங்களே... என்ன விஷயம்...?”

ப்ரணேஷ் முகத்தை சீரியஸாக வைத்துக் கொண்டார். ஒரு அதிர்ச்சியான விஷயத்தை உங்ககிட்ட சொல்ல வேண்டியிருக்கு.”

“அதிர்ச்சியான விஷயமா..?”

“ஆமா... உங்க அம்மாவோட ஸ்கேன் ரிப்போர்ட் ஒரு பெரிய வெடிகுண்டை கால்விட்டு பத்திருக்கு...”

“டாக்டர்...! நீங்க என்ன சொல்றீங்க..?”

“அம்மாவுக்கு ரெண்டு கிட்னியும் பெயிலியர்... உட னடியா ஒரு மாற்று சிறுநீரகத்தை பொருத்தியாகணும்…”

“டா..க்..ட..ர்...”

இருவரும் அதிர்ச்சியில் உறைந்தார்கள்.

டாக்டர் தொடர்ந்தார். “அம்மாவோட ரத்த க்ரூப்பும் உங்க ரெண்டு பேரோட ரத்த க்ரூப்பும் ஒரே வகையைச் சேர்ந்ததுனால உங்க ரெண்டு பேர்ல யார் வேணுமின் னாலும். அம்மாவுக்கு கிட்னி தரலாம்...”

அறைக்குள் சில விநாடிகள் அமைதி.

இருவரையும் கூர்மையாய் பார்த்துக் கொண்டே டாக்டர் கேட்டார். “உங்க ரெண்டு பேர்ல அம்மாவுக்கு யார் கிட்னி தரப் போறீங்க?”

மௌனம்.

பக்கத்து அறையில் இருந்த லட்சுமியும் குஞ்சித பாதமும் காதுகளுக்கு உன்னிப்பைக் கொடுத்தார்கள்.

சில விநாடிகளுக்குப் பிறகு மூத்தவன் தீபக் குரல் கேட்டது.

“நான் தர்றேன் டாக்டர்...”

அவன் சொல்லி முடிக்கவில்லை. இளையவன் கௌதம் குறுக்கிட்டான். “அம்மாவுக்கு கிட்னி நான் தர்றேன் டாக்டர்.”

“தம்பி வேண்டாம் டாக்டர்... நான் தர்றேன்...”

“நோ... நோ... அம்மாவுக்கு என்னோட கிட்னியைத்தான் பொருத்தணும்...”

“அதெல்லாம் முடியாது... தாய்க்கு தலைமகன்கிறது பழமொழி டாக்டர். இவன் சொல்றதைக் கேட்காதீங்க. நான் இப்பவே ரெடி என்னோட கிட்னியை எடுத்துக்குங்க...”

“நான் ஒத்துக்க மாட்டேன்... அம்மாவுக்கு கிட்னியை நான்தான்

தருவேன்...”

ப்ரணேஷ் புன்னகையோடு இருவரையும் கையமர்த்தினார். “நீங்க ரெண்டு பேரும் போட்டி போட்டுகிட்டு அம்மாவுக்கு கிட்னியை தர முன் வந்ததுக்கு என்னோட மகிழ்ச்சியை தெரிவிக்கிறேன். நாளைக்கு காலையில ரெண்டு பேரும் வாங்க. சில பூர்வாங்க டெஸ்ட்களைப் பண்ணிப் பார்த்துட்டு யாரோட கிட்னி சரியா இருக்கும்ன்னு சொல்லிடறேன். இப்ப நீங்க ஆபீஸஸுக்குப் போகலாம்…”

இருவரும எழுந்தார்கள்.

தீபக் தழுதழுக்கிற குரலில் கேட்டான். “டாக்டர்! அம்மாவுக்கு மாற்று சிறுநீரகம் பொருத்தின பிறகு அம்மாவால ஹெல்த்தியா இருக்க முடியுமா..?”

“ஒரு பத்து பதினஞ்சு வருஷத்துக்கு அம்மா எந்த பிரச்னையும் இல்லாமே சந்தோஷமா இருக்கலாம்.”

தீபக்கும் கௌதமும் அறையை விட்டு வெளியேறிய ஒரு நிமிஷத்திற்குப் பிறகு பக்கத்து அறையிலிருந்து லட்சுமியும் குஞ்சிதபாதமும் அகலமான புன்னகையோடு வெளிப்பட்டார்கள்.

லட்சுமி பூரித்த முகமாய் கேட்டாள்.

“இப்ப... என்ன சொல்றீங்க டாக்டர்...”

“என்னோட தோல்வியை ஒத்துகிறேன்... ஒரு தாய் மேல இவ்வளவு பாசமா இருக்கிற பிள்ளைகளை நான் பார்த்தது இல்லை. இப்பேர்ப்பட்ட பிள்ளைகளை பெற நீங்க குடுத்து வைச்சிருக்கணும்... உங்களுக்கு கிட்னியைத் தரணும்ங்கிறதுல ரெண்டு பேர்க்கும் நடுவில என்ன ஒரு போட்டி..?”

குஞ்சிதபாதம் ப்ரணேஷை ஏறிட்டார். “டாக்டர், பாசத்தை தெரிஞ்சுக்கிறதுக்காக - நடத்தப்பட்ட இந்த சோதனையைப் பத்தி தீபக், கௌதம் ரெண்டு பேர்க்குமே தெரியவேண்டாம்… நாளைக்கு அவங்கபூர்வாங்க டெஸ்ட் டுக்கு வந்தா... அம்மாவுக்கு மாற்று சிறுநீரக ஆபரேஷன் தேவையில்லை. ஊசி மருந்து மூலமே அம்மாவோட கிட்னி கோளாறுகளை சரிப்படுத்திட முடியும்ன்னு சொல்லிடுங்க..”

“அப்படித்தானே சொல்லப் போறேன்…”

“நாங்க வர்றோம். டாக்டர்...”

“ப்ரிஸ்க்ரிப்ஷன்ல எழுதிக் கொடுத்தபடி மருந்துகளை ஒழுங்கா சாப்பிட்டு வாங்கம்மா... ஜென்ரல் வீக்னஸ் சரியா போயிடும்...”

லட்சுமி புன்னகைத்தாள். “டாக்டர் என் பிள்ளைகள் ரெண்டு பேரும் என் பேர்ல வெச்சிருக்கிற பிரியம்தான் எனக்கு உண்மையான மருந்து. இந்த மருந்து ஒண்ணே போதும் எனக்கு. இன்னும் முப்பது வருஷம் உயிரோட இருப்பேன்...”

இருவரும் கைகளைக் குலுக்கி விட்டு வெளியேறினார்கள். அவர்கள் சென்று பத்து நிமிஷம் இருக்கும்.

ப்ரணேஷின் மேஜை மேல் இருந்த டெலிபோன் அடித்தது.

ரிஸிவரை எடுத்தார் டாக்டர்.

“ஹலோ...”

“டாக்டர்! நான் தீபக், அம்மாவும் அப்பாவும் வீட்டுக்கு பறப்பட்டு போயிட்டாங்களா?”

“ம்... போயிட்டாங்க...”

“ரொம்ப நன்றி டாக்டர்.”

“எதுக்கு நன்றி...?”

“அம்மாவும் அப்பாவும் எங்களுக்கு வெச்சிருந்த ‘டெஸ்ட்’டை பத்தி நீங்க மட்டும் சரியான நேரத்துல - ஒரு ப்ரிஸ்க்ரிப்ஷன் பேப்பர்ல எழுதி நர்ஸ் மூலமா தெரியப்படுத்தாமே இருந்திருந்தா... இக்கட்டான நிலைமையிலே மாட்டியிருப்போம்...”

டாக்டர் சிரித்தார்.

“சரி... இப்ப நான் கேக்கிறேன்... உண்மையிலேயே உங்க அம்மாவுக்கு கிட்னி பெயிலியராகியிருந்தா... கிட்னி குடுக்க முன் வருவீங்களா..?”

“அதெப்படி டாக்டர்... தரமுடியும்...? வாழ்ந்து முடிஞ்சவங்க அவங்க... இனிமே கிட்னியை பொருத்திக்கிட்டு என்ன பண்ணப் போறாங்க..? இருக்கிற கிட்னியோடு சில நாட்கள் இருந்துட்டு போய்ச் சேர வேண்டியதுதானே?”

“உன்னோட தம்பி கௌதமும் இதைத்தான் சொன்னாரா.?”

“ஆமா டாக்டர்...”

“உங்க ரெண்டு பேர்கிட்டயிருந்து இது மாதிரியான பதில்தான் வரும்ன்னு எனக்கு முன்னாடியே தெரியும். அதனால்தான் ப்ரிஸ்க்ரிப்ஷன் தாளில் விபரத்தை எழுதி நர்ஸ்கிட்டே கொடுத்து வாசல்ல நிக்க வெச்சேன்... விஷயத்தை தெரிஞ்சிக்கிட்டு ரெண்டு பேரும்... முகத்தில அதிர்ச்சியைக் காட்டி அற்புதமா நடிச்சிட்டீங்க... இந்த போலி பாசத்தையாவது ஒழுங்கா காட்டிடுவாங்க... ஏன்னா தற்சமயம் இதுதான் அவசரத்துக்கு மருந்து…”

ஒரு தாயின் சந்தோஷத்தை கெடுத்துவிடாமல் காப்பாற்றிய நிம்மதியோடு ரிஸிவரைச் சாத்தினார் டாக்டர் ப்ரணேஷ்.

# 2. அழகான நரகம்

நியூயார்க் மெட்ரோபாலிடன் நகரத்தில் தாம்ஸன்பார்க் ஒரமாய் நடைபோட்டுக் கொண்டிருந்த போது, என் இடுப்பு பெல்ட்டில் அவஸ்தையாய் இடம் பிடித்து இருந்த செல்போன் என்னைக் கூப்பிட்டது.

எடுத்து யார் என்று பார்த்தேன். ஒரு புது நெம்பர்.

காதுக்குப் பொருத்தி “எஸ்” என்றேன்.

மறுமுனையில் வெண்ணெய்யும் க்ரீமும் கலந்த தினுசில் ஒரு பெண் குரல்.

“மிஸ்டர் வெங்கடராமானுஜம்...?”

“எஸ்...”

“நான் உமையாள்...! அபார்ட்மெண்ட்டை ஷேர் பண்ணிக் கொள்ள ஆள் வேண்டும் என்று ஈவினிங் டுடே திரிகையில் விளம்பரம் கொடுத்து இருப்பது நீங்கள் தானே...?”

“ஆமாம்...”

“நான் உங்கள் அபார்ட்மெண்ட்டை ஷேர் பண்ணிக் கொள்ளத் தயார். காரணம் நீங்களும் தமிழ்நாடு. நானும் தமிழ்நாடு... ஒருத்தருக்கு ஒருத்தர் உதவியாகவும் அனு சரணையாகவும் இருக்கலாம். முக்கியமாக தமிழ் பேசலாம். நீங்கள் சரி என்று சொன்னால் நாம் நேரில் சந்தித்துப் பேசுவோம்.”

“அது... வந்து...”

“என்ன... உங்கள் குரலில் ஒரு இழுவை...?”

“அது ஒன்றுமில்லை... ஒரு சின்ன தயக்கம்...”

“அந்தத் தயக்கம் என்ன என்று எனக்குப் புரிகிறது. நீங்கள் ஒரு ஆண். நான் ஒரு பெண். இருவரும் எப்படி ஒரே அபார்ட்மெண்டில் நாட்களைக் கழிப்பது என்ற யோசனை! சரிதானா?”

“ரொம்ப சரி...?”

“ஒரே அபார்ட்மெண்ட்டில் ஒரு ஆணும், பெண்ணும் நல்ல நண்பர்களாகப் பழகி, ஒரு உதாரணத்தை உண்டாக்க முடியாதா என்ன..? எனக்கு அந்த நம்பிக்கை இருக்கிறது. உங்களுக்கும் அந்த நம்பிக்கை இருந்தால் நாம் சந்திப்போம். இல்லையென்றால், ஒரு ‘பை, பை’ சொல்லி விட்டு செல்போனை அணைத்து விடுங்கள்.”

“நாம் சந்திப்போம்...” என்றேன்.

சந்தித்தோம்.

நான் எதிர்பார்த்ததைக் காட்டிலும் உமையாள் சற்று அதிகப்படியான அழகோடு இருந்தாள். “இதோ! இளமை… இளமை!” என்று அவளுடைய எல்லா அங்கங்களும் பாட்டுப் பாடியது.

சாலையோரப் பூங்கா ஒரமாய் நடந்தோம்.

“பை... த... பை... உங்களை நான் “வெங்கட்னு ஷார்ட்டா கூப்பிடலாமா...?” என்றாள்.

“தாராளமாய்...”

“நீங்க இங்கே நியூயார்க்ல என்ன பண்றீங்க வெங்கட்..?”

“உண்மையைச் சொல்லிடறேன் உமை...! உங்களை உமைன்னு கூப்பிடலாமா..?”

அவள் பர்மிஷன் கொடுத்ததற்கு அடையாளமாய்த் தலையசைத்ததும் நான் தொடர்ந்தேன். “எனக்கு சாஃப்ட் வேர் வரலை. பனையோலை வேய்ஞ்ச ஒரு என்ஜினியரிங் காலேஜில் படிச்சதை வெச்சு இங்கே குப்பை கொட்ட முடியலை. கொஞ்சநாள் கேஸ் ஃபில்லிங் ஸ்டேஷனில் அநியாய சம்பளத்துக்கு வேலை பார்த்தேன். அப்புறம், ஒரு இண்டியன் ரெஸ்டாரண்ட் கிச்சனுக்குள்ளே க்ரில் கம்பியில்

உரிச்ச கோழியைத் தந்தூரி பண்ணிக் கொண்டிருந்தேன். ஆறுமாசத்துக்கு முன்னாடி தான் ஒரு கம்பெனியில் டீஸண்டான உத்யோகம் கிடைச்சது. சம்பளப் பணத்தைக் கொஞ்சம் மிச்சம் பிடிக்கணும்னா நான் குடியிருக்கிற அபார்ட்மெண்டை யார் கூடவாவது ஷேர் பண்ணியே ஆகணும். அப்படி ஷேர் பண்ணிகிட்டா ஒரு ஐநூறு டாலராவது எனக்கு மிச்சமாகும்... அதான் விளம்பரம் கொடுத்தேன்…”

“டோண்ட் வொர்ரி வெங்கட்…! பை... த... பை... உங்களை நீ... வா... போ...ன்னு கூப்பிடலாமா..! வெங்கட்..! உண்மையை சொல்லிட்டதால நானும் உண்மையைச் சொல்லிடறேன். நான் பிறந்தது வளர்ந்தது எல்லாமே காரைக்குடிப் பக்கம் ஏதோ ஒரு கிராமம். அப்பாவுக்கு நியூஜெர்ஸியில் வேலை. என்னோட பதினஞ்சாவது வயசுல நானும் அம்மாவும் நியூஜெர்ஸிக்கு வந்து அப்பாவோடு செட்டிலாயிட்டோம். இங்கே வந்த பிறகு அப்பாவுக்கும், அம்மாவுக்கும் எப்போ பார்த்தாலும் சண்டைதான். ஒரே வருஷத்துல ரெண்டு பேரும் டைவர்ஸ் வாங்கிட்டு ஆளுக்கொரு பக்கம் பிரிஞ்சு போயிட்டாங்க. நான் யார் கூடவும் போகப் பிரியப்படாமே என்னோட சொந்தக் கால்ல நின்னுட்டேன். ‘அல்லையன்ஸ் யு.எஸ்.ஏ. ப்ராஜெக்ட்’ல ஃபேகல்டியா ஒர்க் பண்றேன்! சரி…! லீஸ் அக்ரிமெண்ட்டை எப்போ போட்டுக்கலாம்…?”

“இன்னிக்கே…! வா லீசிங் ஆபீஸஸுக்குப் போலாம்.”

போனோம்.

அடுத்த நாளே உமையாள் மூன்று பெரிய பெரிய சூட்கேஸ்களோடு என்னுடைய அபார்ட்மெண்ட்டுக்கு வந்துவிட்டாள். ஒவ்வொரு அறையாய் எட்டிப் பார்த்து சந்தோஷப்பட்டாள்.

“வாவ்…! வெங்கட்... ஐயாம் லக்கி..! அட... ஜ்யூக் பாக்ஸ் வேற இருக்கா..? உனக்கு யாரோட மியூஸிக் பிடிக்கும்...?”

“கர்நாடிக் மியூஸிக் யார் பாடினாலும் எனக்குப் பிடிக்கும்.”

“எனக்கு கஜல் பிடிக்கும்...” உமையாள் சொல்லிக் கொண்டே தன்னுடைய போர்ஷனுக்கு ரோலர் சூட் கேஸ்களை உருட்டிக் கொண்டு போனாள். நான் பின்னால் போனேன்.

“உமை...”

“என்ன வெங்கட்..?”

“நான் காலையில் நாலு மணிக்கெல்லாம் எந்திரிச்சுடுவேன். ஒரு மணி நேரம் யோகா. அப்புறம் குளியல். அரை மணி நேரம் ஸ்தோத்ரம் சொல்லி பூஜை வாரத்துல ரெண்டு நாள் லேட்டா வருவேன். இதையெல்லாம் நீ தொந்தரவா நினைக்கக் கூடாது.”

“சேச்சே…! வெங்கட்…! எனக்கு இந்தத் தமிழ் பேசற, கேட்கிற சுகமே போதும். ஏதோ திருவல்லிக்கேணியில் இருக்கிற மாதிரி ஃபீலிங்.”

வாரம் ஒன்று கரைந்து போயிருக்க...

அன்றைக்கு சாயந்தரம் ஆபீஸிலிருந்து திரும்பிய போது வீட்டுக்குள் ஏதோ பேச்சுக்குரல் கேட்டது.

‘உமையாள் சீக்கிரம் வந்து, யாரோடு பேசிக் கொண்டு இருக்கிறாள்? யோசித்தபடி கதவைத் திறந்த நான் திடுக்கிட்டு போனேன். ஹால் சோபாவில் ஒரு இளைஞனின் அணைப்பில் சிக்கியிருந்தாள் உமையாள். ‘யார் அந்த இளைஞன்?’ நான் அப்படியே ஒண்டிக் கொண்டு நின்றேன். உமையாள் சொல்லிக் கொண்டிருந்தாள். குரலில் பதட்டம். கெஞ்சல்.

“வேண்டாம் ஜானி…! விடு…!”

“ஏன் வேண்டாம்...?”

“சொன்னால் கேள்... டாக்டர் நேற்றைக்குத்தான் உறுதி செய்தார்… ஹெச்.ஐ.வி. பாஸிட்டிவ்... ரிப்போர்ட் சத்தியம் செய்துவிட்டது!”

உமையாள் சொல்ல, அந்த ஜானி மிரண்டு போய் அவனுடைய உடம்பில் படரவிட்டிருந்த கைகளை எடுத்தான்.

அந்த ரிப்போர்ட்டை ஜானி வாங்கிப் பார்த்து விட்டு வியர்த்தான். பேச்சு வராமல் தவித்தான்.

உமையாள் விரக்தியான சிரிப்பொன்றை உதிர்த்து விட்டுச் சொன்னாள். “மூன்று மாதத்துக்கு முன்னால் நான் ஒரு விபத்தில் சிக்கி ஹாஸ்பிடலில் அட்மிட் ஆகியிருந்த போது எனக்கு செலுத்தப்பட்ட ரத்தத்தில் ஹெச்.ஐ.வி. இருந்திருக்க வேண்டும் என்று டாக்டர் சொன்னார். எப்படியோ என் எதிரிக்கு கூட வரக்கூடாத ஒரு நோய் எனக்கு வந்து விட்டது. சென்ற மாதம் டாக்டர் ஜோன்ஸ் சந்தேகமாய்ச் சொன்ன போதே நான் உன்னிடமிருந்து விலக ஆரம்பித்து விட்டேன். நீ என்னைக் கண்டுபிடித்து விடக் கூடாது என்பதற்காகத் தான் டெக்சாஸிலிருந்து சொல்லாமல் கொள்ளாமல் கிளம்பி வந்து இங்கே தங்கியிருக்கிறேன். அப்படியும் நீ தேடி

வந்துவிட்டாய்... உனக்கு நான் வேண்டாம் ஜானி, நீ என்னைக் காதலித்ததையே மறந்துவிடு. ஒரு நல்ல பெண்ணாகப் பார்த்து கல்யாணம் செய்து கொள். என் வாழ்நாட்களின் கடைசியில் நான் என் சொந்த ஊருக்குப் போய் தங்கி, அங்கேயே என் உயிர் பிரிய வேண்டும் என்று ஆசைப்பட்டேன். அந்த ஆசை இப்போது இந்த அபார்ட்மெண்டில் நிறை வேறிக் கொண்டிருக்கிறது. ஒரு நாளைக்கு சில மணி நேரங்களாவது என் தாய் மொழியான தமிழில் பேசிக் கொண்டு இருக்கிறேன். காலையில் தினசரி ஐந்து மணிக்கு சுப்ரபாதம் கேட்கிறேன். வெங்கட்டின் கைச்சமை யலில் தமிழ்நாட்டு சாம்பார், ரசம், வத்தக்குழம்பு கிடைக்கிறது. தமிழ் பேப்பர், தமிழ் புத்தகங்கள், தமிழ் சானல் என்று நாட்கள் சந்தோஷமாய் போய்க்கொண்டு இருக்கிறது. நான் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று நீ நினைத்தால், இனிமேல் என்னைப் பார்க்க வராதே ஜானி ப்ளீஸ்”

கண்ணீரோடு உமையாள் சொல்லிவிட்டு உள்ளே போய்விட, அந்த ஜானி மெல்ல பின் வாங்கி வெளியேறினான்.

நான் ஒரு பத்து நிமிடம் இடைவெளி விட்டு உள்ளே நுழைந்தேன்.

கிச்சனில் இருந்தாள் உமையாள். சத்தம் கேட்டு எட்டிப் பார்த்து விட்டு கத்தினாள். குரலில் உற்சாகம்.

“வந்துட்டியா வெங்கட்….! வா... வா..! எனக்கு இன்னிக்கு ராத்திரி சுடச்சுட சாதம், வெங்காய சாம்பார் வேணும்…! காபி சாப்ட்டுட்டு வந்து வேலையை ஆரம்பி...”

நான் கண்ணீரை அடக்கிக் கொண்டு “உத்தரவு மகா ராணி...!” என்றேன் செயற்கை சிரிப்போடு. மனசு வலிக்க வலிக்க உள்ளே போனேன்.

# 3. கல் மனம்

இரவு நேரச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு ஊர்ப் பெரியவர் பொன்னம்பலமும் ஊர் மணியம் ரங்கசாமியும் சின்னப் பண்ணை சிங்காரவேலரும் இன்னும் சில முக்கியப் புள்ளிகளும் அரசமரத்து வெல்லப்பிள்ளையார் மண்டபத்துக்கு வந்த பின்னாடியும் செண்பக முருகன் கோயில் தர்மகர்த்தா தண்டமிழ் வேந்தன் வந்து சேர வில்லை.

ஒன்பது மணிக்கு மேல் சாவகாசமாய் வந்தார். மஸ்லின் ஜிப்பா,

மைனர் செயின், சாயம் ஏற்றப்பட்ட கிராப், மெலிதான மீசை, தன் ஐம்பது வயது உடம்பை இளமைக்குத் திருப்ப முயன்று தோல்வி கண்டிருந்தார். அரசியல் கட்சி ஒன்றில் முக்கியமான பொறுப்பிலும், உள்ளூரில் தன் 'பெரிய மனுஷன்' தன்மையை நிலை நிறுத்திக் கொள்வதற்காகச் செண்பக முருகன் கோவில் தர்மகர்த்தா பொறுப்பிலும் இருப்பவர். கறுப்புச் சட்டை போடாத பகுத்தறிவுவாதி.

ஒவ்வொரு வருஷமும் வரும் ஆடிக் கிருத்திகை நாள் செண்பக முருகனுக்கு ரொம்பவும் விசேஷமான நாள். அந்த ஒரு நாள் விசேஷத்தை ஏழு நாளைக்கு விஸ்தரித்துக் கோயில் வருமானத்தைக் கணிசமாக பெருக்கி - அதில் கணிசமாய் எடுத்து, தம் சட்டைப் பையை நிரப்பிக் கொள்கிறவர்.

இந்த வருட ஆடிக் கிருத்திகையின் போது கோயில் வருமானம் ஐந்து லட்ச ரூபாய்க்கு மேல் போக, அந்தப் பணத்தை ஏதாவது ஒரு நல்ல காரியத்துக்கு உபயோகப் படுத்தலாமே என்ற எண்ணத்தோடு ஊர்ப் பெரியவர் பொன்னம்பலம் ஒரு யோசனையைச் சொல்ல, அதைப் பற்றி விரிவாகப் பேச இன்றைக்கு ராத்திரி அரசமரத்து வெல்லப் பிள்ளையார் மண்டபத்துக்கு ஊர் முக்கியப் புள்ளிகள் வர வேண்டியது என்று தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி எல்லோரும் வந்து உட்கார்ந்திருந்தனர்.

ஊர்ப் பெரியவர் பொன்னம்பலம் பேச ஆரம்பித்தார்.

"நம்ம ஊர் சின்ன ஊராயிருந்தாலும் இந்த மலைக் கோயிலும் அதில் இருக்கிற செண்பக முருகனும் நம்ம ஊரை ரொம்பப் பிரபலப்படுத்தியிருக்காங்க..."

தண்டமிழ் வேந்தன் அவருடைய பேச்சைக் குறுக்கீடு செய்கிற மாதிரி கடகடவென்று சிரித்தார்.

"ஏன் சிரிக்கிறீங்க?" - பொன்னம்பலம் கேட்டார்.

"பின்னே சிரிக்காம என்ன பண்றது பொன்னம்பலம்? நம்ம ஊர் பிரபலமானதுக்குக் காரணம் பாழடைஞ்சு போன அந்த மலைக் கோயிலும் அந்த இரண்டரை அடி முருகன் சிலையும்தான்னு சொல்றீங்களே... மனசறிஞ்சு தான் சொல்றீங்களா? நான் இந்தக் கோயிலுக்கு தர்மகர்த்தாவா வந்த பின்னாடிதான் நம்ம ஊர் பிரபலமாச்சு. ஒண்ணுமில்லாத ஆடிக்கிருத்திகை நாளை விசேஷ தினமாக மாற்றி அந்த முருகனுக்கு ஒரு மவுசு குடுத்ததே நான்தான்!"

முகம் மாறினார் பொன்னம்பலம்.

தர்மகர்த்தா பேசிக் கொண்டே போனார். “இந்த வருஷம் உங்க முருகனுக்குக் கிடைச்சிருக்கிற எக்கச்சக்கமான வருமானத்துக்குக் காரணம் யாரு? நான்தான்! நான் மட்டும் பாட்டுக் கச்சேரி... ரிக்கார்ட் டான்ஸ்... பொம்மலாட்டம் அது இதுன்னு ஏற்பாடு பண்ணாமே இருந்திருந்தேன்னா... கோயிலோட உண்டியல் காலியாத்தான் இருக்கும்...”

ஊர் மணியம் பேச்சின் திசையை மாற்றினார். “சரி... சரி... அந்தப் பேச்சை விடுங்க... நீங்க செஞ்ச முயற்சி நல்ல முயற்சிதான். அதை யாரும் மறுக்க முடியாது. இப்ப நாம இங்கே எதுக்காகக் கூடியிருக்கோம்னா... வந்த வருமானத்தை எந்த நல்ல காரியத்துக்குப் பயன்படுத் தலாம் என்று முடிவு பண்ணத்தான்.”

“ஒரு ஆரம்பப் பள்ளிக்கூட்ம் கட்டலாம். அதுக்கு மறைஞ்சு போன எங்க கட்சித் தலைவரோட பெயரை வைக்கலாம். அரசாங்கம் நம்ம ஊருக்கு நிறைய ஒத்தாசை பண்ணும்...”

“பள்ளிக்கூடத்துக்கு இப்ப என்ன அவசரம்? நம்ம ஊரோ சின்னக் கிராமம். நம்ம ஊருப் புள்ளைங்க இங்கிருந்து ரெண்டு பர்லாங் தூரத்தில் இருக்கிற மலையனூருக்குப் போய் நிம்மதியாய்ப் படிச்சுட்டு வர்றதுங்க. பள்ளிக்கூடத்தைக் காட்டிலும் முக்கியமா கோயிலோட மண்டபத்தைப் பழுது பார்க்கணும்... எந்தக் காலத்திலேயோ கட்டின அந்தச் செங்கல் சுவர் மண்டபம் மழையிலேயும் வெய்யிலேயும் அடிபட்டு ரொம்பச் சிதிலமாகக்கெடக்குது. கருங்கல்லைக் கொண்டாந்து மண்டபத்தைக்கட்டணும்.”

தண்டமிழ் வேந்தன் சிறினார் “என்ன விளையாடறீங்களா? அவ்ளோ பெரிய மண்டபத்தை முழுதும் கருங்கல்லாலே கட்டி முடிக்கணும்னா லட்சக்கணக்கில் செலவாகுமே, அவ்வளவு பணம் நம்மகிட்ட இல்லையே...”

“இருக்கிற பணத்தை வெச்சுக்கிட்டு முதல்லே மேற் கூரையை மட்டும் கருங்கல்லாலே போடுவோம். மேற் கூரையும் தூண்களும் செமத்தியாப் போட்டுட்டோம்னா பின்னாடி வர்ற வருமானத்தை வச்சு மண்டபத்தோட மத்த வேலைகளையெல்லாம் முடிச்சுடலாம். நம்ம ஊருக்குப் பெருமை தேடித் தர்ற அந்தச் செண்பக முருகன் குடியிருக்கும் வீட்டை நாம நல்ல விதமாக் கட்டிப் பெருமைப்படுத்த வேண்டாமா” - பொன்னம்பலம் இதமான குரலில் சொல்ல, எல்லோரும் ஏகமனதாகத் தலைகளை அசைக்க-

தர்மகர்த்தா தண்டமிழ் வேந்தன் மட்டும் பாம்பாய்ச் சீறினார். “இரண்டரை அடி சிலை இருக்கிற ஓர் இடத்துக்கு லட்சக் கணக்கில் செலவு பண்றதா? சே! முருகன் முருகன்னு ஒரு கற்பனையைச் சொல்லிக்கிட்டு... அந்தக் கற்பனைக்காக ஒரு கருங்கல் மண்டபம் கட்டறதா? நான் இதுக்கு ஒத்துக்க மாட்டேன்!”

ஊர்மணியம் பணிவான குரலில் சொன்னார், “இதோ பாருங்க! ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வோர் ஆசை இருக்கலாம். கடவுள் நம்பிக்கை இல்லாத நீங்க இந்தக் கோயிலுக்கு எப்படியோ தர்மகர்த்தாவா ஆயிட்டீங்க. அதைப் பத்தித் தப்பில்லே… ஆனா அந்தக் கடவுள் வெறுப்பைப் பகிரங்கமா பேசறதுதான் சரியில்லே. நீங்க பள்ளிக்கூடம் கட்டலாம்னு சொன்னீங்க. நல்ல யோசனைதான்! ஆனா நம்ம சின்னக் கிராமத்துக்கு இப்போ... பள்ளிக்கூடம் அவசியமில்லே... அப்படி அவசியம் ஏற்பட்டிருந்தா... சர்க்காரே பள்ளிக்கூடம் கட்டியிருக்கும். இப்போதைக்கு உடனடித் தேவை கோவில் மண்டபத்தைப் புதுப்பிக்கணும். கமிட்டி அங்கத்தினர்களிலே உங்களைத் தவிர மத்தவங்க எல்லோருமே இதுக்கு ஒப்புதல் தந்துட்டாங்க. நீங்க முரண்டு பிடிக்கிறது சரியில்லை...”

சரேலென்று எழுந்தார் தண்டமிழ் வேந்தன். “ஒஹோ! முரண்டு பிடிக்கிறேனா? அப்ப நீங்களே இருந்து அந்தப் பொம்மைக்குக் கல் மண்டபத்தை எழுப்புங்க. இனி வருஷா வருஷம் வர்ற ஆடிக் கிருத்திகை விழாவையும் நீங்களே நடத்துங்க. தர்மகர்த்தா பதவியை மட்டும் நான் ராஜினாமாப் பண்ண மாட்டேன்... அதை மட்டும் ஞாபகம் வெச்சுக்குங்க…”

விடுவிடுவென்று வெளியேறினார் தண்டமிழ்வேந்தன்.

ஏழே மாதம்!

செண்பக முருகனுக்கு முன்பிருந்த அந்தப் பிரும் மாண்டமான கல் மண்டபம் உருவாகிவிட்டது. மேற் கூரையாய் அதே கருங்கல்! கீழே தரைக்கும் அதே கருங்கல் - கூரையைத் தாங்கி நிற்கும் தூண்களும் அதே கருங்கற்கள். ஒரே கல்லில் குடைந்து முடிக்கப்பட்ட மாதிரி ஒரு பிரமிப்பு அனைவரின் மனத்திலும் எழுந்தது.

இந்த ஏழு மாத காலத்திலும் ஒரு தடவைகூட தண்டமிழ் வேந்தன் தப்பித் தவறிக் கூட உருவாகிக் கொண் டிருக்கும் கல் மண்டபத்தின் பக்கமாக வந்ததில்லை.

அந்த வருஷத்திய ஆடி மாதக் கிருத்திகை நெருங்கிக் கொண்டிருந்தது. இரண்டு மாதங்களுக்கு முன்பிருந்தே ஏற்பாடுகளைக் கவனிக்க

வேண்டும்.

தர்மகர்த்தா தண்டமிழ் வேந்தனை அவருடைய வீட்டிலேயே போய்ச் சந்தித்தார்கள் ஊர்ப் பெரியவர்கள். இதமாய் எடுத்துச் சொன்னார்கள். “கோயில் விசேஷம் வர்றப்ப அந்தக் கோயிலுக்கு தர்மகர்த்தாவா இருக்கிற நீங்க இப்படி ஒதுங்கி இருக்கிறது நல்லா இல்லிங்க... உங்க விருப்பப்படி இந்த வருஷம் வர்ற கோயில் வருமானத்தில் ஒரு பள்ளிக்கூடம் காட்டலாம்... ம்... எழுந்திரிச்சு வாங்க... காரியங்களைக் கவனிக்கலாம்...”

“நான்தான் அன்னிக்குச் சொல்லிட்டேனே... உங்க ளோட முட்டாள்தனமான பக்திக்கெல்லாம் என்னாலே ஈடு கொடுக்க முடியாது. இருந்த கோயில் வருமானத்தை முழுதும் கொட்டி ஒரு மண்டபத்தைக் கட்டி வெச்சுட்டீங்க. இனி ஒரு மூணு மாசத்துக்கு நான் ஊரிலேயே இருக்க மாட்டேன். கட்சி விஷயமா அடிக்கடி சென்னை போயிடுவேன். இனிமே என்னை எதுக்கும் எதிர்பார்க்காதீங்க” - சட்டென்று கையெடுத்துக் கும்பிட்டு எல் லோரையும் துரத்தாத குறையாக அனுப்பி வைத்தார்.

அவர்கள் சென்றவுடன் தமது மனைவியை அழைத்தார் தண்டமிழ்வேந்தன். “இதோ பார் வடிவு... இன்னிக்கு சாயந்திரம் நான் சென்னைக்குப் போறேன். திரும்பி வரப் பத்து நாளாகும். நான் ஊர்ல இல்லாத நேரத்தில் நீயோ, நம்ம குழந்தைகளோ யாருமே கோயில் பக்கம் போகக் கூடாது. அப்புறம் நான் பொல்லாதவனா மாறிடுவேன்…!”

“நீங்க இதுவரைக்கும் சொல்லி நான் எந்த வார்த்தையைத் தட்டிப் போயிருக்கேன்... உயிரே போனாலும் சரி, போகமாட்டேன்.”

திருப்தியாய் முகம் மலர்ந்தார் தண்டமிழ் வேந்தன்.

அன்றைக்கே சென்னைக்குப் புறப்பட்டுப் போனார்.

இரண்டு நாட்கள்...

சரியான மழை, வானத்தைச் சக்கையாய்ப் பிழிந்து விட்டுத்தான் மறுவேலை என்பதைப் போல் இடை விடாத மழை.

சென்னையில் ஒரு நண்பரின் அறை விடுதியில் தங்கியிருந்த தண்டமிழ் வேந்தன் சலித்துக் கொண்டார். “எந்த நேரத்திலே ஊரை விட்டுப் புறப்பட்டேனோ தெரியல்லே. சனியன் பிடிச்ச மழை சல்லடைத் தண்ணி யாட்டம் பெய்ஞ்சுட்டே இருக்கு. ரெண்டு நாளும்

அறைக்குள்ளேயே இருந்துட்டேன்.”

ஜன்னல் வழியே வானத்தை எட்டிப் பார்த்த நண்பர் சொன்னார். “வானம் வெளிவாங்க ஆரம்பிச்சுடுச்சு. இனி மழை நின்னுடும். ரெண்டு மணி நேரத்துக்குள்ளாற நாம வெளியே போயிடலாம்...”

அந்த நண்பர் சொன்ன மாதிரியே இரண்டு மணி நேரத்துக்குள் வானம் கொஞ்சம் வெளிற, மழை தற்காலிகமாய் விலகிக் கொண்டது.

அறையைப் பூட்டிக் கொண்டு இருவரும் வெளியே வர

கீழே இருந்த பெட்டிக் கடை அருகே ஒருவர் பேப்பரை விரித்து வைத்துக் கொண்டு உரத்த குரலில் படித்துக் கொண்டிருந்தார்.

“மலையனூர் அருகே ஒரு கிராமம்

வெள்ளத்தில் மூழ்கியது.”

ரோட்டில் தேங்கியிருந்த மழைத் தண்ணீரைத் தாண்டிக் கொண்டு போக முற்பட்ட தண்டமிழ்வேந்தன் அந்தப் பத்திரிகைச் செய்தியைக் கேட்டுத் திடுக்கிட்டார். பரபரப்புடன் அந்த நபரை நெருங்கிப் பேப்பரைப் பிடுங்காத குறையாக வாங்கிப் பார்த்தார். செய்தியை அவசரம் அவசரமாக மேய்ந்தார்.

இரண்டு நாட்களாய் விடாமல் பெய்த பேய் மழையின் காரணமாக, மலையனூர் அருகே இருக்கும் செண்பகனூர் என்ற கிராமம் அடியோடு வெள்ளத்தில் மூழ்கிவிட்டது. அண்மையில் புதிதாய்க் கட்டப்பட்ட மலைக் கோயிலின் கல்மண்டபம்தான் அந்த ஊர் மக்களைக் காப்பாற்றியிருக்கிறது. ஊருக்குள் வெள்ளம் புக ஆரம்பித்த போதே மக்கள் தங்கள் அத்தியாவசிய உடைமைகளோடு மலைமேல் இருந்த செண்பக முருகன் கோயில் கல்மண்டபத்துக்கு அப்புறப்படுத்தப்பட்டார்கள்.’

தண்டமிழ் வேந்தன் எச்சிலை அவஸ்தையோடு விழுங்கியபடி மேலே படிக்க ஆரம்பித்தார்.

இந்தக் கிராமத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் வெள்ளத்தில் சிக்கி இப்போது கவலைக்கிடமான நிலையில் மலையனூர் ஆஸ் பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அக்கோயிலின் தர்மகர்த்தாவான தண்டமிழ் வேந்தனின் குடும்பம்தான் அது என்பது உறுதியாகியுள்ளது. ஊர்மக்கள் அனைவரும் கோயிலின் கல் மண்டபத்துக்கு அப்புறப்படுத்தப்பட்ட பொழுது தண்டமிழ்வேந்தனின் குடும்பத்தினர் மட்டும் வர மறுத்து,

பிடிவாதம் பிடித்து வீட்டிலேயே இருந்து விட்டார்களாம். மழை அதிகமாகி வெள்ளத்தில் அவர்கள் அடித்து வரப்பட்டபோது அங்கிருந்த மக்கள் காப்பாற்றி ஆஸ்பத்திரியில் சேர்த்துள்ளனர். டாக்டர்கள் தீவிர சிகிச்சையை மேற்கொண்டு தலைமை டாக்டர்தண்டாயுதபாணி தலைமையில் நான்கு பேர்களின் உயிரையும் காப்பாற்ற போராடி வருகிறார்கள்…

செய்தியைப் படிக்கப் படிக்கத் தண்டமிழ்வேந்தன் அதிர்ச்சியில் சுவாசிக்கத் திணறினார்.

“தலைமை டாக்டர் தண்டாயுதபாணி தலைமையில்” என்கிற வாசகம் மனதுக்குள் அழுத்தமாய் ஒட்டிக் கொள்ள… வாழ்க்கையிலேயே முதல் முறையாய் கண்களில் நீர் மல்கி, செண்பகனூர் இருந்த திசை நோக்கிக் கைகளைத் தலைக்கு மேல் உயர்த்திக் கும்பிட்டார்.

“முருகா.! என் குடும்பத்தைக் காப்பாத்து!”

இரண்டரையடி முருகன் சிலை இப்போது அவர் மனதுக்குள் விஸ்வரூபம் எடுத்துப் புன்னகைத்தது. “நான் இருக்க பயம் ஏன்.?” என்பது போல் அபயம் காட்டியது.

# 4. அபிநயங்கள் ஊமையல்ல

அந்த ஆஸ்பத்திரி அறையில் ராமகிருஷ்ணனும், பர்வதமும் கவலையில் ஈரமாகிய கண்களோடு மகள் சுரபியையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். பக்கத்தில் அதே சதவீதக் கவலையோடு டாக்டர் சரோஜினி.

வெள்ளைநிற படுக்கை விரிப்பின் மேல் அந்த இருபது வயது அழகான சுரபி குத்துக்காலிட்டு உட்கார்ந்திருந்தாள். அவளைச் சுற்றிலும் விளையாட்டு சாமான்கள், வர்ண பலூன்கள். சுரபியின் கையில் அந்த நிமிஷம் ஒரு ரப்பர் மோல்ட் பொம்மை சிக்கியிருக்க - அதை குரூரமாய் பார்த்துக் கொண்டிருந்தாள். பொம்மையை உடல் வேறு தலை வேறாக பிய்த்துப் போட்டு, பொம்மையின் தலையில் அழகாய் முடிந்திருந்த குதிரை வால் முடியை ஒவ்வொன்றாய் உருவ ஆரம்பித்தாள். பொம்மையின் குண்டு குண்டான கண்கள் அவளுடைய ஆட்காட்டி விரலால் தோண்டப்பட்டு - ஏற்கனவே படுக்கை விரிப்பில் தனியாய்க் கிடந்தன. பர்வதம் பீறிட்டு வந்த அழுகையை அடக்க சேலைத்தலைப்பால் வாயைப் பொத்திய படி டாக்டர் சரோஜினியை ஏறிட்டாள்.

“டாக்டரம்மா... எம் பொண்ணைப் பார்த்தீங்களா... வயசு இருபது ஆகுது. ஆனா... ஒரு ரெண்டு வயசுக் குழந்தை என்னவெல்லாம் செய்யுமோ... அதைத்தான் இப்ப இவ பண்ணிட்டிருக்கா... பக்கத்து ரூம் பேஷண்ட்டே பார்க்க வந்த ஒரு குழந்தைகிட்ட இருந்த பொம்மையைப் பார்த்துட்டு அதே மாதிரி வேணும்ன்னு அடம் பிடிச்சு வாங்கினா... இப்ப அந்த பொம்மையோடநிலைமையைப் பாருங்க... கை வேறு... கால் வேறா..! இந்த நிலைமையில இவ ஒரு குழந்தைக்கும் தாயாகப் போறா…

சுரபி பர்வதத்தின் அழுகையை சில விநாடிகள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்து விட்டு - மறுபடியும் பொம்மையின் நைலான் முடிகளை பிய்த்து போடும் முயற்சியில் ஈடுபட்டாள். இருபது வயதுக்குரிய உடம்புச் செழிப்போடு அழகாய் இருந்த சுரபிக்கு சமுத்திரம் மாதிரி பெரிய கண்கள். தலை கொள்ளாத கேசம். நீலநிற ஆஸ்பத்திரி மேக்ஸி கர்ப்பம் தாங்கியிருந்த அவளுடைய நிறைமாத வயிற்றை ஸ்பஷ்டமாய் மேடிட்டு காட்டியது.

டாக்டர் சரோஜினி பர்வதத்தை ஏறிட்டாள்.

“சுரபிக்கு எத்தனை வருஷமா இந்த மனநிலை பாதிப்பு?” “பத்து

வருஷமா…”

“எப்படி..?

“ஒரு தடவை மூளைக் காய்ச்சல்ல விழுந்தா... போராடி எமன்கிட்டயிருந்து மீட்டோம். ஆனா இப்படி ரெண்டுங்கெட்டானா மாறிட்டா... பார்க்காத வைத்தியம் இல்லை...”

டாக்டர் சரோஜினி பொம்மையை பிய்த்துக் கொண்டிருந்த சுரபியை நெருங்கினாள்.

“சுரபி”

“ ......................................................................... “ அவள் நிமிரவில்லை.

“சு...ர...பி...”

அவள் தோளைத் தொட்டாள்.

“ம் ”

“இந்தா சாக்லேட்...” சரோஜினி ஒரு ஃபைவ் ஸ்டார் சாக்லேட் பாரை நீட்ட - சுரபி ‘ஹைய்யா!’ என்று கூறி கண்கள் விரிய வாங்கிக்

கொண்டாள். அப்போதும் அவளுடைய இன்னொரு கை பொம்மையை விடவில்லை.

“சுரபி...”

சாக்லேட்டை மென்று கொண்டே அவள் “ம்... “ என்றாள்.

“என்னது... கையில் பொம்மை..?”

“இது... இது... பொம்மையில்ல...”

“பின்னே..?”

“பிசாசு….!”

“பிசாசா...:?”

“ஆமா... இந்த பிசாசு என்னை மொறைச்சு பார்த்ததுக்கா, அதான் தலையெத் திருகி தனியா கழட்டிட்டேன். முடியெல்லாம் பிச்சு மொட்டையாக்கப் போறேன். கண்ணைக் கூட நோண்டிப் போட்டுட்டேன்... அப்பத் தான் இது மொறைக்காது...”

“அது பிசாசு இல்லம்மா... பாப்பா பொம்மை. பாப்பா பாவமில்லையா..?”

“அது ஏன் என்னை மொறைச்சு பார்க்குது... நான் மட்டம் பாவலில்லையா…?”

சரோஜினி சிரித்து சுரபியின் கன்னத்தைத் தட்டினாள்.

“எங்கே... படு... பார்க்கலாம்...”

“மாட்டேன்... படுத்தா ஊசி குத்துவீங்க...”

“நீ குட் கேர்ள் இல்லையா..? உனாக்கெல்லாம் ஊசி போட மாட்டேன்... ம்... படு...”

“நெஜம்மா..?”

“நிஜம்.”

சுரபி சாக்லேட்டை வாய் நிறைய குதப்பிக் கொண்டே மல்லாந்து படுக்க… சரோஜினி சோதித்துப் பார்த்து விட்டு பர்வதத்திடம் திரும்பினாள்.

“அநேகமா அடுத்த ரெண்டு நாள்ல லேபர் பெயின் ஆரம்பமாயிடும்...”

“டாக்டர்...! பிரசவத்துல...?”

“எந்த பிக்கலும் வராது. பேபி நல்ல பொசிசன்ல இருக்கு. பல்ஸ் ரேட் நார்மல்...”

ராமகிருஷ்ணன் குறுக்கிட்டு கேட்டார். “டாக்டர்! குழந்தையை எடுத்துட்டு போக அந்த அநாதை விடு திக்கு சொல்லிட்டீங்களா?”

“கொஞ்ச நேரத்துக்கு முன்னால் கூட... போனேன். பிரசவமானதும் தகவல் குடுங்க... குழந்தையை எடுத்துட்டு போக வந்துடறோம்னு சொன்னாங்க...”

“டாக்டர்...”

“சொல்லுங்க...”

“சுரபிக்கு பிரசவமாகி அவ குழந்தையை பார்க்கிறதுக்கு முன்ன அவங்க எடுத்துட்டு போயிடணும்... இல்லேன்னா அந்த குழந்தை எங்கேன்னு கேட்டு அழிச்சாட்டியம் பண்ணிடுவா...”

“கவலையேப்படாதீங்க... அவ கண் விழிக்கிறதுக்குள்ளே குழந்தை கைமாறிடும்...”

டாக்டர் தாழ்ந்த குரலில் சொல்லி விட்டு... தன் அறையை நோக்கி போய்விட் - பர்வதமும் ராமகிருஷ்ணனும் சுரபியின் பக்கம் திரும்பினார்கள். அவள் சிரித்தாள்.

“அம்மா”

“ம்...”

“எனக்கு வயிறு ஏன் பெரிசா இருக்கு...” பொம்மையின் தலையில் இப்போது பாதியெக் காணோம்.”

“அந்த பொம்மையை இப்படிக் கொடு...”

“மாட்டேன்...”

பர்வதம் மகளையே பார்த்தாள். வாயோரம் காட்பரீஸ் பிசுபிசுப்பாய் ஒட்டியிருந்தது.

“இந்த சாக்லேட்டுக்கு ஆசைப்பட்டுத்தானே... இப்படி ஒரு

நிலைமைக்கு ஆளாகியிருக்கிறாள்...!”

பர்வதத்தின் மனக்கண்களில்... எட்டு மாதங்களுக்கு முன்பு நடந்த அந்த நிகழ்ச்சி வேண்டா வெறுப்பாய் மறுபடியும் தெரிந்தது.

அன்றைக்கு பாலதண்டாயுதபாணி கோவிலில் அபிஷேகம், தீபாராதனை முடிய எட்டு மணியாகி விட்டது. பஸ் பிடித்து வீட்டுக்கு திரும்புவதற்குள் எட்டரை மணி. கிட்டத்தட்ட நூற்றைம்பது வீடுகள் கொண்ட காலனி அது. மங்கலான தெரு விளக்கு வெளிச்சத்தில் - வாசற்படிகளில் உட்கார்ந்து பெண்கள் அரட்டை அடித்துக் கொண்டிருக்க - வீட்டு கண்ணாடி ஜன்னல்களில் டி.வி. வெளிச்சம் தெரிந்தது.

பர்வதம் தன் வீட்டை நெருங்கி - வாசல் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே போனாள். துணைக்கு இருக்கச் சொல்லிவிட்டுப் போன பக்கத்து வீட்டு பெண்ணைக் காணோம்.

சுரபி கட்டிலில் படுத்திருந்தாள். மிரண்ட பார்வை. சேலை, ஜாக்கெட் கிழிந்திருந்தது. படுக்கை விரிப்பு கசங்கியிருந்தது. தலைப் பின்னல் அவிழ்ந்திருந்தது. கழுத்தோரமாய் சிவப்பாய் சில நகக்கீறல்கள்.

“சுரபி....”

“................”

“ஏய்.... சுரபி.”

“ம்......”

“பக்கத்து வீட்டு மகேஸ்வரி எங்கே..?”

“அவ... அவ... போயிட்டா...”

மகளுக்கு பக்கத்தில் உட்கார்ந்தாள் பர்வதம்.

“ஏண்டி... அப்படி... படுத்திருக்கே...? கழுத்துகிட்டே என்ன காயம்... எப்படி ஆச்சு..?”

“மாமா வந்து...”

பர்வதம் திடுக்கிட்டாள்.

“மாமா வந்தாரா..! எந்த மாமா..?”

“அந்த மாமா.”

“அதாண்டி... எந்த மாமா..?”

“வ... வந்து... வந்து...”

“சொ... சொல்லடி...” பதை பதைத்தாள். “கண்ணாடி போட்ட

மாமா...”

“கண்ணாடி போட்ட மாமாவா..?”

“அந்தக் காலனியில் குடியிருக்கிற ஆண்களில் பாதிப்பேர் கண்ணாடிபோட்டவர்கள். யாரையென்று நினைப்பது?”

“பேர்... என்னடி..?”

சுரபி விழித்தாள்.

“மாமா வந்து... என்ன பண்ணினார்...?” “எனக்கு சாக்லேட்

குடுத்தார்...”

“அ... அப்புறம்...?” “என்னைக் கட்டிப் பிடிச்சு சண்டை போட்டார்...

ஒரே தமாஷ்...” சுரபி
கைக்கொட்டி சிரிக்க - பர்வதத்தின் வயிற்றில் ஒரு பயப்பந்து உருண்டது.

பக்கத்து வீட்டு காம்பௌண்டுக்கு போய் மகேஸ் வரியைக் கூப்பிட, அவள் பின் பக்கமிருந்து வந்தாள்.

“மாமி ”

“மகேஸ்வரி! சுரபியை பார்த்துக்கச் சொல்லியிருந்தேனே?”

“ஸாரி ஆன்ட்டி... திடீர்ன்னு விலக்காயிட்டேன்... வீட்டுக்கு வர வேண்டியதாயிடுச்சு... சுரபிகிட்ட எங்கேயும் போகக்கூடாதுன்னு சொல்லிட்டுத்தான் வந்தேன். அவளும் வெளியே போகலை...”

“வீட்டுக்கு யாராவது வந்தாங்களா?”

“வரலியே…!” இனி அவளிடம் பேசி பயனில்லை. மகேஸ்வரி

வீட்டுக்கு போனதை

பார்த்துக் கொண்டிருந்து விட்டு எவனோ உள்ளே வந்திருக்கிறான்.

பர்வதம் மறுபடியும் சுரபியிடம் வந்தாள். அவள் மிச்ச மிருந்த சாக்லேட்டை சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

நடக்கக் கூடாதது நடந்து விட்டது.

அதை வெளியே சொல்ல முடியாது.

“அப்பா முருகா…! சுரபிக்கு எதுவும் ஆயிருக்கக் கூடாது. கெட்ட சொப்பனம் மாதிரி இது அத்தோடு போயிடணும். இனிமே அவளை வீட்லெ தனியா விட்டுட்டு எங்கேயும் போக மாட்டேன். இந்த குடும்ப மானத்தை ஒரு தடவெ காப்பாத்திடு முருகா...!”

சுரபியை குளிக்க வைத்து - கோவில் திருநீறை நெற்றியில் இட்டு விட்டாள்.

ஆனால் அடுத்த மாதமே சுரபி வாந்தி எடுக்க - டாக்டரிடம் கூட்டிச் செல்ல - கர்ப்பம் உறுதியாயிற்று.

ராமகிருஷ்ணனுக்கு விஷயம் தெரிந்த போது - பர்வதத்தை பேயாய் அறைந்து விட்டு இரைந்தார்.

“வெச்சு விட்டாளாம்... முருகனை வேண்டிகிட்டாளாம். அன்னிக்கே என்கிட்டே ஒரு வார்த்தை சொல்லியிருந்தா. ஏதாவது ஒரு மாத்திரையைக் கொடுத்து - அதை வளரவிடாமே பண்ணியிருக்கலாமே..?”

“உங்ககிட்டே சொல்றதுக்கு பயமா இருந்துச்சு...”

“அந்த ராஸ்கல் யார்ன்னு இவகிட்டே கேட்டு பார்த்தியா?”

“அன்னியிலிருந்து தினமும் இவகிட்டே எப்படியெல்லாமோ பேச்சு கொடுத்து விசாரிச்சுட்டுத்தான் இருக்கேன்... கண்ணாடி மாமாங்கிறா... யார்னு புரியலை. அஞ்சாறு நாள்தான் சொன்னா... அதுக்கப்புறம் அந்த சம்பவத்தையே மறந்துட்டா... இப்பவும் ஒண்ணும் காரியம் மிஞ்சிடலை... ஒரு லேடி டாக்டர்கிட்ட போய்... சுரபியை சுத்தம் பண்ணிடலாம்...”

தெரிந்த லேடி டாக்டரிடம் போனார்கள். டாக்டரம்மாள் சுரபியை பரிசோதித்துவிட்டு தீர்க்கமான குரலில் சொன்னாள்.

“கருக்கலைப்பை தாங்கற சக்தி இந்தப் பொண்ணுக்கில்லை. உங்க கட்டாயத்துக்காக பண்ணினா... பெரிய உயிர்க்கே ஆபத்து...”

“டாக்டரம்மா... கருக்கலைப்பை தாங்கிக்கற சக்தி இவளுக்கு இல்லைன்னு நீங்க சொல்லிட்டீங்க... ஆனா இன்னும் கொஞ்ச நாள்ல இவ வயிற்றைப் பார்த்து நாலு பேர் நாலுவிதமா பேசுவாங்க... அந்த வார்த்தைகளை தாங்கிக்கிற சக்தி எங்களுக்கு இல்லை... நீங்கதான் ஏதாவது ஒரு வழி பண்ணனும்...”

“மனநிலை சரியில்லாத பொண்ணை இவ்வளவு அஜாக்ரதையா விட்டுடுட்டு, இப்ப கவலைப்படற உங்களைப் பார்த்தா பரிதாபமாத்தான் இருக்கு. ஒண்ணு செய்யுங்க... சேலத்துக்கு பக்கத்துல எனக்குத் தெரிஞ்ச ஒரு ஹாஸ்பிடல் இருக்கு. டாக்டர் சரோஜினி அதை நிர்வாகம் பண்ணிட்டு வர்றாங்க. நான் ஒரு லெட்டர் தர்றேன். மனநிலை சிகிச்சைக்காக இவளைக் கூட்டிட்டுப் போறதா உங்க சொந்தக்காரங்ககிட்டே சொல்லிட்டு நீங்க அங்கே போய் தங்கிக்கலாம்... சுரபிக்கு குழந்தை பிறக்கிறவரைக்கும் நீங்க அங்கேயே இருக்கலாம்…”

“குழந்தை...?”

“நான் அந்த டாக்டர்கிட்ட போன்ல விவரமா சொல்லி - குழந்தை பிறந்தவுடனேயே அதை ஒரு அநாதை இல்லத்துல குடுத்து வளர்க்க ஏற்பாடு பண்ணிடறேன்…”

பர்வதமும் ராமகிருஷ்ணனும் கைகளைக் குவித்தார்கள்.

“ரொம்பவும் நன்றி டாக்டர்...”

சுரபிக்கு லேபர் பெயின் ஆரம்பமாயிற்று.

சுரபி பர்வதத்தின் கைகளைப் பற்றிக் கொண்டு கண்களில் நீர் வழிய துடித்தாள்.

ஸ்ட்ரெச்சர் கொண்டு வரப்பட்டு - உடனே லேபர் வார்டில் அனுமதிக்கப்பட்டாள்.

ராமகிருஷ்ணனும் பர்வதமும் வார்டு வராந்தாவில் போட்டிருந்த வெள்ளை பெயிண்ட் பெஞ்சில் பதட்டமாய் காத்திருக்க - சற்று நேரத்தில் டாக்டர் சரோஜினி வந்து சேர்ந்தாள்.

“டாக்டர்...”

“கவலைப்படாதீங்க... சுரபிக்கு நார்மல் டெலிவரிதான் ஆகும். பயப்படறதுக்கு எதுவுமில்லை.”

வார்டுக்குள் போனாள்.

சரியாய் இருபது நிமிஷம்.

“ங்க்கா...”

ஒரு பிஞ்சுக்குரல் ராமகிருஷ்ணன், பர்வதம் இரண்டு பேர்களின் நெஞ்சங்களையும் தைத்துக் கொண்டு போயிற்று.

“ஆண் குழந்தை” - டாக்டரம்மாள் புன்னகையோடு வெளியே வந்தாள்.

“சைல்ட் அண்ட் மதர் ரெண்டு பேருமே ஆல்ரைட்”

“டாக்டர்... சுரபிக்கு மயக்கம் தெளியறதுக்கு முந்தி குழந்தையை அநாதை இல்லத்துல ஒப்படைச்சுடனும்.”

“தகவல் போயாச்சு... அடுத்த பத்து நிமிஷத்துக்குள்ளே அவங்க வந்துடுவாங்க... வாங்க என் ரூமுக்கு போலாம்...”

போனார்கள்.

கால்மணி நேரம் -காத்திருப்பில் கரைந்திருந்த போது - ஒரு ஆணும் பெண்ணும் அறைக்குள் வந்தார்கள்.

டாக்டரைப் பார்த்து பரிச்சயமாய் புன்னகைத்தார்கள்.

“வணக்கம் டாக்டர்...”

“வாங்க...”

“என்ன குழந்தை...?”

“ஆண்...”

“கொண்டு போயிடலாமா..?”

“ம்...” தலையசைத்த டாக்டர் ஒரு நர்ஸைப் பார்த்து கண்ணைக் காட்ட - அவர் டர்க்கி டவலால் வீறிடும் குழந்தையைச் சுற்றிக் கொண்டு வந்தார்.

“பையன் அழகாய் இருக்கான்.”

“வாங்கிக் கொண்டார்கள்.”

மறுநாள் காலை. ஏழு மணி.

ராமகிருஷ்ணன் டிபன் வாங்கி வருவதற்காக ஹாஸ்பிடலுக்கு எதிரிலிருந்த ஹோட்டலுக்கு போயிருக்க - பர்வதம் ஆஸ்பத்திரியின் மருந்து பிரிவுக்குப் போய் - சுரபிக்கு கொடுக்க வேண்டிய மாத்திரைகளை வாங்கிக் கொண்டு வேக வேகமாய் அறையை நோக்கி போய்க் கொண்டிருந்தாள்.

“வரும்போதுசுரபி அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். இப்போது விழித்திருப்பாளோ..?”

சற்றே பதைபதைப்போடு - நடை போட்டாள். வழி யில் எதிர்பட்ட ஒரு நர்ஸ் சொன்னாள்.

“உங்க பொண்ணு கண் முழிச்சுட்டா... உங்களை கேட்டுகிட்டு இருக்கா… சீக்கிரமா போங்க….”

போனாள்.

ஒரு நிமிஷ நடை.

அறை வந்தது.

கதவைத் திறந்து கொண்டு உள்ளே போன பர்வதம் திடுக்கிட்டுப் போய் கண்கள் நிறைய திகைப்பை அள்ளிக் கொண்டாள்.

சுரபி கட்டிலில் இல்லை.

அறையின் வலதுபக்க மூலையில் நடுங்கி உட்கார்ந்திருந்தாள். இரண்டு நாட்களுக்கு முன்னால் பிய்த்து போட்ட அந்த பொம்மையின் தலையையும் உடம்பையும் சேர்த்து வைத்து கையில் பிடித்து - தன் மார்புச் சேலையை விலக்கி பாலூட்ட தீவிரமாய் முயன்று கொண்டிருந்தாள். கூடவே ஈனஸ்வர கொஞ்சல்.

“என்... கண்ணல்ல... குடிம்மா..!”

# 5. சொப்னா எனும் ஒரு சொர்க்கம்

கிருஷ்ணமூர்த்தி கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை.

வேளாண்மைப் பல்கலைக்கழகத்தை ஒட்டினாற் போலிருந்த அந்த பொட்டானிகல் கார்டனில் - உச்சி வேளையில் அவனுடைய பழைய காதலி சொப்னா தன் கணவரோடு எதிர்ப்படுவாள் என்று அவன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. சிவப்பாய்ப் பூத்துக் கொட்டிய வாதநாராயண மரத்துக்குக் கீழே - செழித்துக் கிடந்த புல்வெளியில் - குப்புறப் படுத்தபடி விழிகளை மட்டும் உயர்த்தி அவர்களையே பார்த்தான் கிருஷ்ணமூர்த்தி.

சொப்னாவின் கணவன் குள்ளமாய், கறுப்பாய், குண்டாய் ஏகப்பட்ட வழுக்கையோடு தெரிந்தான்.

சொப்னா சட்டென்று தலையைக் குனிந்தபடி - தன் கணவரோடு அவனைத் தாண்டிச் சென்றாள். ஒரு இருபதடி தூரம் சென்றதும் திரும்பிப் பார்த்து - கிருஷ்ண மூர்த்தியை நோக்கி ஒரு சிநேகபாவமான புன்னகையை வீசினாள். தன் கணவரை முன்னே கொஞ்சம் நடக்க விட்டு அவள் கொஞ்சம் பின்தங்கி, 'அங்கேயே இருங்கள் நான் வருகிறேன்' என்பது போல் ஜாடை காட்டினாள்.

கிருஷ்ணமூர்த்தி புளகாங்கிதமடைந்து - அப்படியே புல்லரித்துப் போனான்.

"சொப்னா இன்னமும் என்னை மறக்கவில்லை!' - நினைப்பே அவனுக்கு ஏகமாக இனித்தது.

மனம் பழைய நினைவுகளுக்குத் தாவியது.

சொப்னா குஜராத்திக் குடும்பத்தைச் சேர்ந்தவள்.

சென்னையிலேயே பிறந்து வளர்ந்ததன் பயன் அவளுக்கு நன்றாய்த் தமிழ் பேச வந்தது. செக்கச் சிவந்த பப்பாளி நிறம் அவளுடைய ஸ்பெஷாலிட்டி. வசதிக் குறைவான குடும்பத்தில் இருந்தாலும் வளப்பமாய் இருந்தாள். எந்த ஆணையும் கிறங்கடிக்கிற அழகு அவளுக்கு இருந்தாலும் அவளே கிறங்கிப் போனது கிருஷ்ண மூர்த்தியின் கம்பீரமான தோற்றத்தைக் கண்ட இண்டர் காலேஜின் பேச்சுப் போட்டி அவள் படிக்கும் கல்லூரியில் நடந்த போது அவனுடைய கல்லூரியின் சார்பாய்ப் பேச வந்த கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்து மனசைச் சுலபமாய்த் தூக்கிக் கொடுத்துவிட்டாள்.

பிறகென்ன?

சென்னையின் ஒவ்வொரு தியேட்டரும், ஒவ்வொரு ரெஸ்டாரண்டும்,

மெரீனா பீச்சின் ஒவ்வொரு சதுர அடியும் அவர்களுடைய காதலை வளர்த்தது. கிருஷ்ண மூர்த்தி சொப்னாவின் உடம்பைத் தொட முயன்றபோதெல்லாம் - அவள் நாசூக்காய் நழுவினாள். திட்ட வட்டமாய்ச் சொன்னாள்.

“முதலில் படிப்பு முடியட்டும், வேலை கிடைக்கட்டும்.” கல்யாணம் நடக்கட்டும் - அப்புறம் உங்களுடைய கைகள் என்மேல் படட்டும்.”

அது ஒரு ஞாயிற்றுக்கிழமையின் பிற்பகல்.

சொப்னாவை நான்கு மணிக்கு மெரீனாவுக்கு வரச் சொல்லியிருந்தான் கிருஷ்ணமூர்த்தி. சொப்னா நான்கு மணிக்கு மெரீனாவின் வழக்கமான இடத்துக்குச் சென்ற போது கிருஷ்ணமூர்த்தி ஒரு காரோடு காத்திருந்தான்.

“கார் என்னோட ப்ரண்ட் பிரதீப்போடது. நாம ரெண்டு பேரும் இப்போ ஜாலியா மகாபலிபுரம் போகப் போறோம்.”

“மகாபலிபுரமா? இப்பவா? நோ... நோ. ஐ காண்ட்... இப்பப் போனா எப்பத் திரும்பறதாம்? ராத்திரி ஆயிடாதா?” - சொப்னா தலையை ஆட்டினாள்.

“ராத்திரியானா இப்ப என்னவாம்? இன்னிக்குப் பௌர்ணமி! மகாபலிபுரம் பீச்சில் உட்கார்ந்து விட்டு அந்தப் பூர்ண சந்திரனை விடிய விடியப் பார்த்துண்டே இருக்கலாம்.”

“நான் ராத்திரி எட்டு மணிக்கெல்லாம் வீட்ல இருக்கணும்! அதுக்குள்ளே போயிட்டு வந்துடலாம். வா சொபனா…!”

சென்னை நகர எல்லையைத் தாண்டி -

பொட்டல்களாய் வந்துகொண்டிருந்த நிலங்களையெல்லாம் தாண்டி - சவுக்கு மரத் தோப்புகள் வர ஆரம்பித்த போதுதான் தன் திட்டத்தைச் செயலாக்க ஆரம்பித்தான் கிருஷ்ணமூர்த்தி.

ஆள் நடமாட்டமற்ற அந்தச் சாலையின் ஒரமாய்க் காரை நிறுத்திக் கொண்டான். “நீ என் அருகில் வந்து அமர்ந்தால்தான் கார் கிளம்பும்!” என்று அடம் பிடித்தான்.

இவனை எதிர்ப்பது முட்டாள்தனம். அவன் வழியிலேயே நடந்து போய் - அவனை ஏமாற்றிவிட்டுத் திரும்ப வேண்டும்.

“என்ன யோசிக்கிறே சொப்னா?”

“யோசிக்கலை கிருஷ்! ஆச்சரியப்பட்டுட்டிருக்கேன்... என்னோட உடம்பு மேல் உங்களுக்கு இருக்கிற ஆசையை நினைச்சு ஆச்சரியப்படறேன். நினைச்சா ஒரு பக்கம் எனக்குப் பெருமையாக் கூட இருக்கு உங்களுக்கு இவ்வளவு ஆசை இருக்கிறதைப் பார்த்து நான் ஒரு முடிவுக்கு வந்துட்டேன் கிருஷ்! இன்றைக்கு நான் உங்கள் காதலி. இந்த உடலை இன்னிக்கு உங்களுக்குக் கொடுத்து - அந்த ஸ்பரிசத்தை நானும் வாங்கிக்கிறதா முடிவு பண்ணிட்டேன்...”

“ரியலி...!” - விழிகள் விரியச் சொப்னாவைப் பார்த்தான் கிருஷ்ணமூர்த்தி.

“சர்ட்டன்லி!” - சொப்னா சொல்லிக் கொண்டே காரை விட்டு இறங்கி அவனுக்குப் பக்கத்தில் வந்து அமர்ந்தாள்.

“தட்ஸ் கிளவர்!”

காரைக் கிளப்பினான் கிருஷ்ணமூர்த்தி.

செஞ்சிரப்பாக்கம் கிராமம் தட்டுப்பட்டது. சின்னதாய் ஒரு கடை வீதி தெரிய, அதன் ஓரத்தில் சென்னை செல்லும் பஸ்கள் இளைப்பாறிக் கொண்டிருந்தன.

“கிருஷ்...! தாகம் தொண்டையை வறட்டுது... அந்தப் பெட்டிக் கடைக்குப் பக்கத்தில் காரை நிறுத்தி ஒரு சோடா வாங்குங்களேன்...”

“இதோ!” - காரின் வேகத்தைச் சட்டென்று குறைத்து, பெட்டிக் கடைக்கு முன்னால் நிறுத்தினான் கிருஷ்ண மூர்த்தி. காரை விட்டு இறங்கிப் பெட்டிக் கடையை அவன் நெருங்கிய அதே வினாடி -

சொப்னா காரின் கதவைப் பிளந்து கொண்டு வெளியே வந்தாள். சென்னை பஸ்ஸை நோக்கி ஓடினாள்.

சோடாபாட்டிலை வாங்கிக் கொண்டு வந்த கிருஷ்ண மூர்த்தி திகைத்தான்.

“சொப்னா சொப்னா!” - கத்திக் கொண்டே கையிலிருந்த சோடா பாட்டிலோடு ஓடினான்.

அதற்குள் ஸ்வப்னா பஸ்ஸஸுக்குள் ஏறி விட்டிருந்தாள்.

கிருஷ்ணமூர்த்தியும் பஸ்ஸில் தாவி ஏறினான். முகமெல்லாம் சிவக்க அவளை நெருங்கிக் கத்தினான். “என்ன சொப்னா இது..?”

பஸ்ஸில் இருந்தவர்களின் பார்வை முழுவதும் இரு வரின் மீது படிய,

சொப்னா பற்களைக் கடித்துக் கொண்டு தாழ்ந்த குரலில் கிருஷ்ணமூர்த்திக்கு மட்டும் கேட்கும் படியாய்க் கர்ஜித்தாள். “இனிமே அதிகப்படியா ஒரு வார்த்தை பேசினாலும் மரியாதை கெட்டுப் போயிடும் கிருஷ்ணமூர்த்தி! டேசாமல் பஸ்ஸை விட்டு இறங்கிடு... கிராமத்து ஜனங்ககிட்ட விஷயத்தை நான் சொன்னால் என்ன ஆகும் தெரியுமா?... நீயும் காரும் உருப்படியா மெட்ராஸ் போய்ச் சேர மாட்டீங்க... ம்... நல்ல பிள்ளையா பஸ்ஸை விட்டு இறங்கிடு பார்க்கலாம்.”

கிருஷ்ணமூர்த்தி முகத்தை ஒரு முழ நீளத்துக்குத் தொங்கப் போட்டுக் கொண்டு கையில் சோடா பாட்டி லோடு மௌனமாய் பஸ்ஸை விட்டு இறங்கினான்.

இந்தச் சம்பவம் நடந்த அடுத்த ஒரு வாரத்துக்குள், சொப்னாவின் அப்பாவுக்குக் கோயமுத்தூருக்கு மாற்றல் கிடைக்க, கிருஷ்ணமூர்த்தியைச் சுத்தமாய் மறந்துவிட்டு கோவைக் கல்லூரியில் சேர்ந்தாள்.

ஐந்து வருஷ அஞ்ஞாத வாசத்துக்குப் பிறகு-

இன்றைக்குத்தான் - இந்த வேளாண்மைக் கல்லூரி பொட்டானிகல் கார்டனில் கிருஷ்ணமூர்த்தி சொப்னாவைப் பார்த்தான்.

இப்போது கிருஷ்ணமூர்த்தி - பழைய கிருஷ்ண மூர்த்தி இல்லை. பணக்கரச் சித்தப்பா இருந்தவரைக்கும் கரன்சி நோட்டுகளோடு விளையாடிக் கொண்டிருந்த கிருஷ்ணமூர்த்தி அவர் திடீரென்று ஒரு நாள் ஹார்ட் அட்டாக்கில் தனிலயைச் சாய்த்ததும் வாங்கின கடனுக்காக - கடன்காரர்களும் மார்வாடிகளும் அவருடைய சொத்தை ‘அட்டாச்’ செய்த போது அதிர்ந்து போனான்.

ஆறு மாதத்துக்கு முன்புதான் சென்னையை விட்டுக் கோவைக்கு ஓடி வந்து சித்தாபுதூரில் உள்ள ஒரு ஆட்டோமொபைல்ஸ் காரியேஜில் தினக்கூலி எண்பது ரூபாய் வேலையில் சேர்ந்தான். அவனுக்குப் படுக்கையும் அங்குதான்.

சொப்னா வேகமாய் அவனை நெருங்கி வந்தாள்.

“கிருஷ்!” என்றாள் நாத் தழுதழுக்க. விழிகளில் நீர் பளபளத்தது.

கிருஷ்ணமூர்த்தி அலட்சியமாய் உதட்டைக் கடித்தான்.

“பரவாயில்லையே... எம் பேரு கூட உனக்கு ஞாபகம் இருக்கா? கூட வந்தக் கிழவன் யாரு? உம் புருஷனா?”

“ஆமாம்!” கண்ணீரோடு தலையசைத்தாள் சொப்னா. “உம் புருஷன் என்ன வேலையில இருக்கார்?” “அவர் ஒரு சயன்டிஸ்ட்.”

“பணக்காரனா?”

“உம் ”

“அதான் கிழட்டு மாடா இருந்தாலும் பரவாயில்லேன்னு புடிச்சிட்டியா?”

“நீங்க நினைக்கிற மாதிரி அவர் இல்லை கிருஷ்! நேரிடையாவே என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறியான்னு கேட்டுட்டார். என்னுடைய குடும்பப் பொறுப்பை பூராவும் அவர் ஏத்துக்கறதாச் சொன்னார். நானும் ஒத்துக்கிட்டேன். இப்போ எனக்குக் கல்யாணம் ஆகி மூணு வருஷம் முடியப் போறது. நானும் சந்தோஷமா இருக்கேன். என்னுடைய குடும்பமும் நல்ல நிலைமைக்கு வந்துடுச்சு!”

சீறினான் கிருஷ்ணமூர்த்தி, “நீ நல்ல நிலைமைக்கு வந்துட்டே. ஆனா என்னைப் பார்த்தியா? எப்படிச் சீரழிஞ்சு போய்க் கிடக்கிறேன்.! என்கூட ஒண்ணாவே சுத்திட்டிருந்த நீ- இப்ப என்னை மட்டும் அதள பாதாளத்தில தள்ளிட்டு மேலே போக நினைக்கிறே! நான் விட மாட்டேண்டி!.. பை…த..பை.. நம்ம ரெண்டு பேரோட காதல் விவகாரத்தை உன் புருஷனுக்குத் தெரிவிக்கிறேன்!.”

“ஐயோ!” - காதுகளைத் தன் கைகளால் பொத்திக் கொண்டாள் சொப்னா. “கிருஷ்!” தயவு செஞ்சு அவருக்கு நம்ம விவகாரத்தைத் தெரிவிக்காதீங்க... அவருக்கு விஷயம் தெரிஞ்சா அவ்வளவுதான். நான் தற்கொலை பண்ணிக்கிறதைத் தவிர வேறே வழியே எனக்கில்லை. அவர் ஏற்கனவே சந்தேகப் பேர்வழி!”

“இந்தக் கிழட்டுப் பசங்களே இப்படித்தான்! ஐம்பத்க்கு அழகான பொண்டாட்டியாக் கட்டிக்குவானுக... நதேகப்பட்டுக்கிட்டும் இருப்பானுக!” சிரித்தான் ருஷ்ணமூர்த்தி.

“அவர் டீனோடு பேசிட்டு வர்ற நேரமாயிட்டுது கிருஷ்... நான் வர்றேன்...”

“இரு நம்ம பழைய உறவைப் புதுப்பிச்சுக்கலாம்னு பார்க்கிறேன்...”

“வேண்டாம், கிருஷ்... தயவு செய்து வேண்டாம்...”

“ஒரே ஒரு தடவை உன் ஸ்பரிசம்...”

“அப்போ இன்னிக்கு ராத்திரி ஒரு பதினோரு மணி சுமாருக்கு லாலி ரோட்ல இருக்கிற ஏழாம் நம்பர் பங்களாவுக்கு வாங்க... பங்களாவுக்குப் பின்புற வழி ஒண்ணு இருக்கு. அதுல வாங்க... என்னோட கணவர் இன்னிக்கு இரவு பத்து மணி ஃப்ளைட்ல பெங்களூர் போறார்... நாளைக்குசாயந்தரம்தான் வருவார்.” - சொப்னா சொல்லச் சொல்ல…

“அடி சக்கை!” என்றான் கிருஷ்ணமூர்த்தி உற்சாகமாக.

லாலி ரோடில் இருக்கிற அந்த ஏழாம் நெம்பர் பங்களாவின் பின் பக்கம் கதவின் அருகே கிருஷ்ணமூர்த்தி வந்து நின்ற போது மணி சரியாய்ப் பதினொன்று.

கிருஷ்ணமூர்த்தி ஷேவ் செய்து முகத்தை பௌடரால் குளிப்பாட்டி இருந்தான். தலைக்கு எண்ணெய் தடவி முறையாய் வாரியிருந்தான். ‘ட்ரை கிளினர்ஸ்’ கடையில் வாடகைக்கு வாங்கிய பாலியஸ்டர் சட்டையிலும் உல்லன் பேண்டிலும் எடுப்பாய் இருந்தான்.

பாதையின் இடையே - இருட்டில் மங்கலாய்த் தெரிந்த ரோஜாத் தொட்டிகளை ஓசைப்படாமல் தாண்டி, செம்பருத்திச் செடிகளின் ஊடே ஊர்ந்து வெளிச்சத்தில் தெரிந்த அந்த அறையை நெருங்கினான் கிருஷ்ணமூர்த்தி.

அறையை நெருங்க-

ஏதோ பேச்சுக்குரல் கேட்க, சட்டென்று நின்றான்.

ஒரு ஆண் குரல், ஒரு பெண் குரல்.

அறையின் ஜன்னல் கம்பிகளைப் பற்றி - ஓசைப்படாமல் தொற்றி ஏறி அறையின் உள்ளே எட்டிப் பார்த்தான் கிருஷ்ணமூர்த்தி.

சொப்னா சொல்லிக் கொண்டிருந்தாள், தன் கணவனிடம்.

“வந்துடுவான்! நிச்சயமா வந்துடுவான்! என் மேலே அவனுக்கு அப்படியொரு வெறி!”

“சோதனைக்கு வேண்டிய முன்னேற்பாட்டை எல்லாம் செஞ்சு முடிச்சுட்டேன் சொப்னா. அவன் வந்ததுமே முதல்ல அந்த காம்போஸ் கலந்த காபியைக் குடு. குடிச்ச ரெண்டாவது வினாடியே ஆள் மயங்கிடுவான். அப்புறம் ஆளை லேப்புக்குக் கொண்டு

வந்துடலாம்…"

சொப்னா அவர் தோளில் சாய்ந்தபடி கேட்டாள் "என்னங்க… அந்தக் கிருஷ்ணமூர்த்தியோட உடம்பில் இருக்கிற மொத்த ரத்தத்தையும் 'பம்ப்' பண்ணி வெளியே எடுத்துட்டு - நீங்க புதுசாக் கண்டுபிடிச்சிருக்கிற இந்த நீல நிற ரத்தத்தைச் செலுத்தப் போறீங்களே! இந்த நீல நிற ரத்தம் அவனோட உடம்புக்கு சூட் ஆகும்னு நினைக்கறீங்களா?"

"சந்தேகம்தான் சொப்னா! எலி - முயலுக்கு ஓரளவு சக்ஸஸ் ஆச்சு! என்னுடைய ஆராய்ச்சியின் நோக்கமே மனித உயிருக்கு ஒரு மாற்று ரத்தத்தை - அதுவும் வேறு ஒரு நிறத்தில் தயாரிக்க வேண்டுமென்பதுதான். ம்… பார்க்கலாம்… ஒரு காலத்தில் உன்னைக் காதலித்து அவமானப்பட்ட கிருஷ்ணமூர்த்தி என்கிற ஒரு மனிதஜீவனை என்னுடைய ஆராய்ச்சிக்காகப் பயன்படுத்தப் போறேன்… சோதனை சக்ஸஸ் ஆனால் அவர் ஒரு புது ஜீவன். பெய்லியர் ஆனால் நம் பங்களாவின் பின்புறக் காம்பவுண்டின் சுவர் ஓரமா ஒரு ஆறடிக் குழி ரெடியா இருக்கு… அதுல…"

ஜன்னல் கம்பிகளைப் பிடித்தபடி கேட்டுக் கொண்டிருந்த கிருஷ்ணமூர்த்தியின் முழு உடம்பும் வலிப்பு வந்தாற் போல் பயத்தில் நடுங்கியது. மயிர்க்கால்கள் அத்தனையும் ஏக காலத்தில் சரேலென்று நிமிர - பேய்த் தனமாய் அடித்துக் கொள்கிற இதயத்தோடு சட்டென்று ஜன்னலிலிருந்து உதிர்ந்து பங்களாவின் பின் பக்ககதவை நோக்கி கண் மண் தெரியாமல் ஓட ஆரம்பித்தான்.

"போயிட்டானா?"

சொப்னாவின் கணவர் கேட்க…

சொப்னா வயிற்றைத் தன் இரு கைகளாலும் பிடித்துக் கொண்டு சிரித்தாள்.

"போயிட்டானாவா… நல்லா கேட்டீங்க! பறந்துட்டான்… ஓட்டம்னா ஒட்டம்… அதுதான் ஓட்டம்…!"

சொப்னாவின் கணவர் சிரித்தார். "அவனாலே மூணு இங்க் பாட்டில் வேஸ்ட்!" ராட்சஸக் குடுவையில் இருந்த அந்த நீல நிறத் திரவத்தைக் காட்டிக் கொண்டே சொன்னார்.

ஒரு நச்சுப் பாம்பின் வாயிலிருந்து இரண்டாம் தடவையும் தப்பித்து விட்ட மகிழ்ச்சியோடு மீண்டும் பலமாகச் சிரிக்க ஆரம்பித்தாள்

சொப்னா.

# 6. படியேறி வந்த கஸ்டமர்

பங்களா காம்பவுண்ட் கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள் காவ்யா.

குரோட்டன்ஸ் செடிகளின் அணிவகுப்புக்குப் பின்னால் பரவியிருந்த வட்டப் புல்வெளியில் உலாவிக் கொண்டிருந்த அந்தப் பொமரேனியன், அவளைப் பார்த்ததும் விசுக்விசுக்கென்று ஒருசிறிய பஞ்சு மூட்டை பறந்து வருவதைப் போல் ஓடி வந்தது. அவளைச் சுற்றி சுற்றி ஓடி வந்து செல்லமாய்ச் சிணுங்கிக் கொண்டே மேலே தாவியது.

“ஏய் ரோஸி, சும்மா இரு!” அன்போடு அதட்டியபடியே சேலைத் தலைப்பை இழுத்துப் போர்த்துக் கொண்டு, நுழையக் கூடாத இடத்தில் நுழைந்து விட்டாற் போல ஒரு குற்ற உணர்வோடு பங்களாவை நோக்கி நடந்தாள்.

பத்து மாதங்களுக்கு முன்னால் இதே பங்களாவில் ஓர் இளவரசியைப் போல அமர்க்களமாய் வளைய வந்த அவள் இன்றைக்கு ரோட்டில் ஒதுக்கிய ஒரு குப்பைக் காகிதம் மாதிரி அன்னியத்தன்மை பூசப்பட்டு இந்தப் பங்களாவின் படியேறி வந்திருக்கிறாள். சில நிமிஷங்களுக்குப் பின்னால்...

கதவு தயங்கித் தயங்கி திறந்தது.

“அப்பா!” கதவைத் திறந்தவரைப் பார்த்தும் காவ்யா மெல்ல அழைத்தாள்.

இடுப்பு வரை ஏறியிருந்த பட்டு வேஷ்டி; நெற்றியிலும் மார்பிலும் பூசப்பட்ட விபூதிப் பட்டைகள், தங்க பிரேமிட்ட மூக்குக் கண்ணாடி மொசைக்காய் மின்னும் வழுக்கைத் தலை - இத்யாதி கோலங்களோடு, வழியை மறித்த மாதிரி காவ்யாவின் அப்பா வேதாசலம் நின்றிருந்தார்.

காவ்யாவைப் பார்த்ததும் அவருடைய சிவந்த முகம் சட்டென்று இருண்டது.

கதவை மூடாமல் விருட்டென்று உள்ளே போனார் - வேதாசலம்.

சேலைத்தலைப்பை இன்னும் நன்றாகப் போர்த்துக் கொண்டு தயங்கித் தயங்கி மெல்ல அடியெடுத்து வைத்துப் பின் தொடர்ந்தாள் காவ்யா.

முன்பிருந்ததைவிட அந்த ஹால் இப்போது கொஞ்சம் வித்தியாசமாய்த் தெரிவது போலிருந்தது காவ்யாவுக்கு. ஊஞ்சல் பலகையை அகற்றியிருந்தார்கள். சுவர்களுக்குப் புதிதாய் அடர்த்தியான பச்சையில் டிஸ்டெம்பர் அடித்திருந்தார்கள். சுவரின் வலது பக்க மூலையில் போட்டோ வில் சுமங்கலி கோலத்தில் அம்மா சிரித்தாள். புதியதாகப் போடப்பட்ட ரோஜா மாலையிலிருந்து இதழ்கள் உதிர்ந்து கொண்டிருந்தன. போட்டோவில் இப்போது சிரித்துக் கொண்டிருக்கும் இதே அம்மா பத்து மாதங்களுக்கு முன்னால் தன்னை மடியில் கிடத்திக் கொண்டு செல்லமாய், தலைமுடியைக் கோதிவிட்டதெல்லாம் பழைய கதை!

“டேய் கார்த்தி!”

காவ்யாவுக்கு முதுகைக் காட்டிக் கொண்டு உடம்பை முறுக்கிக் கொண்டு நின்றிருந்த வேதாசலம் திடீரென்று கூப்பிட்டார்.

“என்னப்பா?” மாடியிலிருந்து குரல் வந்தது.

“கொஞ்சம் கீழே இறங்கி வா.”

“இதோ வர்றேன்….”

இரண்டொரு நிமிடங்களில் அவள் அண்ணன் கார்த்தி மாடிப்படியில் இறங்கி வந்தான். இந்தப் பத்து மாத காலத்தில் ரொம்பவும் மாறியிருந்தான். பிடரி நிறைய முடி வளர்ந்து வித்தியாசமாய்த் தெரிந்தான். “ஏய் காவ்யா... உன்கிட்டே ஏதாச்சும் பாக்கெட் மணி இருந்தால் கொடேன். அடுத்த மாசம் தர்றேன். ஐயாவோட பாக்கெட் இன்னிக்கு நில் பாலன்ஸ்,” என்று கெஞ்சும் குரலில் கேட்டுக் கொண்டே தன் பின்னால் ஓடி வரும் கார்த்தி நிச்சயமாய் இவன் இல்லை.

காவ்யாவைக் கண்டதும் அவன் முகம் மாறினான். நிலைமையைச் சட்டென்று புரிந்து கொண்டான். தன்னைப் பார்த்துப் புன்னகைக்க முயன்ற காவ்யாவுக்கு முகத்தைக் காட்டாமல் அப்பாவை நெருங்கினான். வேதாசலம் கடுகடுத்த முகத்தோடு அவனிடம் சொன்னார். “எதுக்காக வந்திருக்காள்னு கேளுடா!”

கார்த்தி அவள் பக்கமாய்த் திரும்பினான். வேதாசலம் குரலில்

உஷ்ணம் வீசக் கத்தினார். “பத்து மாசங்களுக்கு முந்தி பெத்தவங்களையும் கூடப் பிறந்தவனையும் துச்சமா நெனச்சு பஞ்சைப் பய ஒருத்தனுக்குக் கழுத்தை நீட்டியவளுக்கு இங்கென்ன வேலை?”

காவ்யா ஏறிட்டு கார்த்தியைப் பார்க்க, அவன் வெடித்தான். “அப்பா சொல்றது காதிலே விழலை? எந்த முகத்தை வெச்சுகிட்டு இந்த வீட்டுப் படியேறியிருக்கே? தாலி கட்டின அந்தப் பிச்சைக்காரன் சோறு போட முடியாமே துரத்திட்டானா?”

“அண்ணா!” காவ்யா கோபமாய் இடைமறிக்க -

“என்னடி கத்தறே? உம்மேல உயிரையே வெச்சிருந்த அம்மாவைக் காட்டிலும் அவன் பெரிசா போயிட்டானா? நீ வீட்டை விட்டுப் போன ஏக்கத்திலேயே செத்துப் போனாளே அம்மா! கொஞ்சமாவது மனச்சாட்சி இருந்தால் இந்த வீட்டுப் படியேறுவாயா? இப்ப எதுக்காக வந்திருக்கே.”

கார்த்தியிடம் பேசாமல் தன் அப்பாவின் பக்கமாய்த் திரும்பினாள் காவ்யா. அழுகை வெடிக்கும் குரலில் சொன்னாள்: “அப்பா! வாஸ்தவமாய் எனக்கு இந்த வீட்டுப் படியேறக் கால் கூசத்தான் செய்யுது. உங்களையெல்லாம் துச்சமா நினைச்ச ரோஷத்தோடு இந்த வீட்டை விட்டு அன்று வெளியேறிப் போனவள்தான் நான். ஆனால் கள்ளக்காதலனோடு ஊரைவிட்டு ஊர் ஓடிப் போய் வாழ்கிற பெண்ணில்லை நான். பாங்க்கிலே டீஸண்டா வேலை பார்க்கிற ஒருவரை நான் விரும்பி - ஊரறியக் கோயில்ல வெச்சுக் கழுத்தில தாலி கட்டிக் கொண்டவள் தான். அவர் என்னை ரொம்பவும் அன்பாத்தான் இந்த நிமிஷம் வரை நடத்திட்டிருக்கார். இந்தப் பத்து மாச காலத்தில் நான் ஒரு தடவை கூட கண்ணைக் கசக்க வில்லை.”

“போதும் உன்னோட புருஷன் பெருமையைத் தம் பட்டம் அடிக்கறதுக்காகத்தான் இங்க வந்தியா?” வேதா சலம் கோபமாய்க் கேட்டார்.

“அப்பா! நானா அமைச்சுகிட்ட இந்த வாழ்க்கையைப் பத்தி நீங்க என்னதான் மட்டமா பேசினாலும் அதைப் பத்தி நான் கவலைப்பட மாட்டேன். இப்ப நான் வந்த விஷயம் என்னோட கணவரை ஓர் இக்கட்டிலிருந்து நீங்க காப்பாத்தி என்னோட வாழ்க்கையில் சந்தோஷத்தை நிறைக்கச் செய்யணும்.”

வேதாசலமும் கார்த்தியும் புரியாமல் அவளைப் பார்க்க - காவ்யா தொடர்ந்து பேசினாள்.

“அப்பா, என்னோட கணவர் தன் நண்பர் ஒருத்தருக்காக ஓர் இடத்திலே பத்தாயிரம் ரூபாய் கடன் வாங்கித் தந்து அதுக்கு ஜாமீன் கையெழுத்தையும் போட்டிருந்தார். அந்த நண்பர் திடீரென்று போன மாசம் இறந்து விட்டார். கடன் கொடுத்தவர்கள், ஜாமீன் கையெழுத்துப் போட்ட என்னோட கணவரை பணம் கேட்கிறார்கள். கோர்ட்டிலே கேஸ் போடறதா சொல்கிறார்கள். கோர்ட்டு, கேஸுன்னு போய் பேரைக் கெடுத்துக்க என் கணவர் விரும்பலை.”

காவ்யா முடிக்கவில்லை. கார்த்தி சீறினான் எகத்தாளமாய்.

“ஓகோ! பத்தாயிரம் ரூபாய் கொடுத்து உன் புருஷனோட மானத்தைக் காப்பாத்துன்னு கேக்கத்தான் வந்தியா? பெரிசா ஜம்பம் அடிச்சுட்டுப் போனியே? மனசுக்குப் பிடிச்சவனோடு மகாராணியாட்டம் வாழ்ந்து காட்டறேன்னு திமிரா பேசிட்டுப் போனியே? ‘உங்க சொத்து எனக்குத் தேவையில்லே’ன்னு தூக்கியெறிந்து பேசிட்டுப் போனியே? இன்னிக்குப் பத்தாயிரம் ரூபாய்க்காகப் பல்லைக் காட்டிட்டு வந்து நிக்கறியே? வெக்கமாயில்லே?”

“அண்ணா!” தொண்டை நரம்புகள் அதிரக் கத்தினாள் காவ்யா, “பேசி முடிச்சிட்டியா? நான் சொல்ல வந்ததை முழுசுமா கேட்டுக்காமல் வார்த்தைகளை சிதறடிக்காதீங்க. என்னோட கணவரை ஒரு இக்கட்டிலிருந்து மீட்க உங்ககிட்டே பத்தாயிரம் ரூபாய் கேட்க இப்ப வந்திருக்கேன். உண்மைதான். ஆனா அந்தப் பத்தாயிரத்தை நான் பிச்சை கேட்டு வரல்லே…”

“பின்னே?” கார்த்தி கிண்டலாய்க் கேட்க-

காவ்யா தன் கைப்பையிலிருந்த சில காகிதங்களை உருவினாள். சொன்னாள். “அண்ணா! உன் பங்களா வாசலில் நீ என்ன பிசினஸ் பண்ணுவதாகப் போர்டு போட்டிருக்கே?’கார்த்தி பைனான்ஸ் - இவ்விடம் வீட்டுப் பத்திரங்களின் பேரிலும் தங்கம், வெள்ளி நகைகளின் பேரிலும் கடன் கொடுக்கப்படும்’ என்று போட்டிருக்கே இல்லையா? அதனாலேதான் இங்கே வந்திருக்கேன். உங்க தங்கையாக வரல்லே. ஒரு கஸ்டமரா வந்திருக்கேன். இதோ, இதெல்லாம் என் கணவரோட வீட்டுப் பத்திரம். குருடனும் கூட யோசிக்காம ஒரு லட்சம் ரூபாய்க்கு வீட்டை வாங்கிக்குவான். இந்த வீட்டை அடமானமா வெச்சுகிட்டு எனக்குப் பத்தாயிரம் ரூபாய் குடுங்க. எல்லாரும் கொடுக்கிற வட்டியை நான் தர்றேன். முன்னே பின்னே தெரியாதவங்கிட்டே அடமானம் வைக்கறதைக் காட்டிலும் உங்ககிட்டேயே வெச்சுப் பணம் வாங்கிக்கலாமேன்னு எண்ணித்தான் வந்தேன். ஏன்னா, வேதாசலத்தோட மகள் வீட்டுக்கு

வந்த நேரம் அவங்களோட பரம்பரையான வீடு அடமானத்துக்குப் போயிடுச்சுங்கற கெட்ட பேரு என் புருஷன் வீட்டாருக்குத் தெரியக்கூடாது பாருங்க!”

காவ்யா பேசப் பேச...

வேதாசலமும் கார்த்தியும் பதில் பேசத் தோன்றாமல் திகைத்துப் போய் நின்றிருந்தனர்.

# 7. குறிஞ்சிப்பூக்கள் எங்கும் பூக்கும்

“கும்புடறேன் டாக்டர் ஐயா..” முழங்கை வரை க்ளவுஸை மாட்டிக் கொண்டு எருமை மாட்டின் வாய்ப் புறத்தில் கையை நுழைத்து அதனுடைய சுகவீனத்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த நான் - எனக்குப் பின்புறத்தில் ஒலித்த குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன்.

இசக்கி நின்று கொண்டிருந்தாள் கதவோரமாய். என்னவென்பது போல் புருவத்தை நெரித்தேன். இசக்கி அழுகிற குரலில் சொன்னாள்.

“என்னோட லட்சுமிக்கு இன்னிக்கு இரவுக்குள்ளாற பெரசவம் ஆயிடும் போலிருக்கு டாக்டர் ஐயா.”

“லட்சுமியா? யார் அது?” - இளப்பமாய் கேட்டேன். என் குரலில் மண்டியிருந்த கேலியைப் புரிந்து கொள்ள முடியாமல் இசக்கி இறுகிய முகத்தோடு சொன்னாள்: பசு மாடு சாமி... போன வருசம் அதுக்கு கெர்ப்பம் ஆறதுக்காக ஊசி கூட போட்டீங்களே… கியாபகம் இல்லீங்களா? அது உண்டாகி செனையா நிக்குது சாமி... காத்தால புடிச்சு வலி அதிகமாயிடுச்சு. வலியாலே துடிக்குது சாமி...”

நான் இசக்கியின் பேச்சைக் காதில் வாங்கிக் கொள்ளாதவன் போல் க்ளவுஸை உருவிப் பக்கத்திலிருந்த பக்கெட்டில் வீசி விட்டு எருமை மாட்டின் சொந்தக் காரரிடம் பேசினேன். பிறகு கையைக் கழுவிக் கொள்வதற்காகத் தண்ணீர்க் குழாய் அருகே சென்றேன். இசக்கி என்னைப் பின்தொடர்ந்து வருவது தெரிந்தது.

“டாக்டர் ஐயா...”

எரிச்சலோடு திரும்பினேன்.

“என்ன?”

“நீங்க சித்த நேரம் எனக்கோசரம் வந்து பார்த்தீங்கன்னா தேவலைங்க... லச்சிமி வலியால துடிக்குதுங்க...” கண் கள் கலங்க என்னை ஏறிட்டாள் இசக்கி. என்னுள் கோபம் சுறுசுறுவென்று ஏறியது.

“நீ கூப்பிட்டா நான் உடனே வந்துடனுமா? நீ வெச்ச ஆளா நான்? பேசாம போ. பிரசவம் தானா ஆயிடும்...”

நான் பாம்பாய்ச் சீறினேன்.

இசக்கி ஜாக்கெட் போடாத மாராப்பில் கண்களைத் துடைத்துக் கொண்டே படி இறங்கிக் கீழே நடந்த போது பக்கவாட்டில் எழுந்த இளமைப் புடைப்புகள் என் நரம்புகளைச் சுண்டின.

போன வருஷம் நான் இந்தக் கிராமத்துக்கு ‘மாட்டு டாக்டராக’ இந்த வெட்டர்னரி ஆஸ்பிடலுக்குள் நுழைந்து - முதன்முதலாக இசக்கியைச் சந்தித்தபோது...

“நீங்கதான் புதுசா வந்த மாட்டு டாக்டரா சாமி?”

ஹெரால்ட் ராபின்ஸனைத் தலைகீழாகக் கவிழ்த்து விட்டுத் திரும்பினேன். கதவு ஒரமாய் இசக்கி நின்றிருந்தாள். நல்ல கறுப்பு. ஆனாலும் அதில் இருந்த மினு மினுப்பு என்னை அயர வைத்தது. ஈட்டி மரத் துண்டத்தை பாலிஷ் செய்தாற் போல் பளபளத்த தோள் பட்டைகள் ரவிக்கை இன்றி வெறியூட்டின. அவள் மார்புப் பிரதேசம் என் மூச்சை அடைத்தது.

கீழக் குடியில் பிறந்த இவளுக்கு இப்படியொரு கிளர்ச்சியூட்டும் அழகா?

“என்ன வேணும்?” என்று கேட்டுக் கொண்டே எழுந் தேன். இசக்கி வெட்கப்பட்டவள் போல் நெளிந்தாள். கைகளைக் குறுக்காகக் கட்டிக் கொண்டு இசக்கி பேசினாள்.

“ஒண்ணுமில்லை சாமி... என்னோட லச்சிமி இன்னும் உண்டாகல்ல... எனக்கு அவதாங்க தொணை... அப்பனோ ஆயியோ இல்லாத அநாதை சாமி! புருஷனும் ஜெயிலிலே இருக்காரு. கள்ளச் சாராயம் காச்சினாரு. ஜட்ஜஸூம் ஒரு வருஷம் ஜெயிலில் போட்டுட்டாரு. பொழப்புக்கு என்னோட லச்சிமியைத்தான் நம்பியிருக்கேன். செனையாகிக் குட்டி போட்டுப் பாலு வியாபாரம் பண்ணலாம்னு யோசனை. ஆனாலச்சுமிதான் செனையாயில்லை...”

நான் சிரித்தேன். “இதற்கா கவலைப்படறே? ஆர்டி பிஷியல்

இன்ஸ்மினேஷன் கொடுத்தா உன்னோட லச்சிமி செனையாயிடும்.”

இசக்கி என்னைப் பார்த்து விழித்தாள்.

“சாயங்காலமா உன்னோட லச்சிமியைக் கூட்டிட்டு வா, ஊசி போடலாம்.”

இசக்கி தன் பற்கள் பளிச்சிடச் சிரித்துக் கொண்டே கையெடுத்துக் கும்பிட்டாள். என் பார்வையோ இசக்கி யின் உடம்பு பூராவும் கட்டுப்பாடின்றி மேய்ந்தது.

அன்றைக்குச் சாயந்திரமே லச்சிமியோடு வந்து விட்டாள். இளமை குலுங்கப் படியேறி வந்தாள்.

அட்டெண்டர் கண்ணுச்சாமி இன்செக்ஷனோடு வந்தான்.

“லச்சிமிக்கு வலிக்காத மாதிரி ஊசி போடுங்க டாக்டர் ஐயா...”

நான் சிரித்துக் கொண்டே லச்சிமியின் அருகே சென்றேன். அடுத்து ஐந்து நிமிடத்துக்குள் லச்சுமிக்கு ஆர்டி பிஷியல் இன்ஸ்மினேஷன் செய்து முடித்தேன்.

“அவ்வளவுதான். கூட்டிட்டுப் போ...” கண்ணுச்சாமி சொன்னான்.

“எப்ப சாமி கன்னு போடும்?”

“மனுஷ ஜாதி மாதிரி இதுக்கும் சரியா முந்நூறு நாள்... உன்னோட வீட்டிலே கன்னுக்குட்டி துள்ளும்…”

இசக்கி வாய் விட்டுச் சிரித்தபடியே லச்சிமியை அழைத்துக் கொண்டு போகத் திரும்பினாள்.

கண்ணுச்சாமியைச் சிகரெட் வாங்கி வரச் சொல்லி அனுப்பிவிட்டு இசக்கியிடம் மெல்லிய குரலில் கேட்டேன்.

“லச்சிமி ரொம்ப இளைச்சிருக்கே?”

“ஆமாஞ்சாமி...”

“நீ மேப்பே போடறதில்லையா?”

“ஏதோ போடறேன் சாமி... என்னோட வயத்துப்பாடே பெரிய பாட இருக்கு...”

இசக்கி சலித்துக் கொண்டாள்.

“பணம் வேணும்னா நான் தரட்டுமா?

“நீங்களா சாமி? கடனாகவா?”

“இல்லே, சும்மாத்தான்.”

“சொம்மாவா?... வேணாஞ்சாமி…” - இசக்கி அவசர அவசரமாய்ச் சொன்னாள்.

“அப்படீன்னா ஈடு ஏதாச்சும் கொடுத்துட்டுப் பணம் வாங்கிக்க...”

“என்கிட்ட என்ன சாமி இருக்கு ஈடு குடுக்க…”

“சாயந்தரமா ஏழு மணிக்கு மேலே இருட்டின பிறகு இங்கே வந்துட்டுப் போ... பணம் தரேன்...” - சொல்லி விட்டு அவள் முகத்தைத் தயக்கத்தோடு பார்த்தேன்.

“சாமி... நா கீழ்ச் சாதிப் பொம்பளைதா. ஆனா சோரம் போற கீழ் புத்திக்காரியில்லே. ஒளுக்கம், மானம், மருவாதை உசந்த குலத்துப் பொம்பளைக்கு மட்டும் சொந்தமில்லை. என்ன மாதிரி சக்கிலிச்சிப் பொம்பளைக்கும் சொந்தம்தான்... கடையிலே காசு குடுத்துக் கருப்பட்டி வாங்கற மாதிரி என்னோட உடம்பைக் காசு குடுத்து வாங்கப் பாக்கறீங்க... ஒங்களுக்கு ஒரு வருசத்துக்கு முன்னாடிதான் கண்ணாலம் ஆயி பொஞ்சாதியோட இந்த ஊருக்கு வந்திருக்கிறதாக் கண்ணுசாமி சொன்னாரு... ஓங்க பொஞ்சாதி இருக்கிறப்ப இந்தப் பொறம்போக்கு மேலே ஏஞ்சாமி ஆசைப்படறீங்க..? ஒங்க பொஞ்சாதை விட நான் என்ன அம்புட்டு அளகா? அவங்க நிறத்துக்கு முன்னாடி நான் நிக்க முடியுமா? வேண்டாஞ் சாமி...”

இசக்கி மிக மெதுவான குரலில் - அழுத்தமாய், நிதானமாய்க் கூறிக்கொண்டு போனவள், அட்டெண்டர் கண்ணுச் சாமி வருவதைக் கண்டதும் பேச்சைச் சட்டென்று நிறுத்தி விட்டு லச்சிமியை ஒட்டிக் கொண்டு போக முற்பட்டாள்.

அன்றைக்குப் போன இசக்கி மறுபடியும் இன்றைக் குத்தான் ஆஸ்பத்திரியில் நுழைந்திருக்கிறாள்.

இசக்கியிடம் அப்படி முரட்டுத்தனமாய் பேசியது என் வக்கிர மனத்துக்கு ரொம்பவும் இதமாய் இருந்தது. ‘பெரிய கண்ணகி பரம்பரை! உனக்கு மட்டும்தான் வீராப்புக் காட்டத் தெரியுமோ?

உன்னோட லச்சிமிக்குக் கன்று அப்நார்மல் பொஸிஷன்லதான் இருக்கு... என்னோட உதவி இல்லாமல் உன் னோடலச்சிமி

எப்படிக்கன்னு போடும்னு பார்க்கிறேன்…!"

மதியத்துக்கு மேல் நாலைந்து கேஸ்களைப் பார்த்து மருந்தைக் கொடுத்துவிட்டு நாற்காலியில் சலிப்போடு சாய்ந்த போது இசக்கி அவிழ்ந்த கூந்தலோடு காம்பவுண்டுக்குள் வேகமாக நுழைவது தெரிந்தது.

"ஐயா... டாக்டர் ஐயா... என்னோட லச்சிமி பிரசவ வேதனையில துடிக்கிறா ஐயா... கன்னோட காலு ரெண் டும் வெளியே வந்து தொங்குதய்யா... நீங்க கொஞ்சம் வந்து பாருங்கய்யா..."

"இசக்கி ஆஸ்பத்திரி ரூல்ஸ்படி நான் வெளியே வந்து வைத்தியம் பார்க்கக் கூடாது. எவனாவது மொட்டைக் கடுதாசி எழுதிப் போட்டான்னா என்னோட வேலையே போயிடும். வேணும்னா உன்னோட லச்சிமியை இங்கே கூட்டிக்கிட்டு வா பார்க்கலாம்…"

நிதானமாய்ச் சொல்லிவிட்டு பாக்கெட்டிலிருந்து சிகரெட் ஒன்றை உருவி, தீப்பெட்டியைக் கொண்டு பொருத்தினேன்.

இசக்கி கைகளைப் பிசைந்தாள். "இந்த நெலமையிலே எப்படிங்க ஐயா லச்சிமியை நடத்திக் கூட்டிக்கிட்டு வர முடியும்? அது வாயில்லா சீவனுங்க…"

நான் புகையை ஊதினேன். "அந்த வாயில்லா ஜீவனுக்காக நான் பரிதாபப்பட்டு வந்தா என்னோட வேலை போயிடும் இசக்கி... கடையில காசு கொடுத்துக் கருப்பட்டி வாங்கற மாதிரி வேலையை வாங்க முடியுமா என்ன?"

இசக்கி அதிர்வது துல்லியமாய் எனக்குத் தெரிந்தது.

சைக்கிளைக் காம்பவுண்டுச் சுவர் ஒரமாய்ச் சாத்தி விட்டு வீட்டுப் படியேறினேன். கதவைத் தட்டுவதற்கு முன்பாகவே கதவு திறந்தது.

என் மனைவி சுஜா சிரித்த முகத்தோடு தலையைச் சாய்த்து என்னைப் பார்த்தாள்.

"நான் வர்றது எப்படித் தெரிஞ்சுது?" - ஆச்சரியத் தோடு கேட்டுக் கொண்டே அவள் மேல் மோதிக் கொண்டு உள்ளே நுழைந்தேன்.

"மெல்ல... மெல்ல... வயத்துல அடிபட்டா உங்க பையன் அழுவான்..."

சுஜா தன் மேடுற்ற வயிற்றைப் பிடித்துக் கொண்டு புன்னகைத்தாள்.

"எனக்கு முதல்லே சாதத்தைப் போடு... கலியனுர்க் கிராமத்துக்கு

மினிஸ்டர் வர்றாராம். கோழிப் பண்ணையைத் தொடங்கி வைக்கப் போறாராம். இருக்கிற நாலைஞ்சு கிராமத்துக்கு நான்தானே மாட்டு டாக்டர்... வரச் சொல்லியிருக்காங்க...”

“எத்தினி மணிக்குத் திரும்புவீங்க?”

“ஆறு மணிக்கு மேலே ஆயிடும்…”

“சீக்கிரமா வந்துடுங்க. இந்த அத்துவானக் காட்டிலே இருட்டின பிறகு தனியா இருக்கிறதுக்குப் பயமா இருக்குங்க...”

“ம்... ம்...” நான் ஷர்ட்டையும் பாண்டையும் கழற்றாமல் அப்படியே உட்கார்ந்து சாப்பிட்டு விட்டுக் கலியனூருக்கு விரைந்தேன்.

கலியனூர் கிராமத்தை விட்டுப் புறப்படும்போதே சாயந்திரம் ஆறு மணி ஆகி விட்டிருந்தது.

ஊரை நெருங்கி டிஸ்பென்சரியை அடைந்த போது மசமசவென்று இருட்டிக் கொண்டு வந்தது. கண்ணுச்சாமி டிஸ்பென்சரி அருகே நின்றிருந்தான்.

சாவியை வாங்கிச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டு “கேஸ் ஏதாச்சும் வந்ததா கண்ணுச்சாமி?” என்றேன்.

“ஒண்ணும் வல்ல ஸார்... ஆனா இசக்கிதான் ரெண்டு மூணு தபா ஓடி ஓடி வந்தா... ஒங்களை எப்படியும் கூட் டிக்கிட்டு போறதுக்காக அங்கியும் இங்கியும் அலைஞ்சா... ஒங்க வுட்டுக்குப் போயிப் பார்க்கச் சொல்லி நான்தான் சொல்லி அனுப்பிட்டேன். சரின்னு ஒங்க வுூட்டுக்குப் போனவ அப்புறமா இங்க வல்லே... இதுக்கு மத்தியிலே இசக்கியோட லச்சிமிக்குக் கன்று செத்தே பொறந்திச்சாம்... நம்ம மன்னாரு சொல்லிட்டுப் போனான்.”

என் மனசுக்குள் மீண்டும் அந்தக் குரூர நிம்மதி தோன்றியது.

“சரி சரி... நீ வீட்டுக்குப் போ. ஒரு நாளைக்கு ஆயிரம் பிறக்குது ஆயிரம் சாகுது! அதையெல்லாம் பார்த்தா முடியுமா?”

நான் சைக்கிளை வீட்டை நோக்கித் திருப்பினேன். வீட்டை அடைந்ததும் கதவில் பூட்டுத் தொங்கியது.

சுஜா எங்கேயும் போக மாட்டாளே?

சைக்கிளைத் திருப்பிக் கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தேன். செம்மண் பாதையில் மூலையிலிருந்த அந்தப் பெட்டிக்

கடையினின்றும் அந்த லுங்கி கட்டிய ஆள் என்னை நோக்கி வருவது தெரிந்தது. சைக்கிளில் டிஸ்பென்ஸரிக்குப் போகும்போது பெட்டிக்கடை அருகே பலமுறை அவனைப் பார்த்திருக்கிறேன்.

என்னை நெருங்கியதும் கேட்டான். “உங்க ஒய்ஃபைத் தேடறீங்களா?”

நான் தலையை ஆட்டினேன்.

“உங்க ஒய்ஃப் இத்தனை நேரம் டவுன் பெண்கள் ஆஸ்பத்திரியிலே அட்மிட் ஆகியிருப்பாங்க!”

நான் அதிர்ந்தேன்.

“ஆஸ்பத்திரியிலா? என்னாச்சு அவளுக்கு?”

“பெரசவம் ஆறதுக்காகத்தான்… வலி கண்டிடுச்சு...”

மீண்டும் அதிர்ந்தேன். பிரசவமா? ஏழாம் மாசத்தி லேயா? - குழம்பினேன்.

“என்னப்பா சொல்றே? விவரமாச் சொல்லு.”

“சாயங்காலம் அஞ்சு மணி இருக்கும். இசக்கிப் பொண்ணு என் கடையண்டை ஒடியாந்தா.அண்ணே... அண்ணே! டாக்டர் சம்சாரத்துக்குப் புள்ளை நோவு எடுத்துடுச்சு. டவுன் ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போவணும்... ஏதாச்சும் வண்டி ஏற்பாடு பண்ணுன்னு சொன்னா... நா நம்ம முருகனோட கூண்டு வண்டியை ஏற்பாடு பண்ணிக் கொடுத்தேன். இசக்கி ஒங்க சம்சாரத்தை வண்டில ஏத்திக்கிட்டு டவுன் ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டுப் போனா... இந்நேரம் கொளந்தை பொறந்திருக்கும்.”

‘இசக்கி கூட்டிட்டுப் போனாளா?’

என் உடம்பு பூராவும் குப்பென்று வியர்த்தது. சைக்கிளைத் திருப்பிக் கொண்டு டவுன் ஆஸ்பத்திரியை நோக்கிப் பேயாய் ஓடினேன்.

எதிர்ப்பட்ட நர்சை மறித்தேன்; விசாரித்தேன்.

பரபரப்போடு நர்ஸ் சொன்னாள்.

“ஆமா அந்தப் பொண்ணுக்கு இப்பத்தான் டெலிவரி ஆச்சு... வெயிட்லெஸ் சைல்ட்... ஏழாம் மாசத்திலேயே பொறந்திருக்கு... ஜாக்கிரதையா கவனிச்சுக்கிட்டா தேறிடும்... ஆமா... நீங்க யாரு?”

“அந்தப் பெண்ணோட ஹஸ்பெண்ட்.”

“ஓ!” - அந்த நர்ஸ் வியப்பால் உதடுக்ளைக் குவித்து விட்டுப் பிரசவ வார்டை நோக்கிக் கையைக் காட்டினாள். “அந்த வார்டுதான்... கடைசி ரூம்... போய்ப் பாருங்க...”

நான் வராந்தாவில் ஓடாத குறையாக நடந்தேன்.

கடைசி அறையை அடைந்து கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தேன். கட்டிலில் என் சுஜா படுத்திருப்பது தெரிந்தது. அருகே பெண் டாக்டர், நர்ஸஸுக்கு ஏதோ சொல்லிக் கொண்டிருக்க நான் ‘எக்ஸ்கியூஸ்மீ’ என்றேன்.

பெண் டாக்டர் திரும்பிப் பார்த்தாள். என்னைப் பார்த்த படியே ‘எஸ்’ என்றாள். நான் சுஜாவைக் காட்டிச் சொன்னேன். “நான் அந்தப் பெண்ணோட ஹஸ்பெண்ட்... வெடர்னரி அஸிஸ்டெண்டாக இருக்கிறேன்.”

“ஐ... ஸீ... நீங்க இப்பத்தான் வர்றீங்களா?” - அவள் கேட்டாள்.

“எஸ் டாக்டர்... கலியனூர்க் கிராமம் வரைக்கும் போயிருந்தேன்... நான் போகிற வரையில் வழி வாஸ் ஆல்ரைட், ஒரு பெய்னும் இல்லே. எப்படி... திடீர்னு... அதுவும் இந்த ஏழாவது மாதத்தில்...” - நான் வியப்பைக் கொட்டினேன்.

அந்தப் பெண் டாக்டர் புன்னகை செய்தாள். “ஹௌ கேன் வி ஃபிக்ஸ் த டேட்? காட் ஈஸ் கிரேட்... உங்க ஒய்ஃப் ரொம்பவும் அதிர்ஷ்டம் செய்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் குழந்தை இருந்த அப்நார்மல் பொஸிஷனில் தகுந்த நேரத்தில் ஆஸ்பத்திரிக்கு வர முடியுமா? அந்தக் கறுத்த பொண்ணு மட்டும் சரியான நேரத்தில் கூட்டி வராமெ இருந்திருந்தா உங்க ஒய்ப்பையும் உங்க குழந்தையையும் எங்களால காப்பாத்தியிருக்க முடியாது…”

என் இதயம் எங்கோ உடைப்பெடுத்துக் கொண்டாற்போல் பொங்கியது.

“தாங்க்யூ வெரிமச் டாக்டர்!”

“நோ காம்ப்ளிமெண்ட்ஸ் ஃபார் மீ... ஓங்க ஒய்ஃபைக் கூட்டிக்கிட்டு வந்த பொண்ணுக்குச் சொல்லுங்க.”

“கண்டிப்பாகச் சொல்கிறேன் டாக்டர்” என்றேன். தெளிவுற்ற மனச் சுனையிலிருந்து பொங்கிப் பெருகிய நீருக்கு என் கண்கள்

வடிகால்களாயின.

# 8. என்றாவது ஒரு நாள்

“ஆதர்ஷ்…!” - அம்மா குரல் கொடுத்துக் கொண்டே என்னுடைய அறைக்குள் நுழைய, நான் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தைக் கவிழ்த்தேன்.

“என்னம்மா...?”

“புரோக்கர் கொண்டு வந்து கொடுத்த 15 போட்டோல, எந்தப் பொண்ணை முடிவு பண்ணியிருக்கே..?”

நான் உச் கொட்டினேன். “அட... போம்மா! ஒரு பொண்ணும் சரியில்லை...”

முதுகுக்குப் பின்னால் நிழலாட, திரும்பிப் பார்த்தேன்.

அப்பா அறை வாசலில் நின்றிருந்தார். முகத்தில் வேலூர் வெயில் அளவுக்கு கோபம். அவருடைய நரை மீசை உண்மையிலேயே துடித்துக் கொண்டிருந்தது.

“துரை வெளிநாட்டுக்குப் போய் லட்ச லட்சமாய்ச் சம்பாதிக்கிறார் இல்லையா..? அந்தத் திமிர் உடம்புல இருக்கும் போது பேச்செல்லாம் அப்படித்தான் வரும்…”

“அப்பா...! நான் என்ன சொல்ல வர்றேன்னா...”

“நீ ஒண்ணையும் சொல்ல வேண்டாம்...’! உன்னை சின்ன வயசுல எந்த ஸ்கூல்ல கொண்டு போய் சேர்க்கணும்ன்னு முடிவு பண்ணினது நான். அதுக்கப்புறம் எந்தப் படிப்பை, எந்த காலேஜில் படிச்சா உன்னோட ஃப்யூச்சர் நல்லாயிருக்கும்னு முடிவு பண்ணினதும் நான்தான். அதே மாதிரி எந்தப் பொண்ணை உனக்கு கல்யாணம் பண்ணிவெச்சா, உன்னோட வாழ்க்கை சந்தோஷமாய் இருக்கும்னு எனக்குத்தான் தெரியும். அந்த பிரின்ஸிபால் பொண்ணு லாவண்யாவை நானும் உன் அம்மாவும் கோயில்ல பார்த்தோம். அம்சமான பொண்ணு. அந்தப் பெண்ணோட அப்பாவையும் தாத்தாவையும் எனக்கு நல்லாவே தெரியும். கௌரவமான குடும்பம். அதுவுமில்லாம...?”

“அப்பா..!”

“பேசாதே…! நாளைக் கழிச்சு மறுநாள் அந்தப் பெண் லாவண்யாவை, கோயில்ல வெச்சு முறைப்படி, பெண் பார்க்கப் போறோம். பெண்ணைப் பார்த்துட்டு, அதுக்கப் புறம் பேசு...!”

கண்களில் கோபம் தகிக்கப் பேசிய அப்பா, என்னை ஒரு உஷ்ணப் பார்வையால் நனைத்து விட்டுப் போனார்.

நகரின் எல்லையில் இருந்த மஹாராணி அவென்யூ. வீடுகள் தள்ளித் தள்ளி தெரிய, கோடியில் இருந்த அந்த வீட்டுக்கு முன்பாய் பைக்கை நிறுத்திவிட்டு, கேட்டைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைய முயல...

என் மனைவி சாருமதி முகம் நிறைய பொய்க் கோபம் காட்டிக் கொண்டு நின்றிருந்தாள். “ஒன்பது மணிக்கே வர்றேன்னு சொன்னீங்க?”

“ஸாரி... சாரு...! வீட்ல ஒரே பிரச்னை! பொண்ணு பார்க்க நான் வந்தேயாகணும்ன்னு அப்பா அழிச்சாட்டியம் பண்ணிட்டு இருக்கார். எனக்கு என்ன பண்றதுன்னே தெரியலை.”

நான் உள்ளே போய் நாற்காலிக்கு சாய்ந்தேன். சாருமதி பெருமூச்சுவிட்டாள்.

“உண்மையைச் சொல்லிட வேண்டியதுதானே...! அப்பா! ரெண்டு வருஷத்துக்கு முன்னாடியே எனக்குக் கல்யாணம் ஆயிடுச்சு. உங்க மருமக பேர் சாருமதி. காதலிக்கும் போதே சாந்தி முகூர்த்தம் நடந்துட்டதால, இப்ப உங்களுக்கு ‘அத்வைத்’ என்கிற பேர்ல ஆறுமாத பேரன் ஒருத்தன் இருக்கான். மருதமலைக்குப் போகிற வழியில் மஹாராணி அவென்யூன்னு ஒரு காலனி இருக்கு. அங்கே அவங்களுக்குத் தனியா வீடு எடுத்துக் கொடுத்து, யார்க்கும் தெரியாமே ஒரு கண்ணாமூச்சி இல்வாழ்க் கையை நடத்திட்டு வர்றேன்’ன்னு.

“வேண்டாம்மா. அப்பா கோபக்காரர். அப்பாவும் அம்மாவும் உயிரோடு இருக்கிற வரைக்கும் ஏதாவது ஒரு காரணம் சொல்லி, கல்யாணத்தைத் தள்ளிப் போட்டுக்கிட்டே போக வேண்டியதுதான்.”

மறுநாள் சரியாய், பத்து மணிக்கெல்லாம் ராஜவீதியில் இருந்த சௌடேஸ்வரியம்மன் கோயிலுக்குப் போய்விட்டோம்.

கோயிலில் கூட்டம் அவ்வளவாக, இல்லை. அப்பா தனக்கு பரிச்சயமான கோயில் தர்மகர்த்தாவிடம் தள்ளி நின்று பேசிக் கொண்டிருக்க, நான் அம்மாவின் தோளை மெல்லத் தொட்டேன்.

“அம்மா...”

“என்னடா..?”

“பொண்ணைப் பிடிக்கலைன்னா நான் சொல்லிடுவேன்.”

அப்போது அப்பா பக்கத்தில் வந்தார்.

“என்ன சொல்றான் உம் புள்ள..?”

“ஒண்ணும் சொல்லலையே..!”

“பொண்ணுபிடிக்கலைன்னு சொன்னான்னுவைய்யி…!
அதுக்கப்புறம் நடக்கிற கதையே வேறே...!”

“அவன் அப்படியெல்லாம் சொல்லமாட்டான்...”

அம்மாவும் அப்பாவும் வெளிப் பிரகாரத்திட்டில் உட்கார்ந்து கோயில் வாசலைப் பார்த்துக் கொண்டிருக்க, நான் பக்கத்தில் பலியாடு மாதிரி நின்றிருந்தேன். மனசுக்குள் எண்ணம் ஓடியது.

“பெண்ணைப் பார்த்து விட்டு வீட்டுக்குப் போனதும் பெண் பிடிக்கவில்லையென்று தைரியமாய்ச் சொல்லிவிட வேண்டியதுதான்...! அப்பாவுக்கு பிரளயக் கோபம் வரும். வரட்டுமே…! ஏதாவது சொல்லி சமாளிக்க வேண்டியதுதான்.

திடும்மென்று என் தோளில் கை வீழ்ந்தது. யோசனைகளை அறுத்துக் கொண்டு நிமிர்ந்தேன். அம்மா புன்னகைத்தாள்.

“பொண்ணு வந்தாச்சுடா.”

என் பார்வை கோயில் வாசலுக்குப் போக, ஆட்டோவிலிருந்து சாருமதி, குழந்தை அத்வைதைத் தோளில் போட்டபடி இறங்கிக் கொண்டிருந்தாள்.

நான் சர்வமும் உறைந்து போய் நிற்க, அப்பா ஒரு சின்னக் குழந்தையைப் போல வாசலுக்கு ஓடிப் போனார்.

“வாம்மா... சாரு...!” ஆட்டோவுக்கு பணத்தைக் கொடுத்து அனுப்பிவிட்டு, குழந்தையை வாங்கிக் கொண்டார். என்னுடைய பின்னந்தலையில் ஒரு தட்டு வீழ்ந்தது. உணர்வுக்கு மீண்டேன். அம்மாதான்!

“திருட்டு ராஸ்கல்…! ஒரு குழந்தைக்கு அப்பா நீ. உனக்கு

லாவண்யாவா வேணும்...?”

நான் பேசத் திணறினேன். “அ...அ...அம்மா! சாரு மதியை...உ.... உங்களுக்கு... எப்படி..?”

“தெரியுமுன்னு கேட்கறியா..? போன வாரம் வெள்ளிக்கிழமை, நானும் அப்பாவும் இந்த கோயிலுக்கு சாமி தரிசனத்துக்காக வந்திருந்த போது, இந்தப் பொண்ணையும் அவ தோளில் தூங்கிட்டிருந்த குழந்தையையும் பார்த்தோம். நீஆறுமாசக் குழந்தையாய் இருந்தப்ப எப்படி இருந்தயோ... அதே மாதிரி, இந்தக் குழந்தையும் இருந்ததைப் பார்த்துவிட்டு நானும் அப்பாவும் ஆச்சர்யப்பட்டோம். “எப்ப கல்யாணப் பேச்சை எடுத்தாலும் நீ வேண்டாம் வேண்டாம்’ன்னு சொல்றதால, அப்பாவுக்கு உன் மேல ஒரு சந்தேகம். அதனால கோயிலை விட்டு வெளியே வந்த இந்தப் பொண்ணை, அவளுக்குத் தெரியாமே பின் தொடர்ந்து போய் வீட்டைத் தெரிஞ்சுகிட்டு வந்தோம். அதுக்கப்புறம் உன்னைக் கண்காணிச்சோம். நீ அந்த வீட்டுக்கு போய்ட்டு வர்றது தெரிஞ்சது... உன் வாயிலிருந்து உண்மையை வரவழைக்கத்தான் அப்பா பெண் பார்க்கப் போறதாய்ப் பொய் சொல்லி, உனக்கு ஏகப்பட்ட டார்ச்சர் கொடுத்துப் பார்த்தார். நீ அசையவேயில்லை. அதுக்கப்புறம்தான் இப்படியொரு ஏற்பாட்டைப் பண்ணினார். சாருமதிக்கே, இன்னிக்குக் காலையில் ஏழுமணிக்குத்தான் எல்லா விஷயமும் தெரியும். உனக்கு போன் பண்ணி எதையும் சொல்லக் கூடாதுங்கிறது எங்க அன்புக் கட்டளை.”

கண்களில் நிறைந்துவிட்ட நீரோடு அப்பாவைப் பார்த்தேன். அந்த அறுபது வயதுக் குழந்தை ஆறுமாத குழந்தையைக் கொஞ்சி, முத்தமிட்டுக் கொண்டிருந்தது. சாருமதி என்னைப் பார்த்து ரகசியமாய்க் கண்ணடித்தாள்.

# 9. கொடுத்து வைத்தவர்

வாசலில் ஷாமியானாவுக்குக் கீழே போடப்பட்டிருந்த நாற்காலிகளில் துக்க முகங்களோடு ஒரு கும்பல் உட்கார்ந்திருக்க, கொஞ்சம் தள்ளி ஒரு வேன் சத்த மில்லாமல் வந்து நின்றது.

ஒரு டாக்டர், இரண்டு நர்ஸ்கள் உட்பட ஐந்து பேர் கீழே இறங்கினார்கள். முன்புற நாற்காலியில் சாய்ந்து தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்த திவாகர் எழுந்து வந்தான்.

டாக்டர் அவனை ஏறிட்டபடி கேட்டார்... "இங்கே பாலசுந்தரம்னு ஒருத்தர் ஹார்ட் அட்டாக்கில் இறந்துட்டதா கேள்விப்பட்டு வர்றோம். இது அவரோட வீடுதானே...?"

"ஆமா..."

"நீங்க...?"

"அவரோ சன்..."

டாக்டர் சில விநாடி மௌனத்துக்குப் பிறகு மெள்ள பேச்சை ஆரம்பித்தார்... "நாங்க லோட்டஸ் ஐ ஃபவுண் டேஷனிலிருந்து வர்றோம். இது உங்க ஃபாதர் எழுதிக் கொடுத்த கண்தான விண்ணப்பம்..."

டாக்டர் முடிப்பதற்குள் குறுக்கிட்டான் திவாகர்... "ஸாரி சார்! அப்பா விண்ணப்பம் கொடுத்திருக்கலாம். ஆனா எங்க ஃபேமிலி மெம்பர்ஸ்"க்கு இதுல இஷ்டம் இல்லை."

"படிச்ச நீங்களே இப்படி சொல்லலாமா..? கண்தானம்கிறது..." டாக்டர் பேசப் பேச...

விஷயம் பரவி, திவாகர்க்குப் பின்னால் மெள்ள மெள்ள உறவுக் கும்பல் திரண்டது. விஷயத்தை கேள்விப்பட்டதும் உஷ்ணமானது.

"டாக்டர்... துக்க வீட்ல வந்து லெக்சர் கொடுத்திட்டிருக்க வேண்டாம். டெட்பாடியை அங்கஹீனம் பண்ண நாங்க ஒப்புக்க மாட்டோம். நீங்க கிளம்புங்க."

"கண்தானம் அவர் பிரியப்பட்ட விஷயம். அவரோட ஆத்மா சாந்தி அடைய வேண்டாமா..?"

"அவரோட ஆத்மாவை எப்படி சாந்தியடைய வைக்கிறதுன்னு எங்களுக்குத் தெரியும். நீங்க மொதல்ல இடத்தைக் காலி பண்ணுங்க..."

உறவுக்கும்பல் கோபமாகக் கத்த, டாக்டர் செய்வ தறியாமல் திகைத்து குழுவோடு வேனுக்குத் திரும்பினார். வேனுக்குள் ஏறி உட்கார்ந்த விநாடி டாக்டரின் கோட்டில் இடம் பிடித்திருந்த செல்போன் குரல் கொடுத்தது. எடுததார்.

"டாக்டர் சுந்தரமூர்த்தி...?"

"யெஸ். ஹோல்டிங்."

“நான் டாக்டர் ராகவன்…”

“சொல்லுங்க டாக்டர்…”

“உங்களுக்குக் காலையிலேயே போன் பண்ணி விஷயத்தைச் சொல்ல நினைச்சு எப்படியோ மறந்துட்டேன். ஒரு ஹார்ட் பேஷண்ட். பேரு பாலசுந்தரம். நேத்து என்னோட நர்ஸிங்ஹோமில்தான் அட்மிட் ஆனார். ரெண்டாவது அட்டாக். தீவிர சிகிச்சை கொடுத்தும் பலனில்லாம இறந்துட்டார். அவர் இறக்கிறதுக்குக் கொஞ்ச நேரத்துக்கு முந்தி என்கிட்ட ‘டாக்டர்… நான் இறந்ததுமே என்னோட கண்களை எடுத்துடுங்க. நான் ஏற்கெனவே லோட்டஸ் ஐ ஃபவுண்டேஷனுக்குக் கண் தான விண்ணப்பத்தில் கையெழுத்து போட்டுக் கொடுத்திருக்கேன். ஆனா, என் குடும்பத்தார்க்கு இதுல சம்மதமில்லை. என் உடலை வீட்டுக்குக் கொண்டு போயிட்டாங்கன்னா அங்கே கண்களை எடுக்க விடமாட்டாங்க. அதனால உயிர் பிரிஞ்சதும் முதல் காரியமா என் கண்களை எடுத்துட்டு, யாருக்கும் சந்தேகம் வராதபடி செயற்கைக் கண்களைப் பொருத்திடுங்கனு சொன்னார். நானும் அதே மாதிரி பண்ணிட்டேன். நீங்க எப்ப வேணும்னாலும் என் ஹாஸ்பிடலுக்கு வந்து பாலசுந்தரத்தின் கண்களை கலெக்ட் பண்ணிட்டுப் போகலாம். எப்ப வர்றீங்க..?”

டாக்டர் சுந்தரமூர்த்தி ஸ்தம்பித்துப் போயிருந்தார்.

# 10. நான் அவளைக் காதலிக்கிறேன்

ரன்வேயின் அரைகுறை வெளிச்சத்தில் அலுமினிய உடம்போடு சிங்கப்பூர் ஃப்ளைட் விசுவாசமாய் காத்துக் கொண்டிருக்க, லெளன்ஞ்ச் ஆரஞ்சு வர்ண பி.வி.சியில் உட்கார்ந்திருந்த மஹி, தன் அழகான மனைவி கயலை ஒரு வெப்பப் பெருமூச்சோடு பார்த்தான். அவளுடைய தோள்பட்டையைத் தன் இடதுகை ஆட்காட்டி விரலால் சுரண்டினான.

“கயல்…”

“ம்…” கனமான ஷெல்டனைப் படித்துக் கொண்டிருந்த கயல் நிமிர்ந்தாள். அவளுடைய பெரிய கண்களில் மிழ்நாடு முழுவதற்கும் இலவசமாய் சப்ளை செய்யக் கூடிய அளவுக்கு லட்சக்கணக்கான மெகாவாட்களில் மின்சாரம் தெரிந்தது.

மஹி கேட்டான்… த…ய…க்…க… குரலில். “சிங்கப் பூரில் நடக்கிற

சுற்றுச் சூழல் பாதுகாப்பு மாநாட்டுக்கு நீ போய்த்தான் ஆகணுமா..?”

கண்களில் கோபச்சிவப்பு பரவ-ஷெல்டனை டமா வென்று மூடினாள் கயல். அக்கம் பக்கம் பார்த்துவிட்டு தன் அரிசிப் பற்களைக் கடித்தாள்.

“ஏர்போர்ட்டுக்கு வந்தும் ஆரம்பிச்சுட்டீங்களா... உங்க புராணத்தை! நான் என்விரான்மெண்ட் சயின்ஸில் டாக்டரேட் பட்டம் வாங்கியிருக்கிற ஒரே ஒரு காரணத்துக்காகத்தான் எனக்கு அழைப்பு. இண்டர்நேஷனல் லெவல்ல நடக்கிற செமினார் இது. காலரை நிமிர்த்தி விட்டுக்கிட்டு சந்தோஷப்படுங்க.”

“ஒருவாரம் உன்னைப் பிரிஞ்சு இருக்கணுமேன்னு நினைக்கும் போது... மனசுக்குள்ளே வலி... ரத்தநாளமெல் லாம் ரணமாயிட்ட மாதிரி ஒரு ஃபீலிங்.”

“தமிழ் சினிமா கதாநாயகன் மாதிரி பேத்தாதீங்க! நீங்க ஒரு சாஃப்ட்வேர் இன்ஜினியர். உங்க மனைவிக்குக் கிடைச்ச கௌரவத்தை நினைச்சுப் பெருமைப்படுங்க. இப்படி மூக்கால அழுதுட்டிருக்க வேண்டாம். எனக்கு ஃபர்ஸ்ட்கால் கொடுத்துட்டாங்க. நான் ஃப்ளைட்டுக்குக் கிளம்பறேன். இன்னும் கொஞ்சநேரம் நான் இங்கே உட் கார்ந்துட்டிருந்தா என்னைக் கட்டிப்பிடிச்சி அழுதுடு வீங்க.”

கயல் தன் சிறிய ப்ரீஃப்கேஸோடு எழ, மஹி அவளுடைய கைகளைப் பிடித்தான்.

“கயல்... ஒரு வாரத்துக்குள்ள வந்துடுவேயில்ல?”

“வந்துடறேன்... ஃப்ளைட் இல்லைன்னாலும் வங்காள விரிகுடா கடலை நீந்தியாவது வந்து சேர்ந்துடறேன், போதுமா..?” கோபத்தில் படபடவென்று பொரிந்து விட்டு ஃப்ளைட்டை நோக்கி நடந்தாள் கயல்.

அடுத்த இருபது நிமிஷத்திற்குள் விமானம் விண்ணில் சீறிப் புறப்பட்டு விட, மஹி ஏர்போர்ட்டை விட்டு வெளியே வந்து தன்னுடைய காரின் ட்ரைவிங் சீட்டை ஆக்ரமித்தான். மணிக்கட்டில் நேரம் பார்த்தான். 10.15. ஏர்போர்ட் வளாகத்தில் நியான் விளக்குகள் நிறம் நிறமாய் பிறந்திருந்தன.

காரை 100-ல் விரட்டி சென்னையின் விலாப்பகுதியிலிருந்து இதயப்பகுதிக்கு வந்தான். ஒளி வெள்ளமாய் இருந்த அண்ணாசாலைக்குள் நுழைந்து அதன் விளிம்பில் இருந்த ‘A CUP OF

PLEASURE' என்று நியான் விளம்பரப் பலகை சொன்ன கட்டடத்துக்கு முன்பாய் நிறுத்தினான்.

ஏழு மாடிக் கட்டடம். க்ரௌண்ட் ஃப்ளோரில் வரவேற்பறை.

மஹி உள்ளே போனான். தரையையும் சுவரையும் சிவப்பு வெல்வெட்கனமாய்ப் போர்த்தியிருக்க - ஏ.சி.யின் ஐஸ் காற்று பின்னங்கழுத்தை முகர்ந்தது. ரிசப்ஷன் கௌண்டரில் ஒரு இளைஞன் கருநீல சூட்டில் கழுத்தில் போ கட்டி சிரித்தான்.

"வெல்கம் ஸார்..."

"ஆல்பம் ப்ளிஸ்..."

இளைஞன் மேஜைக்கு அடியில் குனிந்து ஒரு பெரிய ஆல்பத்தை எடுத்து மஹியின் கையில் திணித்தான். மஹி அதை வாங்கிக் கொண்டு போய் சோபாவில் சாய்ந்தான். பக்கங்களைப் புரட்டினான்.

ஒவ்வொரு பக்கத்திலும் ஐஸ்வர்யாராயைப் பின்னுக்குத் தள்ளக்கூடிய வகையில் பெண்கள் சிரித்தார்கள். பத்து மிஷ நேரம் பக்கங்களைப் புரட்டியவன் ஒரு பக்கத்தில் பார்வையை நிறுத்தினான். எழுந்து போய் இளைஞனுக்குக் காட்டினான். அவன் கண்களில் சிரித்தான்.

"இது ரெமி... கொஞ்சம் காஸ்ட்லி. ஒரு மணி நேரத்துக்குப் பத்தாயிரம் ரூபாய்."

"பரவாயில்லை."

மஹி ஆயிரம் ரூபாய் நோட்டுக்களை எண்ணிக் கொண்டிருக்கும் போதே - போ கட்டிய இளைஞன் இண்டர் காமில் பேச, அந்த ரெமி லிஃப்டில் இறங்கி வந்தாள். போட்டோவில் பார்த்ததைக் காட்டிலும் இன்னொரு மடங்கு அழகாகத் தெரிந்தாள். மஹியைப் பார்த்ததும் "ஹேய்... ஹேண்ட்ஸம்" என்று சொல்லி அழகாய்ச் சிரித்து, அவனுடைய தோளில் கை போட்டு ஒட்டிக் கொண்டாள்.

இருவரும் வெளியில் வந்தார்கள்.

விமானம் கடலுக்கு மேலே பறந்து கொண்டிருந்தது.

ஷெல்டனை மூடி வைத்து விட்டு 'இனி தூங்கலாம்' என்று கயல் நினைத்த விநாடி - விமானத்தின் ஒலி பெருக்கியில் அந்த அறிவிப்புக் கேட்டது. காக்பிட்டிலிருந்து பைலட் பேசினார்.

“விமானத்தில் ஒரு சிறிய இயந்திரக் கோளாறு ஏற்பட்டுள்ளதால் அதைச் சரி செய்யும் பொருட்டு விமானம் மறுபடியும் சென்னைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறது. பயணிகள் பதற்றப்படாமல் இருக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.”

பங்களாவின் போர்டிகோவில் காரை நிறுத்தி விட்டு மஹியும் ரெமியும் உள்ளே போனார்கள். மஹி கதவைத் தாழிட்டு விட்டு சுவரில் இருந்த ஒரு ஸ்விட்சைத் தேய்க்க, அறை முழுவதும் கண்ணை உறுத்தாத வெளிச்சம் பரவியது. ரெமி சோபாவுக்குப் போய் சாய்ந்து கொண்டு ஒரு சின்னச் சிரிப்போடு மஹியிடம் கேட்டாள்.

“ஆக... உங்க மனைவி கயல் கிட்டயிருந்து உங் களுக்கு எந்த சந்தோஷமும் கிடைக்கலை...?”

“ஆமா…!”

“அவளுக்கு சோஷியல் சர்வீஸ்தான் முக்கியமா?”

“ஆமா... ஒஸோன் படலத்தில் ஒட்டை விழறதைப் பத்தியும், காடுகள் அழிஞ்சுட்டு வர்றதைப் பத்தியும் மணிக்கணக்கா பேசி கவலைப்படுவா. நான் ஒருத்தன் பக்கத்துல இருக்கிறதையே மறந்துடுவா, எனக்கு நேரத்துக்கு சாப்பாடு கிடையாது. ஒரு வாய் காபி கிடையாது.”

“படுக்கையறையில் கயல் எப்படி?”

“நானும் அவளும் ஒண்ணா பக்கம்பக்கமா படுத்துத்தூங்கி சரியா ஆறு மாசமாகுது… சென்னை நகரை பொல்யூஷனிலிருந்து எப்படிக் காப்பாத்தறதுன்னு ஒரு ப்ராஜக்ட் பண்ணிட்டிருக்கா கயல். ராத்திரி சாப்பிட்ட துமே மாடியறையில் இருக்கிற லைப்ரரி ரூமுக்குப் போயிடுவா. ராத்திரி ரெண்டு மணி வரைக்கும் கண்ட கண்ட ஃபாரின் புஸ்தகங்களையெல்லாம்படிச்சு நோட்ஸ் எடுப்பா. தூக்கம் வந்தா அங்கேயே படுத்துத் தூங்கிடுவா.”

“என்ன கொடுமையான வாழ்க்கை...?”

“வாழ்க்கையில் எனக்கு எந்த சந்தோஷமும் இல்லை. அதனால்தான் இன்னிக்கு உன்னை…”

“உங்க பெட்ரூம் எங்கேயிருக்கு.?” ரெமி ஒரு வெளிச்சப் புன்னகையோடு எழுந்து வந்தாள்.

மீண்டும் மீனம்பாக்கம் ஏர்போர்ட்டை வந்தடைந்த

விமானத்திலிருந்து பயணிகள் லௌன்ச்சுக்கு வர, விமான நிலைய அதிகாரிகள் அவர்களை எதிர் கொண்டார்கள்.

“சிரமத்திற்கு மன்னியுங்கள். விமானத்தைப் பழுது பார்த்து முடிக்க எப்படியும் ஆறுமணி நேரம் பிடிக்கும். அதுவரை நீங்கள் ஓய்வு எடுத்துக் கொள்ள ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டலில் அறைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. ஹோட்டலுக்குப் போக பஸ்கள் வெளியே காத்திருக்கின்றன.”

பயணிகளோடு பயணியாய் நடந்த கயலுக்கு, சட் டென்று அந்த எண்ணம் தோன்றியது.

‘ஹோட்டலுக்குப் போகாமல் வீட்டுக்குப் போனால் என்ன?’

ஏர்போர்ட்டுக்கு வெளியே வந்த கயல், ஒரு கால் டாக்ஸியைப் பிடித்தாள். வீட்டின் முகவரியைச் சொல்லி விட்டு பின்சீட்டில் சாய்ந்து உட்கார்ந்தாள்.

கால்டாக்ஸி புறப்பட்டது.

சென்னையின் நள்ளிரவுச் சாலைகள் சுத்தமாயிருக்க, இருபது நிமிஷப் பயணம்.

பங்களாவுக்கு முன்பாய் டாக்ஸி நின்றது.

கால் டாக்ஸிக்கு பணத்தைக் கொடுத்து அனுப்பி விட்டு காம்பௌண்ட் கேட்டை சத்தமில்லாமல் திறந்து கொண்டு பூனை நடை போட்டு போர்டிகோ படிகளில் உயர்ந்தாள் கயல்.

காலிங்பெல் கொடுத்து அவர் வந்து கதவைத் திறந்ததுமே, “மஹி” என்று கத்தி கட்டியணைத்து ஒரு முத்தம் கொடுத்து அவரை அசத்த வேண்டும். ‘கயல் நீயா..?’ என்று விக்கித்து சந்தோஷத்தில் மூச்சுத் திணறிப் போவார். கடந்த ஆறு மாத காலத்தில் அவரை ஒரேயடியாகப் பட்டினி போட்டுவிட்டேன். இன்றைக்கு வட்டியும் முதலுமாக...

யோசித்துக் கொண்டே... காலிங்பெல் பொத்தானை அழுத்தப் போன கயல், சட்டென்று முகம் மாறினாள்.

‘உள்ளே என்ன சத்தம்...?’

ஏதோ பேச்சுக்குரல். சிரிப்புச் சத்தம்.

கயல் உஷாரானாள். சாவி துவாரத்துக்குக் கண்ணைக் கொடுத்தாள்.

உள்ளே வெளிச்சம் தெரிந்தது.

“என்ன செய்கிறார் இந்த மனுஷன்?”

“யாரோடு பேசிக் கொண்டிருக்கிறார்...”

காதுகளுக்கு உன்னிப்பைக் கொடுத்தாள். உள்ளே யிருந்து வந்த ஒரு பெண்ணின் குரல் தன்னுடைய காது மடல்களை உரசியபோது அதிர்ந்து போனாள்.

ரெமி படுக்கையறையைப் பார்த்து வியந்தாள்.

“வாவ்! இது பெட்ரூமா... ஏதோ ஒரு ஃபைவ் ஸ்டார் ஹோட்டலின் சூட் மாதிரி இருக்கு!”

மஹி சிரித்தான். “இருந்து என்ன பிரயோஜனம். இது காட்டில் காய்ந்த நிலா. கடலில் பெய்த மழை.”

“இருந்தாலும் உங்களுக்கு அசாத்திய பொறுமை.”

“இந்தப் பொறுமை மட்டும் என்கிட்டே இல்லைன்னா நான் எப்பவோ டைவர்ஸ் கேட்டு கோர்ட்டுக்குப் போயிருப்பேன்..”

“இப்ப மட்டும் என்ன... டைவர்ஸ் பண்ணிருங்களேன்.”

“அது மட்டும் என்னால முடியாது…”

“ஏன்?”

“ஐ லவ் கயல்...”

“மண்ணாங்கட்டி அவ உங்களைக் காதலிக்கிற மாதிரி தெரியலையே?”

“அவ என்னைக் காதலிக்காட்டியும் பரவாயில்லை. நான் அவளைக் காதலிக்கிறேன்.”

“மஹி! உங்களைப் பார்க்கப் பார்க்க எனக்குக் கோபம் கோபமாய் வருது.”

“எனக்கே என் மேல் கோபம்தான். என்ன செய்ய?”

“நான் மட்டும் உங்க நிலைமையில் இருந்திருந்தா என்ன பண்ணியிருப்பேன் தெரியுமா?”

“சொல்லு...”

“இப்பேர்ப்பட்ட பெண்ட்ாட்டி தேவையான்னு கொலை பண்ணிட்டு ஜெயிலுக்குப் போயிருப்பேன்.”

“அய்யோ!”

“என்ன அய்யோ! உங்களை மாதிரி ஒரு ‘இ.வா’வை என்னோட லைஃப்லயே இதுவரைக்கும் பார்த்ததில்லை.”

“இ.வா..?”

“இளிச்சவாயன்...!”

“நீ என்னை என்ன வேணும்னாலும் சொல்லிக்க ரெமி. கயலை என்னால வெறுக்க முடியலை...” மஹி சொல்லிக் கொண்டிருக்கும்போதே வாசலினின்றும் அந்த காலிங் பெல் சத்தம் எழுந்தது.

“டிடிங்...”

மஹியின் முகம் மாறியது. ரெமி கேட்டாள்.

“இந்நேரத்துக்கு யாரு?”

“தெரியலையே! ரெமி நீ போய் அந்த வார்ட் ட்ரோப் புக்குள்ளே ஒளிஞ்சுக்கோ. நான் போய் யார்ன்னு பார்த்துப் பேசி அனுப்பிட்டு வந்துடறேன்.”

ரெமி வார்ட் ட்ரோப்பை நோக்கிப் போக, மஹி வாசல் கதவுக்கு வந்து தாழ்ப்பாளை விலக்கினான். வெளியே நின்றிருந்த கயலைப் பார்த்ததும் மஹியின் இரண்டு கண்களிலும் பெரிது பெரிதாய் வியப்பு போஸ்டர்கள் ஒட்டப்பட்டன.

“கயல்…! நீயா..?”

“நானே…!”

உள்ளே வந்தாள்.

“ஃப்ளைட்?”

“சம் டெக்னிகல் ப்ராப்ளம். இந்த 2020ஆவது வருஷத்திலும் இப்படி ஒரு ஒட்டை விமானம். காலையில ஆறுமணிக்குத்தான் மறுபடியும்

ஃப்ளைட்.”

“வாழ்க! அந்த ஒட்டை விமானம்!” மஹி தன் வலது கையை உயர்த்திக் கத்த - கயல் ஹாலில் நின்று சுற்று முற்றும் பார்த்தாள்.

“என்ன பார்க்கிறே?”

“வீட்ல வேற யாராவது இருக்காங்களா..?”

“இல்லையே!”

“நான் காலிங்பெல் கொடுக்கிறதுக்கு முந்தி வீட்டுக்குள்ளே பேச்சுக்குரல் கேட்டது. ஐ... மீன்... பெண் குரல்.”

“பெண் குரலா?”

மஹியின் முகம் மாறியது. கயல் மார்புக்குக் குறுக்காக கைகளைக் கட்டிக் கொண்டாள்.

“யாரது?”

“கயல்! நீ நினைக்கிற மாதிரி இங்கே எந்தப் பெண்ணும் கிடையாது.”

“பொய்…! நீங்களும் அவளும் பேசிக்கிட்டிருந்ததெல்லாம் என்னோட காதுல ஒரு அட்சரம் பிசகாமே விழுந்ததே... உங்களை ‘இளிச்சவாயன்’னு கூட அவ சொன்னாளே…”

“ஆமாண்டி... சொன்னேன்... அதுக்கென்ன இப்போ?” பின்பக்கம் குரல் கேட்க, இருவரும் திரும்பினார்கள்.

ரெமி நின்றிருந்தாள். முகத்தில் கோபம். கையில் பழம் நறுக்கும் கத்தி.

“ரெமி...!” மஹி கத்த, ரெமி அவனைப் பொருட்படுத்தாமல் கயலை நோக்கி இரண்டடி எடுத்து வைத்தாள்.

“ஏண்டி….! புருஷனை கவனிக்காமே அப்படி என்னடி சோஷியல் சர்வீஸ் வேண்டியிருக்கு...? 1920-ல் வாழ்ந்த ஒரு பெண் வீட்டை விட்டு வீதிக்குக் கூட வரமாட்டா. ஆனா 2020-ல் புருஷனைக் குப்பைக் காகிதமா நினைச்சு கசக்கி ‘வேஸ்ட்பின்’ல எறிஞ்சுட்டு தனியா ஃப்ளைட் ஏர்ற அளவுக்கு ஒரு பெண்ணுக்கு தைரியம் வந்திருக்குன்னா... அது திமிர்தானே? உன்னை மாதிரியான பெண்கள் உயிரோடு இருக்கவே கூடாது...”

ரெமி கத்தியோடு இரண்டடி முன்னேற - கயல் முகம் வெளிறிப் போய்

பின்வாங்கினாள். மஹி கத்தினான்.

“ஏய்... ரெமி! கத்தியைக் கீழே போடு...!”

“மாட்டேன்…! இந்த ராட்சசி கிட்டயிருந்து இன்னிக்கு உங்களுக்கு விடுதலை... வேற ஒரு அழகான பெண்ணாய்ப் பார்த்து கல்யாணம் பண்ணிக்கிட்டு சந்தோஷமா இருங்க...”

“ப்ளிஸ்... ரெமி... வேண்டாம். கயலை ஒண்ணும் பண்ணிடாதே…” மஹியின் பேச்சைக் காதில் போட்டுக் கொள்ளாத ரெமி, கத்தியை உயர்த்திப் பிடித்துக் கொண்டு கயலை நோக்கி வெறித்தனமாய் ஒட.... மஹி அவசர அவசரமாய் தன் பேண்ட் பாக்கெட்டுக்குள் கையை நுழைத்து, தீப்பெட்டி சைஸில் இருந்த அந்த ரிமோட் கண்ட்ரோலை எடுத்து ஒரு பட்டனைத் தட்டினான்.

ஒடிக் கொண்டிருந்த ரெமி சட்டென்று பிரேக் போட்ட மாதிரி நின்றாள்.

மஹி இன்னொரு பட்டனைத் தட்ட... ரெமி அப்படியே இரண்டாய் மடங்கி உட்கார்ந்தாள். மூன்றாவது பட்டனின் தட்டலுக்கு கீழே சரிந்து படுத்தாள். மஹி அவளை நெருங்கி உட்கார்ந்து ரிமோட்டின் நான்காவது பட்டனைத் தட்ட, ரெமியின் பின்பக்கத்தலை ‘ப்ளக்’ என்று திறந்து கொண்டு உள்ளேயிருந்த பயோ பேட்டரி செல்களைக் காட்டியது.

கயல், பயம் நீங்கி பக்கத்தில் வந்தாள். பிரமிப்பாய்க் கேட்டாள்.

“எ... எ... என்னங்க... இது..?”

மஹி ரெமியின் தலைக்குள் இருந்த பாட்டரி செல்களை வெளியே எடுத்து வைத்துக் கொண்டே புன்னகைத்தான்.

“ரெமி நிஜப்பெண் கிடையாது. ஏ.ஐ.ன்னு சொல்லப்படுகிற ‘ஆர்ட்டிஃபிசியல் இண்டலிஜென்ஸ்’ செல்களால் உருவாக்கப்பட்ட ஒரு டயாலஜிகல்ஸ்ட்ரக்சர். பல்வேறு பிரச்சினைகளின் காரணமாக மன உளைச்சல் பட்டுக் கொண்டிருக்கும் ஆண்கள் இந்த ஏ.ஐ.களிடம் ‘கவுன்சிலிங்’ செய்தால் அவை உருப்படியான யோசனைகளைச் சொல்லிக் கொடுக்கும். அன்பாகப் பேசும். ஆண்கள் பிரச்னைகளைச் சொல்லி அழும் போது பரிவோடு கண்களைத் துடைத்து விடும். தலையைக் கோதி விடும். வாடகைக்குக் கிடைக்கும் இந்த ஏ.ஐ.கள் கொஞ்சம் காஸ்ட்லிதான். இருந்தாலும் வெரியூஸ்ஃபுல். ஆண்களின் உணர்ச்சிகளைப் புரிஞ்சுகிட்டு சமயோசிதமாய் நடந்துக்கும்...”

கயல் கணவனையே இமைக்காமல் பார்த்தாள். பின், தன் கைப்பைக்குள் இருந்த செல்போனை எடுத்து எண்களைத் தட்டிவிட்டு யாரிடமோ பேசினாள்.

"நான் சிங்கப்பூருக்கு வரலை. ட்ரிப் கான்ஸல்."

உயிரில்லாமல் கீழே விழுந்து கிடந்த ரெமியை நன் யோடு பார்த்தான் மஹி.

# 11 பொறி

ஏர்போர்ட். கஸ்டம்ஸ் செல்.

கஸ்டம்ஸ் சீஃப் ஆபீஸர், தனக்கு முன்பாக நின்றிருந்த மற்ற ஐந்து அதிகாரிகளை ஏறிட்டபடி கேட்டார்.

"மேலிடத்திலிருந்து வந்த தகவல் உண்மைதானா?"

"உண்மைதான் சார்... தகவல் பொய்யா இருக்க, ஒரு பர்சன்ட்கூட வாய்ப்பில்லை... கன்ஃபர்ம் பண்ணிக்கிட்டோம்..."

"பார்ட்டி யாரு..?"

"உண்மையான பேர் விஷ்ணுதாஸ்... இந்த ஹெராயின் கடத்தலுக்காக ராமமூர்த்தினு பேரை மாத்திக்கிட்டு வரப் போறதா தகவல்..."

கஸ்டம்ஸ் சீஃப் ஆபீஸர் தன் மணிக்கட்டை உயர்த்தி வாட்ச்சைப் பார்த்தார். "ஃப்ளைட் வர இன்னும் அரைமணி நேரம் இருக்கு. ஆளை மிஸ் பண்ணிடக்கூடாது... வி ஷட் பி அலர்ட்!"

"யெஸ் சார்!"

சரியாக பதினோரு மணி.

ரன்வேயில் வந்து நின்ற விமானத்திலிருந்து பயணிகள் ஒவ்வொருவராக வெளிப்பட்டார்கள்.

லௌன்ஞ்சில் காத்திருந்த கஸ்டம்ஸ் அதிகாரிகள், பயணிகளுக்கு நடுவே சூட்-கோட் அணிந்து, கையில் ப்ரீஃப்கேஸோடு வந்து கொண்டிருந்த அந்த இளைஞனை நோக்கிப் போனார்கள். கஸ்டம்ஸ் சீஃப், இளைஞனை நெருங்கி அவனுடைய தோளைத் தொட்டு ஹஸ்கி வாய்ஸில் கேட்டார்.

“மிஸ்டர் ராமமூர்த்தி...?”

“யெஸ்...”

“வாங்க எங்ககூட...!” - குரலைத் தாழ்த்திக் கிசு கிசுத்தார்.

“எதுக்கு...?”

“பயப்படாதீங்க... மேலிடத்திலிருந்து எங்களுக்குத் தகவல் வந்தாச்சு. உங்களைப் பத்திரமா காரில் ஏற்றி மினிஸ்டர் வீட்டுக்கு அனுப்பி வைக்க வேண்டியது எங்களோட பொறுப்பு. ட்ரக்ஸை எதுல மறைச்சு வெச்சுக் கொண்டு வந்திருக்கீங்க.?”

ராமமூர்த்தி, தான் அணிந்திருந்த கோட்டின் உள்பாகங்களைக் காட்டினான்.

கஸ்டம்ஸ் சீஃப் புன்னகைத்தார்.

“தட்ஸ் குட்! உங்களுக்காக ஏர்போர்ட்டுக்கு வெளியே ரெட் கலர் லான்ஸர் காத்துக்கிட்டிருக்கு. காருக்குள்ளே ரெண்டு கஸ்டம்ஸ் ஆபீஸர்ஸ் இருப்பாங்க. அவங்களும் மினிஸ்டர் வீட்டுவரைக்கும் உங்களோட வருவாங்க…”

“அவங்க எதுக்கு...?” - இளைஞன் முகம் மாறியது.

“போன தடவை குப்தானு ஒரு ஆள் ஒரு கோடி ரூபாய் ஹெராயினோடு ஏர்போர்ட்டிலிருந்து புறப்பட்டவன், மினிஸ்டர் வீட்டுக்குப் போகாமத் தலைமறைவாயிட்டான். அதனால்தான் இந்த ஏற்பாடு…! காருக்குப் போலாமா மிஸ்டர் ராமமூர்த்தி...?”

“இப்போ சொல்றேன், கேட்டுக்குங்க... என்னோட பேர் ராமமூர்த்தி கிடையாது...”

“அதுவும் தெரியும்! உங்களோட உண்மையான பெயர் விஷ்ணுதாஸ்...”

“ஸாரி நான் விஷ்ணுதாஸும் கிடையாது…”

“பின்னே?”

“மகாதேவன். டெல்லி சி.பி.ஐ. ஃப்ளையிங் ஸ்குவாட் ஆபீஸர்! அரசியல்வாதிகளுக்குக் கைக்கூலியா இருக்கிற உங்களை மாதிரியான ஊழல் பேர்வழிகளைப் பொறி வைத்துப் பிடிப்பதற்காக அனுப்பப்பட்ட வேடன் ஸிமை ஐடென்ட்டிஃபிகேஷன் கார்ட்…”

பச்சை நிற காலிகோ பைண்ட் செய்யப்பட்ட அந்த அடையாள அட்டை விரிந்தது!

# 12. ஒரே ஒரு நாள்

இராயப்பேட்டை ரிஜிஸ்டர் ஆபீஸில் கல்யாணத்தை முடித்துக் கொண்டு ராஜாராமனும் , ஸ்வேதாவும் மகாபலிபுரத்துக்குப் பக்கத்தில் இருந்த ‘கோல்ட் சாண்ட்’ காட்டேஜூக்கு போய்ச் சேர்ந்த போது மத்தியானம் ஒரு மணியாகிவிட்டது. கழுத்துக்கு ‘போ’ ஒட்டிய அந்த ரிசப்ஷனிஸ்ட் இளைஞன், “எஸ்” என்றான். ராஜாராம் சொன்னான்.

“ஒரு ஹனிமூன் காட்டேஜ் ரிசர்வ் பண்ணியிருந்தோம்.”

“நேம்... ஸார்?”

சொன்னான்.

“எவ்வளவு நாள்?”

“இரண்டு நாள்.”

“பெர் டே தௌஸண்ட் ஃபைவ் ஹண்ட்ரட் ஸார். டேக்ஸ் எக்ஸ்ட்ரா...”

“நோ ப்ராப்ளம்.”

அட்வான்ஸ் பணத்தைக் கொடுத்து ரசீதை வாங்கிக் கொண்டு, தங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த காட்டேஜை நோக்கிப் போனார்கள். நல்ல சிவப்பில் ஃப்ரிஜ்ஜில் வைத்த ஆப்பிளாக தனக்கு பக்கத்தில் வந்து கொண்டிருந்த ஸ்வேதாவைத் திரும்பிப் பார்த்தான் ராஜாராமன்.

“ஸ்வேதா! காட்டேஜ் எப்படியிருக்கு?”

“ப்யூட்டிஃபுல்… ஐ லைக் இட்... ஸி ப்ரீஸ் அற்புதம்..! அமைதி, அழகு ரெண்டுமே இங்கே இருக்கு!”

‘ஹனி ஹட்’ என்ற பெயரை முகப்பில் தாங்கியிருந்த அந்த காட்டேஜூக்குள் நுழைந்தார்கள். ஸ்பிலிட் ஏ.சி. காட்டேஜை ஊட்டியாக மாற்றியிருக்க, கையோடு கொண்டு போயிருந்த சிறிய சூட்கேஸ்களை வார்ட்ரோ பில் வைத்து விட்டு, ஃபோம் கட்டிலில் பக்கம் பக்கமாக உட்கார்ந்தார்கள்.

“லஞ்ச் ஆர்டர் பண்ணட்டுமா ஸ்வேதா?”

“வேண்டாம் ராஜ், பசிக்கலை…”

“என்னது... பசிக்கலையா? பொய் சொல்லாதே! காலையில் கூட நீ சரியா சாப்பிடலையே!”

“ஏனோ சாப்பிடணும்னே தோணலை...”

“இப்போ ஆர்டர் பண்ணினா... லஞ்ச் ப்ளேட் நம்ம காட்டேஜுக்கு வர அரை மணி நேரம் பிடிக்கும்.”

“அப்படீன்னா ஆர்டர் பண்ணுங்க...”

ராஜாராமன் பக்கத்தில் இருந்த இண்டர்காம் ரிசீவரை எடுத்து கேட்ட ரிங் செக்ஷனைக் கூப்பிட்டான்... கேட்டான்.

“லஞ்ச் கிடைக்குமா?”

“கிடைக்கும் சார், வெஜ்... ஆர் நான்வெஜ்?”

“வெஜ்!”

“அப்ப ராயல் லஞ்ச் ட்ரை பண்ணுங்க ஸார்... ஹனி மூன் கப்புல்சுக்கு பிடிச்ச அயிட்டம்ஸ் அதில் இருக்கும்!”

“சரி... ரெண்டு ராயல் லஞ்ச், அரை மணி நேரம் கழிச்சுக் கொண்டு வந்தா போதும்!”

“ஓ.கே. சார்!” - மறுமுனையில் ரிசீவர் வைக்கப்பட்டு விட, ராஜாராமனும் இண்டர்காமை வைத்து விட்டு ஸ்வேதா பக்கம் திரும்பினான். அவள் முழங்கால்களைக் கட்டிக் கொண்டு எதிர்பக்கச் சுவர் மூலையை வெறித்துக் கொண்டிருந்தாள். அவள் தோளைத் தொட்டான்.

“என்ன ஸ்வேதா... அப்செட் ஆயிட்டே?”

“ஒண்ணுமில்லை!” - ஸ்வேதா சிரிக்க முயன்றாள்.

“பொய் சொல்லாதே! போன நிமிஷம் உன்கிட்டே பார்த்த சந்தோஷம் இப்ப இல்லை... சொல்லு, என்ன விஷயம்?”

“ரா... ராஜ்.!” - அவள் நிமிர்ந்தாள். கண்களில் நீர் பள பளத்தது.

“ஸ்வேதா... என்ன இது?”

“ராஜ்! நாம இன்னிக்கு சாப்பிடப்போற லஞ்ச்தான் நம்மோட கடைசி லஞ்ச்… இல்லையா?”

ராஜாராமனின் முகமும் சட்டென்று களிப்பை இழந்து உாட்டத்துக்குப் போயிற்று. ஸ்வேதா கண்ணீரை விழுங்கிக் கொண்டு சொன்னாள். “நாளைக்கு இந்நேரம் நம்ம ரெண்டு பேர் உடம்பும் போஸ்ட்மார்ட்டத்துக்காக மார்ச்சுவரியில் வெயிட் பண்ணிட்டிருக்கும்.”

ராஜாராமன் கண்ணிலும் நீர். “இதோ பார் ஸ்வேதா! கல்யாணம் பண்ணிட்டு, ஒரே ஒரு நாள் கணவன் மனைவியா வாழ்ந்துட்டு, விஷம் குடிச்சு செத்துப் போயிட லாம்கிறதுதான் ஏற்கனவே நாம போட்ட திட்டம். திட்டப்படி கல்யாணம் பண்ணிகிட்டோம். அடுத்தபடியா...”

“ராஜ்...!”

“என்ன ஸ்வேதா..?”

"நாம் சாகத்தான் வேணுமா? ஏன் வாழ்ந்து காட்டக் கூடாது? கோழைகள் மாதிரி எதுக்காகத் தற்கொலை பண்ணிக்கணும்?”

“தற்கொலை பண்ணிக்கிறவங்க கோழைங்கன்னு சொல்ல வர்றியா?”

"ஆமா...”

“தப்பு ஸ்வேதா... என்னைப் பொறுத்தவரைக்கும் தற்கொலை பண்ணிக்கிறவங்கதான் தைரியசாலிகள். சாகறதுக்கு அசாத்தியமான தைரியம் வேணும் தெரியுமா? தூக்குல தொங்கறதுக்கும், விஷத்தைக் குடிக்கிறதுக்கும், ரயில் முன்னாடி பாயறதுக்கும் எவ்வளவு மனோதிடம் வேணும் தெரியுமா?"

"ராஜ்... நான் என்ன சொல்ல வர்றேன்னா..”

“ஸ்வேதா! உன்னோட துணிச்சல் எனக்கு இல்லை. என் அப்பாவைப் பற்றி உனக்கு சரியாகத் தெரியலை. அவர் எனக்கு நல்ல அப்பா. ஆனா, மோசமான மனிதர். ஜாதி வெறி பிடிச்சவர். ஒரு அனாதை விடுதியில் வளர்ந்த உன்னை நான் காதலிச்சதும், கல்யாணம் பண்ணிக் கிட்டதும் அவருக்குத் தெரியற வினாடி, நீயும் நானும் உயிரோடு இருக்க முடியாது. நம்ம ரெண்டு பேரையும் நாலு துண்டா வெட்டி போட்டுட்டு எதுவுமே நடக்காத மாதிரி வாய்ல பீடாவைப் போட்டுக்குவார். அவருக்கு அரசியல் செல்வாக்கு அதிகம்ங்கிறதால போலிஸ் அவர் இருக்கிற பக்கம் கூட தப்பித் தவறி போயிடாது... அவர் கையால வெட்டுப்பட்டு சாகிறதைக் காட்டிலும் நாம இப்படி

அமைதியா ஒரு முடிவைத் தேடிக்கிறது நல்லது.”

ராஜாராமன் பேசிக் கொண்டிருக்கும்போது செல்போன் அழைத்ததை எடுத்து, அழைப்பது யார் என்று பார்த்தான். அவனுடைய அப்பா சபாநாயகம். கைவிரல்கள் நடுங்க செல்போனை எடுத்து காதுக்கு வைத்தான்.

“அ... அ... அப்பா..!”

“ஏண்டா ராஜா... காலையில ஏழு மணிக்கே கிளம்பிப் போனியாமே? அப்படி என்னடா வேலை...?”

“அது... அது வந்துப்பா... ஒரு ஃப்ரண்டுக்கு மேரேஜ்.”

“இப்ப மணி என்ன தெரியுமா... மத்தியானம் ஒரு மணி. இன்னுமா கல்யாணம்?”

“சாப்பிட்டுட்டுதான் போகணும்னு கட்டாயப்படுத்தினான். அதான் இருந்துட்டேன்...”

“சரி... சாப்ட்டுட்டு நம்ம ஆடிட்டரைப் போய் பாரு... கணக்குல ஏதோ சந்தேகமாம்... க்ளியர் பண்ணிட்டு அப்படியே நம்ம பண்ணை வீட்டுக்கு வந்துடு...”

“ம் ”

“என்னடா... சுரத்தே இல்லாம பேசறே...? ஏதோ பத்து நாள் காய்ச்சல்ல விழுந்து எந்திரிச்சவன் மாதிரி முனகற...?”

“ஒண்ணுமில்லேப்பா... த்ரோட் இன்ஃபெக்ஷன். அதான் சரியா பேச முடியல... நான் ஆடிட்டரைப் பார்த்துட்டு வந்துடறேன்.”

- சொன்னவன் செல்போனை ஸ்விட்ச் ஆப் செய்து விட்டு ஸ்வேதாவை வியர்த்த முகத்தோடு பார்த்தான்.

“போன்ல யார் ராஜ்... உங்க அப்பாவா?”

“ஆமா...”

“என்ன சொல்றார்?”

“பண்ணை வீட்டுக்கு நான் வரணுமாம்…”

“எதுக்கு...?”

“எதுக்கா இருந்தா நமக்கென்ன ஸ்வேதா? நாம உயிரோடு இருக்கப் போறதே ஒரு நாள் தான்! நாம எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டியது இல்லை... இன்னும் கொஞ்ச நேரத்துல லஞ்ச் வரும்... சாப்பிடுவோம். கொஞ்ச நேரம் தூங்குவோம்... சாயந்தரம் ஸீஷோர்க்கு போய் இருட்டறவரைக்கும் உட்கார்ந்து கடலை ரசிப்போம். ராத்திரி காட்டேஜ் வந்து, நல்ல டின்னர் சாப்பிட்டுட்டு விடிய விடிய தூங்காம பேசிட்டிருப்போம். விடியும் போது ரெண்டு பேரும் விஷத்தைக் குடிச்சுட்டு இந்த உலகத்துக்கு குட்பை சொல்வோம்…”

- ராஜாராமன் கண்களில் நீர் மின்ன சொல்லிக்கொண்டிருக்கும் போதே இண்டர்காம் ஒலித்தது. ரிசீவரை எடுத்தான்.

“எஸ்...”

“கேட்டரிங் செக்ஷன் ஸார்... லஞ்ச் ரெடியா இருக்கு... கொண்டு வரட்டுமா... இல்லை இன்னும் கொஞ்ச நேரம் போகட்டுமா?”

“கொண்டு வா..!” என்றான் ராஜாராமன்.

இருட்டும் வரை கடற்கரையில் இருந்துவிட்டு ராஜா ராமனும் ஸ்வேதாவும் காட்டேஜூக்குத் திரும்பினார்கள். இப்போது ஸ்வேதாவிடம் மரண பயம் காணமல் போயிருந்தது. இயல்பாக இருந்தாள். ரிமோட் கண்ட்ரோலை எடுத்து டி.வி-யில் தனக்குப் பிடித்தமான சேனலை போட்டாள்.

“ஸ்வேதா…”

“ம்...”

“நான் குளிச்சுட்டு வந்துடட்டுமா..? ஸிஷோர்க்கு போயிட்டு வந்தது உடம்பு பூராவும் பிசுபிசுன்னு இருக்கு... நீயும் வாயேன் ஒண்ணா குளிச்சுடலாம்...!”

“இந்த சினிமா ஹீரோ வேலையெல்லாம் என்கிட்டே வேண்டாம். போய் குளிச்சுட்டு வாங்க... நான் டாம் அண்ட் ஜெர்ரி பார்த்துட்டிருக்கேன்...!” - ஸ்வேதா ராஜா ராமனைப் பிடிச்சுத் தள்ளிவிட, அவன் உள்ளே நுழைந்து கதவை மூடிக் கொண்டான்.

குழாயில் தண்ணீரைத் திறந்து விட்டு, இடுப்பின் மறைவில் இருந்த செல்போன் எடுத்து எஸ்.எம்.எஸ். மூலம் அப்பா சபாநாயகத்தைத் தொடர்பு கொண்டான். இருவரும் எஸ்.எம்.எஸ்-சிலேயே பேசிக் கொண்டார்கள்.

“அப்பா... நீங்க போட்டுக் கொடுத்த திட்டப்படி எல்லாமே நடந்துட்டு இருக்கு!”

“ஸ்வேதாவுக்கு உன்மேல எந்த சந்தேகமும் வரலையே?”

“பரிபூர்ணமா என்னை நம்பிட்டா... மத்தியானம் காட்டேஜுக்கு வந்ததும், நாம ஏன் சாகணும்? துணிச்சலா வாழ்ந்து காட்டலாமே’ன்னு டயலாக் பேசினா! என் அப்பாவை பகைச்சுக்கிட்டு இந்த உலகத்தில் எந்த மூலையிலும் வாழ்ந்துட முடியாதுன்னு சொல்லி பயமுறுத்துனதும் ஆஃப் ஆயிட்டா!”

“நீ காதல்ங்கிற பேரில் பண்ணின முட்டாள்தனமான காரியத்துக்காக எப்படியெல்லாம் கஷ்டப்பட வேண்டியதா இருக்கு பார்த்தியா?”

“எப்படியோ தெரியாத்தனமா காதல் பண்ணிட்டேன். நீங்க எனக்காக சென்ட்ரல் மினிஸ்டரோட மகளை பாத்து வைத்திருப்பீங்கன்னு எனக்கு எப்படி தெரியும்பா? ஸ்வேதா கிட்டயிருந்து கழண்டுக்கலாம்னு பார்த்தா அவவிடற மாதிரி தெரியலை... அதுக்கப்புறம்தான் உங்க கிட்டே யோசனை கேட்டேன்... நீங்க போட்டுக் கொடுத்த திட்டப்படிதான் எல்லாம் நடந்துட்டிருக்கு. இப்ப சாகிற முடிவையும் ஏத்துக்கிட்டா!”

“எல்லாம் சரி ராஜா…! தற்கொலை பண்ணிக்கிறதுக்காக விஷத்தைக் குடிக்கும் போது மட்டும் நீ ஜாக்கிரதையா இருக்கணும். உன்னோட உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லாத அளவுக்கு விஷத்தை கொஞ்சமா கலக்கணும். ஸ்வேதாவுக்கு மட்டும் உயிர் உடனே போற அளவுக்கு விஷத்தை அதிகமா கலக்கணும். ஏமாந்து போயிடாதே...!”

“அப்பா..! நான் உங்க ரத்தம்... அப்படியெல்லாம் ஏமாந்து போவேனா? நாளைக்கு விடியற்காலை அஞ்சு மணிக்கு ரெண்டு பேரும் விஷத்தைக் குடிப்போம். ஸ்வேதாவோட உயிர் உடனே பிரிஞ்சுடும். நான் உயிருக்கு போராடற மாதிரி நடிச்சு வாந்தி எடுப்பேன். விஷயம் ஓட்டல் ரிசப்ஷனுக்கு போகும். உடனே ஆம்புலன்ஸ் வரும்... என்னை டாக்டர்கள் காப்பாத்துவாங்க. நீங்க விஷயத்தைக் கேள்விப்பட்டு ஹாஸ்பிடலுக்கு வருவீங்க. நாளைக்கு சாயந்திர பேப்பர்ல ‘காதல் ஜோடி விஷம் குடித்தது! காதலி பரிதாப மரணம். காதலன் உயிர் பிழைத்துக் கொண்டார்’னு நியூஸ் வரும்... போலீஸ் விசாரணைக்காக என்கிட்டே வரும்போது உங்க அரசியல் செல்வாக்கு வந்து, அந்த விசாரணையை ஒண்ணுமில்லாம பண்ணிடும்.!”

“சரி...! இனிமே நீ எனக்கு போனோ எஸ்.எம்.எஸ்-ஸோ பண்ணாதே!

நாளைக்குக் காலையில் அஞ்சு மணியிலிருந்து அஞ்சரை மணிக்குள் தகவல் வந்துடும் இல்லையா?”

“கண்டிப்பா..!”

மறுநாள்…

அதிகாலை ஐந்து மணி ஜீரோவாட்ஸ் வெளிச்சம் அறை முழுவதும் பரவியிருக்க, ராஜாராமனும், ஸ்வேதாவும் ஒரே சோபாவில் பக்கம் பக்கமாக உட்கார்ந்திருந்தார்கள். எதிரே இருந்த டீபாயின் மேல் இரண்டு குளிர்பான பாட்டில்கள். பக்கத்திலேயே இரண்டு விஷக் குப்பிகள். மௌனம் வினாடிகளைச் சாப்பிட்டுக் கொண்டிருக்க, ராஜாராமன் இறுகிப்போன முகத்தோடு ஸ்வேதாவை ஏறிட்டான்.

“ஸ்வேதா!”

“ம்...”

“விஷத்தை மிக்ஸ் பண்ணட்டுமா?”

“சரி…”

“என்மேல உனக்கு எந்த வருத்தமும் இல்லையே?”

“இதோ பாருங்க ராஜ்! உங்க அப்பாவை பகைச்சுக்கிட்டு வாழ முடியாதபோது, நாம எதுக்காக உயிரோட இருக்கணும்? அவரை கொலைகாரரா மாத்தாம நாம செத்துப் போயிடறது உத்தமம் இல்லையா? நமக்குக் கல்யாணம் நடந்ததும், அதுக்கு அடையாளமா நேத்து ராத்திரி நாம கணவன் - மனைவியா வாழ்ந்ததும் உண்மை. இந்த ஒரு நாள் சந்தோஷமே எனக்குப் போதும். சீக்கிரமா விஷத்தை மிக்ஸ் பண்ணுங்க. உயிர் மேல ஆசை வந்துட்டா அப்புறம் சாக மனசு வராது!”

ராஜாராமன் கைகள் நடுங்க அந்த இரண்டு விஷக் குப்பிகளை எடுத்து குளிர்பான பாட்டில்களில் கலந்தான். தான் ஒன்றை எடுத்துக் கொண்டு, மற்றொன்றை ஸ்வேதாவிடம் நீட்டினான். பாட்டிலை வாங்கிய ஸ்வேதா, ஒரு விநாடி கூட யோசிக்காமல் மடமடவென குடித்து விட்டு, காலி பாட்டிலை கீழே வைத்தாள். உதட்டில் சின்னதாக மரணப் புன்னகை.

ராஜாராமன் பாட்டிலை உதட்டுக்குக் கொடுத்தான். பாதி பாட்டிலை காலி செய்து விட்டு, செல்போனை எடுத்து சபாநாயகத்தைத் தொடர்பு கொண்டான்.

“அப்பா..!”

அவர் பதட்டமாகக் குரல் கொடுத்தார். “உன்னோட போனுக்காகத்தான் வெயிட் பண்ணிட்டிருக்கேன்... என்னாச்சு?”

“ஸ்வேதா உயிரை விட்டுக்கிட்டு இருக்கா...”

“திட்டப்படி எல்லாம் சரியா போயிட்டுருக்குன்னு சொல்லு!”

“ஸாரிப்பா...!”

“ஸாரியா... எதுக்கு?”

“நம்ம திட்டத்துல இல்லாத ஒண்ணை இப்ப நான் உங்ககிட்ட சொல்லப் போறேன்!”

“எ... எ... என்ன சொல்லப் போறே?”

“நன்றி!”

“நன்றியா?”

“ம்... நன்றிதான்..! என்னோட ஸ்வேதாவை கல்யாணம் பண்ணிக்கிறதுக்கும் அவளோடு ஒரு நாள் வாழறதுக்கும் அனுமதி கொடுத்ததுக்கு...”

“டேய்…! அதுக்கு ஏன்டா இப்ப நன்றி சொல்றே? அடுத்த மாசம் சென்ட்ரல் மினிஸ்டர் மகளை கல்யாணம் பண்ணிக்கிட்டு அப்ப நன்றி சொல்லு... வாங்கிக்கிறேன்.”

“நன்றி வாங்கிக்க அப்ப நீங்க இருப்பீங்கப்பா... ஆனா, நன்றி சொல்ல நான் உயிரோடு இருக்க மாட்டேன்!”

“டேய்...! நீ என்னடா சொல்றே...?”

“இப்ப கொஞ்சம் கொஞ்சமா செத்துக்கிட்டு இருக்கேன். அப்பா..!. நீங்க போட்டுக் கொடுத்த திட்டத்துக்கு நான் ‘ஆமாம்’ போட்டதுக்குக் காரணம், என் ஸ்வேதாவை கல்யாணம் பண்ணிக்கிட்டு ஒருநாளாவது நானும் அவளும் கணவன் மனைவியா வாழ்ந்துடனும்ங்கிற ஆசையிலதான். என் ஸ்வேதா எந்த அளவு விஷம் எடுத்துக்கிட்டாளோ அதே அளவு விஷம்தான் இப்ப என் கையிலும் இருக்கு!”

“டே... டே... டே..ய். ராஜாராமா..! வேண்டாம்... குடிக்காதே” -

சபாநாயகம் வேறுமுனையில் தொண்டை வெடிக்கக் கத்த, ராஜாராமன் அதைப் பொருட்படுத்தாமல் செல்போனை படுக்கையில் எறிந்துவிட்டு, சோபாவில் சரிந்து கிடந்த ஸ்வேதாவைப் பார்த்தான்.

அவள் திறந்த விழிகளோடு உயிரை விட்டிருக்க, ராஜாராமன் கண்களில் பொங்குகிற நீரோடு பாட்டிலில் மீதியிருந்த விஷம் கலந்த குளிர்பானத்தை ஒரே மூச்சில் குடித்து முடித்தான்.

உடம்புக்குள் உயிர் பிரிகிற அந்தப் பிரளயம் ஆரம்பமாயிற்று.

# 13. பூவில் ஒரு ஆயுதம்

இராத்திரி மணி பத்தரை.

“இனி வீட்டுக்குப் புறப்பட வேண்டியதுதான்!” என்று டாக்டர் ஈஸ்வர் நினைத்து, நாற்காலியை விட்டு எழ முயன்ற விநாடி, நர்சு சகாயமேரி வேகவேகமாய் உள்ளே வந்தாள்.

“டாக்டர்...”

“என்ன..?”

“ஒரு எமர்ஜென்சி கேஸ்...”

“நோயாளியோடு வந்தவங்க எப்படி..? பார்ட்டி சவுண்டா... இல்ல... கார்ப்பரேஷன் ஆஸ்பத்திரி கேசா..?”

“பசையுள்ள பார்ட்டிதான் டாக்டர்... விலை உயர்ந்த காரில் வந்து இறங்கியிருக்காங்க…”

ஈஸ்வர் எழுந்து, புற நோயாளிகள் வார்டை நோக்கிப் போனார். ஒரு நிமிட நடை, வார்டுக்கு வெளியே நடுத்தர வயதுகளில் நான்கு பெண்களும் ஒரு ஆணும் கலக்கமான முகங்களோடு நின்றிருந்தார்கள்.

டாக்டர் ஈஸ்வர் அவர்களைப் பார்த்தார். முகங்களில் செழிப்பு தெரிந்தது. பணவாடை அடித்தது. சபாரி உடையில் இருந்த அந்த நபர் பக்கத்தில் வந்தார்.

“டாக்டர்…! நோயாளி என்னோட அம்மா. ‘மங்களகவுரி குரூப்ஸ்’ நிறுவனம் பற்றி கேள்விப்பட்டிருக்கீங்களா... அந்த குரூப் நிறுவனங்களுக்கு அம்மாதான் எம்.டி.”

“அப்படியா?”

“என்னோட பேரு வினோத்குமார். இது என் மனைவி உஷாதேவி. இவங்க மூணு பேரும் என்னோட சகோதரிகள். நேத்ரா... உத்ரா... மித்ரா.

ஒரு கல்யாணத்துக்காக கோயம்புத்தூர் வந்தோம். வந்த இடத்துல அம்மாவுக்கு பி.பி. அதிகமாகி ஒய்வில் இருந்தாங்க... திடீர்னு பதினைஞ்சு நிமிடத்துக்கு முன்னாடி மயங்கி விழுந்துட்டாங்க.”

“கவலைப்படாதீங்க மிஸ்டர் வினோத்குமார்..! அம்மாவை நான் இப்போ பார்த்துடுறேன்...”

ஈஸ்வர் உற்சாகம் கொப்பளிக்கிற உள்ளத்துடன் உள்ளே போனார். ‘ஒரு வாரம், பத்து நாள் தங்க வைத்து பெரிய தொகையொன்றை கறந்துட வேண்டியது தான்!”

அடுத்த அரை மணி நேரத்துக்குப் பிறகு - டாக்டர் ஈஸ்வருக்கு முன்பாய் எல்லோரும் அமர்ந்திருந்தார்கள்.

“அம்மாவுக்கு வந்திருக்கு, கடும் மாரடைப்பு. நீங்க சரியான நேரத்துக்குக் கொண்டு வந்ததால் உயிர் தப்பியது. மருந்து கொடுத்து இப்போதைக்கு உயிரைக் காப்பாத்த முடிஞ்சுது… ஆனா, உங்க அம்மா இப்போ இருக்கிற நிலைமையில் அவர் எந்தப் பயணத்தை மேற்கொண்டாலும் உயிருக்கு ஆபத்து தான்.

இந்த ஒரு இராத்திரியைத் தாண்டிட்டா போதும். அவங்க உயிருக்கு ஆபத்து இருக்காது. அதே நேரம், இந்த ராத்திரியே அவங்களுக்கு இரண்டாவது ‘அட்டாக்’ வர ம்பது சதம் வாய்ப்பு இருக்கு.

நானும் இன்னிக்கு வீட்டுக்குப் போகாம ஆஸ்பத்திரியில் இருந்து, சிரத்தை எடுத்து அவங்களைப் பார்த்துக்கிறேன். உங்களில் யாராவது ஒருத்தர் இங்கே இருந்தா போதும். மத்தவங்க வீட்டுக்குப் போகலாம்...”

“நான் இருக்கேன் டாக்டர்” என்றார், வினோத்குமார்.

இராத்திரி பன்னிரண்டு மணி.

டாக்டர் ஈஸ்வர் மங்களகவுரியின் இதயத் துடிப்பைப் பரிசோதித்து விட்டு வெளியே வந்தார்.

“டாக்டர்... ஒரு நிமிடம்...”

“டாக்டர்…! இப்போ நீங்க சிகிச்சை கொடுத்துட்டிருக்கிற மங்களகவுரி என்னைப் பெற்ற தாய் கிடையாது. எனக்கு சித்தி. அதாவது, எங்கப்பாவுக்கு இரண்டாவது மனைவி. என் சித்தி மங்களகவுரிக்கு பிறந்த மூன்று பெண்கள்தான் அந்த நேத்ரா, உத்ரா, மித்ரா.

என்னோட அப்பாவும், அம்மாவும் இறந்த பிறகு கம்பெனி நிர்வாகம் முழுவதும் அப்பாவோட உயில்படி சித்தி கைக்கு வந்தது. சித்தி காலத்துக்குப் பின்னாடிதான் கம்பெனி நிர்வாகம் என் கைக்கு வரும்...”

“இதெல்லாம் என்கிட்டே எதுக்காக சொல்லிட்டு இருக்கீங்க..?”

வினோத்குமார் தன் கையில் வைத்திருந்த பிரீப்கேசை எடுத்து மேசை மீது வைத்து, பூட்டை விடுவித்துத் திறந்தார்.

உள்ளே-

கட்டுக்கட்டாய் ஐந்நூறு ரூபாய் நோட்டுகள்.

“எ... என்ன... இது..?”

“டாக்டர்...” வினோத்குமார் குரலைத் தாழ்த்தினார்.

“இதுல பத்து இலட்ச ரூபாய் இருக்கு... நாளைக்குக் காலையில் என் சித்தி மங்களகவுரி உயிரோடு இல்லாத பட்சத்தில் இந்தப் பணம் உங்களுக்குத்தான்...”

“ஓ.கே. உங்களுக்கு நான் உதவி பண்ணுறேன். ஒரு மணி நேரம் கழிச்சு நான் மறுபடியும் ‘ரவுண்ட்ஸ்’ போகும் போது உங்க சித்திக்கு ‘மெர்சி கில்லிங்’ ஊசி போட்டுருவேன். விடியற்காலை அவங்க உயிரோடு இருக்க மாட்டாங்க..”

விடிகாலை ஐந்தரை மணி.

ஐ.சி. யூனிட்டுக்கு வெளியே கண்ணீர்க் கண்களோடு நேத்ரா, உத்ரா, மித்ரா காத்துக் கொண்டிருக்க - பக்கத்தில் வினோத்குமார் வாயில் கைக்குட்டை வைத்து, துக்கத்தை அடக்குவது போல் நடித்துக் கொண்டிருந்தார்.

ஈஸ்வர், ஐ.சி. யூனிட்டிலிருந்து வெளிப்பட்டதும் அவரைச் சூழ்ந்து கொண்டார்கள்.

ஈஸ்வர் களைத்த கண்களோடு நிமிர்ந்தார். வர வழைத்துக் கொண்ட

சோகக் குரலில் பேசினார்.

“ரொம்ப ஆபத்தான கட்டம்... என்னால முடிஞ்ச வரைக்கும் முயற்சி பண்ணிட்டிருக்கேன்.”

நேத்ரா, உத்ரா, மித்ரா மூன்று பேரும் விதவிதமாய் அழ ஆரம்பித்து விட, வினோத்குமாருக்கு கண்ணைக் காட்டி விட்டு, டாக்டர் ஈஸ்வர் தன் அறையை நோக்கி நடந்தார்.

வினோத்குமார் பின் தொடர்ந்தார்.

“வினோத்குமார்...! உங்க சித்தியோட கதை முடிஞ்சுது. அரை மணி நேரம் கழிச்சு அறிவிப்பு பண்ணிடுறேன்...”

“நன்றி... டாக்டர்...”

வினோத்குமார் சொல்லிக் கொண்டிருக்கும் போதே - போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே வந்தார்.

“வணக்கம் டாக்டர்... நான் இன்ஸ்பெக்டர் ராஜேந்திரன். கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி எனக்கு போனில் ஒரு புகார் வந்தது. அது பற்றி விசாரிக்க வந்திருக்கேன்.”

“புகாரா... என்ன புகார்...?”

“மங்களகவுரி என்கிற ஒரு வயதான அம்மா இந்த ஆஸ்பத்திரியில் ‘அட்மிட்’டாகி இருக்காங்களா..?”

“ஆமா...”

“அவங்களுக்கு என்ன?”

“மாரடைப்பு...”

“இப்போ எப்படி இருக்காங்க..?”

“சாரி இன்ஸ்பெக்டர்…! அவங்க கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி இறந்துட்டாங்க…”

“இல்ல டாக்டர்... போனில் என்கிட்டே பேசின பெண், மங்களகவுரி மரணத்தைப் பற்றி வேறுவிதமா சொன்னாங்க...”

“என்ன?”

“இவர், வினோத்குமார்... இறந்து போன மங்களகவுரி இவருக்கு சித்தி

முறை இல்லையா..?"

"ஆமா..."

"மங்களகவுரியைத் தீர்த்துக் கட்டுறதுக்காக வினோத்குமார் உங்களுக்கு பத்து இலட்ச ரூபாய் கொடுத்ததாகவும், நீங்களும் பணத்தை வாங்கிட்டு மங்களகவுரிக்கு 'மெர்சி கில்லிங்' ஊசியைப் போட்டு அவங்களைக் கொலை பண்ணிட்டதாகவும் போனில் பேசிய அந்தப் பெண் சொன்னார்."

"பொ...பொய்...!" கோபமாய் கத்திக் கொண்டே எழுந்தார், டாக்டர் ஈஸ்வர்.

இன்ஸ்பெக்டர் புன்னகைத்தார். பக்கத்தில் இருந்த பீரோவை காட்டிக் கேட்டார்.

"இந்த பீரோவோட சாவியைக் கொஞ்சம் தர்றீங்களா...?"

"எதுக்கு...?"

"கொடுங்க... சொல்றேன்..."

ஈஸ்வர் சாவியை எடுத்துக் கொடுக்க - இன்ஸ்பெக்டர் ராஜேந்திரன் அதை வாங்கி - பீரோவை திறந்து - உள்ளேயிருந்த பிரீப்கேசை எடுத்தார். அதன் பூட்டுகளை விடுவித்துத் திறந்தார். உள்ளே ஐநூறு ரூபாய் நோட்டுக் கட்டுகள் நெருக்கியடித்து உட்கார்ந்திருந்தன.

"டாக்டர்…! இந்தப் பணம் எப்படி வந்தது.? யார் உங்களுக்குக் கொடுத்ததுன்னு சொல்ல முடியுமா..?"

"அது... வந்து... வந்து..."

"இது, வினோத்குமார் உங்களுக்குக் கொடுத்த பணம்... இந்தப் பணத்தை வாங்கிக்கிட்டுத்தான் மங்கள கவுரிக்கு 'மெர்சிகில்லிங்' ஊசியைப் போட்டு கொலை பண்ணி இருக்கீங்க..."

டாக்டரும், வினோத்குமாரும் ஒருத்தரை ஒருத்தர் கலக்கமாய் பார்த்துக் கொண்டிருக்க... இன்ஸ்பெக்டர் கையில் வைத்திருந்த ஒரு தாளை நீட்டினார். "இது கைது வாரண்டு. ..இரண்டு பேரும் ஆஸ்பத்திரி வாசலில் நிக்கிற ஜீப்பில போய் ஏறுங்க...
"லாக்கப்புக்குள் ஒரு நாள் பூராவும் வெச்சி விசாரிக்கிற விதத்துல விசாரிச்சா எல்லா உண்மைகளும் வெளியே வந்திடும்."

வினோத்குமார் முகம் இருண்டு போய் பிரமை பிடித்த நிலையில்

உட்கார்ந்திருக்க... இன்ஸ்பெக்டர் ராஜேந்திரன் மெல்ல நடந்து போய், அவருடைய தோளைத் தொட்டார்.

“இப்பவும் ஒண்ணும் தாமதமாயிடலை வினோத்குமார்... நீங்கதப்பை உணர்ந்து, இனிமே இது மாதிரியான கொலை முயற்சிகளில் ஈடுபடமாட்டேன்னு எனக்கு உறுதிமொழி கொடுத்தா உங்க சித்தியைப் பிழைக்க வெச்சுடலாம்.”

“எ... என்னது... சித்தியைப் பிழைக்க வைக்கிறதா..?”

டாக்டர் ஈஸ்வர் புன்னகைத்தார். “மிஸ்டர் வினோத்குமார்…! நான் உயிரைக் காக்கிற டாக்டர்... ஒரு உயிரை வாங்குற டாக்டர் இல்லை. எனக்குப் பணத்தேவை இருக்குதான்... இருந்தாலும், ஒரு நோயாளியைக் கொலை செய்கிற அளவுக்கு நான் ‘கிரிமினல்’ கிடையாது. உங்க சித்தியைக் கொலை செய்யும் படி நீங்க என்கிட்டே சொன்னது, எனக்கு அது ஒரு பெரிய அதிர்ச்சியான விசயமாய் இருந்தது.

நீங்க நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்… கிரிமினல் கிடையாது. ஒரு கொலையைப் பண்ணிட்ட பின்னாடி அதனோட பின்விளைவுகள் எப்படி இருக்கும்னு உங்களுக்குத் தெரியாது. அந்த விளைவுகள் எப்படி இருக்கும்னு காட்டத்தான் இந்த நாடகம்.

ஒரு நிமிடம் நினைச்சுப் பாருங்க... இதெல்லாம் உண்மையாகவே நடந்திருந்தா… இந்நேரம் நீங்களும் நானும் போலீஸ் ஜிப்பில கைவிலங்கோடு ஏறி இருக்கணும். கம்பெனி நிர்வாகம் முழுதும் உங்கக்கைக்கு வரணும்னா. அதுக்கு பேச்சுவார்த்தைதான் சரியான தீர்வாய் இருக்க முடியுமே தவிர, ஒருத்தரைக் கொலை பண்ணுறதல்ல…”

வினோத்குமாரின் தாழ்ந்த தலை நிமிர, இன்னும் பல நிமிடங்கள் பிடிக்கும் போலிருந்தது.

# 14. இதயா 2020

முடி கொட்டிப் போன மண்டைகளோடு, அந்த வெளிநாட்டு விஞ்ஞானிகள் ஃபைபர் நாற்காலிகளில் சாய்ந்திருக்க, அவர்களுக்கு எதிரே ஒரு டிஜிட்டல் திரை, திரையில் வித்தியாசமாய் ஒரு ரோபோவின் படம். அதன் உலோக உடம்பில் பத்துக் கைகள் முளைத்து அந்தக் கைகளில் இருந்த விரல்கள் கொக்கிகளைப் போல் நீண்டிருக்க, அந்த ரோபோவை உருவாக்கிய ப்ரானேஷ் தெளிவான

உச்சரிப்போட நல்ல ஆங்கிலத்தில் அந்த விஞ்ஞானிகளைப் பார்த்துப் பேசிக் கொண்டிருந்தான்.

“இப்போது நீங்கள் திரையில் பார்த்துக் கொண்டு இருப்பது என்னுடைய இரண்டு படைப்புகளில் ஒன்றான அசெம்ப்ளர் ரோபோ, இது தொழிற்சாலை உபயோகத்திற்கானது. அசெம்ப்ளிங் மற்றும் கட்டுமானப் பணிகளுக்கு இந்த ரோபாவைப் பயன்படுத்தலாம். இதனிடம் மொத்தம் இருநூறு ஆர்ம்கள் உள்ளன. ஐம்பதுக்கும் மேற்பட்ட உதிரிப் பாகங்களை இணைத்து ஒரு பொருளை உருவாக்க வேண்டுமானால், அந்தப் பணியை இந்த ரோபோ சில நிமிஷங்களில் செய்து முடித்துவிடும். இது முழுக்க முழுக்க எலக்ட்ரானிக் முறையில் வடிவமைக்கப்பட்டது. ஹைட்ராலிக்ஸோ, நியூட்ராலிக்ஸோ சிறிது கூட சேர்க்கப்படவில்லை.

விஞ்ஞானிகளில் ஒருவர் கேட்டார். “இதை டெமோ செய்து காட்டமுடியுமா?”

“ஷ்யூர்!” சொன்ன ப்ரானேஷ், பத்துக்கும் மேற்பட்ட அந்த விஞ்ஞானிகளை பக்கத்தில் இருந்த டெமோ அறைக்குக் கூட்டிப் போனான். அறையின் மையத்தில் அந்த அசெம்ப்ளர் ரோபோ ஒரு ரோமாபுரி வீரனைப் போல் நின்றிருந்தது. விஞ்ஞானிகள் அரைவட்டமாய்ச் சூழ்ந்து நின்றார்கள். ப்ரானேஷ், அவர்களுக்கு மையமாய் நின்று கொண்டு பேச்சைத் தொடர்ந்தான்.

“உங்களுக்கு டெமோ செய்து காட்டுவதற்காகவே ஒரு காரை முழுமையாய்ப் பிரித்து அதன் பாகங்களைப் பிரித்துப் போட்டிருக்கிறேன். நான் கட்டளை கொடுத்ததும் அது செயல்படத் தொடங்கும். சரியாய் பதினான்கு நிமிடங்களில் அசெம்ப்ளர் ரோபோ, பாகங்களை சரியாய் பொருத்தி ஒரு காரை உருவாக்கிவிடும்.” ப்ரானேஷ் சொல்லிக் கொண்டே, தன் கோட் பாக்கெட்டில் வைத்திருந்த ரிமோட் கண்ட்ரோலை எடுத்து ஒரு பட்டனை அழுத்தி ரோபோவுக்கு உயிர் கொடுத்தான். அது தன் உலோகக் கைகளை உயர்த்தியது. கண்களில் பச்சை நிற வெளிச்சம் பாய்ந்தது. ஸ்டார்ட் பட்டனைத் தொட்டு விட்டு கட்டளையைக் கொடுத்தான் ப்ரானேஷ்.

“அசெம்பிள் தெம்...”

கட்டளை கிடைத்ததும் - ரோபோ காரின் பாகங்களை நோக்கித் திரும்பியது. செயல்பட ஆரம்பித்தது. காரின் பாகங்களான சிலிண்டர் ப்ளாக், சிலிண்டர் ஹெட் கார்ப்பரேட்டர், ஃப்யூவல் பம்ப், ஏர்க்கண்டிஷன் செட் ராக் க்ளினர் என்று வரிசைக்கிரமமாய் எடுக்கப்பட்டு ஒரு கார் மெல்ல மெல்ல உருவாயிற்று. எல்லோரும்

வாட்ச்களைப் பார்க்க - சரியாய் பதினான்கு நிமிடங்கள்.

ஒரு கார் முழு உடம்போடு நின்றது. “உங்களில் யாராவது ஒருவர் காரில் ஏறி உட்கார்ந்து ஸ்டார்ட் செய்து பாருங்கள். இது பெரிய அறையாக இருப்பதால் ஒட்டிக் கூட பார்க்கலாம்!”

இளவயதோடு இருந்த ஒரு விஞ்ஞானி காருக்குள் ஏறினார். ஸ்டார்ட் செய்தார். ஒட்டினார். மற்ற விஞ்ஞானிகள் கைதட்டினார்கள். கை குலுக்கினார்கள்.

“அற்புதம்... மிஸ்டர் ப்ரானேஷ்!”

“நன்றி!”

“இதற்கு என்ன விலை நிர்ணயம் செய்துள்ளிர்கள்?”

“இன்னமும் விலை நிர்ணயம் செய்யவில்லை.”

“இந்த 2020-ஆம் ஆண்டின் ஈடு இணையற்ற தயாரிப்பு இது. இதனுடைய தொழில்நுட்பம் எங்கள் நாட்டுக்கு வேண்டும்.” ஒரு விஞ்ஞானி சொல்ல, இன்னொரு நாட்டு விஞ்ஞானி குறுக்கிட்டார். குரலில் கோபம்.

“எங்கள் நாட்டுக்கும் அந்தத் தொழில்நுட்பம் வேண்டும்.”

ப்ரானேஷ் சிரித்தான்.

“பொறுங்கள்! என்னுடைய இன்னொரு படைப்பான ‘இதயா-2020’ஐயும் பாருங்கள். அதையும் பார்த்துத்தான் நான் இரண்டுக்கும் சேர்த்து ஒரு விலையைச் சொல்வேன். அந்த விலையை எந்த நாடு எனக்குத் தருகிறதோ, அந்த நாட்டுக்கு என்னுடைய தொழில்நுட்பம் கிடைக்கும்.”

ஒரு விஞ்ஞானி கேட்டார்.

“இதயா - 2020 அப்படியென்றால்?”

“அது ஒரு பெண் ரோபோ.”

“என்னது! பெண் ரோபோவா? ரோபோவில் ஆண் என்ன... பெண் என்ன..? எல்லாமே ஒன்றுதானே!”

“மன்னிக்க வேண்டும். என் இதயா வித்தியாசமானவள். நீங்கள் நினைப்பது போல், அவள் இயந்திரம் அல்ல.”

“பின்னே?”

“வந்து பாருங்கள்... அவளை…! பிரமித்துப் போவீர்கள்.”

ப்ரானேஷ் பக்கத்து அறைக்குக் கூட்டிப் போய் சிலிக்கான்களால் உருவாக்கப்பட்ட அந்த ரோபோவைக் காட்டினான்.

“இவள்தான் என் இதயா - 2020. இது ஒரு நூறு சதவீத ஹியூமனைஸ்ட் ரோபோ. தானாகவே சிந்திக்கும் திறன் படைத்தது. இதனுள்ளே நான் செயற்கை முறையில் உருவாக்கிய பயோமெமரிகள் இருப்பதால் எது நல்லது எது கெட்டது என்று யோசித்துப் பார்த்து, அதற்கேற்ப முடிவுகள் எடுக்கும் திறமை கொண்டது. என்னுடைய மனைவியோடு இது ஊர் வம்பு பேசும். அரட்டையடிக்கும் என் மனைவியிடம் இது வீணை வாசிக்கக் கற்றுக் கொண்டது. ரங்கோலி கோலம் போட, பழகிக் கொண்டது. அழகாய் எம்பிராய்டரி பின்னும். என் மனைவி சமையல் கட்டில் வேலையாய் இருக்கும் பொழுது, போய் ஒத்தாசை பண்ணும். எல்லாவற்றுக்கும் மேலாய்…!”

“மேலாய்?”

“பாதுகாப்புப் பணியை நல்ல முறையில் கவனித்துக் கொள்ளும்.”

“எந்த விதத்தில்?”

“வீட்டுக்குள் நுழையும் திருடர்களை சுட்டு வீழ்த்தும். தனியாக வசிக்கும் பெண்களுக்கு இது ஒரு நல்ல தோழியாகவும், பாடிகார்டாகவும் இருக்கும். மனித நேயமுள்ள ரோபோ இது. இதை உருவாக்கும் பணியை 2015-ல் ஆரம்பித்தேன். 2020-ல் முடித்தேன். என் வாழ்நாளில் இது ஓர் அற்புதம்!”

“நல்லது எது... கெட்டது எது என்று இதுவாகவே சிந்தித்து செயல்படுமா?” விஞ்ஞானி ஒருவர் கேட்க, ப்ரானேஷ் சிரித்தான்.

“என் இதயா-2020-ன் சிறப்பம்சமே அதுதானே! நீங்கள் ஏதாவது கேள்விகளைக் கேட்டுப் பாருங்கள். புரிந்து கொண்டு பேசும்.”

“பேசுமா?”

“ம்... பேசும் ஒரு பெண்ணைப் போலவே பேசும்.”

விஞ்ஞானிகளில் ஒருவர், இதயா 2020-க்கு முன்பாய் போய் நின்றார். கேட்டார்.

“உடம்புக்கு நல்லது பிராந்தியா… விஸ்கியா?”

இதயாவின் உலோக வாய் மெல்லத் திறந்து, இனிமையான பெண் குரல் வெளிப்பட்டது. தெளிவான உச்சரிப்போடு சொன்னது.

“இரண்டுமே கெடுதல்..!”

“எய்ட்ஸ் நோயைக் குணப்படுத்த முடியுமா?”

“முடியாது.”

“பொய் பேசுறது?”

“தப்பு.”

“திருடுவது?”

“மிகப் பெரிய பாவம்.”

“மன்னிக்க முடியாத குற்றம் எது?”

“நம்பிக்கைத் துரோகம்!”

விஞ்ஞானிகள் கைதட்டினார்கள். “எக்ஸலண்ட்..! இதயா! இதயா! உன்னால் ஒரு கவிதை சொல்ல முடியுமா?’’

“முடியுமே.”

“எங்கே சொல் பார்க்கலாம்!”

“மாலையில்

மரணம் என்று

தெரிந்திருந்தும் கூட

காலையில்

கண்ணீர் வடிப்பதில்லை

பூக்கள்!

அதன் சிரிப்பில்

வாழ்க்கையைக் கற்றுக்கொள்

மனிதா!”

விஞ்ஞானிகள் எல்லோரும் ப்ரானேஷின் கைகளைப் பற்றிக் குலுக்கினார்கள்.

“சூப்பர்ப்... மிஸ்டர் ப்ரானேஷ்! இதயாவின் சிலிக்கான் உடம்புக்குள் நீங்கள் செய்து இருக்கும் பயோமெமரி தொழில்நுட்பம், எங்களை அயர வைத்துவிட்டது. இதற்கு உங்கள் விலை என்ன?”

ப்ரானேஷ் புன்னகைத்தான்.

“பொறுங்கள்...! இதயாவின் இன்னொரு சாகசத்தையும் பாருங்கள். பிறகு எனது விலையைச் சொல்கிறேன்.”

“எனை சாகசம்?”

“இதயாவின் உடம்பில் ஒரு பிஸ்டல் மறைத்து வைக்கப்பட்டு இருக்கிறது. எதிரிகளோ, திருடர்களோ வந்தால் அவர்களைக் குறிபார்த்து சுட்டுத் தள்ளும். இதயா துல்லியமாய்க் குறி பார்ப்பாள்.”

“குறி தவற வாய்ப்பே இல்லையா?”

“இல்லை! இதோ! நூறடி நீளமுள்ள இந்தப் பெரிய அறையில் சுவரின் கோடியில் ஒரு ரப்பர் பந்தை நூலால் கட்டித் தொங்கவிட்டு இருக்கிறேன். நான் கட்டளை பிறப்பித்ததும் இதயா அதைக் குறிப்பார்த்துச் சுடுவாள். டெமோ செய்து காட்டட்டுமா?”

“ப்ளிஸ்!” விஞ்ஞானிகள் ஆர்வமானார்கள். ப்ரானேஷ் திரும்பினான். கூப்பிட்டான்.

“இதயா!”

அது “ம்” என்றது.

“அறையின் கோடியில் ஒரு நூலின் உதவியோடு தொங்கிக் கொண்டு இருக்கும் அந்த ரப்பர் பந்தை சுட்டுத்தள்ளு!”

“உத்தரவு!” சொன்ன இதயா, தன் இடுப்பின் மறைவுக்குக் கையைக் கொண்டு அந்த பிஸ்டலை எடுத்தது.

மெல்ல உயர்த்தி குறிபார்த்தது.

ரப்பர் பந்தை அல்ல!

ப்ரானேவைஷப் பார்த்து, விஞ்ஞானிகள் எல்லோரும் அதிர்ந்து போய் திகைத்துக் கொண்டிருக்கும் போதே ட்ரிக்கரை அழுத்திச் சுட்டது. ப்ரானேஷ் ரத்தமாய்ச் சரிந்து, நிலைத்த கண்களோடு உயிரை விட்டுக் கொண்டிருக்க, தயா விஞ்ஞானிகள் பக்கமாய் திரும்பிப் பேச ஆரம்பித்தது.

“தீய எண்ணம் கொண்டவர்களை இனம் கண்டு சுடவேண்டும் என்பதுதான் ப்ரானேஷ் எனக்குக் கற்றுக் கொடுத்த பாடம். ப்ரானேஷ் பெரிய புரஃபசர். புதுவகையான ரோபோக்களை உருவாக்குவதில் திறமைசாலி. அறிவுஜீவி. ஆனால், ஒரு மனிதனிடம் இருக்க வேண்டிய மனிதாபிமானம் அவனிடம் இல்லை. ஒரு பெண்ணிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படை அறிவு இல்லாதவன்.

ப்ரானேஷின் மனைவி வாத்சல்யா.. ஒரு அழகான, அறிவான பெண். பூவைப் போன்ற உள்ளம் கொண்டவள். நான் ஜனித்த நாளிலிருந்து என்னை ஒரு தோழியாய் பாவித்து என் மீது பாசத்தைப் பொழிந்தவள். அவள் எனக்கு வீணை வாசிக்கக் கற்றுக் கொடுத்தாள். ஒவியம் வரையவும், ரங்கோலி கோலம் போடவும் நான் கற்றுக் கொடுத்தாள். ஒவியம் வரையவும், ரங்கோலி கோலம் போடவும் நான் கற்றுக் கொண்டது அவள் மூலமாகத்தான் அந்த வாத்சல்யா இப்போது உயிரோடு இல்லை. போன மாதம் தற்கொலை செய்து கொண்டாள்.

தற்கொலைக்குக் காரணம் ப்ரானேஷ், ப்ரானேஷ் ஒரு சாடிஸ்ட் மனைவி அழகாய் இருப்பதைப் பார்த்து எந்தக் கணவனாவது பொறாமைப்படுவானா? இவன் பட்டான். அவளுக்கு அடி உதை விழாத நாட்களே கிடையாது. ஏ.சி. அறையில் அவள், உடம்பில் துணி இல்லாமல்தான் படுக்க வேண்டும். வாத்சல்யா அவனைவிட சிவப்பாய் இருக்கிறாள் என்கிற ஒரே ஒரு காரணத்துக்காக இந்த ப்ரானேஷ் ஒருநாள் என்ன செய்தான் தெரியுமா? சிவப்பு வண்ண பெயிண்ட் டப்பாவை வாங்கி வந்து அவளுடைய தலையில் கவிழ்த்தான். இப்படி இந்த கிராதகன் பண்ணின சித்திரவதைகளைப் பட்டியல் போட்டுக் கொண்டே போகலாம். கடைசியில் இவனுடைய கொடுமைகளைத் தாங்கிக் கொள்ள முடியாமல் வாத்சல்யா தற்கொலை செய்து கொண்டாள்.

அவள் மரணத்துக்காக என்னால் மனிதர்களைப் போல் கண்ணீர் விட முடியாது. ப்ரானேவைஷப் போன்ற இதயம் இல்லாதவர்கள் எவ்வளவுதான் அறிவுஜீவிகளாய் இருந்தாலும், இந்த உலகில் அவர்கள் உயிர் வாழ தகுதியற்றவர்கள். அதனால்தான் என்

பயோமெமரியில் இவனைச் சுட்டுக் கொல்வதற்கு ஒரு நாளைக் குறித்துக் கொண்டேன். அந்த நாள்தான் இது. உங்களைப் போன்றவர்களின் முன்னிலையில்தான் தண்டனையை நிறைவேற்ற வேண்டும் என்று நினைத்து இருந்த என் எண்ணம் இன்று நிறைவேறியுள்ளது. இவனால் நான் படைக்கப் பட்டது ஒரு வெட்கக்கேடான தலைகுனிவான செயல். எனவே, என்னையும் நான் அழித்துக் கொள்ள விரும்புகிறேன்.”

சொல்லி முடித்த இதயா, தன் கையில் இருந்த பிஸ்டலை ஸ்லோமோஷனில் நெற்றிக்குக் கொண்டு போய் வைத்து, ட்ரிக்கரை அழுத்த, மொத்த விஞ்ஞானிகளும் அதிர்ச்சியோடு பார்த்துக் கொண்டு இருக்கும்போதே சிலிக்கான்களால் உருவாக்கப்பட்ட இதயாவின் தலை சில்லுச் சில்லாய் சிதறி நாலா பக்கமும் தெறித்தது.

# 15. நடிப்பு

“நீங்க எந்தப் பத்திரிகைன்னு சொன்னீங்க..?”

மூலிகை இலைகளைக் கிள்ளி ஒரு பெரிய செப்புப் பாத்திரத்தில் போட்டுக் கொண்டே மாணிக்கவாசகம் கேட்டார். அறுபத்தைந்து வயதுக்குரிய தளர்வான உடம்பு, நெற்றிக்கும் வழுக்கைக்கும் இடைப்பட்ட பிரதேசத்தைத் தண்ணீரால் குழைத்துப் பூசப்பட்ட திருநீறு ஆக்கிரமிப்பு செய்து, எட்டனா சைஸ் குங்குமப் பொட்டுக்கும் இடம் கொடுத்து இருந்தது.

அவருக்கு எதிரே ஜோல்னாப் பையை மாட்டிக் கொண்டு ஒரு பத்திரிகை நிருபருக்குரிய சகல அம்சங்களோடு உட்கார்ந்திருந்த தென்னரசு, தான் வேலை செய்யும் பத்திரிகையின் விசிட்டிங் கார்டைக் கொடுத்தான். வாங்கிப் பார்த்த மாணிக்கவாசகம் நெற்றியை சுருக்கினார்.

“பத்திரிகையோட பேர் வானவில்லா..?

“ஆமாங்கய்யா...”

“கேள்விப்பட்ட மாதிரியே இல்லையே..?”

“புது பத்திரிகைங்கய்யா... இதுவரைக்கும் ஒரு அஞ்சாறு இஷ்யூதான் வந்திருக்கு கொஞ்சம் வித்தியாசமான பத்திரிகை. ஒரு சினிமா நடிகையோட போட்டோ கூட உள்ளே இருக்காது. ஒரு இஷ்யூவுக்கும் ஒரு சிறுகதைதான். மற்றபடி எல்லாமே உபயோகமான பேட்டிகளும்

ஆக்கபூர்வமான கட்டுரைகளும்தான்.”

“சரி...! நான் என்ன பண்ணிட்டேன்னு என்னைப் பேட்டி எடுக்க வந்திருக்கீங்க..?”

தென்னரசு சிரித்தான். “என்னங்கய்யா இப்படி ஒரு கேள்வி கேட்டுட்டீங்க..?” நீங்க ஒரு தலைமையாசிரியரா பணிபுரிந்து ரிடையரான பின்னாடி கையில் வெச்சிருந்த ஏழு லட்ச ரூபாயில் இந்தச் சிறிய கிராமத்துல ஒரு மனநல காப்பகத்தைக் கட்டி உங்களுக்குத் தெரிஞ்ச மூலிகை வைத்தியங்களை உபயோகப்படுத்தி மனநோயாளிகளைக் குணமாக்கறது எவ்வளவு பெரிய விஷயம்...?’ அதுவும் நோயாளியிடமிருந்து ஒரு பைசா கூட வாங்கிக்காமே அவங்களை இங்கேயே தங்க வெச்சு வைத்தியம் பார்க்க எத்தனை பேரால முடியும்…! இன்னிக்கு சிட்டியில் இருக்கிற டாக்டர்ஸ் வெச்சுப் பார்க்கவே நூறு ரூபாய் ஃபீஸ் கேட்கிறாங்கய்யா..!”

மாணிக்கவாசகம் சிரித்தார். “இதோ பாருங்க தம்பி... எனக்கு பொண்டாட்டியோ குழந்தைகளோ கிடையாது. நான் ஒரு ஒண்டிக்கட்டை ரிடையரானதும் என்ன பண்ற துன்னு யோசிச்சேன். கையில பணம் இருந்தது. இந்த மனநல காப்பகத்தைக் கட்டி ஏதோ என்னாலானதைப் பண்ணிட்டிருக்கேன்...”

“நீங்க ஒரு தலைமையாசிரியர். இந்த மூலிகை வைத்தியத்தை எங்கே எப்படிக் கத்துகிட்டீங்க..?”

“குணசீலத்துல எனக்குப் பழக்கமான வைத்தியர் ஒருத்தர் இருந்தார். பள்ளிக்கூட விடுமுறை நாட்கள்ல அவர் வீட்டுக்குப் போய்... வாரம் பத்து நாள் தங்கிக்கிறது உண்டு. அந்தச் சமயத்துல அவர்கிட்டே கத்துக்கிட்டது தான் இந்த மூலிகை வைத்தியம்.”

“இந்த மூலிகை வைத்தியம் எல்லாம் மனநோயாளிகளையும் குணப்படுத்துமா..?”

“பத்துக்கு ஏழு பேர் எப்படியும் குணமாயிடுங்க.”

“இந்தக் காப்பகத்துல இப்போ எத்தனை நோயாளிகள் இருக்காங்க..?”

“பதினோரு பேர்...!” மாணிக்கவாசகம் சொல்லிக் கொண்டிருந்த போதே காப்பக ஊழியர் ஒருவர் பக்கத்தில் வந்து நின்றார்.

“அய்யா..!”

“உங்களைப் பார்க்கிறதுக்காக ஒரு பெண்ணும், ஒரு வயதான அம்மாவும் வந்திருக்காங்க…”

“உள்ளே வரச் சொல்லு வீராச்சாமி...”

ஊழியர் தலையாட்டி விட்டுப் போன அடுத்த நிமிஷம் இருபத்தைந்து வயதில் ஒரு பெண்ணின் சேலைத் தலைப்பைப் பிடித்துக் கொண்டு மலங்க மலங்க விழித்து ஒரு மாதிரி கோணலாய்ச் சிரித்தபடி அறுபது வயது அம்மாளும் உள்ளே வந்தார்கள். அழுக்குச் சேலையிலும் கிழிசல் ஜாக்கெட்டிலும் இருந்த அந்த இளம்பெண் “அய்யா. ஆ..!”

என்று கத்திக் கொண்டே மாணிக்கவாசகத்தின் கால்களில் வந்து விழுந்தாள். கண்களில் நீர் சிதற ஆரம்பித்தாள்.

“எங்கம்மாவை நீங்க தான்யா காப்பாத்தணும்...”

மாணிக்கவாசகம் அந்தப் பெண்ணின் தோளைத் தொட்டார். “மொதல்ல எந்திரிம்மா..!”

அந்தப் பெண் கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தாள். ஜாக்கெட்டின் கிழிசல் தெரிய சேலைத் தலைப்பால் சட்டென்று போர்த்துக் கொண்டாள்.

“உம் பேர் என்னம்மா..?”

“பாக்யம்... சொந்த ஊர் பொள்ளாச்சி.”

“உனக்குக் கூடப் பொறந்தவங்க..?”

“யாருமில்லிங்கய்யா... நானும் அம்மாவும் மட்டுந் தான். போன வருஷம் அப்பா ஒரு விபத்துல இறந்துட்டாரு. அப்பவிருந்து அம்மா இப்படி ஆயிட்டாங்க... நான் நர்ஸ் வேலைக்குப் படிச்சிருக்கேன். ஹைதராபாத்ல ஒரு பெரிய ஹாஸ்பிடல்ல எனக்கு வேலை கிடைச்சிருக்கு. நல்ல சம்பளம். அம்மாவைத் தனியா விட்டுட்டு எப்படிப் போறது? யோசனை பண்ணிட்டிருக்கும் போதுதான் பக்கத்து வீட்டுப் பெரியவர் உங்களைப் பத்தியும் இந்த மனநல காப்பகத்தைப் பத்தியும் சொன்னாரு… உடனே புறப்பட்டு வந்தேன். அய்யா! பெரிய மனசு பண்ணி எங்கம்மாவை உங்க காப்பகத்துல சேர்த்துக்கணும். நான் மாதா மாதம் ஹைதராபாத்திலிருந்து பணம் அனுப்பி வைச்சுடறேன்…”

“அம்மாவுக்கு என்ன வயசு...?”

“அறுபதுங்கய்யா...”

“அம்மாவைக் கூட்டிட்டு வந்து இப்படி ஸ்டூல்ல உக்கார வைம்மா…”

ஏதோ ஒரு பக்கம் இலக்கில்லாமல் வெறித்துப் பார்த்த படி தன்னிச்சையாய்ச் சிரித்துக் கொண்டிருந்த தன்னுடைய அம்மாவை பாக்யம் சிரமப்பட்டு நகர்த்திக் கொண்டு வந்து ஸ்டூலின் மீது உட்கார்த்தி வைத்தாள். மாணிக்கவாசகம் நாடி பிடித்துப் பார்த்து விட்டு பாக்யத்திடம் நிமிர்ந்தார்.

“ஒரு ஆறு மாசத்துக்குள்ள அம்மாவைக் குணப்படுத்திடலாம். கவலைப்படாதேம்மா. நீ என்னிக்கு வேலை யில சேரப் போகணும்...?”

“உடனே புறப்பட்டு வரச் சொல்லி தந்தி கொடுத்திருக்காங்கய்யா. அம்மாவோட பிரச்சனையாலத்தான் லேட்டாயிக்கிட்டிருக்கு...”

“இனிமே உனக்கு உன்னோட அம்மாவைப் பத்தின கவலையே வேண்டாம்மா. நான் பார்த்துக்கறேன்.”

பாக்யம் தன் கையோடு கொண்டு போயிருந்த துணிப்பையைப் பிரித்து ஒரு காகிதப் பொட்டலத்தை எடுத்து மாணிக்கவாசகத்திடம் நீட்டினாள். அவர் வியப்பாய்ப் பார்த்தார்.

“என்னம்மா... இது?”

“அய்யா..! இதுல ஒரு ஆயிரம் ரூபா இருக்கு. இதை அம்மாவோட வைத்தியச்செலவுக்கு வெச்சுக்குங்கய்யா. அடுத்த மாசம் நான் சம்பளம் வாங்கினதும் இன்னும் கொஞ்சம் பணத்தை மணியார்டர்ல அனுப்பி வைக்கிறேன்!”

மாணிக்கவாசகம் புன்னகைத்தார். “இது பணம் வாங்கிக்கிட்டு வைத்தியம் பார்க்கிற காப்பகம் இல்லேம்மா. நோயாளிக்குப் பண்ண வேண்டிய எல்லா செலவுகளையும் இந்த காப்பகமே ஏத்துக்கும். பணத்தை உன்னோட செலவுக்கு வெச்சுக்கோம்மா. நீ பண்ண வேண்டியது எல்லாம் ஒண்ணே ஒண்ணுதான். ரெண்டு மாசத்துக்கு ஒரு தடவையாவது வந்து உன்னோட அம்மாவைப் பார்த்து ரெண்டு வார்த்தைப் பேசிவிட்டு போ!”

“அய்யா...! அம்மாவுக்குக் கண்டிப்பா குணமாயிடுமா..?”

“சரியா... ஆறு மாசம்…! அம்மா உன்னோட பேரைச் சொல்லி கூப்பிடுவாங்க. போதுமா..?” சிரித்த மாணிக்க வாசகம் உள்ளே

பார்த்துக் குரல் கொடுத்தார்.

“பொன்னம்மா...”

காப்பகத்தின் சமையல் வேலைகளைக் கவனிக்கும் அந்த அம்மாள் உள்ளேயிருந்து வெளிப்பட்டாள். “அய்யா..!”

இந்த அம்மாவைக் கூட்டிக்கிட்டுப் போய் கடைசி ரூம்ல படுக்க வை. அம்மாவோட பேர் என்னம்மா..?”

“பார்வதி!”

“நல்ல பேர்! நீ கிளம்பும்மா. ஹைதராபாத் போய்ச் சேர்ந்ததும் ஒரு லெட்டர் போடு.”

“போனதும் லெட்டர் போடறேன்ய்யா. போன் நெம் பரையும் குறிச்சு அனுப்பறேன்.”

மறுபடியும் மாணிக்கவாசகத்தின் கால்களில் விழுந்து எழுந்தாள் பாக்கியம்.

காப்பகத்தை விட்டு வெளியே வந்த பாக்யம் அந்த குறுகலான தெருவை இரண்டு நிமிஷ நேரத்தில் கடந்து எதிர்ப்பட்ட வயலுக்குள் நுழைந்து வரப்பில் நடந்து பத்து நிமிஷ நடைக்குப் பின் ரோட்டுக்கு வந்து ஒரு புளிய மரத்துக்குக் கீழே நின்றிருந்த லான்ஸர் காரை நெருங்கிகதவைத் திறந்து உள்ளே போனாள்.

உள்ளே இரண்டு இளைஞர்கள். ஒரு பெண். இளைஞர்களில் ஒருவன் கேட்டான். என்ன நர்மதா… அட்மிட் பண்ணியாச்சா?”

“ம்... பணணிட்டேன். உங்கம்மாவை அந்த வயல். வரப்புல கூட்டிட்டுப் போறதுக்குள்ளே எனக்கு மயக்கமே வந்துடுச்சு...”

“சின்ன மருமகள்ன்னா எங்கம்மாவுக்குக் கொஞ்சம் பயம். அதனாலதான் உன்னைக் கூட்டிட்டுப் போகச் கொன்னேன்…”

“ஒரு பெரிய தொல்லை விட்டது...”

“உன்னோட பேரை என்னான்னு சொல்லியிருக்கே?”

“பாக்யம்...”

“அந்தப் பெரியவர்க்கு உன் மேல எந்தச் சந்தேகமும் வரலையே?”

“எப்படி வரும்...? காலேஜ் டேஸ்ல மாறுவேடப் போட்டியில் இண்டர்காலேஜியேட் லெவல்ல ஃபர்ஸ்ட் பிரைஸ் வாங்கியவளாச்சே…!” மற்ற மூன்று பேரும் சிரிக்க.

கார் நகர்ந்தது.

“இந்த இந்தத் தமிழ்நாடு பக்கம் எட்டிப் பார்க்கக் கூடாது…”

“கர்நாடகமா ரெஜிஸ்ட்ரேஷனோடு இருந்த அந்த லான்ஸர் கார் இறக்கைகளைக் கட்டிக் கொண்ட மாதிரி பறந்தது.

“அய்யா..!”

பதற்றமாய்க் குரல் கொடுத்துக் கொண்டே காப்பகத்துக்குள் நுழைந்தார் ரிப்போர்ட்டர் தென்னரசு.

மூலிகை எண்ணெய் காய்ச்சுவதற்கான ஆயத்தப் பணிகளில் ஈடுபட்டிருந்த மாணிக்கவாசகம் திரும்பினார்.

“என்ன தம்பி... பஸ்ஸூ கிடைக்கலையா..?”

“அதில்லிங்கய்யா. ஒரு அக்கிரமத்தைக் கண்ணால பார்த்துட்டுப் பதறிப் போய் வர்றேன்.”

“அக்கிரமமா...?”

“ஆமாங்கய்ய, அந்த பாக்யம் பொண்ணு இங்கிருந்து புறப்பட்டு போனதுமே நானும் உங்ககிட்டே உத்தரவு வாங்கிட்டு உடனே கிளம்பினேன். காரணம், அந்தப் பொண்ணு மேல எனக்கொரு சந்தேகம் இருந்தது. பேசின பேச்சில், அழுத அழுகையில் ஒரு செயற்கைத்தனம் இருந்தது. அவயாரு என்னான்னு கண்டுபிடிக்கிறதுக்காக அவளுக்குத் தெரியாமே ஃபாலோ பண்ணிட்டு போனேன். ஊருக்கு வெளியே மெயின் ரோட்டில் ஒரு புளிய மரத்துக்குக் கீழே லான்ஸர் கார் ஒண்ணு நின்னுட்டிருந்தது. அந்தக் காருக்குள்ளே போய் ஏறிக்கிட்டா அந்தப் பொண்ணு. நானும் போய் மரத்துக்குப் பின்னாடி நின்னேன்...”

மாணிக்கவாசகம் திகைப்பாய்ப் பார்க்க தென்னரசு தொடர்ந்தான்.

“அய்யா! காருக்குள்ளே இருந்தது. இங்கே அட்மிட்டாகியிருக்கிற பார்வதி அம்மாவோடரெண்டு மகன்களும் மருமகள்களும்தான். கிழிசல் ஜாக்கெட்டிலும், சேலையிலும் இங்கே வந்த பொண்ணோட பேர் பாக்யம் கிடையாது, நர்மதா. மனநிலை சரியில்லாத அம்மாவை

இங்கே கொண்டு வந்து டிஸ்போஸ் பண்றதுக்காக இப்படி ஒரு நாடகம் போட்டிருக்காங்க. இனிமே தமிழ்நாட்டுப் பக்கமே வரக்கூடாதுன்னு அவங்க பேசிக் கிட்டதிலிருந்து ஏதோ வெளி ஸ்டேட்ல செட்டில் ஆயிருப்பாங்கன்னு நான் நினைக்கிறேன்ய்யா..!"

மாணிக்கவாசகம் அதிர்ச்சியை ஜீரணித்துக் கொண்டு புன்னகைத்தார்.

"இந்தக் கலிகாலத்துல இதுவும் நடக்கும். இதுக்கு மேலேயும் நடக்கும்..."

தென்னரசு படபடத்தான்.

"அய்யா! இந்த பாவம் அந்த நாலு பேரையும் சும்மா விடாது. அவங்க ஊர்ப் போய்ச் சேர்றதுக்குள்ளே அந்தக் கார் எங்கேயாவது மோதி..."

"வேண்டாங்க... தம்பி.... அப்படிச் சொல்லாதீங்க. அவங்க நல்லபடியா ஊர் போய்ச் சேரட்டும்."

பின்பக்கம் எழுந்த பெண்ணின் குரல், கேட்டு மாணிக்க வாசகமும், தென்னரசுவும் திரும்பிப் பார்த்தார்கள்.

பார்வதி நின்றிருந்தாள். திருத்தமான முகம். தீட்சண்யமான பார்வை. தெளிவாய்ப் பேசியபடி மாணிக்க வாசகத்தை நோக்கி வந்தாள்.

"அய்யா! எனக்கு கொஞ்சநாள் மனநிலை சரியில்லாம இருந்தது உண்மைதான். எனக்குக் குணமான பின்னாடியும் பைத்தியக்காரி பட்டம் கட்டி ஒரு ரூம்ல போட்டு அடைச்சு வெச்சிருந்தாங்க. நான் படற கஷ்டத்தைப் பார்த்துட்டு, பக்கத்து வீட்டுக்காரர்தான் உங்க காப்பகத்தைப் பத்தி என்னோட மருமகள்கள்கிட்டே சொன்னார். அவங்களும் இங்கே கொண்டு வந்து விட்டுட்டுப் போயிட்டாங்க. நீங்க என்னை திருப்பி அனுப்பிச்சுடாதீங்கய்யா. இதே காப்பகத்துல பொன்னம்மாவுக்கு உதவியா சமையல்காரியா காலம் பூராவும் இருந்துட்டுப் போறேன். என்னோட கைச்சமையல் ரொம்பவும் நல்லாயிருக்கும்ங்கய்யா..."

மாணிக்கவாசகமும் தென்னரசுவும் ஒருத்தரையொருத்தர் கண்களில் நீர் மல்கப் பார்த்துக் கொண்டார்கள். இதயங்கள் ஈயக் குண்டுகளாய் மாறி கனத்தன.

# 16. ஒரு பொய்யாவது சொல் கண்ணே!

டெல்லியின் இரண்டு டிகிரி செல்சியஸ் குளிரைத் தாஜா பண்ணுவதற்காக ஹீட்டர்க்கு முன்பாய் உட்கார்ந்து, உள்ளங்கைகளைத் தேய்த்துக் கொண்டிருந்த போது டெலிபோன் அழைத்தது. போய் ரிஸீவரை எடுத்தேன்.

“ஹலோ...” என்று சொன்னதும் ஓர் ஆண் குரல் கோபமாய் பேசியது. “மிஸ்டர் ராகவ். டெல்லி காசினோ பாரடைஸ் கிளப்பிலிருந்து பேசுகிறோம். உங்களுடைய மெம்பர்ஷிப்பைப் புதுப்பிக்க இன்னும் ஏழு நாட்கள்தான் உள்ளன. எப்போது புதுப்பிக்க வருகிறீர்கள்?”

நான் கேட்டேன்.

“உங்களுக்கு எந்த நெம்பர் வேண்டும்?”

அவன் எண்களைச் சொல்ல, நான் உன்னிப்பாய் செவிமடுத்து விட்டு சற்று உரத்தக் குரலில் சொன்னேன்.

“டெலிபோன் எண் சரிதான்…! ஆனால் நான் ராகவ் இல்லை. நானும் என் நண்பன் சந்துரு மட்டும் இந்த அபார்ட்மெண்ட்டில் இருக்கிறோம். நாங்கள் இந்த அபார்ட்மெண்ட்டை வாடகைக்கு எடுத்து ஒரு மாதகாலம் தான் ஆகிறது... இதற்கு முன் இந்த அபார்ட்மெண்டில் இருந்தவனின் பெயர் ராகவ்வாக இருக்கலாம்.”

“ஓ... ஸாரி!” மறுமுனையில் ரிஸிவர் கவிழ்ந்து கொண்டது. குளியலறையிலிருந்து வெளிப்பட்ட சந்துரு சிரித்தான்.

“என்ன தினேஷ்...! போன்ல ராகவை கேட்டாங்களா?

“ம்….”

“நீ வெளியே போயிருந்த ரெண்டு நாளும், ஏகப்பட்ட போன்... பதில் சொல்லி சொல்லி எனக்கு ‘த்ரோட் இன்ஃபெக்ஷன்’ வந்துடுச்சுன்னா பார்த்துக்கோயேன். அந்த ராகவ் ஒரு லோனையும் பாக்கி வைக்கலை. க்ரெடிட் கார்டு, பேங்க் லோன், எல்.ஐ.சி. லோன், கார் லோன், பர்சனல் லோன்னு ஏகத்துக்கு வாங்கியிருக்கான் போலிருக்கு… பணம் கட்டச் சொல்லி ஏகப்பட்ட ரிமைண்டர்ஸ்.

“புதுசா ஒரு இடத்துக்குக் குடி வந்தாலே இப்படிப்பட்ட பிரச்னைகள் வரத்தான் செய்யும் சரி... நீ இப்போ வெளியே கிளம்பறியா?”

“ஆமா..! பத்து மணிக்கு இண்டர்வ்யூ... எட்டு மணி பஸ்ஸைப் பிடிச்சாத்தான் ஒன்பது மணிக்கு நிஜாமுதீன்ல இருக்கிற அந்த சாஃப்ட்வேர் கம்பெனிக்குப் போய்ச் சேர முடியும்...”

“வேலை கிடைச்சுடுமா..?”

“நம்பிக்கையிருக்கு பார்க்கலாம்... நீ அட்டெண்ட் பண்ணின இண்டர்வியூ என்னாச்சு..?”

“எந்த நிமிஷமும் அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் வரலாம்.” நான் சொல்லிவிட்டு ஹீட்டர் அருகே போய் உட்கார்ந்து கொண்டேன். சந்துரு நீட்டாய் டிரெஸ் பண்ணிக் கொண்டு கிளம்ப, அவனுக்கு பெஸ்ட் ஆஃப் லக் சொல்லி விட்டு வீட்டுக்குள் நுழைந்தேன்.

டெலிபோன் ஒலித்தது.

போய் ரிஸீவரை எடுத்தேன். நான் ‘ஹலோ’ என்று சொன்னதுமே ஒரு பெண்ணின் ஐஸ்கிரீம் குரல் “ஹாய் ராகவ்” என்றது. அந்தக் குரலில் இருந்த ஈர்ப்பு என்னை பொய் பேச வைத்தது.

“எஸ்... ராகவ்... ஸ்பீக்கிங்...”

“ராகவ்…! நான் மாயா. ஃபேவர் டாட்காமில் உன்னுடைய ப்ரொஃபைல் பார்த்தேன். என்னோட ப்ரொ ஃபைலைப் பார்த்துட்டு ரெண்டு பேரும் மீட் பண்ண்லாமான்னு நீ கேட்டிருந்தே…! அந்த சமயம் நான் ஒரு எக்ஸாமுக்கு ப்ரிப்பேர் பண்ணிட்டிருந்தேன்... அதனால் உடனே பதில் சொல்ல முடியலை. இப்ப நான் ஃப்ரீ… இன்னிக்கு சாயந்தரம் ஏழு மணி சுமார்க்கு நாம ரெண்டு பேரும் மீட் பண்ணலாமா?”

நான் என்ன பதில் சொல்வது என்ற யோசிப்பில் இருக்க, அந்த மாயா படபடத்தாள்.

“என்ன ராகவ் யோசிக்கிறே...! பயப்படாதே... நான் அழகாவே இருப்பேன். நீ எப்படியிருந்தாலும் எனக்குப் பிடிக்கும். காரணம் உன்னோட ப்ரொஃபைல்...!”

என் மனசுக்குள் சந்தோஷம் பாய்ந்தது.

‘ஓ’ இவள் இன்னமும் ராகவ்வை பார்க்கவில்லை. தேங்க் காட்…!”

“என்ன ராகவ்! நாம மீட் பண்ணலாமா?”

“சரி...?”

“எங்கே..?”

“ரீகல் சர்க்கிள் கார்டன்...”

“எத்தனை மணி?”

“ஏழு மணி...!”

“அடையாளம்…?”

“நான் ஒயிட் பேண்ட் ஒயிட் சர்ட்… நீ...?”

“நானும் ஒயிட் சுடிதான். ஊதா நிற துப்பட்டா!” அவள் ரிஸிவரை வைத்துவிட என் வயிற்றில் இப்போது அமிலம் சுரந்து அவஸ்தை பரவியது. அதையும் மீறி மாயாவின் ஐஸ்கிரீம் குரல் என் நாடி நரம்புகளை ‘மாஞ்சா’ போட்டு விரைப்பாக்கியது.

அவள் இதுவரை ராகவ்வை பார்த்தது இல்லை... இது ஒரு பெரிய ஃப்ளஸ் பாயிண்ட். வாய்ப்பு வலிய வந்திருக்கிறது. போய் பார்த்துவிடலாம்.

உள்மனம் எச்சரித்தது.

கொஞ்சம் யோசி...!

யோசித்து விட்டு ஒரு ரூபாய் நாணயத்தை எடுத்தேன். சுண்டினேன். தலை விழுந்தால் போகலாம். பூ விழுந்தால் வேண்டாம்.

ஒரு ரூபாய் நாணயம் சுழன்று கீழே விழுந்து உருண்டது. மல்லாந்தது.

தலை.

மாயாவைச் சந்தித்து விட வேண்டியதுதான்.

சாயந்தரம் சரியாய் ஏழு மணிக்கெல்லாம் உஜாலா வெண்மையில் பேண்ட் சர்ட்டில், ரீகல் சர்க்கிள் கார்டனுக்குள் நுழைந்தேன்.

கூட்டம் அவ்வளவாக இல்லை. பனி ஈரத்தோடு இருந்த புல் தரையில் மெல்ல நடைபோட்டபடி சுற்று முற்றும் பார்த்தேன். வெள்ளை சுடிதாரையும் ஊதா துப்பட்டாவையும் தேடினேன்.

கிடைக்கவில்லை.

பாதி கார்டனைச் சுற்றி வந்திருந்த போது ஒரு மரத்துக்குப் பின்னாலிருந்து “ஹேய் ராகவ்!” என்று உற்சாகக் குரலோடு வெளிப்பட்டாள் அந்தப் பெண். பளீரென்ற வெள்ளையில் சுடிதார், ஊதா நிற துப்பட்டா என் முகத்தில் மோதியது.

நான் சிரிக்க மறந்தேன். பழைய சிம்ரனின் ஸ்லிம் உடம்பில் இப்போதைய கரினாகபூர் முகம். சிரிக்கும் போது கொஞ்சம் மாதுரி தீட்சித்.

என் கன்னத்தைத் தட்டிவிட்டு தலையைச் சாய்த்துப் பார்த்தாள் “பரவாயில்லை… ஹேண்ட்சம்மாய்த்தான் இருக்கே…! நான் எப்படி இருக்கேன்... சொல்லு... பார்க்கலாம்.!”

“நான் எதிர்பார்த்ததற்கும் மேலே...!”

“தாங்க்யூ... தாங்க்யூ!” சொன்னவள் என் முகத்தை உற்றுப் பார்த்தாள்.

“என்ன பார்க்கிறே மாயா?”

“உன்னோட நிறம் மாநிறம்தான்…! ஆனா உன் ப்ரோபைலில் நல்ல சிவப்புன்னு போட்டிருந்தியே...?”

“காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு...!”

மாயா சிரித்தாள். தன் இடது கை முட்டியால் என் வயிற்றை செல்லமாய்க் குத்தினாள். கேட்டாள்.

“முதல் தடவை மீட் பண்ணியிருக்கோம். எங்கே போலாம்...?”

“லெட் அஸ் கோ டு ஹோட்டல் நியூ வேவ்.”

“அது ப்யூர்லி நான்வெஜ் ஹோட்டல்... நீ ஹண்ட் ரண்ட் பர்சண்ட் வெஜிடேரியன்னு ப்ரோஃபைலில் சொல்லியிருந்தியே…?”

“ஸாரி மாயா... அது பொய்...”

“இன்னும் என்னவெல்லாம் பொய் சொல்லியிருக்கே?”

“அய்யய்யோ... அது ஒண்ணுதான்..!”

“இதோ பார் ராகவ்…! இப்பவே உன்கிட்ட ஒரு விஷயத்தைச் சொல்லிடறேன். என்னை நீ காதலிக்கலாம்னு மனசுக்குள்ள நினைச்சிருந்தா அதை இப்பவே உதறிடு… ஏன்னா நான் ஏற்கெனவே என்கேஜ்ட் அடுத்த மாசம் லாஸ் ஏஞ்சலிலிருந்து வர்ற என்னோட அத்தைப் பையன் அஷ்வத் இந்தக் கழுத்துல மூணு முடிச்சைப் போட்டுருவான்...?”

‘அடிப்பாவி!’ என் மனசுக்குள் உற்சாகம் சட்டென வடிந்து போனது. அதைப் படித்துவிட்டாள் மாயா.

“என்ன ராகவ்! ஃப்யூஸாயிட்டே..?”

“ஒண்ணுமில்லை... அட்வான்ஸ் கங்கிராட்ஸ்!”

“ஊஹூம்... நீ இதைச் சந்தோஷமா சொல்லலை.”

“அட நிஜமாத்தான்..!”

“புளுகு மூட்டை எனக்கு ஃபேஸ் அஸ்ட்ராலஜி தெரியும். உன்னோட முகத்தை ஒரு நிமிஷம் உற்றுப் பார்த்தால் போதும். உன்னைப் பற்றின எல்லா உண்மைகளையும் சொல்லிடுவேன்..!”

“நிஜமாவா..?”

“ம்....”

“எங்கே... சொல்லு பார்க்கலாம்.”“ என் மனசுக்குள் ஒரு பயம் உதறினாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அவளுக்கு முன்பாய் முகத்தை நிமிர்த்திக் கொண்டு நின்றேன்.

மாயா என் தாடையை நிமிர்த்தி என் முகத்தை ஒரு நிமிஷ நேரம் உற்றுப் பார்த்து விட்டு, சொல்ல ஆரம்பித்தாள். நிதானமான குரலில் ஏற்ற இறக்கத்தோடு சொன்னாள்.

“நீ ராகவ் கிடையாது. உன் பேர் தினேஷ், பி.ஈ.யில் கம்ப்யூட்டர் சயின்ஸ். உனக்கொரு ப்ரெண்ட் இருக்கான். அவன் பேர் சந்துரு. நீங்க ரெண்டு பேரும் இதுக்கு முந்தி பெங்களூரில் இருக்கும் ஒரு சாஃப்ட்வேர் கம்பெனியில் வேலை பார்த்தீங்க... அங்கே உங்க பிரதான வேலை ராத்திரி நேரம் வேனில் கால் சென்டர்க்கு வேலைக்குப் போகும் அழகான பெண்களைக் கடத்தி ஒரு காமாந்தக கும்பலுக்கு விற்க வேண்டியது. லட்சக்கணக்கில் பணம் சம்பாதிக்க வேண்டியது. பெங்களூர் போலீஸ் குற்றவாளிகளைப் பிடிக்க கடுமையான நடவடிக்கைகளை எடுத்ததும், நீங்க ரெண்டு பேரும் வேலைகளை ராஜினாமா பண்ணிட்டு டெல்லியில் கைவரிசை காட்ட வந்திருக்கீங்க... பெங்களூரிலேயே மோப்பம் பிடிச்சுட்ட போலி ஸார் உங்க ரெண்டு பேரைப் பற்றிய தகவல்களை அனுப்பிவெச்சாங்க. அந்த ராகவ் கேரக்டர் டெல்லி போலிஸோட கற்பனை. ஒரு பெண் உங்களுக்கு டெலிபோன் பண்ணினால் உங்க ரியாக்ஸன் எப்படியிருக்குமென்று தெரிஞ்சுக்கிறதுக்காக ‘மாயா’ என்கிற என்னை வெச்சு ஒரு சின்ன டிராமா பண்ணினாங்க. நவ்...யூ... ஆர் இன் டிராப்.”

நான் டெல்லி குளிரில் வியர்த்துக் கொண்டிருக்கும் போது, என்

தோளில் பாரமாய் ஒரு கை விழுந்தது.

திரும்பினேன்.

ஆறடி உயரத்தில் திடகாத்திரமாய் ஒரு போலீஸ் ஆபீஸர்.

# 17. நிழலும் சுடும்!

அருள்மொழிவர்மன் பளீரென்ற வேஷ்டி சட்டையில் ‘டை’ அடித்த மீசைக்குக் கீழே சிரித்துக் கொண்டு, அறையினின்றும் வெளிப்பட்டார். தோளில் சாக்லெட் நிற சால்வை. தலையில் பொருத்தியிருந்த ‘விக்’ அவருடைய ஐம்பது வயதைக் குறைக்க முயன்று அதில் தோற்றுப் போயிருந்தது.

ஃபைபர் நாற்காலிகளில் காத்திருந்த நிருபர்களைப் பார்த்து, “வணக்கம்” சொல்லியபடியே ஹாலுக்குள் நுழைய - வராந்தாவில் காத்திருந்த தொண்டர்கள் தொண்டை தெறிக்க கோஷம் போட்டார்கள்.

“தென்னகத்தின் அலெக்சாண்டர் அருள்மொழி வர்மன்.”

“வாழ்க!”

“ஏழைகளின் இறைவன்...”

“வாழ்க..”

அருள்மொழிவர்மன் தன் இரண்டு கைகளையும் தலைக்கு மேல் உயர்த்தி ஒரு பெரிய கும்பிடு போட தொண்டர்கள் ஆரவாரம் செய்தார்கள். ஃப்ளாஷ் காமிராக்கள் விடாமல் கண் சிமிட்டிக் கொண்டிருக்க நிருபர்கள் அருள்மொழி வர்மனை நோக்கி கேள்விகளைத் தொடுத்தார்கள்.

“ஸார்! இத்தனை நாளுமில்லாமல் இப்போது... அதுவும் தேர்தல் நேரம் பார்த்து கட்சி மாறியிருக்கிறீர்கள். இந்த திடீர் முடிவுக்குக் காரணம் என்ன..?”

அருள்மொழிவர்மன் புன்னகையோடு அந்த நிருபரைப் பார்த்தார்.

“நான் சார்ந்து இருந்த மக்கள் நல கட்சி ஒரு ஜனநாயக விரோத சக்தியாய் மாறி வருகிறது.... அதனால்தான் இதய வலியோடு அந்தக் கட்சியிலிருந்து விலகி எதிர்க்கட்சியில் சேர வேண்டியதாகி விட்டது.”

“நீங்கள் இதுவரை நான்கு தடவை கட்சி மாறியுள்ளீர்கள். இது ஐந்தாவது தடவை. மக்கள் உங்களைப் பற்றித் தவறாக நினைக்க மாட்டார்களா?”

“மக்களுக்கு என்னைப் பற்றி நன்றாகவே தெரியும்...! நான் தப்பான கட்சியில் எப்போதும் இருக்க மாட்டேன்..!”

“நீங்கள் ஐம்பது லட்சம் ரூபாய் வாங்கிக் கொண்டு ஜனநாயக பாதுகாப்புக் கட்சியில் சேர்ந்து விட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் பால்வண்ணன் சொல்லியிருக்கிறார். இதற்கு உங்கள் பதில் என்ன?”

“எனக்கு லட்சங்கள் பெரிதில்லை. லட்சியங்கள்தான் பெரிது. நான் நேற்று வரை சார்ந்திருந்த அந்தக் கட்சியில் கொள்கை ஏதோ பெயரளவுக்குத்தான் இருந்தது. அங்கே இருக்கும் தலைவர்களுக்கு மக்கள் நலன் பற்றிய அக்கறை கிடையாது. பொய்யான வாக்குறுதிகளைக் கொடுத்து ஆட்சிக்கு வந்த மக்களின் வரிப்பணத்தைக் கொள்ளை படிப்பது தான் தங்களுடைய கொள்கையாக வைத்திருக்கிறார்கள். மக்கள் நலக்கட்சி என்று பெயர் வைத்துக் கொண்டு அந்த மக்களுக்கே விரோதமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த சக்திகளை எதிர்த்துப் போராடத்தான் கட்சியிலிருந்து விலகியிருக்கிறேன்…”

“மக்கள் நலக் கட்சி இதனால் பாதிக்கப்படும் என்று நினைக்கிறீர்களா?”

“கண்டிப்பாக! அந்தக் கட்சி இந்தத் தேர்தலில் ஒரு இடத்தில் கூட ஜெயிக்க முடியாது. தென் மாவட்டங்களில் எனக்கு மிகப் பெரிய வாக்கு வங்கி இருக்கிறது. என்னுடைய பலம் என்ன என்பது தேர்தலின் போது தெரியும். இந்த அருள்மொழிவர்மன் யார் என்பது அகில இந்தியாவுக்கே தெரியும்…”

“நீங்கள் கட்சி மாறிய செயல் ஒரு கணவனுக்கு மனைவி செய்கிற துரோகத்திற்கு சமம் என்று மக்கள் நலக்கட்சித் தலைவர் பூபதி சொல்லியிருக்கிறாரே..?”

“துரோகத்திலேயே பிறந்து துரோகத்திலேயே வளர்ந்தவர் துரோகத்தைப் பற்றிப் பேசக்கூடாது. அவர் இந்தத் தமிழ்நாட்டு மக்களுக்கு என்னென்ன துரோகம் செய்தார் என்பதை நாளை முதல் ஊர்தோறும் மேடை போட்டுச் சொல்லப் போகிறேன். நான் அவர்மேல் சுமத்தப்போகிற குற்றச்சாட்டுகளை அவரால் மறுக்க முடியாது. ஏனென்றால் அதற்கான ஆதாரங்கள் என்னிடம் உள்ளன. அவருக்கு துணிச்சல் இருந்தால் நான் சொல்லப் போகும்

குற்றச்சாட்டுகளை எதிர்த்து கோர்ட்டில் வழக்கு தொடுக் கட்டுமே..?

ஆவேசமாகப் பேசிய அருள்மொழி வர்மன் நாற்காலி யினின்றும் எழுந்து கொண்டார்.

“பேட்டியை இத்துடன் முடித்துக் கொள்ளலாம். நான் தொண்டர்கள் மத்தியில் பேச வேண்டும்...”

சால்வையை இழுத்துப் போர்த்துக் கொண்டு அருள் மொழி வர்மன் வெளியே வர, தொண்டர்கள் நடுவில் ஆரவாரமும், கரகோஷமும் கிளம்பியது.

“அண்ணன் அருள்மொழிவர்மன்...”

“வாழ்க..!”

எல்லோரும் முண்டியடித்துக் கொண்டு சூழ்ந்தார்கள். ஒருவர் மைக்கை நீட்ட அருள்மொழிவர்மன் வாங்கிப் பேசினார்.

“என்னுடைய உள்ளத்தில் ஒளிவிட்டுக் கொண்டிருக்கும் மாணிக்கங்களே! உங்கள் அனைவருக்கும் என் வணக்கம். இத்தனை நாட்களும் வேண்டா வெறுப்பாய் போட்டுக் கொண்டிருந்த ஒரு வேஷத்தைக் கலைத்து விட்டு இப்போது உங்கள் முன் சுயரூபத்துடன் நின்று கொண்டிருக்கிறேன். நான் அடிக்கடி கட்சி மாறிக் கொண்டு இருப்பதால் உங்களில் சில பேர்க்கு என் மேல் ஒரு வித அதிருப்தி ஏற்பட்டிருக்கலாம். மக்களை அதிக அளவில் சந்தித்து அவர்களுடைய பிரச்னைகளைப் புரிந்து கொண்டு, என்னால் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும் என்பதற்காகவே இந்த அரசியலுக்கு வந்தேன். ஒவ்வொரு கட்சியிலும் சில வருடங்கள் இருந்து பார்த்தேன். எந்த கட்சிக்குமே ஒரு கொள்கைப் பிடிப்பு கிடையாது. எனவே அந்தக் கட்சிகளிலிருந்து விலகினேன். இப்போது மக்கள் நலக் கட்சியிலிருந்து ஜனநாயகப் பாதுகாப்பு அணிக்கு வந்திருக்கிறேன். என்னுடைய கொள்கைப் பசிக்குத் தீனி போடுகிற கட்சி இது. இந்தக் கட்சியிலிருந்து கொண்டு ஊழல் பேர்வழிகளை எதிர்த்துப் போராடப் போகிறேன். இந்தப் போராட்டம் ஒரு புனிதப் போருக்குச் சமம். இந்தப் போரில் நான் வெற்றி பெற உங்கள் ஒத்துழைப்பு எனக்கு வேண்டும். ஒத் துழைப்பு எனக்குக் கொடுப்பீர்களா..?”

“கொடுப்போம்... கொடுப்போம்...” தொண்டர்கள் ஆவேசமாய் கைகளை உயர்த்திக் கொண்டு கத்தினார்கள். அருள்மொழிவர்மன் அவர்களுக்கு நன்றி சொல்லி விட்டு பங்களாவின் உள்ளே இருந்த அறையை நோக்கிப் போனார்.

நிருபர்களும் தொண்டர்களும் கலைந்து போயிருக்க பங்களாவில் இப்போது நிசப்தம். அருள்மொழிவர்மன் தன்னுடைய அறைக்குள் நுழைந்து நாற்காலியில் சாய்ந்த விநாடி-

டெலிபோன் அழைத்தது. ரிஸிவரை எடுத்தார்.

“ஹலோ...”

மறுமுனையில் ஜனநாயகப் பாதுகாப்புக் கட்சியின் தலைவர் லட்சுமிகாந்தன் பேசினார்.

“என்ன அருள்…! பேட்டியெல்லாம் பிரமாதமா எடுத்து தொண்டர்கள் மத்தியில் உணர்ச்சிபூர்வமா பேசிட்டீங்க போலிருக்கே?”

அருள்மொழிவர்மன் வாய்விட்டுச் சிரித்தார்.

“அதுக்குள்ளே நியூஸ் வந்தாச்சா... தலைவரே...?”

“வராமே இருக்குமா..? உங்களுக்குப் பின்னாடி இவ்வளவு பெரிய தொண்டர் படை இருக்குமென்று நான் கொஞ்சம் கூட நினைச்சுப் பார்க்கலை. நீங்க என் கட்சியில் வந்து சேர்ந்தது கட்சிக்கு ஒரு பெரிய ப்ளஸ் பாயிண்ட்.”

“இந்த ப்ளஸ் பாயிண்ட்டுக்கு இன்னமும் பெட்டி வந்து சேரலையே..? பாதிப்பணம்தான் கொடுத்து இருக்கீங்க... மீதி அம்பது லட்சம் எப்போ கைக்கு கிடைக்கும் தலைவரே…?”

“பெட்டி வந்துட்டேயிருக்கு... நம்ம கட்சியோட நிர்வாகிகள் இன்னும் அரைமணி நேரத்துக்குள்ளே வந்து பார்ப்பாங்க. பணம் கைமாறும் போது பக்கத்துல யாரும் இருக்காதபடி பார்த்துக்குங்க... பத்திரிகை நிருபர்கள் மூக்குல வேர்த்துகிட்டு அலையறாங்க...”

“அதையெல்லாம் நான் பார்த்துக்கிறேன் தலைவரே!”

சரியாய் அரைமணி நேரம்.

கட்சி நிர்வாகிகள் இரண்டு பேர் சூட்கேஸோடு வந்து சேர்ந்தார்கள். அருள்மொழிவர்மனிடம் கேட்டார்கள்.

“வீட்ல யாரும் இல்லையே?”

“ஒரு ஈ காக்கா கிடையாது. பெண்டாட்டி ஏற்கனவே கிராமத்துக்குப் போயிட்டா. வீட்ல இருந்த ரெண்டு வேலைக்காரங்களுக்கும் வேலையைக் கொடுத்து வெளியே அனுப்பிட்டேன். அவங்க

வீட்டுக்கு வர எப்படியும் ஒரு மணி நேரத்துக்கு மேலாயிடும். சூட்கேஸ்ல ஐநூறு ரூபாய் நோட்டா. ஆயிரம் ரூபாய் நோட்டா..?"

"நீங்களே திறந்து பாருங்களேன்..."

அருள்மொழிவர்மன் சூட்கேஸின் லாக்கர்களை விடு வித்து திறந்து பார்த்தார்.

உள்ளே-

ஒரு பிஸ்டல் ஒருக்களித்துப் படுத்திருந்தது. அருள் மொழிவர்மனின் முகத்தில் இருந்த ஒட்டு மொத்த ரத்த மும் ஒரே விநாடியில் காணாமல் போயிற்று.

"எ... எ... என்ன... இது..?"

இரண்டு பேர்களில் ஒருவன் பிஸ்டலைக் கையில் எடுத்துக் கொண்டான். "ஜனநாயகப் பாதுகாப்புக் கட்சித் தலைவர் அரைமணி நேரத்துக்கு முன்னாடிதான் ஒரு கணக்கு போட்டார். உங்களுக்கு மக்கள் கிட்டே ஓரளவு செல்வாக்கு இருக்கு. இந்த செல்வாக்கோட சதவீதம் அதிகமாகணும்னா மக்களுக்கு உங்க மேல அனுதாபம் வரணும். அனுதாபம் வரணும்னா அதுக்கு ஒரே வழி நீங்க செத்துப் போறதுதான்...! நீங்க நினைக்கிற மாதிரி நாங்க கட்சி நிர்வாகிகள் கிடையாது. கூலிப்படை ஆட்கள். உங்களை நாங்க இப்ப தீர்த்துக் கட்டிட்டா அந்தப் பழி மக்கள் நலக் கட்சி மேல விழும். மக்களுக்கு அந்தக் கட்சிமேல கோபம் வரும். உங்க மேல அனுதாபம் வரும். ஜனநாயகப் பாதுகாப்புக் கட்சி ஒட்டு மழையில் நனைஞ்சு ஆட்சிக்கு வரும்…"

அருள்மொழிவர்மன் திகைத்துக் கொண்டிருக்கும் போதே அந்த சைலன்ஸர் பிஸ்டலின் முதல் தோட்டா அவருடைய இடது மார்பில் ஒரு ரத்தக் குழியைப் பறித்தது.

# 18. நிறங்கள்

"அப்பா..!" கண்ணாடி முன் நின்று தன் தலையில் இருந்த சொற்ப முடிகளை ஒன்று சேர்த்து படிய வாரிக் கொண்டிருந்த என்னுடைய அப்பாவைக் கூப்பிட்டுக் கொண்டே அவருக்கு முன்பாய் போய் நின்றேன். அவர் நிமிர்ந்தார்.

"என்னம்மா மைத்ரேயி..?"

“எனக்கு இந்த தீபாவளிக்கு...?”

“சொல்லும்மா...”

“பட்டுப் புடவைதான் வேணும்…”

“சரி... எடுத்துக்கோம்மா... அதுக்கென்ன..?” நான் மலர்ந்து போய் அப்பாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு ஒரு குழந்தையைப் போல் சிரித்தேன். “தாங்க்ஸ்ப்பா..!”

“என்னம்மா... இது..! அப்பாவுக்குப் போய் தாங்க்ஸ் சொல்றே…?”

“உங்க பட்ஜெட் எவ்வளவுப்பா..?”

“ஐயாயிரம்...”

“அவ்வளவுதானா..?”

“சரி ஆறாயிரம்...”

“ப்ளிஸ்... எனக்காக ஒரு எட்டாயிரம் ஒதுக்கக் கூடாதா?”

“ஓ.கே... எட்டாயிரம் சாங்ஷன்ட்...! அதுக்கு மேல ஒரு ரூபாய் கூட அதிகமாகக் கூடாது.”

“தாங்க்யூ... தாங்க்யூ... அப்பா... பக்கத்து வீட்டு அபிராமி மாமி பட்டுப் புடவைகளைப் பார்த்துப் பார்த்து செலக்ட் பண்றதுல எக்ஸ்பர்ட்! இன்னிக்கு சாயந்தரம் அந்த மாமி பட்டுப் புடவை செலக்ட் பண்றதுக்காக கடைவீதிக்குப் போறாங்களாம். நானும் போய் செலக்ட் பண்ணிட்டு வந்துடட்டுமா..?”

“உன்னோட அம்மாவையும் கூட்டிக்கிட்டு போம்மா…”

அப்பா பேசி முடிக்கவில்லை. சமையலறையிலிருந்து என்னுடைய அம்மா கோபமாய் வெளிப்பட்டாள்.

“என்னங்க...! அவ பட்டுப்புடவை வேணும்னு கேட்டா சரின்னு சொல்லி மண்டையை மண்டையை ஆட்டிடறதா..? பட்டுப்புடவைங்கிறது கல்யாணத்துக் காகத்தான்! தீபாவளிக்கும், பொங்கலுக்கும் கிடையாது. அவ கல்யாணமாகி புருஷன் வீட்டுக்குப் போனதும் அங்கே போய் கேட்டு வாங்கிக் கட்டிக்கிடட்டும்…”

நான் அம்மாவை முறைத்தேன். “உனக்கு ஏம்மா பொறாமை..? அப்பா எடுத்துத் தர்றார். நான் கட்டிக்கறேன். எனக்கு டார்க் பச்சையில் ஒரு

பட்டுப்புடவை எடுக்கணும்னு ரொம்ப நாளாவே ஆசை...”

“இதோ பார்... பட்டுப் புடவையெல்லாம் வேண்டாம். அதெல்லாம் உன்னோட கல்யாணத்துக்குப் பார்த்துக்கலாம். இப்ப இந்த தீபாவளிக்கு ஆயிரம் ரெண்டாயிரத்துல ஒரு சேலை எடுத்துக்க போதும்...”

“அதெல்லாம் முடியாதம்மா..! இந்த தீபாவளிக்கு நான் டார்க் கலர் பச்சையில் பட்டுப்புடவை எடுத்துக்கத்தான் போறேன். அப்பாவும், எட்டாயிரம் ரூபாய்க்கு சாங்க்ஷன் பண்ணிட்டார்.”

அம்மா அப்பாவை கோபமாய்ப் பார்த்தாள்.

“என்னங்க இது..?”

“அட விடு சௌந்தரம்…! மைத்ரேயி என்னிக்கும் வாயைத் திறந்து எதையும் கேட்டது இல்லை... இந்தத் தீபாவளிக்கு பட்டுப்புடவை வேணும்னு கேட்டிருக்கா. எடுத்துக்கட்டுமே...!”

“என்னங்க நீங்களும் அவசுட சேர்ந்துகிட்டு? உங்களுக்கு வந்த போனஸ் பணமே பதினஞ்சாயிரம்தான். அதுல எட்டாயிரம் போயிட்டா மீதியிருக்கிற ஏழாயிரத்துல மத்த செலவுகளை எப்படி சமாளிக்கிறது?”

“சௌந்தரம்...! அதையெல்லாம் நான் பார்த்துக்கறேன். புலம்பாம மைத்ரேயி கூட போயிட்டு வந்துடு...”

“அவளுக்கு பக்கத்து வீட்டு அபிராமி மாமியே போதும், நான் எதுக்கு…?” அம்மா கோபமாய் சொல்லி விட்டு மறுபடியும் சமையலறைக்குள் போய்விட, நான் அப்பாவைப் பார்த்தேன்.

“என்னப்பா இது..?

“உங்கம்மா எந்த ஒரு காரியத்துக்கும் இப்படித்தான் முட்டுக்கட்டை போடுவா… அப்புறம் சமாதானமாயிடுவா... நீ இன்னிக்கு சாயந்தரம் அபிராமி மாமியோடு போய் உனக்குப் பிடிச்ச பட்டுப் புடவையை எடுத்துட்டு வந்துடம்மா... இந்தா சாவி. பணம் பீரோவில் இருக்கு. எடுத்துக்கோ...” பீரோ சாவியை என்னிடம் கொடுத்தார் அப்பா.

ராஜ வீதி அந்த இருட்டான சாயந்தர வேளையில் சீரியல் விளக்குகளின் உபயத்தில் ஒரு வைர நெக்லசாய் ஜொலித்தது. எல்லா நிறங்களிலும் நியான் போர்டுகள் மின்சாரத்தைச் சாப்பிட்டுக் கொண்டிருக்க, மாடியின் உச்சியில் வைக்கப்பட்டிருந்த கம்ப்யூட்டர்

திரையில் விளம்பர எழுத்துக்கள் வண்ண வண்ணமாய் ஓடிக் கொண்டிருந்தன. எல்லாத் திசைகளிலும் வெளிச்சத்சிதறல்கள்.

நான் பிளாட்பாரத்தில் அபிராமி மாமியோடு நடந்து கொண்டிருந்தேன். சுற்றிலும் ஜனக்கூட்டம். சளசள வென்ற பேச்சுச் சத்தம். பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த போலீஸார் நிமிஷத்திற்கு ஒரு தரம் நீளமாய் விசில் ஊதினார்கள். வீசிய காற்றில் தீபாவளி சந்தோஷம்.

“என்ன மாமி…! இவ்வளவு கூட்டம்...?”

“தீபாவளின்னா சும்மாவா..? நீ வீட்டை விட்டு அவ்வளவு சீக்கிரத்துல வெளியே வராத ஜந்து…! ராஜவீதி எப்பவுமே ‘ஜே ஜே’ன்னு தான் இருக்கும். அடுத்த வாரம்… தீபாவளி... கூட்டத்துக்குக் கேக்கணுமா?”

“இப்போ நாம எந்தக் கடைக்குப் போறோம் மாமி?”

“காமாட்சியம்மன் சொசைட்டி ஷோரூமுக்கு போயிடலாம். சாரீஸ் அங்கேதான் கண்ணைப் பறிக்கும். இன்ன நிறம்தான்னு இல்லை. எல்லா நிறத்திலேயும் சேலைகள் இருக்கும். எதை எடுக்கிறது எதை விடறதுன்னு நமக்கே குழப்பமாய் இருக்கும்... வந்து பாரேன்...”

“மாமி! எனக்கு டார்க் பச்சைதான் வேணும்…”

“அதெல்லாம் வயசானவங்க கட்டறது... போன வாரம் நான் அந்தக் கடைக்குப் போனபோது ஆனியன் நிறத்துல ஒரு சேலை பார்த்தேன். கான்ட்ராஸ்ட் பார்டரும், மல்லிகை மொட்டு புட்டாவும் என்னமாய் இருந்தது தெரியுமா மைத்ரேயி..? கடைக்காரன் முந்தியைப் பிரிச்சுக் காட்டினான். என் கண்ணு ரெண்டும் அப்படியே நின்னு போச்சு…”

“அது என்ன விலை மாமி...?”

“ஒன்பதாயிரம்...”

“மாமி, என்னோட பட்ஜெட் எட்டாயிரம் தான்... அதுக்குள்ளே ஒரு நல்ல சேலையை செலக்ட் பண்ணிக் குடுங்க…”

“பண்ணிடலாம் வா... கடைக்காரர் எனக்கு வேண்டப் பட்டவர்தான். சேலைக்கு எக்ஸ்ட்ரா பத்து பர்சன்ட் டிஸ்கவுண்ட் வாங்கிடலாம்.”

நானும் மாமியும் ஜனத்திரளில் நீந்தி சொசைட்டி ஷோரூமுக்குப் போய்ச் சேர்ந்தோம். ஷோரூம் பிரம் மாண்டமாய் ஏ.ஸி. குளிர்ச்சியோடு இருந்தது. கண்ணாடி அலமாரிகளில் நிறம் நிறமாய்

பட்டுப் புடவைகள். ஷோகேஸ் பொம்மைகள் சேலைகளைச் சுற்றிக் கொண்டு புன்னகைத்தன.

“மாமி! இது என்ன கடையா... கடலா..?”

“இதுக்கே மலைச்சுட்டா எப்படி..? இன்னும் நாலு மாடி இருக்கே..?”

என் விழிகளை பிரமிப்பு அடைத்துக் கொண்டது. நினைத்தே பார்க்க முடியாத நிறங்களில் இத்தனை புடவைகளா..?

சேல்ஸ்மேன் ஒருவர் மாமியை அடையாளம் தெரிந்து கொண்டு வரவேற்றார்.

“வாங்க மாமி... வாங்கோ.”

“எப்படி மணி இருக்கே..?”

“நல்லாயிருக்கேன் மாமி…”

“ஒரு புடவை எடுக்கணும். ரேஞ்ஜ் எட்டாயிரத்துக்குள்ளே, ஜரிகை ரொம்பவும் தூக்கலாய் வேண்டாம்.”

“கொடுத்துடலாம்... வாங்க மாமி...” சேல்ஸ்மேன் எங்கள் இருவரையும் ஷோரூமின் கார்னர் பகுதிக்குக் கூட்டிப் போய் அங்கேயிருந்த மெத்தையைக் காட்டினார்.

“உட்கார்ங்க...”

மெத்தையில் உட்கார்ந்தோம்... ஏ.ஸி. குளிர் முகத்தில் அடித்தது. சேல்ஸ்மேன் கேட்டார். “கலர் டார்க்கா..? லைட்டா..?”

“ரெண்டிலேயும் எடுத்துப் போடுங்களேன்…”

அவர் கண்ணாடி அலமாரியைத் திறந்து ஒவ்வொரு சேலையாய் எடுத்து பிரித்துப் பரப்பினார். நிறங்கள் என் கண் முன்னே விரிந்தன.

கடல் நீலம்.

மயில் கழுத்து.

அடர்த்தியான ஆரஞ்ச்.

கனகாம்பரம்.

மாந்தளிர் பச்சை,

ஆஹா! ஒவ்வொரு நிறமும் என்னுடைய கண்களைக் கவ்வி மனசை அள்ளியது. ஒவ்வொரு சேலையாய் கையில் எடுத்துத் தடவினேன். தடவினேன்... தடவித் தடவிப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே...

“மைத்ரேயி!”

என் தோள் உசுப்பப்பட்டு அம்மாவின் குரல் கேட்டது.

“எந்திரி... மணி அஞ்சு... சூரிய உதயத்துக்குள்ளே எண்ணெய் தேய்ச்சு குளிச்சாத்தானே தீபாவளியைக் கொண்டாடினதாய் அர்த்தம்…! ம்... எந்திரி... எந்திரி..!”

நான் கேட்டேன்… எழுந்து உட்கார்ந்தபடி

“அப்பா... குளிச்சாச்சாம்மா?”

“அப்பாவும் குளிச்சாச்சு... நானும் குளிச்சாச்சு... ஆமா நீ ஏதாவது கனவு கண்டியா..?”

“இல்லையே... ஏன்...?”

“ஒண்ணுமில்லே... “மாமி... புடவை’ன்னு ஏதோ உளறிட்டிருந்தே… சரி சரி போய் குளி... நான் வாசல்ல கோலம் போட்டுட்டு வந்துடறேன்.”

பேசிக் கொண்டே அம்மா போய்விட, நான் எழுந்தேன். பக்கத்திலிருந்த தூணைப் பிடித்துக் கொண்டேன். ஒரு விநாடியில் பாத்ரூம் இருக்கும் திசையை அனுமானித்துக் கொண்டு மெல்ல நடந்தேன். என்னுடைய ஆறாவது வயதிலிருந்தே பார்வையில்லாவிட்டாலும் பழகிவிட்ட அந்த வீட்டில் எதன் மீதிலும் மோதாமல் நடந்து குளிய லறைக்குள் நுழைந்தேன். பக்கத்து வீட்டில் இருந்த சிறுவர்களின் கத்தலோடு - தெருவில் பட்டாசு சத்தம். காற்றில் பலகார வாசனை. பிரஷ்ஷில் பற்பசை பிதுக்கி, பல் தேய்க்கும் போது ராத்திரி நான் கண்ட ‘பட்டுப் புடவைக் கனவு’ நினைவில் மோதியது. உடம்பில் பரவசம் பரவியது.

‘இவ்வளவு நிறங்களா..?’

‘கடவுளே! மறுபடியும் ஒரு தடவை அதேபோல் கனவு. ப்ளிஸ்!’

# 19. நட்சத்திர மச்சம்

ஸ் ஏஞ்சல்ஸ். நடுப்பகல். உறைக்காத வெயில்.

லா கம்ப்யூட்டர் க்யூப்பை விட்டு வெளியே வந்து, காண்டீனுக்குப் போய் சிக்கன் சீஸ் ரோல் ஒன்றை வாங்கி விழுங்கி, ப்ளாக் காபியைக் குடித்துக் கொண்டிருந்த போது, என் செல்போன் முணுமுணுத்தது. எடுத்து யார் என்று பார்த்தேன். என்னுடைய க்யூப் மேட் கரோலின்.

“எஸ்” என்றேன்.

“எங்கே இருக்கே... ரம்மேஷ்?” (கரோலின் கடந்த ஆறுமாத காலமாய் ரமேஷ் என்ற என் பெயரை இப்படித்தான் அழுத்தம் திருத்தமாய் கூப்பிட்டுக் கொண்டு இருக்கிறாள்.

“காண்டீனில்..!”

“உன் கூட ஒரு பத்து நிமிஷம் பேசணுமே..?

“கரோலின்...! இன்னிக்கு என்ன கிழமை தெரியுமா? புதன்கிழமை. இப்போ நேரம் பன்னிரண்டேகால். இன்னும் சரியாய் பதினைந்து நிமிஷத்தில் நமக்கு மீட்டிங். மீட்டிங்குக்குச் சரியான நேரத்துக்குப் போகலைன்னா, டீம் லீடர் மார்ட்டின் அமெரிக்கன் இங்கிலீஷில் வறுத்து எடுத்து பெப்பரையும் சால்ட்டையும் தூவிவிடுவார்…!”

“எனக்கு அது தெரியாதா என்ன..? சரியாய் பன்னி ரண்டரை மணிக்கெல்லாம் நாம மீட்டிங்குக்குப் போயிடலாம். ஒரு அஞ்சு நிமிஷம் உன்னோடு பேசினால் கூட போதும்.”

“சரி... எங்கே... வரட்டும்?”

“ப்ரேக் ரூமுக்கு வந்துடு…!”

“சரி.!” செல்போனை அணைத்து, காபியைக் குடித்து முடித்து விட்டு, சாஃப்ட்வேர் கட்டடத்தின் வலது கோடியில் இருந்த பிரேக் ரூமுக்கு போனேன். அந்த அழகான கரோலின் காத்திருந்தாள். வயலட் நிறத்தில் ஷார்ட் ஷர்ட்டும், க்ரே வர்ண ஜின்ஸஸும், ரேபான் கண்ணாடியும் அவளுக்கு அம்சமாய் பொருத்தமாயிருந்தது. போய் அவளுக்கு எதிரே காலியாய் இருந்த நாற்காலியில் உட்கார்ந்தேன்.

“சொல்லு... என்ன விஷயம்...?”

“வெள்ளிக்கிழமை சாயந்தரம் ஆறு மணியிலிருந்து ராத்திரி பத்து மணி வரைக்கும் நீ எனக்கு கம்பெனிதரணும். உன்னால முடியுமா ரம்மேஷ்...?”

“எதுக்கு...?”

“நாம ரெண்டு பேரும் ஹவாக்சிட்டி போகப் போறோம்.”

“போய்....?”

“அங்கேயிருக்கிற காசினோக்களில் விளையாடப் போறோம்.”

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஹவாக் சிட்டி சூதாட்டங்களுக்குப் பெயர் போன ஊர். இது நாள் வரைக்கும் நான் அங்கு போக நினைத்தது இல்லை. போய் வந்த நண்பர்களையும் அவர்கள் பறிகொடுத்த டாலர்களைப் பற்றியும் எனக்குக் கதை கதையாய்ச் சொல்லியிருக்கிறார்கள்.

“நான் வரலை. சூதாட்டம் எனக்குப் பிடிக்காது.”

“உன்னை யார் விளையாடச் சொன்னார்கள்?

“பின்னே!”

“விளையாடப் போவது நான்... நீ எனக்குப் பக்கத்துல இருந்தாலே போதும்...”

“நான் எதுக்கு கரோலின் வீணாய்...”

கரோலின் சுத்தமான பல்வரிசையைக் காட்டிச் சிரித்தாள். “உன்னைப் பத்தி உனக்குத் தெரியாத விஷயம் ஒண்ணு இருக்கு ரம்மேஷ்..”

“என்ன...?”

“நீ அதிர்ஷ்டக்காரன்..! உன்னோட வலது நெற்றிப் பொட்டில் இருக்கிற அந்த நட்சத்திர மச்சம்தான் அதிர்ஷ்டத்துக்குக் காரணம்!”

“என்ன பேத்தறே...?”

“இது பேத்தல் கிடையாது ரம்மேஷ்! நான் உணர்ந்த உண்மை. நீ இந்த கம்பெனியில் ஜாய்ன் பண்ணி ஒரு வருஷம் கூட ஆகலை. அதுக்குள்ள நீ டீம் லீடர் ஆயிட்டே! நீ பண்ணின ப்ராஜக்ட்டுக்கு ஏகப்பட்ட வர வேற்பு. ஒரு பிரச்னையை சால்வ் பண்ணனும்ன்னா உன்னோட முகத்தைப் பார்த்துட்டுப் போனாப் போதும்... அது சால்வ் ஆயிடும். இது உன்னைப் பத்தி மத்தவங்க சொல்ற கமெண்ட்..”

“இப்ப எனக்குப் புரியுது..! அதாவது நான் உன்கூட வந்தா கேசினோக்களில் நீ ஜெயிக்கலாம்னு நினைக்கிறே?”

“அதேதான்.! உன்னோட அதிர்ஷ்ட மச்சம் என்னை டாலர் மழையில் நனைய வைக்கும்...!”

“கரோலின் இதிலெல்லாம் எனக்கு நம்பிக்கையில்லை.”

“இதோ பார் ரம்மேஷ்…! எனக்கு இந்த சாஃப்ட்வேர் கம்பெனியிலேயே நீ ஒருத்தன்தான் ஃப்ரெண்ட், நான் எந்த ஒரு கெட்ட பழக்கத்துக்கும் அடிமையாகாதவள். இந்த கேஸினோக்களில் மட்டும் போய் நான் விளையாடறதுக்குக் காரணம், அட்லாண்டிக் ஒட்டி இருக்கிற ஒரு அநாதை விடுதிக்கு மாசா மாசம் ஒரு கணிசமான தொகை அனுப்பத்தான்…! கடந்த ரெண்டு தடவை கேஸினோக்களில் போய் நான் விளையாடிய போது தோல்வி மேல் தோல்வி. பத்தாயிரம் டாலரைத் தொலைச்சுட்டு வந்தேன். அதையெல்லாம் நான் திரும்பவும் அள்ளணும்னா நீ என்கூட வரணும்.”

“எனக்குப் பயம்மாயிருக்கு கரோலின்.”

“எதுக்கு பயம்...?”

“நீ என் மேல இவ்வளவு நம்பிக்கை வெச்சுக் கூப்பிடறே. நான் உன் கூட வந்தும் ஒரு வேளை உனக்குத் தோல்வி கிடைச்சுதுன்னா..?”

“என்னது தோல்வியா..? நீ எனக்குப் பக்கத்தில் இருக்கும் போது தோல்வி எட்டிக் கூட பார்க்காது..!”

நான் அரைமனதோடு தலையாட்டி வைத்தேன்.

“ச...ரி... வ...ர்...றே...ன்..!.”

வெள்ளிக்கிழமை மாலை.

நானும் கரோலினும் ஹவாக் சிட்டி போனோம். பிர மாண்டம் காட்டிய கேஸினோக்களில் ஃப்ளட்லைட் வெளிச்சத்தில் என்னைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு விளையாட ஆரம்பித்தாள் கரோலின். சுற்றிலும் ஸ்லாட் மெஷின்களின் கடகட சத்தம். போக்கர், ப்ளாக் ஜர்க், ரெட் தண்டர், பர்னிங் ஐஸ் க்யூப், ரௌலட் வீல் என்று ஏகப் பட்ட சூதாட்ட விளையாட்டுக்கள், கரோலின் ஸ்லாட்களிலிருந்து டாலர்களை எடுத்துப் போட்டு விளையாடினாள்.

நான் கோக் சாப்பிட்டபடி வேடிக்கை பார்க்க, கரோலின் ஆரம்பத்தில் கொஞ்சம் ஜெயித்தாள். ஜெயித்த ப்ளாஸ்டிக் டோக்கன்களை கவுண்டரில் கொட்டி பதினைந்தாயிரம் டாலர்களை அள்ளிக்

கொண்டு வந்து, மறுபடியும் விளையாட

தோல்வி மேல் தோல்வி. கையில் இருந்த கடைசி நூறு டாலரும்

காணாமல் போக, கரோலின்
என்னை ஒரு புழுவைப் பார்ப்பது போல் பார்த்தாள். நான் வியர்த்துப் போனேன்.

கேஸினோ அரங்கை விட்டு வெளியே வந்து டாக்ஸி ஒன்றைப் பிடிப்பதற்காக மெரிடியன் தெருவுக்குப் போனோம். கரோலின் எதுவும் பேசாமல் மௌனமாய் வெறுப்புடன் வந்தாள். நான் ஏதோ குற்றம் செய்து விட்டது போல் உணர்ந்தேன்.

அரைகுறை வெளிச்சத்தில் டாக்ஸி ஸ்டாண்டை நெருங்கிய போது, அந்த இளைஞன் எதிர்ப்பட்டான். இடது கையில் விஸ்கி டப்பா. வலது கையில் டாலர் நோட்டுக்கள்.

“ஏய் பெண்ணே...! என்னை சந்தோஷப்படுத்து… உன் விலை என்ன..! எவ்வள்வு டாலர். ஆயிரமா. ரெண்டாயிரமா?”

அவன் அவளுடைய இடுப்பை இறுக்கிப் பிடித்தான்… “வா... அந்த காருக்குப் போய்விடலாம்...”

“விடுடா... கொழுப்பெடுத்த பன்றியே!” கரோலின் தன் கையில் வைத்திருந்த பாசி மணிப் பையால் அந்த இளைஞனின் முகத்தை ஒரு வீறு வீற... அவன் தடுமாறி பின்னுக்குச் சாய்ந்தான். பிளாட்பார ஓரத்தில் சிமெண்டாலான அந்த அறிவிப்புப் பலகை நீட்டிக் கொண்டிருந்தது. அதன் கூர்மையான முனையில் பின்னந் தலைபட்டு சட்டென்று பொத்துக் கொண்டது. ரத்தம் ஃபவுண்டன் மாதிரி பீய்ச்சி அடிக்க, ஒரே விநாடியில் முகம் சிவப்பு நிறத்தைப் பூசிக் கொண்டது.

கரோலினும் நானும் அதிர்ச்சியடித்த முகங்களோடு பார்த்துக் கொண்டு இருக்கும் போதே... அந்த இளைஞன் இறந்து போனான்.

பத்தே விநாடிகளில் மரணம்.

போலீஸ் வேன் ஒன்று பாய்ந்து வந்தது. தலையில் சிவப்பு விளக்கு. சுழல நின்றது. ஆறடி உயரங்களில் திட காத்திரமான உடம்புகளோடு கருநீல நிற யூனிஃபார்மில் இரண்டு போலீஸ் சார்ஜெண்ட்கள் இறங்கினார்கள்.

அரையிருட்டு லாக்கப்புக்குள் நானும் கரோலினும் ஒரு மணி நேரமாய் தலைகளைத் தொங்கப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தோம். ஒருத்தர்க்கொருத்தர் பேசிக் கொள்ளவில்லை. இருந்தாலும் மானசீகமாய் பேசிக் கொண்டோம்.

“நான்தான் சொன்னேனே கரோலின்... இந்த அதிர்ஷ்டத்தில் எல்லாம் நம்பிக்கை இல்லைன்னு..! நீதான் கேட்கலை...! இப்பப் பார்த்தியா என்னாச்சுன்னு...?”

“நீ இவ்வளவு பெரிய துரதிருஷ்டசாலியாய் இருப்பேன்னு நான் கொஞ்சம் கூட நினைச்சுப் பார்க்கலை. கையில் இருந்த டாலர்களும் போய் இப்போ கொலை காரிங்கிற பட்டம் வேற...!”

“தப்பு என் பேர்ல இல்லை.!”

இரண்டு பேரும் மானசீகமாய் சண்டை போட்டுக் கொண்டிருக்கும் போதே லாக்கப் கதவு திறந்தது. சார் ஜெண்ட் ஒருவர் குரல் கொடுத்தார்.

“வெளியே வாங்க..!”

வந்தோம்.

திகைத்தோம்.

ஸ்டேஷன் முழுக்க பத்திரிகை நிருபர்களும் டி.வி. காமிராமேன்களும் நிரம்பியிருந்தார்கள். உயர் போலீஸ் அதிகாரி எங்கள் இருவருடைய கைகளையும் பற்றிக் குலுக்கி விட்டுச் சொன்னார்.

“மிஸ் கரோலின் அண்ட் மிஸ்டர் ரம்மேஷ்! உங்கள் இருவருக்கும் லாஸ் ஏஞ்சல்ஸ் போலீஸ் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளது. உங்களால் தாக்குண்டு இறந்து போனவனின் பெயர் செபாஸ்டி ரூதர். சர்வதேச குற்றவாளி. அமெரிக்காவின் ‘பேட்ரியாடிக்லா’ இவன் மீது பாய்ந்து கண்டதும் சுட உத்தரவு பிறப்பித்து வைத்துள்ளது. அதே போல் இவனை உயிருடனோ அல்லது பிணமாகவோ பிடித்துக் கொடுப்பவர்களுக்குப் பரிசாக ஒரு லட்சம் டாலர் வழங்கவும் அமெரிக்க அரசு சட்டம் இயற்றியுள்ளது. இறந்தவன் யார் என்று கண்டுபிடிப்பதில் சிறிது காலதாமதம் ஏற்படவே, உங்களை லாக்கப்பில் அடைக்க வேண்டியதாயிற்று. அதற்காக உங்களிடம் என் வருத்தத்தையும்... மன்னிப்பையும்...”

போலீஸ் அதிகாரி பேசிக் கொண்டே போக, கரோலின் என்னைச் சந்தோஷத்துடனும் காதலுடனும் பார்த்தாள்.

# 20. காற்று.

ரிகாவின் மெர்சிடஸ் கார் விஜய மங்கலம் கிராமத்தின் புழுதி பறக்கும்

தா தெருவில் வேகமாய் நுழைந்தது. பத்து வருடங்களுக்கு முன்பு கிராமம் எப்படியிருந்ததோ அதே மாதிரி இப்பவும் இருப்பதைக் கண்டு தாரிகா ஆச்சரியப்பட்டாள்.

சரிந்து போன ஒடுகளோடு அந்த எலிமெண்டரி, ஹைஸ்கூலும் அதனருகே இருந்த காந்தி பூங்காவும், பாரதியார் நூலகமும், பிரைமரி ஹெல்த் சென்டரும், கண்ணம்மா இட்லிக் கடையும் அன்றைக்குப் பார்த்தது போலவே இருந்தது. ரோட்டோர புளிய மரங்களும், வேப்ப மரங்களும் கிளைகளைப் பரப்பியபடி விஸ்வரூபம் எடுத்து இருந்தன. அன்றைக்கு லட்சுமி டூரிங் டாக்கீஸ் இருந்த இடத்தில் ஒரு தியேட்டர் புதுப்பொலி வோடு தெரிய... விஜய்யும் திரிஷாவும் பேனர்களில் சிரித்தார்கள்.

கார், கோயில் இருந்த தெருவுக்குள் நுழைந்தது. தாரிகா கூப்பிட்டாள்.

“டிரைவர்...”

“அம்மா.”

“காரை அப்படி ஓரமாய் நிறுத்திக்க... நான் போய் கோயில் தர்மகர்த்தாவை பார்த்துட்டு வந்துடறேன்.”

கார் வேகம் குறைந்து அந்த வாகை மரத்துக்கு கீழே போய் நின்றது.

தாரிகா வானிடி பேக்கை எடுத்து தோளில் மாட்டிக் கொண்டு காரிலிருந்து இறங்கி கோயிலை நோக்கிப் போனாள்.

‘அருள்மிகு சக்தி மாரியம்மன் திருக்கோயில்’ என்று எழுதப்பட்ட பெயர்ப் பலகையில் கோயிலின் வரலாறு பெயிண்டில் வரி வரியாய் எழுதப்பட்டிருந்தது. அதற்குப் பின்பக்கம் இருந்த தேர் நிலைத் திடலில் ஒரு தேர் சிதிலமாய் காட்சி கொடுத்தது. தேரில் இருந்த சட்டங்கள் உடைந்து போயிருக்க, மரப் பொம்மைகள் மொக்கையாய் தெரிந்தன. தேர்ச் சக்கரங்களில் ஒன்று உடைந்து இருந்தது.

தாரிகா அந்த மத்தியான வெய்யிலில் மெல்ல நடையிட்டு கோயிலை நெருங்கினாள். கோயிலின் வாசலில் பூ கட்டிக் கொண்டிருந்த ஒரு பெண்ணும், பொரி கடலைக் கடையில் உட்கார்ந்திருந்த ஒரு பெரியவரும், வெய்யிலில் கிட்டிப்புள் விளையாடிக் கொண்டிருந்த சில அரை டிரவுசர் சிறுவர்களும் வியப்பாய் பார்க்க, தாரிகா அவர்களைப் பொருட்படுத்தாமல் கோயிலுக்குள் நுழைந்து கோயிலின் இடது புறம் இருந்த அலுவலகத்துக்குள் நுழைந்தாள்.

கையில் கலர் கலராய் ரசீதுகளை வைத்துக் கொண்டு லெட்ஜர்

ஒன்றில் எதையோ எழுதிக் கொண்டிருந்த கோயிலின் தர்மகர்த்தா பொன்னம்பலமும், அன்றைய நாளிதழ் ஒன்றை அகலமாய்ப் பிரித்து வைத்துக் கொண்டு வரி வரியாய் மேய்ந்து கொண்டிருந்த நாட்டாமை சண்முகத் தேவரும், அறையில் சப்பணமிட்டு உட்கார்ந்து பிரசாதப் பொட்டலங்களைக் கட்டிக் கொண்டிருந்த கோயில் குருக்களும் ஒரே சமயத்தில் தலைகளை உயர்த்தினார்கள்.

தாரிகா கைகளைக் குவித்தாள்.

“அய்யா... வணக்கம்...” இந்த பத்து வருட காலத்தில் தர்மகர்த்தாவும், நாட்டாமையும் சற்று மெலிந்து தளர்ந்து போயிருக்க, கோயில் குருக்கள் மட்டும் அன்றைக்குப் பார்த்த மாதிரியே இருந்தார்.

“யாரு...?” தர்மகர்த்தா பொன்னம்பலம் மூக்கு கண்ணாடியைக் கீழே தாழ்த்தினார். நாட்டாமை நாளிதழை இரண்டாய் மடித்தார். கோயில் குருக்கள் எழுந்தார்.

தாரிகா தர்மகர்த்தாவுக்கு முன்பாய் வந்து நின்றாள்.

“அய்யா... என்னைத் தெரியலிங்களா..?”

அவர் நெற்றி சுருங்கியது. “தெரியலையே..! நீ யாரம்மா..?”

தாரிகா இப்போது நாட்டாமையிடம் திரும்பினாள்.

“அய்யா...! உங்களுக்கு...?”

நாட்டாமையின் பார்வை சுருங்கியது.

“தெரியலையேம்மா..!”

“குருக்களே...! உங்களுக்கு..?”

குருக்கள் தாரிகாவை உற்றுப் பார்த்துவிட்டு மெல்ல புன்னகைத்தார்... “நீ மேட்டுத் தெரு தங்கப்பனோட பொண்ணு செண்பகம்தானே..?”

“சரியா சொல்லிட்டீங்கய்யா…! ஆனா இப்ப என்னோட பேரு செண்பகம் கிடையாதுங்கய்யா... தாரிகா...”

தர்மகர்த்தா பொன்னம்பலம் நிமிர்ந்தார்.

“யாரு... சினிமாவுல நடிக்கிறதுக்காக ஊரை விட்டுப் போன அந்த செண்பகமா..?”

“ஆமாங்கய்யா..!”

மூன்று பேரும் ஒருத்தரை யொருத்தர் பார்த்துக் கொண்டார்கள். கண்களில் கோபம். நாட்டாமை கையிலிருந்த பேப்பரை மேஜையின் மேல் போட்டபடி கேட்டார்.

“என்னம்மா... விஷயம்...! திடீர்ன்னு ஊருக்கு வந்திருக்கே..?”

“அய்யா…! பேப்பர்ல நேற்று நீங்க கொடுத்து இருந்த விளம்பரத்தைப் பார்த்தேன். நம்ம கிராமத்து மாரியம்மன் கோயிலும், கோயிலுக்கு சொந்தமான தேரும் ரொம்பவும் சிதிலமடைந்து இருக்கிறதாகவும், அதை செப்பனிட்டு சரி பண்ண பொருள் உதவி தேவைப்படுவதாகவும் அந்த விளம்பரத்தில் குறிப்பிட்டு இருந்தீங்க... நான் இந்த ஊர்ல பொறந்து வளர்ந்தவள், தேரையும், கோயிலையும் ரொம்பவும் நேசிச்சவள். இந்தக் கோயில் மாரியாத்தாவுக்கு முன்னாடிநின்று எனக்கு ஒரு நல்ல வாழ்க்கையைக் கொடுன்னு எத்தனையோ தடவை வேண்டியிருக்கேன். ஏழ்மையிலும், வறுமையிலும் இருந்த என்னோட குடும்பத்தை மேன்மைக்கு கொண்டுட்டு வரத்தான் சினிமாவில் நடிக்கப் போனேன். ஆனா... நான் சினிமாவில் நடிக்கல. காரணம்... அங்கே நிலவிய ஒழுக்கக் கேடுகள் தான்... சினிமாவில் நடிக்க வாய்ப்பு கிடைக்கணும்ன்னா என்னையே கொடுக்க வேண்டிய நிலைமை வந்தது. அதனால சினிமாவை விட்டுட்டு மாடலிங் தொழிலில் புகுந்தேன். அஞ்சே வருஷத்துல கார், பங்களான்னு வசதியான வாழ்க்கை அமைந்தது. இப்ப நான் நல்ல நிலைமையில் இருக்கேன்... என்னை இந்த நிலைமைக்கு கொண்டு வந்த ஆத்தாவோட கோயிலையும், தேரையும் புதுப்பிக்கத்தான் நான் இப்போ வந்து இருக்கேன். இதுக்கு என்ன செலவாகுமோ அந்த செலவு முழுவதையும் நானே ஏத்துக்கறேன்..!” என்று சொன்ன தாரிகா தன் தோளில் தொங்கிய கைப்பையைப் பிரித்து ஒரு செக்கை எடுத்தாள்.

“அய்யா..! இது என் கையெழுத்து போட்ட செக். தொகை எழுதல... தொகையை நீங்களே நிர்ணயம் பண்ணி எழுதிக்கலாம். அது எவ்வளவு பெரிய தொகையாய் இருந்தாலும் பரவாயில்லை...” சொல்லிக் கொண்டே தாரிகா செக்கை நீட்ட.... தர்மகர்த்தாவும், நாட்டாமையும் அப்படியே நின்றார்கள்.

“வாங்கிக்கங்கய்யா...”

தர்மகர்த்தா அவளை ஒரு கோபப் பார்வையோடு ஏறிட்டார். “இந்தக் கோயிலையும் தேரையும் நேசிக்கிறதா சொல்றே. அந்த ரெண்டுக்கும் காட்டின நேசத்துல ஒரு கால் பங்கையாவது உன்னை பெத்த அம்மா,

அப்பா மேலே காட்டியிருந்தா... அவங்க ரெண்டு பேரும் அநியாயமாய் செத்து இருக்க மாட்டாங்க…”

“அய்யா... நீங்க நினைக்கிற மாதிரி அப்பா, அம்மாவுக்கு தெரியாம நான் ஊரை விட்டு ஓடிப் போகலை... சொல்லிட்டு தான் போனேன். அவங்க வேண்டாம்னு சொன்னாங்க. நான் தான் கேட்கலை. நான் நல்ல நிலைமைக்கு வந்ததும் அவங்களை என்னோடு வந்து இருக்க சொல்லி கூப்பிட்டேன். ஆனா அவங்க வர மாட்டேன்னு சொல்லிட்டாங்க.” -

“எப்படி வருவாங்க..? நீ பாவம் பண்ணி சம்பாதிச்ச பணமாச்சே...? சாப்பாட்டு கஷ்டத்துக்கு முன்னாடி, மானமுள்ள மனுஷன் எவனாவது வந்து உட்காருவானா?”

“அய்யா..! அப்படியெல்லாம் பேசாதீங்க. நான் சினிமாவில் நடிக்கப் போனேனே தவிர, கெட்டுப் போகலை. இந்த ஊரை விட்டு நான் எப்படி போனேனோ அதே சுத்தத்தோடுதான் திரும்பியிருக்கேன்.”

“என்னது. சுத்தமா வந்து இருக்கியா..? சாக்கடையில் காலை வெச்சுட்டு வந்துட்டு என்னமோ சந்தனத்துல கையை நனைச்ச மாதிரி பேசறியே.?” நாட்டாமை சீறினார்.

“அய்யா..!”

“இதோ பாரம்மா..! உன்னோட செக்கும் வேண்டாம். ஒரு புண்ணாக்கும் வேண்டாம். கோயிலும் தேரும் சிதிலமாய் இருக்குன்னு விளம்பரம் கொடுத்தது உண்மை தான். ஆனால் உன்னை மாதிரி இருக்கிறவங்களைப் பொருள் உதவி பண்ணும்படியாய் சொல்லலை. இந்த கிராம வழக்கப்படி ஊரை விட்டு ஓடின உனக்காக உன் னோட குடும்பத்தையே ஒரு தலைமுறைக்கு தள்ளி வெச்சிருந்தோம். அந்த அவமானத்தைத் தாங்கிக்க முடியாமல்தான் உன்னோட அப்பாவும் அம்மாவும் போய்ச் சேர்ந்துட்டாங்க. மிஞ்சி நிக்கற நீ ஆத்தா கோயிலையும், தேரையும் புதுப்பிச்சுத் தர்றதா சொல்லிட்டு செக்கைக் கொண்டு வந்து நீட்டாதே...? உன்னோட பணம் யார்க்கு வேணும்...? பணத்தை வாங்கிக்கிறதுக்கு நாங்க என்ன சொரணை கெட்டவங்களா..?

நாட்டாமை பேசப் பேச... உறைந்து போய் நின்றாள் தாரிகா. கண்ணில் நீர் கோர்த்துக் கொள்ள... அவரைப் பார்த்து கும்பிட்டாள்.

“அய்யா…! தயவு பண்ணி நான் சொல்றதைக் கொஞ்சம் கேளுங்க…”

“நீ சொல்லி நாங்க எதையும் கேட்க வேண்டிய அவசியம் இல்லை, பேசாம புறப்படு. நாணயமா நல்ல வழியில் சம்பாதிச்ச நாலு காசு எப்படியும் வந்து எங்களுக்கு சேரும். அதை வச்சு நாங்க தேரையும், கோயிலையும் புதுப்பிச்சு கும்பாபிஷேகம் பண்ணிக்கறோம். நீ மொதல்ல இடத்தை காலி பண்ணு…!”

விழிகளில் நீர் கணக்க... மூன்று பேரையும் மாறி மாறிப் பார்த்தாள் தாரிகா.

தர்மகர்த்தா இப்போது சீறினார். “சும்மா ஆளை ஆளைப் பார்த்துகிட்டு நிக்காதே...! வெளியே பாரு... எவ்வளவு கூட்டம்! சினிமா பித்து பிடிச்ச ஜனங்க உன்னைப் பார்க்கிறதுக்காக வெய்யில்ல நின்னுகிட்டு இருக்காங்க... அவங்களுக்கு போய்க்கொடு உன்னோட பணத்தை.”

“அய்யா...!”

“பேசாதே…! மேஜை மேல வெச்சிருக்கிற உன்னோட செக்கை எடுத்துட்டு போ... அதை தொட்டாக்கூட எங்களுக்கு பாவம்..!”

தாரிகா தன் கண்களில் “சுர்ரென்று சுரந்த கண்ணீரை அடக்கிக் கொண்டு மேஜை மேல் வைத்து இருந்த அந்த செக்கை எடுக்க முயன்றாள்.

அதே விநாடி-

ஜன்னல் வழியே ‘விசுக்’கென்று வீசிய காற்று அந்த செக் தாளை தள்ளிவிட, அது கீழே விழாமல் காற்றில் பறந்து, நொடிக்கும் குறைவான நேரத்தில் வாசற்படிக்கு போய், ஒரு விநாடி நின்று பிறகு வீசிய காற்றில் தத்தித் தத்திப் போய், பக்கத்தில் இருந்த கர்ப்ப கிரகத்தில் நுழைந்தது. அம்பாள் சிலையின் ஈரமான பீடத்தில் போய் ஒட்டிக் கொண்டது.

தர்மகர்த்தா, நாட்டாமை, கோயில் குருக்கள் மூன்று பேரும் அதிர்ச்சியோடு ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொள்ள... தாரிகா தர்மகர்த்தாவைப் பார்த்துக் கேட்டாள்.

“அந்த செக்கை எடுத்து தர்றீங்களா..?”

தர்மகர்த்தா குனிந்த தலையோடு கம்மிப் போன குரலில் சொன்னார். “இருக்கட்டும்... நீ போம்மா..! கும்பாபிஷேகத்துக்கு பத்திரிகை அனுப்பறோம். கண்டிப்பா வந்துடும்மா..!”

# 21. நானும் மேகாவும், ஒரு மெழுகுவர்த்தியும்!

நான் என் கம்பெனியின் ஜிஎம்மிடம் கல்யாண இன்விடேஷனை நீட்டிக் கொண்டே சொன்னேன்.

“ஸார்...! அவசியம் கல்யாணத்துக்கு வந்துடனும்...!”

“ஷ்யூர்... ஷ்யூர்…! கல்யாணம் என்னிக்கு...?”

“இருபத்தஞ்சாம் தேதி சார்…! அன்னிக்கு சண்டே ஸார்...”

“அப்புறமென்ன..! நோ... ப்ராப்ளம்... என் ஒய்ப்போட வந்துடறேன்…! பொண்ணு எந்த ஊரு...?”

“சென்னை சார்... பேர் நிறைமதி. ஒரு சாஃப்ட்வேர் கம்பெனியில் வேலை...!”

“பேர் நிறைமதியா..? நல்லாயிருக்கு..!”

“பொண்ணோட அப்பா வரதராஜன் தமிழ்ப் பேராசிரியர் சார்! பச்சையப்பன் காலேஜில் வேலை பார்த்துட்டு இப்பத்தான் ரிடையர் ஆனார்…! பொண்ணோட அண்ணன் பிபிசி தமிழோசை ஒலிபரப்புத் துறையில் வேலை பார்க்கிறார்…!”

“வெரி நைஸ்…! ஓ.கே. நந்தகுமார்…! அவசியம் கல்யாணத்துக்கு வந்துடறேன்…!” ஜி.எம். எழுந்து நின்று என் கையைப் பற்றி குலுக்கினார்.

நான் மீதம் இருந்த இன்விடேஷனை தோல்பையில் திணித்துக் கொண்டு அறையினின்றும் வெளிப்பட்டேன். ‘ஆபீசில் உள்ள எல்லோர்க்கும் லஞ்ச் பிரேக்கில் இன்விடேஷனைக் கொடுத்து முடிச்சிடணும்!’ மனசுக்குள் தீர்மானம் ஒன்றைப் போட்டுக் கொண்டே என்னுடைய மேஜையை நோக்கிப் போனேன். பாதி வழியிலேயே என் செல்போன் ரிங்டோனை வெளியிட்டது. எடுத்து அழைப்பது யார் என்று பார்த்தேன். டிஸ்ப்ளேயில் “Mega Calling” என்ற எழுத்துக்கள் பளிச்சிட்டன... செல்போனை எடுத்து காதுக்கு ஒற்றியபடி ஆவலாக வராந்தா பக்கம் போனேன்.

“மேகா...!”

“ஹாய் நந்து...! ஆபீசில் ரொம்பவும் வேலையா? நேத்து பூராவும்

போனையே காணோம்...!"

"அது... வந்து...மேகா!"

"என்ன பொய் சொல்லலாம்ன்னு யோசனை பண்றியா? அது மட்டும் நடக்காது மவனே…! நான் முந்நூறு கிலோ மீட்டருக்கு அப்பால் இருக்கிற திருநெல்வேலியில் இருந்தாலும் நீ பொய் சொல்றியா... உண்மை சொல்றியான்னு கண்டு பிடிச்சுடுவேன்..!"

"சரி... சரி... இது ஆபீஸ் நேரம்…! வழக்கமாய் ராத்திரி தானே போன் பண்ணுவே… இப்ப என்ன திடீர்னு பகலில் போன்..!"

"காரணம் இல்லாமே போன் பண்ணுவேனா என் நந்துக்கண்ணா..!"

"கொஞ்சல் போதும்…! ஆபீஸ் ஹவர்ஸ்ல யாரும் செல்போனை யூஸ் பண்ணக் கூடாதுன்னு ஒரு ரூலே இருக்கு…! மானேஜர் பார்த்துட்டா அடுத்த நிமிஷமே என்னோட டேபிளுக்கு 'மெமோ' வந்துடும். விஷயத்தை மளமளன்னு சொல்லிட்டு செல்போனோட வாயைச் சாத்து..!"

மறுமுனையில் மேகா சிரித்தாள். "மூணே மூணு வார்த்தையில் விஷயத்தை சொல்லட்டுமா?"

"சொல்லு...!"

"நான் இப்போ கர்ப்பம்…!"

என்னுடைய தலைக்குள் ஏவுகணையொன்று பாய்ந்தது.

"எ... எ... என்னது... கர்ப்பமா..?"

"ம்..."

"எ... எ... எப்படி?"

"எப்படியா..? கொஞ்சம் கஷ்டப்பட்டு ப்ளாஷ்பேக்குக்கு போ நந்து...! போன மாசம் ரெண்டாம் தேதி... அன்னிக்கு பவுர்ணமி. ரெண்டு பேரும் மகாபலிபுரம் போனோம். போனதும் பைக் ரிப்பேர். போதாத குறைக்கு அன்னிக்கு ஈ.சி.ஆர். ரோட்டில் ரெண்டு லாரி டிரைவர்களுக்கு ஏற்பட்ட மோதல் ஒரு கலவரமாய் மாறி, லாரிகள் பூராவும் ரோட்டிலேயே நிறுத்தப்பட்டு போக்குவரத்து பாதிப்பு. அதை சாக்கா வெச்சு ஒட்டலில் ரூம் எடுக்கலாம்னு நீ சொன்னே..! நான் வேண்டாம்னு சொல்லியும் நீ கேட்கலை... ஓட்டல்ல ரூம் எடுத்தோம்... ராத்திரி பதினோரு மணிக்கு சரியாய் பவர்கட்.

ஜெனரேட்டர் வேலை செய்யாததால் மெழுகுவர்த்தியைப் பொருத்திக்கிட்டு படுத்தோம்... ஒரு அரைமணி நேரத்துக்குதான் நீ யோக்யமானவனாய் இருந்தே... அதுக்கப்புறம்… நான் மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் ரொம்பவும் அழகாய் இருக்கிறதாய் சொல்லி... என்னை...”

“சரி... சரி... போதும்…!”

“என்ன போதும்...?”

“ரெண்டு பேரும் சேர்ந்து பண்ணின தப்புதானே?”

“தப்புன்னு உனக்குத் தெரிஞ்சா சரி…! இப்ப என்ன பண்ணலாம்னு சொல்லு...!”

“இது என்ன கேள்வி…! கலைச்சுட வேண்டியதுதான்!”

“என்னது... கலைக்கிறதா?”

“ம்..”

“இது என்ன சீட்டுக்கட்டா... கலைக்கறதுக்கு... நான் ஒத்துக்க மாட்டேன்... உடனடியாய்..உங்க வீட்ல சொல்லி...!”

நான் பதட்டமானேன். என் முகமும் பிடரியும் குபீரென்று வியர்த்தது. “மேகா! என்னோட நிலைமை தெரியாமே பேசாதே...!”

“என்ன உங்க நிலைமை...?”

“அதைப்பற்றியெல்லாம் உன்கிட்டே சொல்லிட்டு இருக்க முடியாது… மேகா... இது ஆபீஸ் ஹவர்ஸ்...!”

“அப்படீன்னா நான் ராத்திரிக்கு போன் பண்ணட்டுமா…?”

“நீ எப்ப பண்ணினாலும் சரி... வயித்தை சுத்தம் பண்ணிக்கிறதாய் இருந்தா எனக்கு போன் பண்ணு. இல்லேன்னா போன் பண்ணாதே...!” நான் சற்று கோபமாய் பேசிவிட்டு செல்போனை அணைத்தேன். ஸ்விட்ச், ஆஃப் செய்து பாக்கெட்டில் போட்டுக் கொண்டு அலுவலக மேஜைக்கு வந்தேன். மனசுக்குள் 110 டிகிரியின் வெப்பத்தோடு அனல்காற்று வீசி உடம்பை தகித்தது.

மறுநாள் காலை ஒன்பது மணி.

நான் கண்ணாடி முன் நின்று தலைவாரி ஆபீஸ் புறப்பட்டுப் போக

தயாராகி கொண்டிருந்தபோது என்னுடைய அப்பா உள்ளே வந்தார்.

“டேய்... நந்து…! கல்யாண இன்விடேஷன் இன்னும் கொஞ்சம் பிரின்ட் பண்ணிடலாமா..?”

“ஏம்பா..!”

“காணாது போலிருக்கே..?”

“இதுபோதும்பா...! உங்கப்ரண்ட்ஸ் சர்க்கிளைக் கொஞ்சம் குறைச்சுக்குங்க… கண்ணுல பட்டவங்களுக்கெல்லாம் குடுக்கறதுக்கு இது என்ன விளம்பர நோட்டீசா..?”

“சரிடா... உன்னோட பேக்கிலிருந்து ஒரு அம்பது இன்விடேஷனை எடுத்துக்கிட்டேன்… காந்திபுரம் க்ராஸ்கட் ரோட்ல முக்கியமான ப்ரண்ட்ஸ் இருக்காங்க. குடுத்துட்டு வந்துடறேன்...”

அப்பா ஒரு மஞ்சள் பையில் பத்திரிகைகளோடு இன்னொரு கையில் குடையோடும் கிளம்பிவிட, அம்மா சமையலறையிலிருந்து குரல் கொடுத்தாள்.

“நந்து டேபிள் மேல காபி வெச்சிருக்கேன். எடுத் துக்கோ!”

“சரிம்மா! நான் கண்ணாடியிலிருந்து விலகி காபிடம்ளரை எடுத்துக் கொண்டு, ஜன்னலுக்கு பக்கத்தில் வந்து நின்று, ஒரு வாய்க் காபியை விழுங்கி தொண்டைக்குள் இறங்கிய போது வீட்டு வாசலில் அந்த ஆட்டோ ‘படபட’ வென்ற சத்தத்துடன் வந்து நின்றது. என் இதயம் அதிர்ந்தது.

மேகா ஒரு சூட்கேசோடு இறங்கி உள்ளே வந்து கொண்டிருந்தாள். நான் கையில் இருந்த காபி டம்ளரை அப்படியே வைத்து விட்டு வேகவேகமாய் போய் மேகாவை எதிர் கொண்டேன்.

“மேகா... என்ன இது... வீட்டுக்கே வந்துட்டே?”

“வராமே என்ன பண்றது நந்து...! நீ செல்போனை ஆஃப் பண்ணி வெச்சுட்டே…! வீட்டுக்கு போன் பண்ணினா அவுட் ஆஃப் ஆர்டர். எனக்கு வேற வழி தோணலை. அதான் புறப்பட்டு வந்துட்டேன்..!”

நான் மேகாவை முறைத்துக் கொண்டு இருக்கும் போதே அம்மா சமையலறையிலிருந்து எட்டிப் பார்த்து விட்டு மலர்ந்தாள்.

“வாம்மா... மேகா! என்ன திடீர்னு புறப்பட்டு வந்து இருக்கே... ஒரு போன் பண்ணியிருக்கக் கூடாதா..?”

“அத்தே...! உங்க மகன் ஒண்ணும் உங்ககிட்ட சொல்லலையா...?”

“சொல்லலையே..!”

“எனக்கும் உங்க மகனுக்கும் ஒரு சின்ன சண்டை.”

“சண்டையா... என்ன சண்டை...?”

“அது... வந்து... அத்தே..!” என்று தயங்கியவள் என் அம்மாவின் கால்களில் போய் விழுந்தாள். “என்னை ஆசீர்வாதம் பண்ணுங்க அத்தை...!”

“ஆசீர்வாதமா... எதுக்கு..?”

“உங்களுக்கு ஒரு பேரனையோ ஒரு பேத்தியையோ பெத்து கொடுக்கப் போறேனே... அதுக்குத்தான்…”

என்னுடைய அம்மா வாய் கொள்ளாமல் சிரித்தாள். “இது எவ்வளவு பெரிய சந்தோஷமான சமாசாரம்...? இதுக்கு போய் எதுக்காக நந்து உன்கிட்ட சண்டை போட்டான்...?”

“கல்யாணமாகி ஒரு வருஷம் வரைக்கும் குழந்தை பெத்துக்காம ஜாலியா இருக்கணுமாம்... உங்க மகனுக்கு. நான் உண்டாகியிருக்கிறதாய் போன் பண்ணி சொன்னதும் உங்க மகனுக்கு வந்த கோபத்தை பார்க்கணுமே…! குழந்தை இப்ப வேண்டாமாம்… கலைச்சுடுன்னு சொல்றார்.”

அம்மா பாய்ந்து வந்து என் தோளைப் பற்றினாள்.

“ஏண்டா... அப்படி... சொன்னே..?”

“அய்யோ அம்மா... எனக்கும் மோகாவுக்கும் கல்யாணமாகி இன்னும் ஆறுமாசம் கூட முடியல... அதுக்குள்ளே குழந்தைக்கு என்ன அவசரம்னு கேட்டேன்... அவ்வளவு தான்..!”

“இதோ பார்ரா நந்து…! குழந்தைங்கிறது அந்தக் கடவுளாய் பார்த்து தர்றது…! நாம நினைக்கிற போது எடுத்துக்க முடியாது. நீ ஒரு நாள் ஆபீசுக்கு லிவு போட்டுட்டு மேகாவை ஒரு நல்ல லேடி டாக்டர்ட்ட கூட்டிட்டு போய் காட்டிட்டு வந்துடு...!”

“அம்மா! நான் என்ன சொல்ல வர்றேன்னா..?”

“நீ ஒண்ணையும் சொல்ல வேண்டாம்... உன் தம்பியோட கல்யாண வேலைகள் தலைக்கு மேல உட்கார்ந்துட்டு பயங்காட்டிட்டு இருக்கு.

நீயும் மேகாவும் இருந்து கவனிங்க..!”

மேகா உற்சாகமாய் கை கொடுக்கிறாள்.

“அத்தே... நான் இந்த கல்யாணத்தை காரணம் காட்டி ரெண்டு வாரம் லீவு போட்டு இருக்கேன்... அநேகமாய் எனக்கு அடுத்த மாசம் இதே ஊருக்கு டிரான்ஸ்பர் கிடைக் கும்னு நினைக்கறேன்.”

“ஆஹா..! உண்மையிலேயே இதுதான் ஸ்வீட் நியூஸ்…” சொன்ன நான் பக்கத்தில் அம்மா இருப்பதையும் பொருட்படுத்தாமல் மேகாவை தூக்கி ஒரு சுற்றி சுற்றினேன்.

“டேய் விட்றா அவளை... புள்ளைதாச்சிப் பொண்ணு... ஏதாவது ஆயிடப் போகுது...!”

நான் மேகாவை இறக்கிவிட்டுட்டு ஆபீசுக்கு லிவு சொல்வதற்காக செல்போனை தேடிக் கொண்டு உள்ளறைக்கு போனேன்.

அம்மா மேகாவிடம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

“எல்லாம் சரிம்மா..! நீ நந்துவை இன்னமும் வா, போ போட்டு பேசறதும்... சில சமயங்களில் ‘டேய்... மவனே!’ன்னு சொல்றதும் எப்படியோ இருக்கு... அதைக் கொஞ்சம் மாத்திக்கக் கூடாதா?”

“அய்யோ அத்தே…! நானும் உங்க புள்ளையும் காதலிக்கும் போது எப்படி பேசிக்கிட்டமோ அப்படியேதான் பேசணும்னு உங்க புள்ளையோட கட்டளை... நான் என்னிக்காவது தவறிப் போய் ‘வாங்க... போங்க’ன்னு பேசிட்டா அன்னிக்குப் பூராவும் என்கிட்டபேச மாட்டார்…!”

“அவனுக்கு அவ்வளவு அழுத்தமா..?”

“அவனுக்கு அழுத்தம் மட்டும் இல்ல அத்தே…! கொஞ்சம் கொழுப்பும் இ..ரு...க்...கு! சாரி... அத்தே!”

# 22. நட்பே... நட்பே...!

மும்பை தாதர் ஸ்டேஷனில் நானும் என்னுடைய மனைவி சுஜாதாவும் ரயிலை விட்டுக் கீழே இறங்கிய பின், எந்தப்பக்கம் போவது என்று ஜனத்திரளில் மூச்சுத்திணறிக் கொண்டிருந்த போது என் முதுகில் மிருதுவாய் ஒரு கை விழுந்தது. திரும்பினேன்.

என்னுடைய நண்பன் வைகுண்டராமன் வாய் கொள்ளாத சிரிப்போடு

தெரிந்தான். “வாடா தடியா..!” என்று என்னுடைய தலையில் தட்டிவிட்டு என் மனைவியிடம் திரும்பி “வாங்க சிஸ்டர். வெல்கம் டூ மும்பை” என்றான். ஐந்து வருடங்களுக்கு முன்பு சென்னையில் பார்த்தது இருந்தான்.

நான் சொன்னேன். “டேய் வைகுந்த்...! ரயில் ரெண்டு மணி நேரம் லேட். நீ ரயில்வே ஸ்டேஷனுக்கு வருவியோ மாட்டியோன்னு பயந்துட்டேன்... என்ன ஒரு டென்ஷன் தெரியுமா?”

“அது எப்படிடா வராமே போவேன்...! நீயும் உன்னோட மனைவியும் மும்பைக்கு புதுசு. நான் வந்து உங்களை ரிஸிவ் பண்ணலைன்னா நீங்க ரெண்டு பேரும்திக்கு திசை தெரியாமே தவிச்சிப் போயிடுவீங்கன்னு எனக்குத் தெரியாதா என்ன...? என்ன. லக்கேஜ் இவ்வளவுதானா..?”

“ஆமா..”

“கொண்டா... நான் ஒரு சூட்கேஸை எடுத்துக்கறேன்.”

“டேய்...அதெல்லாம் வேண்டாம்...”

“அட... விடுடா...” வைகுண்டராமன் நாங்கள் கொண்டு போயிருந்த லக்கேஜில் பெரியதாய் இருந்த சூட்கேஸை எடுத்துக் கொண்டு நடந்தான். “என் பின்னாடியே வாங்க... கூட்டத்தைப் பார்த்தியா? மும்பை எப்பவும் இப்படித்தான் ஏதோ தேர்த்திருவிழா மாதிரி ஊரே ‘ஜேஜே’ன்னு இருக்கும். கொஞ்சம் அசந்து நின்னாப் போதும். பேண்ட் சர்ட்டை உருவிட்டு போயிடு வாங்க.”

“இப்படியும் ஒரு கூட்டமா..? என் மனைவி சுஜாதா மிரண்டபடியே வந்தாள். நான் கேட்டேன்.

“டேய்…! வைகுந்த்... குடியிருக்கிற வாலஸ் ரோட்டுக்கு போறதுக்குள்ளே மீட்டர் பழுத்துடும். அடுத்த ப்ளாட் ஃபார்ம்ல வி.டி. போற எலக்ட்ரிக் ட்ரெயின்ஸ் வரும். அதுல ஏறிக்கலாம். வி.டி. போனதும் அங்கிருந்து ஒரு பத்து நிமிஷ நடை, நம்ம வீடு வந்துடும்…”

“லக்கேஜை எடுத்துட்டு எதுக்கு நடை...? டாக்ஸியிலேயே போயிடலாம்டா பணத்தைப் பத்தி நீ ஏண்டா கவலைப்படறே... எல்லாத்தையும் நான் பார்த்துக்கறேன்.”

“மடையா! செலவு பண்றது எனக்குப் பிடிக்காது. டாக்ஸியில் போறது தண்டம்.”

“ஊரிலிருந்து புறப்படும் போதே உங்க ப்ரெண்ட் கொஞ்சம் கஞ்சம்ன்னு சொன்னீங்க. இங்க வந்து பார்த்தா வடிகட்டின கஞ்சனாய் இருப்பார் போலிருக்கே!” - மனைவி.

“பேசாதே... அவன் காதுல விழுந்துடும்.”

“என்னங்க..! எனக்கு தொண்டையெல்லாம் வறண்டுட்டுப் போகுது. பக்கத்துல ஒரு கூல்ட்ரிங் ஸ்டால் இருக்கு, பேண்டாவோ… பெப்சியோ... வாங்குங்க...”

சுஜாதா சொன்னது வைகுண்டராமன் காதில் விழுந்திருக்க வேண்டும். வேகமாய்த் திரும்பினான்.

“வேண்டாங்க சிஸ்டர்! ரயில்வே ஸ்டேஷனில் விக்கிற எந்த ஒரு கூல்ட்ரிங்க்ஸூமே ஒரிஜினல் கிடையாது. எல்லாமே லோக்கல். ஹைஜீனிக் ஜீரோ பர்ஸண்ட்”

சுஜாதா வெறுத்துப் போய் என்னை முறைத்தாள். நான் பெருமூச்சு விட்டேன். வைகுண்டராமன் மும்பைக்கு வந்தபின்னாவது மாறியிருப்பான் என்று நினைத்தேன். அவனும் அப்படியே இருக்கிறான்; அவனுடைய கஞ்சத் தனமும் அப்படியே இருக்கிறது. இவனுக்கு லெட்டர் போட்டு மும்பையைச் சுற்றிப் பார்க்க வருகிறோம் என்று சொன்னது மகா தப்பு. கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்”.

வைகுண்டராமனின் மனைவி கோமளம் எங்களை ஆர்ப்பாட்டமாய் வரவேற்றாள்.

“வாங்கோ…! வாங்கோ...! நம்ம ஊர் ஜனங்களைப் பார்க்கும் போது கிடைக்கிற சந்தோஷமே தனிதான்…! மும்பையில் சுத்திப் பார்க்க நிறை இடம் இருக்கு... நீங்க நம்ம வீட்ல எத்தனை நாள் வேணும்னாலும் தங்கி தாராளமாய் பார்த்துட்டு போலாம்... எந்த சங்கோஜமும் வேண்டாம்... இது உங்க வீடு மாதிரி...”

வைகுண்டராமன் மனைவியிடம் திரும்பினான்.

“கோமளம்...! மொதல்ல அவங்களுக்கு கூல்ட்ரிங்ஸ் கொடு... வெய்யிலுக்கு துவண்டு போயிட்டாங்க.”

“ஃப்ரிட்ஜ் ரெண்டு நாளா மக்கர்ன்னு பாட்டில் ட்ரிங்க் நாம வாங்கவேயில்லையே..?”

“சரி... மோராவது கொடு...”

ஒரு பேங்கில் மானேஜராய் வேலை பார்க்கும் வைகுண்டராமன் எவ்வளவோ வசதியோடு இருக்கலாம். வாழ்க்கையில் எதையுமே அனுபவித்துவிடக் கூடாது என்ற வைராக்கியத்தோடு இருப்பவனைப் போல் கடந்த பத்து வருஷ காலமாய் நாட்களை ஒட்டிக் கொண்டு இருக்கிறான்.

"டேய்... வைகுந்த்…! நீ மாறவேயில்லடா!"

"எதில்..?"

கஞ்சத்தனம் என்று சொல்லாமல் "சிக்கனத்தில்" என்றேன் நாசூக்காய்.

"சிக்கனமாய் இருக்கிறது தப்பா?

"இவ்வளவு சிக்கனமாய் இருக்கிறது தப்பு. பாங்க்ல உனக்கு மானேஜர் உத்தியோகம். ஒரு மானேஜர் தன் னோட வீட்டை பளிச்ன்னு வெச்சுக்க வேண்டாமா..?"

"ஏண்டார் இந்த வீட்டுக்கு என்ன குறைச்சல்…?"

வைகுண்டராமனின் மனைவி கோமளம் இரண்டு கண்ணாடி டம்ளர்களில் மோரோடு வந்தாள். அது மோர் மாதிரியே இல்லை. நீரில் தவறிப் போய் ஒரு ஸ்பூன் மோர் கலந்து விட்ட தினுசில் இருந்தது.

எங்களுக்காக ஒதுக்கப்பட்ட ஒரு புறாக்கூண்டு அறைக்குள் நுழைந்ததும் கதவைத் தாழிட்டுக் கொண்ட சுஜாதா என்னிடம் படபடவென பொறிந்தாள்.

"என்னங்க..! இப்படியுமா ஒரு மனுஷன் இருப்பார். அந்த மனுஷன்தான் அப்படீன்னா அவர்க்கு வாய்ச்ச பெண்டாட்டியும் அப்படியே இருக்காளே..?"

"வைகுண்டராமன் மாறியிருப்பான்னு நினைச்சேன்…"

"என்னங்க... இந்த வீட்ல நாம தங்க வேண்டாம். ஏதாவது ஒரு ஹோட்டல்ல ரூம் எடுத்துக்குவோம்..."

"சுஜா…! வந்தது வந்துட்டோம்... கொஞ்சம் பொறு மையா இரு."

"இன்னிக்கு ஒரு நாள் இருந்து பார்ப்போம். அப்புறம் மெதுவா சொல்லிட்டு கிளம்பிடுவோம்."

நான் சுஜாதாவைச் சமாதானப்படுத்தினேன்.

ஆனால் அன்று இரவே பிரச்னை ஆரம்பித்தது. எங்கள் அறையில் இருந்த ஃபேன் ஓடவில்லை. பாத்ரூம் குழாயில் சொட்டுச் சொட்டாய் தண்ணீர் வந்தது. வைகுண்ட ராமனைக் கூப்பிட்டுச் சொன்னேன். தள்ளுபடியில் வாங்கிய கோ-ஆப்டெக்ஸ் ஒற்றை வேஷ்டியை இறுக்கிக் கட்டிக் கொண்டே வெறும் உடம்போடும், கையில் ஸ்பேனரோடும் வந்து ஒரு மணி நேரம் ரிப்பேர் பார்த்து, ஃபேனையும், பைப் குழாயையும் சரி செய்து கொடுத்தான்.

சுஜாதா, வைகுண்டராமனுக்குத் தெரியாமல் தலையில் அடித்துக் கொண்டே என்னை ஒரு துர்வாசப் பார்வை பார்த்தாள்.

மறுநாள் காலை சீக்கிரமே எழுந்து குளித்து டிபன் சாப்பிட்டு விட்டு மும்பையைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினோம்.

வைகுண்டராமன் பத்தாவது தடவையாய் “ஸாரிடா! எனக்கு பேங்க்ல கடந்த ஒரு வாரமா ஆடிட்டிங், லிவு எடுக்க முடியாது. நான் கூட வரலையேன்னு தப்பா நினைச்சுக்காதே.

“டோண்ட் வொர்ரிடா வைகுந்த்…! நான் பார்த்துக்கறேன்.”

வைகுண்டராமனிடமும், அவனுடைய மனைவியிடமும் சொல்லிக் கொண்டு வெளியே வந்தோம். தெரு முனையில் டாக்ஸி ஸ்டாண்ட். ஒரு டாக்ஸியைப் பிடித்து ஏறி உட்கார்ந்தோம்.

“என்னங்க..இப்படியும் ஒரு ப்ரெண்டா..? லிவு போட்டுட்டு நம்ம கூட வந்தா செலவு பண்ணனுமேன்னு எப்படி நழுவிட்டார் பார்த்தீங்களா?”

“சரி... விடு…! அவனுக்குத் தெரிஞ்ச மரியாதை அவ்வளவுதான்..!”

“இதோ பாருங்க... இனிமே என்னால பொறுக்க முடியாது. இன்னிக்குப் பூராவும் நாம சிட்டியைச் சுத்திப் பார்த்துட்டு ராத்திரி பத்து மணிக்கு உங்க ப்ரெண்ட் வீட்டுக்குப் போறோம். நாளையிலிருந்து ஹோட்டலில் நாம தங்கிக்கப் போறதா அவர்கிட்டே சொல்லப் போறோம்.”

“நானும் அந்த முடிவுக்குத்தான் வந்திருக்கேன்...”

“இதை நாம முதலிலேயே பண்ணியிருக்கலாம்.”

“வைகுண்டராமன் மாறியிருப்பான்னு நினைச்சது என்னோட

தப்புதான்..!”

‘மும்பையைச் சுற்றிப் பார்த்து விட்டு ராத்திரி வீடு திரும்பும் போது மணி பத்தரை. வைகுண்டராமனும், அவனுடைய மனைவியும் எங்களை எதிர்பார்த்து வாசலில் காத்திருந்தார்கள்.

“எல்லாத்தையும் பார்த்தீங்களா?”

“ம்…”

“மத்தியானம் எங்கே சாப்பிட்டீங்க?”

“மாடர்ன் ஹிந்து ஹோட்டலில்.”

“எலிபெண்டா கேவ்ஸ் போனிங்களா?”

“இல்லை… அது… நாளைக்கு..!”

“ஜூஹூ பீச்…?”

“பார்த்தோம்.”

“மஹாலட்சுமி கோயில்..?”

“போனோம்.”

“சரி… வாங்க… சாப்பிடலாம்…”

“வேண்டாம்… வழியிலேயே ஒரு உடுப்பி ஹோட்டல் இருந்தது. லைட்டா டிபன் சாப்பிட்டோம்… இப்ப படுத்தா போதும்னு இருக்கு.”

“சரி… சரி… போய் ரெஸ்ட் எடுங்க. நாளைக்குக் காலையில பேசிக்கலாம்.”

வைகுண்டராமனும், அவனுடைய மனைவியும் சொல்லிவிட்டு நகர, நாங்கள் எங்களுக்காக ஒதுக்கப்பட் டிருந்த அறைக்குள் நுழைந்தோம்.

“என்னங்க..” என்றாள் என் மனைவி.

“ம்…”

“இப்பவே சொல்லிடுங்க…”

“எப்படிச் சொல்றதுன்னு தயக்கமாயிருக்கு.”

“இதிலேன்ன தயக்கம்...? நானும் உங்க கூட வர்றேன்... வாங்க. உங்களால சொல்ல முடியலேன்னா நான் சொல்றேன்...”

“சரி... வா...”

இருவரும் அறையினின்றும் வெளிப்பட்டு, வைகுண்ட ராமனின் அறையை நோக்கிப் போனோம். அறையை நெருங்கிய விநாடி பேச்சுக்குரல் கேட்டது. இருவருக்கும் ஏதோ வாக்குவாதம்!

கோமளம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

“இதோ பாருங்க... நான் நேத்து ராத்திரியும் சரியாத் தூங்கலை. இன்னிக்கு சீக்கிரமாப் படுத்துக்கணும்... டயரியை மூடி வையுங்க...”

“சரி... சரி... ஒரே ஒரு நிமிஷம்... லிஸ்ட் ரெடி. படிச்சுடறேன். கேட்டுக்கோ. உன் பெரியப்பாவோட மகன் வினோத்துக்கு ஹார்ட்சர்ஜரிக்கு ரெண்டரை லட்ச ரூபாய். என்னோட சித்தி பையன் கணேஷலக்கு காலேஜ் ஃபீஸ் இருபதாயிரம் ரூபாய். அப்புறம் ராமசாமி வாத்தியாருக்கு கண்புரை ஆபரேஷனுக்கு பதினஞ்சாயிரம் ரூபாய். வடவள்ளி பஞ்சமுக ஆஞ்சநேயர் கோயிலில் அன்னதானத்துக்கு பத்தாயிரம் ரூபாய், நேயம் அநாதை இல்லத்துக்கு வழக்கம் போல் அஞ்சாயிரம் ரூபாய். இந்த வருஷம் இவ்வளவுதான் முடியும். இப்பவே செக் எழுதிடறேன். நாளைக்கு பேங்குக்கு போகும் போது போஸ்ட் பண்ணிடலாம்.”

“நேத்திக்கே போஸ்ட் பண்ண வேண்டியது... ஒரு நாள் லேட் எழுதுங்க... எழுதுங்க...”

# 23. இளம்பிறையின் இரவுகள்

அன்று முழுமதி நாள்.

இரவின் முதல் ஜாமம் முடிந்து இரண்டாவது ஜாமம் தொடங்கியிருந்தது. மேல் மாடத்தை ஒட்டிய உப்பரி கையில் உட்கார்ந்திருந்த மகாராணி தேவசேனாவை, மேற்கு வானத்தில் வைரத்துண்டுகளாய் ஒளிர்ந்த சப்தரிஷி மண்டல விண்மீன் கூட்டிமோ, அருகாமையில் இருந்த அந்தப்புர நந்தவனத்திலிருந்து வெளிப்பட்ட நறுமண பூங்காற்றோ மகிழ்ச்சியில் ஆழ்த்த முடியாமல் தோற்றுப் போயிற்று.

காரணம், மகாராணியின் அடி வயிற்றில் ஒரு இனம் புரியாத குழப்பம். முகம் ஒரு சிலையைப் போல் இறுகி யிருந்தது.

“வணங்குகிறேன் மகாராணி!”

தனக்குப் பின்னால் எழுந்த குரல் கேட்டு தேவசேனா திரும்பிப் பார்த்தாள். தன்னுடைய அருமை மகள் இளவரசி இளம்பிறையின் பணிப்பெண் பவளமணி கைகளைக் கூப்பியபடி நின்றிருந்தாள்.

“நீ என்னிடம் தனிமையில் பேச விரும்புவதாக மாலையில் சொன்னாய். என்ன விஷயம்?”

“சொல்கிறேன் மகாராணி!” என்றவள், பவ்யத்தோடு குனிந்து மெலிதான குரலில் சொன்னாள்.

“நம் இளவரசியார் நடவடிக்கைகள் சிறிது நாட்களாய்ச் சரியில்லை மகாராணி...”

தேவசேனாவின் முகம் நொடியில் மாறியது.

“சரியில்லையென்றால்..?”

“அதைச் சொல்வதற்கே என் நாக்கு கூசுகின்றது மகாராணி…! ஒவ்வொரு நாளும் மூன்றாவது ஜாமம் கழிந்ததும் இளவரசியாரின் அறையில் ஒரு ஆண் குரல் கேட்கிறது. அது யார் என்று தெரிந்து கொள்வதற்காகக் கதவின் சாவி துவாரத்தில் கண் வைத்துப் பார்த்தேன். உள்ளே இளவரசியாரின் படுக்கையறை கட்டிலில் ஒரு வாலிபன்...”

தேவசேனா பதறிப் போனவளாய் எழுந்தாள். அவ ளுடைய கூர்விழிகளில் கோபம் கொப்பளித்தது.

“யார் அந்த வாலிபன்?”

“தெரியவில்லை மகாராணி... ஆனால், அந்த வாலி பன் அரச குலத்தில் பிறந்தவன் அல்ல என்பது மட்டும் உறுதி.”

“இன்றைக்கும் அந்த வாலிபன் வருவானா..?”

“உறுதியாய் வருவான் தேவி..!”

“சரி... மூன்றாவது ஜாமம் முடிந்ததும் நான் இளவரசியாரின் அந்தப்புரத்துக்கு வருகிறேன். நீ உறங்காமல் எனக்காகக் காத்திரு…!”

“உத்தரவு மகாராணி...” பவளமணி குனிந்து வணங்கிக் கொண்டிருந்த அந்த வேளை பின்பக்கம் அந்தக் குரல் கேட்டது.

“நானும் உன்னோடு வருவதில், உனக்கு எந்த ஒரு தடங்கலும் கிடையாதே தேவி..?”

தேவசேனா பதறிப் போனவளாய், திரும்பிப் பார்த்தாள். மன்னர் பெரும்வழுதி தன் தூண் போன்ற இடுப்பில் இரண்டு கைகளையும் வைத்தபடி நின்றிருந்தார்.

தேவசேனா அச்சத்தில் உறைந்து போய் நிற்க, மன்னர் பக்கத்தில் வந்து அவளுடைய செழுமையான தோளின் மேல் கையை வைத்தார்.

“பயம் கொள்ள வேண்டாம் தேவி…! பணிப்பெண் பவளமணி சொன்னதையெல்லாம் நானும் அப்படி ஒரமாய் நின்று செவிமடுத்துக் கொண்டுதான் இருந்தேன். நம் மகள் இளம்பிறையின் நடவடிக்கைகளில் எனக்கும் சிறிது ஐயப்பாடு இருந்தது. அவளுடைய சயன அறைக்கு இரண்டு முறை பகல் வேளைகளில் சென்று பார்த்தபோது அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். பகலில் ஒரு பெண் உறங்குகிறாள் என்றால், இரவில் சரியாக உறக்கம் இல்லையென்றுதானே பொருள்..? அந்த வாலிபன் யார் என்பதை, இன்றைய இரவின் மூன்றாவது ஜாமத்தில் கண்டுபிடித்து விடலாம்...’

பவளமணி மன்னனைத் தாள் பணிந்தாள்.

“அரசே…! இப்படிப்பட்ட ஒரு செய்தியை உங்களிடம் சொல்ல நேர்ந்தமைக்காக என்னை மன்னிக்க வேண்டுகிறேன்…”

“உனக்கொரு உத்தரவு...”

“சொல்லுங்கள் அரசே!”

“நீ உண்மையான ராஜவிசுவாசியாக இருக்கும் பட்சத்தில் இதைப் பற்றி வெளியே யாரிடமும் பேசக் கூடாது.”

“என் உயிரே போனாலும் வாயைத் திறக்கமாட்டேன் அரசே!”

இரவின் மூன்றாவது ஜாமம் முடிந்து கொண்டிருக்க, இளவரசியின் சயன அறைக்கு வெளியே இருட்டில் நிழல் உருவங்களாய் மன்னர் பெரும்வழுதியும், மகாராணி தேவசேனாவும், பணிப்பெண் பவளமணியும் லயம் மாறித் துடிக்கும் இருதயத் துடிப்புக்களோடு நின்றிருந்தார்கள்.

நான்காவது ஜாமம் தொடங்கியது. அடுத்த சில கணங்களிலேயே இளவரசி இளம்பிறையின் அறையிலிருந்து சிரிப்பொலியும், ஒரு ஆணின் குரலும் கேட்டது.

மன்னர் பெரும்வழுதி மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு அறைக் கதவருகே போய் குனிந்து சாவி துவா ரத்தில் கண்ணை வைத்துப் பார்த்தார்.

சயன அறையில் மங்கலான வெளிச்சம் பரவியிருக்க, அன்னப் பறவை மஞ்சத்தின் மேல் இளவரசி இளம்பிறை தெரிந்தாள். பக்கத்திலேயே அவளுடைய தோள்களைத் தொட்டபடி அந்த வாலிபன்.

ஒரு சில கணங்கள் வியப்பில் உறைந்து போய் விக்கித்துப் போன மன்னர், அதிலிருந்து மீண்டு கதவைப் படபடவென்று தட்ட ஆரம்பித்தார். குரல் கொடுத்தார். குரலில் கோபம் கொப்பளித்தது.

மன்னரைப் பார்த்ததும் மருண்டாள் இளம்பிறை. “தந்தையே! இந்த அகால நேரத்தில் எதற்காக உங்கள் வருகை...? யார்க்கேனும் உடல் நலம் பாதித்துவிட்டதா..?

“எங்கே அவன்…?”

இளம்பிறை நெற்றியைச் சுருக்கினாள்.

“யாரைக் கேட்கிறீர்கள்?”

“உன் சயன மஞ்சத்தில் இடம் பிடித்து இருந்தானே ஒருவன்... அவனைத்தான் கேட்கிறேன். அவனை எங்கே ஒளித்து வைத்து இருக்கிறாய்?”

இளம்பிறை தன் இடது கை ஆட்காட்டி விரலால் நெஞ்சைக் காட்டியபடி துணிச்சலோடு சொன்னாள். “அவரை இங்கே ஒளித்து வைத்து இருக்கிறேன்...”

தேவசேனா மகளுக்கு முன்பாய் வந்து சினம் பொங்க நின்றாள். “இளம்பிறை பெற்ற தந்தையிடம் இப்படியா பேசுவது...? உன் சயன அறையில் இரவில் ஒரு வாலிபன்! எங்களுக்கு உடம்பு கூசுகிறது!”

இளம்பிறை மெல்ல சிரித்தாள்.

“உங்களுக்கு உடம்பு கூசவேண்டிய அவசியமே இல்லை. அவர் என்னைத் திருமணம் செய்யப் போகிறவர். அவர் பெயர் பராந்தகன். ஒரு சிற்றரசில் படைத் தளபதியாக உள்ளார். அவ ைரப் பற்றி நானே உங்களிடம் சொல்லலாம் என்று நினைத்தேன். அதற்கு முன்பாக உங்களுக்கே உண்மை தெரிய வந்ததில் எனக்கு மகிழ்ச்சியே.”

மன்னர் வெறியோடு கத்தினார்.

“உன்னிடம் எனக்கென்ன பேச்சு. வெளியே வரச்சொல்.”

இளம்பிறை ஒரு மந்தகாசப் புன்னகையோடு அறை யின் மேல் பக்கம் இருந்த சாளரத்தைக் காட்டினாள்.

“நீங்கள் கதவைத் தட்டிய விநாடியே அவர் சாளரத்தின் வழியே தப்பித்துப் போய் விட்டார். இந்நேரம் அவருடைய புரவி ஒரு காத தூரத்தைக் கடந்து போயிருக்கும்...!”

மன்னர் பெரும்வழுதி சிவந்த விழிகளோடு சினம் மேலிட மகளை ஏறிட்டார்.

“நீ அந்தப் பராந்தகனைத்தான் திருமணம் செய்து கொள்ளப் போகிறாய்?”

“ஆமாம்...”

“நாங்கள் ஒப்புக்கொள்ளாவிட்டால்?

“நீங்கள் ஒப்புக் கொள்ளும் வரை நான் காத்து இருப்பேன். பராந்தகனின் உயிர்க்கு உங்களால் ஏதாவது ஆபத்து ஏற்பட்டால், இந்த இளம்பிறையின் உடம்பிலும் உயிர் இருக்காது... திருமணம் என்றால் அது பராந்த கனோடுதான்…!”

மன்னர் தன் வலதுகையின் ஆட்காட்டி விரலை உயர்த்தினார். “என்னுடைய முடிவையும் கேட்டுக்கொள். உனக்கும் உன் மாமன் மகன் நன்மாறனுக்கும்தான் திருமணம் நடக்கும். இதில் எந்த மாற்றமும் இல்லை... இனி அந்தப்புரத்துக்குள் மட்டும் அல்ல... இந்த நாட்டின் எல்லைக்குள்ளும் நுழைய முடியாது...” உரத்த குரலில் சொல்லி விட்டு மன்னர் வெளியேற தேவசேனாவும் அதே கோபத்தோடு பின் தொடர்ந்தாள்.

அமாவாசை ஒழிந்து வளர்பிறைக்காலம் துவங்கி யிருக்க, அன்று பஞ்சமி நாள்.

இளம்பிறை அதிகாலையே எழுந்து நீராடி, மாற்றுடை அணிந்து, ஒரு குவளைப் பால் பருகிவிட்டு, மேல் மாடத்துக்கு வந்து இருக்கையில் சாய்ந்தாள். தலை சுழல்வது போல் இருந்தது. உடம்பை நிதானத்துக்குக் கொண்டு வந்து அமர்ந்து உட்கார்ந்து கொள்ளும் முன் துவண்டு சரிந்தாள்.

மீண்டும் அவளுக்கு நினைவு திரும்பிய போது - இளம்பிறையின் காதுகளில் மங்கல வாத்திய ஒலிகளும், வேத விற்பன்னர்களின் உச்சாடனங்களும் ஸ்பஷ்டமாய் விழுந்தன. சிரமத்தோடு எழுந்து அமர்ந்தாள். உடம்பில் பட்டாடை. சகல அவயங்களில் ஆபரணங்கள். கைகளில் மருதாணிப் பூச்சு.

வலது காதருகே குரல் கேட்டது. மன்னரின் குரல்.

“என்ன இளம்பிறை...! அப்படி பார்க்கிறாய். நீ இப்போது மணப்பெண். நாம் இப்போது இருப்பது நஞ்சுண் டேஸ்வர கோயில். இன்னும் ஒரு நாழிகை நேரத்துக்குள் உனக்கும் நன்மாறனுக்கும் திருமணம்.”

இளம்பிறையின் இடது காதருகே மகாராணியின் குரல் கேலியாய் ஒலித்தது. “உனக்கும் நன்மாறனுக்கும் நடக்கப் போகும் திருமணத்தைக் காண, ஊரே இந்தக் கோயிலுக்கு வந்துள்ளது. எந்த எதிர்ப்பையும் வெளிப்படுத்தாமல் மணவறையில் போய் அமர்ந்து விடு. பராந்தகனை இனி நீ மறந்து விட வேண்டியதுதான்.”

இளம்பிறை அந்த மயக்க நிலையிலும் புன்னகைத்தாள்.

“என்ன சிரிக்கிறாய்...!”

பராந்தகன் என்று ஒருவன் இருந்தால்தானே அவனை மறப்பதற்கு!”

மன்னரும் மகாராணியும் திகைதுப் போய் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

“இளம்பிறை நீ என்ன சொல்கிறாய்..?”

“உண்மையைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அன்று என் சயன அறையில் நீங்கள் பார்த்தது பராந்தகனை அல்ல. பராந்தகனைப் போல் ஆண் வேடம் போட்ட என் தோழி குமுதவல்லியைத்தான்.”

“இ... இ... இதெல்லாம். எ... எ... எதற்காக?”

“நான் நன்மாறனை திருமணம் செய்து கொள்ளத்தான்!”

“நீ நன்மாறனைத் திருமணம் செய்து கொள்ள நாங்கள் எந்த எதிர்ப்பும் தெரிவிக்கவில்லையே..?”

“என் தாய் நீங்கள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்பது உண்மை. ஆனால் மன்னரின் நிலைமை அப்படி யில்லையே..!அவருடைய மனசில் ஒரு ஊசலாட்டம் இருந்தது. நான் விரும்பிய நன்மாறன்

எனக்கு அவசியமாய்க் கிடைக்க வேண்டும் என்பதற்காக நான் நடத்திய ஒரு போராட்டம்தான் இது!”

சொன்ன இளம்பிறை கண்ணாடியில் தன்னுடைய மணமகள் அலங்காரத்தை சரிபார்த்துக் கொண்டு மணவறைக்குச் செல்லத் தயாரானாள்.

# 24. அவன் உன்னைத் தொட்டதற்காக.

மும்பை வி.டி. ஸ்டேஷன்.

திருவனந்தபுரம் ஜெயந்தி ஜனதா எக்ஸ்பிரஸ் பிளாட் பாரத்தை விட்டு எந்த நேரமும் கிளம்பி விடுவேன் என் பதைப் போல் சுறுசுறுவென்று நின்று கொண்டிருந்தது.

என் கணவர் சூட்கேஸைத் தூக்கிக் கொண்டு முன்னே ஒட, நான் பிளாஸ்டிக் கூடையொன்றைச் சுமந்தபடி, அவர் பின்னே ஓடியும், ஓடாமலும் நடக்க, என் மூன்று மாதக் குழந்தையைச் சால்வையில் மார்போடு அணைத்துக் கொண்டு என் தாய் வியர்வை பொங்கப் பின் தொடர –

பிளாட்பாரத்தில் வழியனுப்ப வந்தவர்கள் எங்களை வேடிக்கை பார்த்தபடி வழி விட்டார்கள். பிளாட்பார மொத்தமும் கசகசவென்ற கூட்டம்.

“இதோ இந்த கம்பார்ட்மெண்ட்தான். சீக்கிரமா ஏறு மல்லிகா.”

சொல்லிக் கொண்டே என் கணவர் கம்பார்ட்மெண்ட் ஒன்றில் பாய்ந்து ஏற நானும் என் அம்மாவும் புஸ் புஸ் என்று மூச்சு இரைக்க அவர் பின்னாலேயே ஏறினோம்.

பிளாட்பார ஒலிபெருக்கியில் ரயில் புறப்படுவதற்கென மணி அலறியது. என் கணவர் எங்களை உட்கார வைத்து விட்டு இறங்கிக் கொண்டார்.

ரயில் புறப்பட்டது.

தடக் தடக்...

மாலைச் சூரியன் கம்பார்ட்மெண்டில் மஞ்சளான ஒளியைப் பளிரென்று வீசினான்.

அப்போதுதான் கவனித்தேன், என் எதிர்ப்புறத்தில் அமர்ந்திருக்கும்

அவர்களை, தும்பைப் பூவைப் போல் வெளுத்த கதர் சட்டையோடும், வேட்டியோடும் ஒரு பெரியவர், கைத்தறிச் சுங்கடிச் சேலையிலும் பெரிதான வட்டமான குங்குமப் பொட்டிலும் அவருடைய மனைவி, இருவருக்கும் நடுவில் சுண்டினால் ரத்தம் தெறிக்கும்படியான சிவப்பில் களையான முகத்தோடு இருபத்தைந்து வயதில் ஒரு வாலிபன், அவன், அவர்களுடைய மகன் தான் என்பதை முக சாடைகள் ஊர்ஜிதப்படுத்தின. வசதியுள்ள குடும்பமாக இருக்க வேண்டும். பளிச்சென்று இருந்தார்கள்.

வண்டி சயான் ஸ்டேஷனைத் தாண்டியதும் அந்த அம்மாள் என் அம்மாவிடம் மெல்லிய குரலில் பேச்சுக் கொடுத்தாள்.

“என்ன குழந்தை?”

“ஆண் குழந்தை” - என் அம்மாவின் குரலில் பெருமிதம் தொனித்தது.

“பிறந்த வூட்டுக்குக் கூட்டிட்டுப் போறிங்களா?”

அம்மா தலையை அசைத்தாள்.

“எந்த வுரு?”

“சேலம்.”

“மாப்பிள்ளைக்கு மும்பையில் வேலையாக்கும்?”

“உம்...”

அதற்குப் பிறகு அந்த அம்மாள் பேசவில்லை. ஜன்னல் வழியே பார்வையைச் செலுத்தி எங்கோ வெறிக்க ஆரம்பித்தாள். அந்தப் பெரியவர் கையில் சுருட்டி வைத்திருந்த தினசரியை விரித்துப் படிக்க ஆரம்பித்திருந்தார்.

அந்த வாலிபன் என்னையே குறுகுறுவென்று பார்த்துக் கொண்டிருந்தான்.

கல்யாண ஸ்டேஷன்.

ஐந்து நிமிடம் இளைப்பாறிவிட்டு வேண்டா வெறுப் பாக நகர்ந்தது ஜனதா.

குழந்தை சிணுங்க ஆரம்பித்தான்.

அம்மா குழந்தையைத் தட்டிக் கொடுத்து சிணுங்கலை நிறுத்த

முயன்றாள். ஊஹு9ம். பலிக்கவில்லை. சிணுங் கல் அழுகையாக வெடிக்க ஆரம்பித்தது.

“பசிக்கிறதோ என்னவோ பாலைக் கொஞ்சம் குடு…”

அம்மா குழந்தையை என்னிடம் நீட்டினாள்.

“வீட்டிலிருந்து வரும்போது வயிறு முட்டக் குடுத்தேன். அதுக்குள்ளாற பசி வந்திடுமா? நான் சலித்துக் கொண்டேன்.

“ரெண்டு மூணு தடவை துணிகளை ஈரமாக்கியிருக்கானே... பசிக்காதா அவனுக்கு உம்... உம்... கொஞ்சம் குடு...”

அம்மா அதட்டுகிற மாதிரி சொன்னாள்.

நான் குழந்தையை வாங்கிக் கொண்டேன். தோதாக மடியில் வைத்துக் கொண்டு பிளவுஸ் பட்டனை நீக்கி பிளவுஸை மேலேற்றிவிட்டு நிச்சிந்தையாகத் தலையை உயர்த்தியபோது –

அந்த வாலிபனின் பார்வை என் மார்புப் பிரதேசத்தில் வியாபித்திருப்பதை உணர்ந்தேன். பின் மண்டையில் சுரீரென்று உணர்ச்சி தாக்க, புடவைத் தலைப்பால் சட்டென்று மார்பைப் போர்த்துக் கொண்டு அவனைப் பார்வையிலேயே சுட்டெரித்து விடுவது போல் பார்க்க ஆரம்பித்தேன்.

அவனோ என் பார்வையின் அனலை அலட்சியம் செய்த வனாய் வைத்த விழி வாங்காமல் பார்க்க ஆரம்பித்தான்.

‘படித்தவனாட்டம் தெரிகிறது. இப்படிக் கீழ்த்தரமாய்ப் பார்க்கிறானே?’

குழந்தை கால்களை உதைத்து உதைத்து என் மார்புச் சீலையை விலக்க முயற்சி செய்ய, நான் குழந்தையை சேர்த்து என் சேலைத் தலைப்பால் மூடிக்கொண்டு பால் புகட்ட ஆரம்பித்தேன்.

அந்த வாலிபனின் பார்வையோ ஆணி அடித்தாற் போல் என் மார்புப் பிரதேசத்தில் நிலைத்திருந்தது.

சே! பெற்றவர்களை பக்கத்தில் வைத்துக்கொண்டு கொஞ்சம்கூட லஜ்ஜையில்லாமல் இப்படிப் பார்க்கிறானே?

அடுத்த வினாடி, அந்த வாலிபன் என்னை நோக்கிப் பாய்ந்தான்.

நான் சற்றும் எதிர்பாராத அந்த வினாடியில் என் மார்புக்கும்

கழுத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் அவன் கையைப் பதிக்க –

நான் பயந்து வீறிட்டுக் கொண்டே குழந்தையை இடது கையால் அணைத்துக் கொண்டு வலது கையால் பளீரென்று அவன் கன்னத்தில் அறை விட்டேன்.

கம்பார்ட்மெண்டே கலகலத்துப் போயிற்று.

“என்ன?”

“என்னாச்சு…?”

கம்பார்ட்மெண்ட்டில் இருந்தவர்கள் விஷயத்தைக் கேள்விப்பட்டதும் அந்த வாலிபனை நெருங்கினார்கள். “அயோக்கிய ராஸ்கல்! அப்படியா செய்தான்?”

“ஐயா, அவனை அடிக்காதீங்க..” அந்தப் பெரியவரின் கெஞ்சலையும், அந்த அம்மாவின் பரிதவிப்பையும் பொருட்படுத்தாமல் ஒருவன் தன் புறங்கையால் அந்த வாலிபனின் கன்னத்தில் செம்மையாக ஓர் அறை விட்டான். அடுத்தவன் வாலிபனைக் குனிய வைத்து முதுகில் முழங்கையால் ஆவேசமாய் ஊன்றி சட்டென்று வலது கால் முட்டியில் வயிற்றில் ‘நக்’கென்று எக்கினான்.

“ம்..ம்மா. ஆ!” வாலிபன் வயிற்றைப் பிடித்துக் கொண்டு மல்லாந்து சரிந்தான். வாயில் சிவப்பு வழிந்தது.

அந்த அம்மாள் கதறினாள். “அவனை அடிக்காதீங்க ஐயா. அவன் புத்தி சுவாதீனம் இல்லாதவன். அவனை அடிக்காதீங்க…”

அந்த ஆண்களின் காலில் விழுந்தாள் அந்த அம்மாள்.

நானே அதிர்ந்தேன். கம்பார்ட்மெண்டே சில வினாடிகள் ஸ்தம்பித்தது.

பெரியவர் தன் மகனை அள்ளி எடுத்தார். வாயில் வழிந்த ரத்தத்தை மேல் துண்டால் துடைத்து விட்டார். “ஏண்டா குமார். இப்படி செஞ்சே? ஒரு அன்னிய பொண்ணைத் தொடலாமா?”

அந்த வாலிபன் பார்வை திரும்பவும் என் மீது பாய்ந்தது. திரும்பவும் என் மார்புப் பிரதேசத்தில் நிலைத்தது. விழிகள் பீதி சுழன்றது.

“அப்பா ஆ! எறும்பு எறும்பு! அந்த எறும்பு…”

என் கழுத்துப் பகுதியைச் சுட்டிக்காட்டிக் கொண்டே சட்டென்று

எழுந்து என்னை நோக்கிப் பாய்ந்தான். நான் அவனைத் தள்ளுவதற்குள் என் தோளைப் பற்றிக் கொண்டு என் கழுத்துப் பகுதியினின்றும் எதையோ எடுத்தான்.

செவ்வெறும்பு!

கட்டை விரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் நடுவில் அதை அழுத்தமாய்ப் பிடித்துக் கொண்டு விழிகள் சிவப்பேறிப் பிதுங்க அதை முறைத்தான். பின்பு பற்களை நறநறவென்று கடித்தபடி முகமெங்கும் வியர்வை வெள்ளமாய்க் கொட்ட அதை அப்படியே நசுக்கினான். ஏதோ பெரிய சிங்கத்தோடு சண்டை செய்வதுபோல் உடம்பை அப்படியும், இப்படியும் முறுக்கிக் கொண்டு அதை நசுக்கிவிட்டு அப்படியே தளர்ந்து போய் உட்கார்ந்தான். நசுக்கப்பட்டுச் சிதிலமான அந்த எறும்பைப் பார்த்துச் சிரித்துவிட்டு திடீரென்று விம்மி விம்மி அழ ஆரம்பித்தான்.

அந்தப் பெரியவரின் விழிகளிலும் அந்த அம்மாவின் விழிகளிலும் நீர் வழிந்தது. என்னைப் பார்த்துக் கையெ டுத்துக் கும்பிட்டாள் அந்த அம்மாள். “என்னோட மகன் நடந்துகிட்ட முறைக்கு நான் மன்னிப்பு கேட்டுக்கறேன். அவன் தப்பான எண்ணத்தோட உன்னைத் தொடல்லே. அந்தச் சிவப்பு எறும்பைப் பிடிக்கிறதுக்காகத்தான் உன்னை தொட்டிருக்கான்.”

நான் புரியாமல் அந்த அம்மாளைப் பார்த்தேன். அந்த அம்மாள் அழுகை கலந்த குரலில் சொல்ல ஆரம்பித்தாள்.

அவன் பெயர் நந்தகுமார்.

பி.காமை முடித்த கையோடு ஒர் அரசு வங்கியில் நல்ல சம்பளத்தில் ஒட்டிக் கொண்டான். மூன்று ஆண்டுகளுக்கு முன்புதான் கல்யாணமும் நடந்தது. சற்று வசதி குறைந்த வீட்டிலிருந்து வந்த கிரிஜா அவனுக்கு மனைவியானாள். தனிக் குடித்தனம். உல்லாசத்திற்குக் கேட்பானேன்?

மெல்ல மெல்ல அந்த உல்லாசம் மறைய ஆரம்பித்தது காரணம் இதுதான். இயற்கையிலேயே குழந்தைகள் என்றால் கொள்ளை கொள்ளையாய்ப் பிரியம் வைத் திருந்த நந்தகுமாருக்கு முதல் இரண்டு ஆண்டுகள் கிரிஜா மாதம் தவறாமல் குளித்துக் கொண்டிருந்தது, அவனுள் ஓர் ஏக்கத்தை ஏற்படுத்தி அவனைச் சுற்றிலும் சூன்யப் போர்வையை போர்த்து விட்டிருந்தது.

“ஏய் கிரிஜா! அடுத்த மாசம் கொல்லைப்பக்கம் போய் உட்காந்தே

எனக்கு நல்ல கோபம் வரும். அப்புறம் உன்கிட்டே பேசமாட்டேன்" - நந்தகுமாரின் பேச்சில் கேலி தெறிக்கும். அடர்த்தியான சோகமும் புதைந்திருக்கும்.

"எனக்கு மட்டும் கொல்லைப்பக்கம் போய் உட்கார ஆசையா என்ன?" புன்னகையில் உதடுகள் விரிந்தாலும் கிரிஜாவின் இதயமென்னவோ விண்டுதான் போயிருக்கும்.

கோவிலின் அரசமரச் சுற்றல்கள், ஜாதக தோஷ நிவர்த்திகள், நகர ஸ்பெஷலிஸ்ட் டாக்டர்கள், ஆயுர்வேத வைத்திய முறைகள், ஹோமப்புகை பூஜைகள் இத்தனைக்கும் பிறகு –

கிரிஜா ஒரு மாதம் கொல்லைப் பக்கத்தைத் தவிர்த்தாள். அடுத்த பத்து மாசங்களையும் தவிர்த்து. ஒரு "சின்ன நந்தகுமார் அவனையே உரித்துக்கொண்டு பூமியில் விழுந்து 'வறட் வறட்'டென்று கத்தியபோது நந்தகுமார் நெஞ்சை நிமிர்த்துக் கொண்டு வானத்தில் மிதந்தான்.

குழந்தை பிறந்து முழுதாக ஒரு மாசம் ஆகிவிட்ட நிலையில்தான் அந்தச் சம்பவம் நடந்தது.

அமாவாசை கழிந்த மறுநாள் அது. இருட்டின் அடர்த்தியில் இரவு பத்து மணி நடுநிசியின் உணர்வை ஊட்டிக் கொண்டிருந்தது.

குழந்தை தொட்டிலில் தூங்கிக் கொண்டிருக்க, கட்டிலில் இருந்த நந்தகுமாரும் கிரிஜாவும் அருகருகே படுத்தபடி அயர்ந்து போய்த் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

"படீர்..." அந்த பயங்கர சப்தம் இரவின் அமைதியை இரு கூறாகப் பிளந்தது. தெருவிளக்குக் கம்பத்தின் உச்சியில் தீப்பொறிகள் சடசடக்கச் சட்டென்று அரை வினாடி நேரத்தில் அந்த பிராந்தியம் பூராவும் இருட்டின் வாயில் வசமாய்ச் சிக்கியது.

அதே நேரம் குழந்தை வீறிட்டுக் கத்தினான்.

நந்தகுமார் விழித்துக் கொண்டான். கிரிஜாவை உசுப்பினான்.

அவள் கண்ணை விழிப்பதாக இல்லை. தூக்கத்தி லேயே குழறினாள். "தொட்டிலை நீங்களே கொஞ்சம் ஆட்டிவிடுங்க, குழந்தை அப்படியே தூங்கிடுவான்..."

அந்தக் கரி இருட்டில் மெல்ல எழுந்து போய்த் தொட்டிலை ஆட்டி விட்டான் நந்தகுமார். குழந்தையின் அழுகை மட்டும் ஓயவில்லை.

வராட் வராட்டென்று கத்த ஆரம்பித்தான்.

“எழுந்திரு கிரிஜா. குழந்தை ரொம்பவும் அழறான். கொஞ்சம் பால் குடுத்திட்டு அப்புறமாத் தூங்கு.”

எழுந்தாள். கட்டிலின் விளிம்பில் சாய்ந்து, கொண்டாள் ஆயாசத்தோடு.

“குழந்தையை எடுத்துக் குடுங்க...”

தொட்டிலில் இருந்த குழந்தையை அள்ளி எடுத்து அவள் மடியில் வைத்தான் நந்தகுமார்.

கிரிஜா தூங்கி வழிந்து கொண்டே பாலைப் புகட்டினாள்.

“கரெண்ட் ஃபெயிலியர், லைட்டெல்லாம் ஆஃப் ஆயிடுச்சு கிரிஜா. சிம்னியைப் பத்த வைக்கட்டுமா? சிம்னி எங்க இருக்கு?

“நீங்க ஒண்ணும் பத்த வைக்க வேண்டாம். பேசாம படுங்க. கொஞ்ச நேரத்துல போன கரண்ட் வந்துடும்...”

பத்து நிமிஷத்திற்கு பிறகு…

குழந்தையை நந்தகுமாரிடம் நீட்டினாள் கிரிஜா. “கொஞ்சம் தொட்டில்ல போட்டு ஆட்டுங்க. எனக்கு உடம்பெல்லாம் வலி. தூங்கி எழுந்திரிச்சா சரியாப் போயிடும். குழந்தை அழுதா எடுக்காதீங்க. தொட்டிலைக் கொஞ்சம் வேகமா ஆட்டினா தூங்கிடுவான்.”

குழந்தை மறுபடியும் வீறிட்டு அழத் துவங்கினான். அவன் தொட்டிலை வேகமாக ஆட்டினான். மெல்ல மெல்லச் சிணுங்கி அழுத குழந்தை அன்றைக்கு திடீரென்று வீறிட்டு வீறிட்டுக் கத்த ஆரம்பித்தது.

அவன் தொட்டிலை யந்திரம் மாதிரி ஆட்டிக் கொண்டிருந்தான். இரண்டு மூன்று விநாடிகள் இடைவெளி விட்டு விட்டு ஒரே சீராகக் குழந்தை கத்த கத்த...

ஏறக்குறைய அரை மணி நேரம்...

குழந்தையின் கதறல் இப்போது மெலிந்து விட்டிருந்தது. தொண்டை கம்மிப்போய் அழ முடியாமல் சோர்ந்து போகத் துவங்கியது. அடுத்த வினாடியின் ஆரம்பத்தில் அழுகை சுத்தமாய் நின்று விட்டிருந்தது.

நந்தகுமார் தொட்டில் ஆட்டுவதை நிறுத்தினான். தூங்கி விட்டான்.

அரை மணி நேரம் கழித்து மனைவியின் அந்த அல றலைக் கேட்டுத்தான் கண் விழித்தான்.

விடிந்திருந்தது.

தொட்டிலில் குழந்தை சலனமில்லாமல் படுத்திருந்தது.

குழந்தையின் உடம்பு முழுக்க மொலு மொலுவென்று அந்தச் சிவப்பு சிவப்பான செவ்வெறும்புகள் ஊர்ந்து கொண்டிருந்தன. தொட்டிலின் ஓரத்தில் குழந்தையின் உயிர்நிலைக்கு அருகே அந்தச் சிறிய வெல்லத்துண்டு கிடந்தது. வேலைக்காரச் சிறுமி முந்தின மாலை வெல்லத்தை வாயில் அடக்கிக் கொண்டே திரிந்தது ஞாபகத்திற்கு வந்தது.

“கிரிஜா..!”

நந்தகுமாரின் அந்த அமானுஷ்ய அலறல் வெளிப்பட்ட அதே நேரம்... கிரிஜா சமையலறையை நோக்கி ஓடினாள். சமையலறையின் கதவை உள்பக்கமாய்த் தாழிட்டுக் கொண்டு கெரோஸினில் தெப்பமாய் நனைந்து தீக்குச்சியின் முனையை சிறிய ஒளிப்பிழம்பாக்கிய பிறகு தானே ஒரு நெருப்புக் கோளமாக எரிந்து...

நந்தகுமார் வெறித்துக் கொண்டு நின்றான்.

அந்த அம்மாவின் அழுகை சட்டென்று அதிகரித்தது.

“ஒரே நேரத்துல குழந்தை, மனைவியோட சாவு அவனோட மூளையைப் பாதிச்சுட்டுதும்மா... கொஞ்சம் குணமான மாதிரி இருக்கும். திரும்பவும் அந்த எறும் பையோ அந்த வயசுக் குழந்தைகளையோ பார்த்தா இப்படித்தான் நடந்துக்குவான். அவனை மன்னிச்சுடும்மா. அவன் தப்பான எண்ணத்தோடு உன்னைத் தொட்டான்னு நீ நினைச்சா உன்னோட காலிலே விழுந்து மன்னிப்பு கேட்டுக்குறேன் அவன் அப்படிப்பட்டவன் இல்லேம்மா...”

என் இதயம் கண்ணீர் விட்டது.

# 25. காதல் கட்சி

கல்லூரியின் மத்தியான வேளை.

சரக்கொன்றை மரங்களுக்குக் கீழே - அரட்டை யடிக்கும் மாணவர்கள், பாட்டனி லேப்பை நோக்கிப் போய்க் கொண்டிருந்த

மாணவி கும்பலை கிண்டலடித்துக் கொண்டிருந்தார்கள்.

“மச்சி...!”

“என்னம்மா...?”

“வருங்கால தாய்மார்களைப் பார்த்தியா..?”

“அம்சமோ அம்சம்...”

“வனிதா கொஞ்சம் வெயிட் போட்ட மாதிரி தெரியலை…?”

“ஏன் வெயிட் போடாது...? மத்தியான டிபன் காரியர் மூணடி உயரத்துல வருதே...?”

வனிதா அவர்களை நோக்கி வந்தாள்.

“வருங்கால அப்பாமார்களே! என்னோட மத்தியான டிபன் காரியரை அளந்து பார்த்தது யாரு..?

“வாடா மச்சி...! க்ளாஸஸுக்கு போலாம்... டயமாயிடுச்சு!” மாணவர்கள் ஒவ்வொருவராய் நழுவ – வனிதா உறுமினாள். “இனி... எவனாவது வர்ற போற பொண்ணை கமெண்ட் பண்ணினா... அப்புறம்... நான் புதுச்செருப்பு வாங்க வேண்டியிருக்கும்... எனக்கு செருப்பும் வாங்கி கட்டுப்படியாகலைன்னா... அஸிஸ்டெண்ட் கமிஷனரா இருக்கிற... என்னோட... மாமாகிட்டே சொல்லி... ஜட்டி கூட இல்லாமே லாக்கப்புல நிக்க வெச்சுருவேன். லாக்கப்பில் இருக்கிற ஆட்களை அடிச்சு கொல்றதுல எங்க மாமா எக்ஸ்பர்ட்...”

மாணவிகள் கைதட்டி சிரித்தார்கள்.

“ஏண்டி வனிதா! உனக்கு நிஜமாவே அஸிஸ்டெண்ட் கமிஷனர் மாமா இருக்காரா..?”

“செம கப்ஸா... இதெல்லாம் சும்மா ஒரு உதார்...”

சிரிப்பலைகளோடு நடந்தார்கள், லேப்பை நோக்கி.

சட்டென்று ஒருத்தி வனிதாவின் தோளை தன் தோளால் இடித்தாள். “டீ... வனிதா... உன்னோட ஆள் வர்றார்...”

வனிதா நிமிர்ந்தாள்.

திலக் லேப் வராந்தாவில் தெரிந்தான்.

“நீங்க... போங்கடி... நான் என் காவியத் தலைவனோடு சிறிது நேரம் உரையாடிவிட்டு வருகிறேன்...”

மாணவிகள் மறுபடியும் சிரித்து விலக - வனிதா, திலக்கை எதிர்கொண்டாள். “என் எதிர்கால கணவர்க்கு என் மத்தியான வணக்கம்...”

அவன் பேசவில்லை. முகம் கவலையாய் தெரிந்தது.

“என்ன முகத்துல பத்து லாரி சோகம்...”

“வனிதா! உன்கிட்ட நான் கொஞ்சம் தனியா பேசணும்.”

“எனிதிங் இம்பார்ட்டண்ட்..?”

“ஏஸ்...”

“வாங்க... லைப்ரரி பக்கம் போயிடலாம்...”

போனார்கள்.

‘மே’ட்ரீக்கு கீழே இருந்த சிமெண்ட் திட்டின் மேல் பக்கம் பக்கமாய் உட்கார்ந்தார்கள்.

“சொல்லுங்க... என்ன விஷயம்...?”

“நம்ம காதல் விவகாரம்... என்னோட அப்பாவுக்குத் தெரிஞ்சுடுச்சு...”

வனிதாவின் முகத்தில் இருந்த உற்சாகம் சட்டென்று வடிந்து போயிற்று. “எ... எப்படி தெ... தெரிஞ்சுது..?”

“ரெண்டு நாளைக்கு முன்னாடி, நாம ரெண்டு பேரும் ‘ஆல்பர்ட்’டுக்கு சினிமா பார்க்கப் போனதை எவனோ கட்சிக்காரன் பார்த்து சொல்லியிருக்கான். நான் லஞ்சுக்காக வீட்டுக்குப் போயிருந்த சமயம் அப்பா கூப்பிட்டு என்னை காய்ச்சுட்டார். காய்ச்சது மட்டுமில்லை. கல் யாணத்துக்கான ஏற்பாடுகளையும் உடனே பண்ண ஆரம்பிச்சுட்டார். சேலத்தில் இருக்கிற என்னோட அத்தைக்கு போன் பண்ணி - மகளை கூட்டிகிட்டு உடனே வரும்படி சொல்லியிருக்கார். முகூர்த்தத்துக்கும் நாள் பார்த்தாச்சு... வர்ற திங்கட்கிழமை. எங்க பங்களாவில வெச்சே கல் யாணமாம்…”

வனிதா இடிந்து போனாள். கண்களுக்குள் லேசாய் நீர் சுறுசுறுவென்று சுரந்தது.

“இப்ப என்ன பண்றது திலக்...?”

“எங்கப்பாவோட பிடிவாதத்தைப் பத்தி உனக்கும் தெரியும் - அவர் இந்த ஊர்ல ஒரு முக்கியமான அரசியல் புள்ளி. சாதாரண குடும்பத்துல பிறந்த உன்னை, அவர் மருமகளா ஏத்துக்க மாட்டார். நாம திருட்டுத் தனமா... கல்யாணம் பண்ணிக்கிட்டாலும் வாழ விட மாட்டார்…”

“இந்த ஊரைவிட்டே போயிடுவோமா..?”

“அதைவிட...?”

“சொல்லுங்க...”

“இந்த உலகத்தைவிட்டே போயிடுவோம்...”

“திலக்..!”

“நான் முடிவு பண்ணிட்டேன் வனிதா. நாளைக்குக் காலையில நாம ரெண்டு பேரும் திருநீர் மலைக்குப் போறோம். கல்யாணத்தை பண்ணிக்கிறோம். நேரா மகாபலிபுரம் போய் காட்டேஜ் எடுத்துத் தங்கறோம். ஒரே ஒரு ராத்திரி கணவன் மனைவியா வாழறோம். விடியற நேரத்துல ஒண்ணா விஷத்தைக் குடிச்சு செத்துப் போகப் போறோம்.”

“திலக்...!”

“செத்துப் போக உனக்கு பயமாயிருக்கா வனிதா..?”

“இல்ல. ! ஆனா..?”

“சொல்லு...”

“நாளைக்குக் காலையில திருநீர்மலைக்குப் போய் நாம கல்யாணத்தைப் பண்ணிக்கிறோம் இல்லையா..?”

“ஆமா...”

“கல்யாணத்தை பண்ணிக்கிட்ட நாம, வாழ்ந்து காட்ட முடியாதா?”

“முடியாது வனிதா... எங்கப்பாவை எதிர்த்துகிட்டு நம்மாலே வாழ முடியாது... உன்னோட வீட்லேயும் நம்ம காதலுக்கு எதிர்ப்பு இருக்கும்ன்னு நீ முன்னாடியே சொல்லிட்டே.... ஜாதி விஷயத்துல உங்கப்பா காட்ற தீவிரம் நிச்சயமா நம்ம காதலுக்கு, சாதகமா

இருக்கப் போறதில்லை…”

சில விநாடிகள் - வனிதா யோசித்துவிட்டு தலையாட்டினாள். “சரிங்க... நாம தற்கொலை பண்ணிக்கலாம். உங்களுக்கு அந்த முடிவுதான் சரின்னு பட்டா அதையே எடுத்துக்கலாம்.”

“நாளைக்குக் காலையில ஆறு மணிக்கெல்லாம் நாம திருநீர்மலையில் இருக்கணும்... ஏழு மணிக்குள்ளே கல் யாணத்தை முடிச்சுகிட்டு - உடனே மகாபலிபுரம் புறப்பட்டுப் போயிடணும். தாலிக் கொடி, பட்டுச்சேலை, பட்டு வேஷ்டி, சட்டை, மாலைங்க சகிதம் வந்துடறேன். நீ தனியா பஸ்ல புறப்பட்டு திருநீர்மலைக்கு வந்துரு. நான் அடிவாரத்துல காத்திட்டிருப்பேன்.”

“ஒண்ணாவே போயிடலாங்க திலக்.”

“வேண்டாம்... எந்தக் கட்சிக்காரனாவது பார்த்து விஷயத்தை அப்பா காதுக்குக் கொண்டு போயிட்டா... நாம கணவன் - மனைவியா வாழப் போகிற அந்த ஒரு நாள் வாழ்க்கைகூட நமக்கு கிடைக்காமே போயிடும். நீ தனியாவே புறப்பட்டு வந்துடு.”

வனிதா தலையாட்டினாள்.

திருநீர் மலையில் கல்யாணத்தை முடித்துக் கொண்டு திலக்கும், வனிதாவும் மகாபலிபுரம் காட்டேஜ் போய் சேர்ந்தபோது - பதினோரு மணியாகி விட்டது. புதுமணக் கோலத்தில் இருந்த அவர்களை பார்த்ததுமே ரிசப்ஷ னிஸ்ட் இளைஞர் கேட்டான்.

“ஹனிமூன் காட்டேஜா ஸார்…?”

“எஸ்...”

“எவ்வளவு நாள் தங்கப் போறீங்க..?”

“ஒரே ஒரு நாள் மட்டும்...”

“பெர் டே ஸெவன் ஹண்ட்ரெண்ட் ரூபீஸ்.”

“நோ ப்ராப்ளம்...”

ரிசப்ஷனிஸ்ட் இளைஞன் சொன்ன - அட்வான்ஸ் பணத்தைக் கொடுத்து - ரசீதை வாங்கிக் கொண்டு தங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த காட்டேஜை நோக்கிப் போனார்கள். பட்டுச் சேலைக்குள் வனிதாவின் உடம்பு நிமிஷத்திற்கொருமுறை வியர்த்து விட்டது. கழுத்தில் தொங்கிய தாலிக்கொடியை ஏதேச்சையாய் கை

நெருடும் போதெல்லாம் மனசுக்குள் ஒரு சிலிர்ப்பு ஓடியது.

காட்டேஜ்க்குள் நுழைந்தார்கள். ஏர்க்கண்டிஷன் அறையை ஜில்லிப்பாய் வைத்திருந்தது. கையோடு கொண்டு போயிருந்த சிறிய சூட்கேஸ்களை சுவரோரமாய் வைத்துவிட்டு கட்டிலில் உட்கார்ந்தார்கள் திலக்கும், வனிதாவும்.

“லஞ்ச்சுக்கு ஆர்டர் பண்ணட்டுமா வனிதா?”

“வேண்டாம்...”

“ஏன்...?”

“பசிக்கலை...”

“காலையில கூட... நீ சரியா டிபன் எடுத்துக் கலையே..?”

“உங்களுக்கு பசிக்குதா..?”

“ஆமா.”

“அப்படீன்னா ஆர்டர் குடுங்க...”

“நாம சாப்பிடற கடைசி லஞ்ச் இரு..? ஸ்பெஷலா ஏதாவது ஆர்டர் பண்ணலாம்...”

சொன்னவன் –

இண்டர்காம் ரிஸிவரை எடுத்து - கேடரிங் செக்ஷனைக் கூப்பிட்டான்.

“லஞ்ச் ரெடியா..?”

“ரெடி ஸார்...”

“எனிதிங்க் ஸ்பெஷல்...?”

“ராயல் லஞ்ச் இருக்கு. சர்வ் பண்ணட்டுமா ஸார்…?”

“ம்... அரை மணி நேரம் கழிச்சு கொண்டு வந்தா போதும்...”

“ஏஸ்... ஸார்...”

திலக் ரிஸிவரை வைத்ததும் - அவன் தோள்மேல் சாய்ந்தாள், வனிதா.
“திலக்…!”

“ம்…”

“நாம சாகத்தான் வேணுமா..?”

“என்ன திடீர்ன்னு…?”

“நாம ஏன் வாழ்ந்து காட்டக்கூடாது…? கோழைகள் மாதிரி எதுக்காக தற்கொலை பண்ணிக்கணும்..?”

“தற்கொலை பண்ணிக்கிறவங்க… கோழைகள்ன்னு சொல்ல வர்றியா..?”

“ஆமா…”

“தப்பு… வனிதா… என்னைப் பொறுத்த வரைக்கும் தற்கொலை பண்ணிக்கறவங்கதான் தைரியசாலிங்க! சாகறதுக்கு ஒரு தைரியம் வேணும் தெரியுமா..? தூக்குல தொங்கறதுக்கும், விஷத்தை குடிக்கிறதுக்கும்… ரயில் முன்னாடி பாயறதுக்கும் எவ்வளவு மனோதிடம் வேணும் தெரியுமா..?”

“திலக்! எல்லாரும் வாழறதுக்காக கல்யாணம் பண்ணிக்குவாங்க… ஆனா… நாம..?”

“வனிதா.! உனக்கு சாகிறதுக்கு பயம் வந்துருச்சு..! அதான் இப்படி பேசிட்டிருக்கே..! நீயும் என்கூட செத்துத்தான் போகணும்ங்கிறது கட்டாயமில்லை… என்னோட அப்பாவை பகைச்சுகிட்டு என்னால வாழ முடியாது. அவர் வாழவும் விட மாட்டார். அதனால என்னோட முடிவை நான் தேடிக்கிறேன். உனக்குசாக விருப்பம் இல்லைன்னா இந்த நிமிஷமே நீ என்னை விட்டுட்டு போயிடலாம்…”

“நோ… திலக்..! நானும் உங்ககூடவே சாகறேன்…” அவனை அணைத்து நெற்றியில் மெல்ல முத்தமிட்டாள்.

இரவு பத்துமணி.

கட்டில் பூராவும் மல்லிகைப் பூக்களை தூவினான், திலக். மேஜையின் மேல் பால், பழம், ஸ்வீட் தட்டு வகையறாக்கள் உட்கார்ந்திருந்தன. ஊதுபத்தி மணத்தது.

வனிதா மெலிதாய் சிரித்தாள்.

“தமிழ் சினிமா நிறைய பார்த்து கெட்டுட்டீங்க… இந்த ஆர்ப்பாட்டமெல்லாம் தேவைதானா..?”

“வனிதா...! நம்மைப் பொறுத்தவரைக்கும் இது முத லிரவு இல்லை. கடைசி இரவு. நாளைக்கு விடியும்போது நாம தம்பதிகள் இல்லை சடலங்கள்.”

இண்டர்காம் சிணுத்தது.

திலக் ரிஸிவரை எடுத்ததான்.

“ஏஸ்...”

“ஸார்... திஸ் ஈஸ் ரிசப்ஷன்... ரூம் சர்வீஸ் முடியப் போகுது. உங்களுக்கு ஏதாவது தேவைப்பட்டா... உடனே சொல்லி வாங்கிக்கலாம்...”

“எங்களுக்கு எதுவும் வேண்டாம். பட்... ஒரு சின்ன ஹெல்ப்.”

“சொல்லுங்க... ஸார்...”

“நாளைக்குக் காலையில அஞ்சு மணிக்கு எங்களை எழுப்பி விடணும்…! சரியா அஞ்சு மணிக்கு ஒரு ரிங்தர்றீங்களா..?”

“ஷ்யூர்...”

திலக் ரிஸிவரை வைத்துவிட்டு - வனிதாவை பக்கத்தில் உட்கார்த்தி வைத்து மெல்ல அணைத்துக் கொண்டான்.

“திலக்…”

“ம்…”

“இந்நேரம் உங்க வீட்லேயும், என்னோட வீட்லேயும் மும்முரமா நம்மை தேடிட்டிருப்பாங்க...”

“தேடட்டும்... நல்லா தேடட்டும்... நாளைக்குக் காலையில காட்டேஜ்காரன் போலீஸ்ஸுக்கு போன் பண்ணி - நாம தற்கொலை செஞ்சுகிட்ட விஷயத்தை சொல்லு வான். போலீஸ் வரும். நாம எழுதி வெச்சிருக்கிற லெட்டரை படிச்சுட்டு... எங்கப்பாவுக்கு தகவல் குடுப்பாங்க. உங்க வீட்டுக்கும் தகவல் போகும்... ரெண்டு பேரும் வந்து செத்துக்கிடக்கிற நம்மை எடுத்துட்டுப் போகட்டுமே...”

வனிதா, திலக்கின் நெற்றியில் மெலிதாய் முத்தமிட்டாள்.

“திலக்! இந்த முதல் இரவு சடங்கு நமக்கு தேவைதானா..?”

“ஏன் அப்படிச் சொல்றே.?

“உடல்கள் இணையற வாழ்க்கை உங்களுக்கோ எனக்கோ… பெரிசில்லை… சாகறதுக்கு முந்தி இந்த சுகத்தை அனுபவிச்சுட்டு சாகறது எனக்கென்னமோ மனசுக்கு கொச்சையா தோணுது… இந்த தாம்பத்ய சுகம் இல்லாம நாம சாகக்கூடாதா என்ன..?”

“சாகலாமே..? எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. ஏற்கனவே லெட்டர் எழுதி வெச்சுட்டோம். ரூம் சர்வீஸ் பையனும் இனிமே வரமாட்டான். விஷத்தைக் குடிச்சுட வேண்டியதுதான். பாட்டிலை எடுக்கட்டுமா..?”

“ம்…”

திலக் குனிந்து கட்டிலுக்குக் கீழே மறைவாய் வைத்திருந்த அந்தச் சிறிய விஷப்பாட்டிலை எடுத்தான். வாங்கி வைத்திருந்த குளிர்பான பாட்டிலைத் திறந்து இரண்டு கண்ணாடி டம்ளர்களில் ஊற்றி - விஷத்தைக் கலந்தான்.

ஆளுக்கொரு டம்ளரை கையில் எடுத்துக் கொண்டனர். டம்ளர்களை உயர்த்தி அதன் விளிம்புகளில் ‘க்ளிங்க்’ என்று தொட்டுக் கொண்டு “அடுத்த பிறவியிலாவது ஒன்று சேர்வோம்…” என்று சொல்லி குடிக்க ஆரம்பித்தார்கள்.

காலை ஆறு மணி.

அரசியல் பிரமுகர் வேல்பாண்டியனின் பங்களா காம் பௌண்ட்டுக்குள் அந்த போலிஸ் ஜீப் நுழைந்து நின்றது. அஸிஸ்டெண்ட் கமிஷனர் இறங்கி - போர்டிகோ படிகள் ஏறி உள்ளே போக - வேல்பாண்டியன் எதிர்கொண்டார். கூடவே தலைநரைத்த இன்னொரு நபர்.

“வாங்க ஏ.ஸி… ஸார்… உங்களுக்குத்தான் போன் பண்ணலாம்ன்னு நினைச்சிட்டிருந்தேன்… என் பைய னும் இவரோட பொண்ணும் நேத்து காலையிலிருந்து காணோம்… ரெண்டு பேர்க்கும் லவ் அஃபேர்ஸ் உண்டு… ஊரை விட்டு ஓடிப் போயிருப்பாங்களோன்னு…”

“ஸாரி ஸார்… இவ்வளவு காலையில் உங்க வீட்டுக்கு வந்ததுக்குக் காரணமே… ஒரு துக்ககரமான விஷயத்தைச் சொல்லத்தான்… உங்க பையனும் இவரோட பொண்ணும் மகாபலிபுரம் காட்டேஜ்ல விஷத்தைக் குடிச்சுதற்கொலை பண்ணிகிட்டாங்க… பாடி

செங்கல்பட்டு ஜி.ஹெச்ல இருக்கு.”

ஏ.ஸி. சொல்ல தலை நரைத்த அந்த நபர் பக்கத்துச் சுவரில் தலையை மோதிக் கொண்டு அழ - வேல் பாண்டியன் அருகில் இருந்த நாற்காலியில் தளர்ந்து போய் உட்கார்ந்தார்.

“அவங்க ரெண்டு பேரும் சேர்ந்து எழுதின லெட்டர்...” ஏ.ஸி. தன் பாக்கெட்டில் வைத்திருந்த - ஒரு கடிதத்தை எடுத்து வேல் பாண்டியனிடம் நீட்ட அவர் வாங்கிப் பிரித்தார்.

போலீஸ் துறைக்கு,

காதல் கட்சியின் சார்பில் கணவன் - மனைவி என்கிற பதவிகளுக்கு போட்டியிட வாழ்க்கை என்னும் தேர்தலில் நின்றோம். ஆனால், தோற்கடிக் கப்பட்டோம். நாங்கள் தோற்றதுக்கு காரணம் ஜாதியும், அரசியலும்தான். வேறு யாரும் காரணமில்லை. எங்கள் தற்கொலைக்கு யாரையும் காரணம் காட்டி - விசாரணை என்கிற பேரில் துன்புறுத்த வேண்டாம். காதல் கட்சியின் சார்பில் போட்டியிடப் போகிறவர்கள் யாராயிருந்தாலும் அவர்கள் வெற்றி பெற வேண்டும் என்பதே எங்கள் கடைசி விருப்பம், ‘திலக் - வனிதா.’

வேல்பாண்டியன் தளர்ந்து எழுந்தார்.

“பாடி எங்கே இருக்கு….?”

“செங்கல்பட்டு ஜி.ஹெச்ல...”

“அவனோட காதல் விஷயம் இவ்வளவு டீப்பா இருக்கும்ன்னு நான் நினைக்கலை. ஏதோ விளையாட்டுத் தனமா... யாரையோ விரும்பிட்டிருக்கான்... கண்டிச்சா விட்டுடுவான்னு நினைச்சேன்... அவசரப்பட்டு... இப்படியொரு முடிவுக்கு போவான்னு தெரியலையே...”

வனிதாவைப் பெற்றவரும் புலம்பினார். “ஸார்! வனிதாவுக்கு எங்க ஜாதிக்குள்ளே கல்யாணம் பண்ணத்தான் நானும் தீவிரமாயிருந்தேன். ஆனா... எங்க ஜாதியில் நிலவர வரதட்சணை பேராசையைப் பார்த்ததும் நான் என்னோட முடிவை மாத்திக்கிட்டேன். வரதட்சணை வேண்டாம்ன்னு சொல்ற பையன் எந்த ஜாதியிலும் இருந்தாலும் சரி... அவன் யோக்யமானவனா இருந்தா அவனுக்குத்தான் வனிதாவை கட்டித்தர்றதுன்னு நினைச்சுட்டிருந்தேன்... என்னோட முடிவைப் பத்தி தெரிஞ்சுக்காத வனிதா இப்படியொரு காரியம் பண்ணிட்டாளே..?”

அஸிஸ்டெண்ட் கமிஷனர் புன்னகைத்தார். “அப்படீன்னா... 'திலக் – வனிதா’ ரெண்டு பேரும் உயிரோடு இருந்தா... அவங்களுக்கு கல்யாணம் பண்ணி வைக்க உங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை...”

“இல்லை...?”

இருவரும் தலைகளை ஆட்டினார்கள்.

“நிஜமாத்தான் சொல்றீங்களா?”

“ஆமா...”

ஏ.ஸி. திரும்பி - போர்டிகோவில் நின்றிருந்த ஜிப்பை நோக்கி கையசைத்தார்.

அடுத்த விநாடி –

ஜிப்பின் உள்ளே மறைவாய் இருந்த - திலக்கும் வனிதாவும் பயந்த பார்வைகளோடு வெளிப்பட்டார்கள்.

வேல்பாண்டியனும், வனிதாவின் அப்பாவும் சந்தோஷங்களில் உறைந்து போய் நிற்க - ஏ.ஸி. தொடர்ந்தார்.

“மகாபலிபுர காட்டேஜ்களில் கடந்த சில நாட்களாக கள்ளக்கடத்தல் பேர்வழிகள் ஃபேமிலி மாதிரி வந்து தங்கி - ராத்திரி நேரங்களில் தங்களுடைய தொழிலை கவனிக்கிறதா எங்களுக்கு தகவல் வந்தது. நேரிடையா விசாரணையோ, சோதனையோ பண்ணினா வந்திருக்கிற ஆட்கள் உஷாராயிடுவாங்கன்னு நினைச்சு - காட்டேஜ் உரிமையாளர் சம்மதத்தோட ஒவ்வொரு காட்டேஜ்லயும் ஒரு மைக்ரோ ரிஸிவரை ரகசியமா பொருத்தி - ரூம்ல தங்கறவங்க பேசறதையெல்லாம் - வேற ஒரு ரூம்ல உட்கார்ந்து ‘ஹியர்’ பண்ணிட்டிருந்தேன். அப்படி ஹியர் பண்ணும்போதுதான் ‘திலக் – வனிதா’ தற்கொலை பண்ணிக்கப் போகிற சம்பாஷணையை கேட்க நேர்ந்தது. விஷத்தை குடிக்க ஆரம்பிச்சப்ப... நான் போய் கதவைத் தட்டி - அந்த முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டேன்... பெத்தவங்க மனசைப் பத்தி எனக்கு நல்லா தெரியும். செத்துப்போன பின்னாடி… ‘நீ இப்படியொரு முடிவை தேடிக்குவேன்னு நினைச்சிருந்தா… நீ ஆசைப்பட்ட படியே கல்யாணத்தை முடிச்சுருப்பேன்’ன்னு புலம்பற பெத்தவங்களை நான் பார்த்திருக்கேன். நீங்களும் கொஞ்ச நேரத்துக்கு முந்தி அப்படித்தான் புலம்பினிங்க...”

வேல்பாண்டியன் இன்னமும் திகைப்பிலிருந்து மீள முடியாமல்

தத்தளித்துக் கொண்டிருக்க - அஸிஸ் டெண்ட் கமிஷனர் திலக்கையும், வனிதாவையும் நெருங்கினார்.

“உங்க காதல் கட்சிக்கு இப்ப அமோக வெற்றி!”

# 26. ஒரு ராத்திரி ஒரு தேவதை

ராத்திரி டின்னருக்கு இன்டர்நெட்டில் ஆர்டர் செய்ய லாமா அல்லது வெளியே போய் ஃபாஸ்ட் ஃபுட் ரெஸ்டா ரெண்டில் எதையாவது கொறிக்கலாமா என்று வைபவ் யோசித்த விநாடி, அவனுடைய உதவியாளர் பாலிமர் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்தார்.

மெல்லிய குரலில் “ஸார்” என்றார்.

“எஸ்...” வைபவ் ஸ்லோமோஷனில் நிமிர்ந்தான். “இப்போது மணி பத்தரை. நீங்கள் வீட்டுக்குக் கிளம்ப வேண்டிய நேரம். வீட்டிலிருந்து உங்களுடைய அப்பா மூன்று தடவை போன் செய்துவிட்டார்.”

வைபவ் டையின் முடிச்சை இன்னமும் இறுக்கிக் கொண்டே புன்னகைத்தான்.

“அப்பா நான்காவது தடவையாய் போன் செய்தால், உங்கள் மகன் இன்றைக்கு வீடு திரும்ப ராத்திரி பன்னி ரெண்டு மணியாகிவிடும் என்று சொல்லுங்கள்.”

“எஸ்... எஸ்...”

“ராத்திரி ஷிப்ட்டில் எத்தனை பேர் வேலை பார்க்கிறார்கள்?”

“நூற்றி அறுபத்தோரு பேர் ஸார்! ஃபேசுவல்ட்டி மட்டும் இருபது பேர் ஸார்…”

“தட்ஸ் குட்... நீங்கள் கிளம்புங்கள்...” வைபவ் தன் உதவியாளரை வெளியே அனுப்பிவிட்டு, களைப்புத் தெரியாமல் இருப்பதற்காக ஒரு க்ளுக்கோஸ் மாத் திரையை விழுங்கி, வெளிநாட்டு மினரல் வாட்டரைத் தொண்டைக்கு வார்த்தபோது, அவனுக்கு எதிரே இருந்த கம்ப்யூட்டர் திரையில், இன்டர்னெல் மெஸேஜ் விண்டோ ஒன்று உற்பத்தியானது.

‘உங்களைச் சந்திக்க ஒரு பெண் வந்து காத்திருக்கிறாள்’ விண்டோவின் மையத்தில் இருந்த தகவல் வரி ஊதா நிறத்தில்

இடைவிடாமல் கண் சிமிட்டியது. எழுந்தான். லிஃப்ட்டில் இறங்கினான். விசிட்டர் ரூமில் அந்தப் பெண்!

சிந்தெட்டிக் இழைகள் மின்னும் சுடிதாரில் அந்தப் பெண் தெரிந்தாள். ரோஸ்மில்க் நிறத்தில் வெளிச்சமாய் இருந்தாள். பெரிய கண்களில் நிறைய காந்தம்.

வைபவ் அவளை உன்னிப்பாய்ப் பார்த்தபடி “எஸ்” என்றான். அவள் தன் சின்னஞ்சிறிய ஸ்பான்ஞ் உதடு களைப் புன்னகையில் விரித்தாள்.

“அயாம் சொர்க்கா...”

“ஓ.கே... உனக்கு என்ன வேணும்?”

“உண்மை வேணும்...”

“உண்மையா... என்ன உண்மை..?”

“மொதல்ல இந்தப் பேப்பர்ல வந்து இருக்கிற செய்தியைப் படிங்க..” சொன்ன சொர்க்கா தன் வானிடிப் பேக்கில் நான்காய் மடித்து வைத்திருந்த செய்தித்தாளை எடுத்து நீட்டினாள். அதை வாங்கிக் கொண்ட வைபவ் பிரித்தான்.

“இரண்டாம் பக்கம், வலது பக்க ஓரத்துல இருக்கிற செய்தியைப் படிங்க…”

படித்தான்.

இளம்பெண் சாலை விபத்தில் மரணம்!

லாரி மோதி பரிதாபம்!

இது பற்றிக் கூறப்படுவதாவது: சம்யுக்தா (வயது 23) ஒரு சாஃப்ட்வேர் கம்பெனியில் புணிபுரிபவள். நேற்று இரவு ஒன்பது மணியளவில் பணி முடித்து வீட்டுக்கு ஸ்கூட்டரில் திரும்பிக் கொண்டிருந்த போது ஈக்காட்டுத்தாங்கல் ஜவஹர்லால் நேரு சாலையில் வேகமாய் வந்த லாரி ஒன்று ஸ்கூட்டரின் மீது மோதிவிட்டு நிற்காமல் போய்விட்டது. சம்யுக்தா சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி இறந்து போனாள்.

செய்தியைப் படித்து விட்டு வைபவ் வியர்வை முகத்தோடு நிமிர, சொர்க்கா தன் இதழ் கோடியில் புன்னகைத்தாள்.

“செய்திக்குப் பக்கத்தில் போட்டிருக்கிற சம்யுக்தா வோட

போட்டோவைப் பார்த்தீங்களா வைபவ்?”

“ம்..“

“இந்த சம்யுக்தாவை உங்களுக்குத் தெரியுமா?”

“தெ... தெரியாது...”

“உங்களைத் தெரியாமே அந்த சம்யுக்தா உங்களோடு எப்படிச் சண்டை போட்டு இருக்க முடியும்.”

“சண்டையா?”

“ம்... பார்த்தேனே..! போன பிப்ரவரி மாசம் 15 ஆம் தேதி நீங்க மும்பை ‘போல் ஸ்டார் இன்டர்நேஷனல்’ ஹோட்டலில் ரூம் நம்பர் 547-ல் தங்கியிருந்தீங்க. அப்ப இந்த சம்யுக்தா உங்க அறைக்கு வந்து சண்டை போட்டதை ரூம் நம்பர் 548-ல் தங்கியிருந்த நான் பார்த்தேனே!”

வைபவ் வியர்த்து வெடித்துக் கொண்டு சொர்க்காவை முறைக்க, அவள் தொடர்ந்தாள்.

“சம்யுக்தாவோட போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டில் அவ மூணு மாசகர்ப்பம். அதுக்குக் காரணம், நீங்கதான்னு நினைக்கிறேன். என்னோட நினைப்பு சரியா?”

“நோ...”

“இதோ பாருங்க மிஸ்டர் வைபவ்...! உங்களை போலீஸில் காட்டிக் கொடுக்கிறது என்னோட நோக்கம் இல்லை... எனக்கு உண்மை தெரியணும். அவ்வளவு தான்.”

வைபவ் அவளை சந்தேகமாய்ப் பார்க்க சொர்க்கா மெல்ல சிரித்தாள். “என்னை நீங்க தாராளமாய் நம்பலாம். நான் உங்ககிட்ட பணம் பறிக்கிறதுக்காக வந்த ப்ளாக் மெயிலர் கிடையாது. எனக்கு சில உண்மைகளைத் தெரிஞ்சுக்காதப் பட்சத்தில் மண்டையே வெடிச்சுடும் போல் இருக்கும்.”

“எந்த ஒரு உண்மையையும் உன்கிட்டே சொல்ல முடியாது. போடி வெளியே..!”

சொர்க்கா சட்டென்று முகம் மாறி, ஆவேசமாய் தன் வலதுகையின் ஆட்காட்டி விரலை உயர்த்தினாள்.

சொர்க்காவின் ஆட்காட்டி விரலில் இரண்டங்குல நீளத்துக்கு ஒரு சிறிய கத்தி போல் அந்த நகம் தெரிந்தது. வெறியோடு கத்தினாள்.

“டேய்! உனக்கு ஒரு நிமிஷம் அவகாசம்! அதுக் குள்ளே உன்னோட வாயிலிருந்து உண்மை வந்தாகணும். இல்லேன்னா சயனைட் விஷத்தால் தோய்க்கப்பட்ட இந்த நகம் உன்னோட தொண்டைக் குழியில் இறங்கும்.”

வைபவ் அரண்டு போய் கதவை நோக்கி ஓட முயல, சொர்க்கா அவன் மேல் பாய்ந்து இழுத்துப் போட்டாள்.

வைபவ் மல்லாந்து கீழே விழ, சொர்க்கா அவனுடைய தலையை இடதுகையால் இறுகப் பற்றிக்கொண்டு, வலதுகையின் ஆட்காட்டி விரல் நகத்தை ஒரு கத்தி போல் உயர்த்தி வைபவின் கழுத்துக் குழியில் ஆவேசமாய் இறக்கினாள்.

ரத்தம் ஒரு ஃபவுண்டன் மாதிரி பீய்ச்சு அறையின் சீலிங்கில் புள்ளி புள்ளியாய் கோலம் போட்டது.

“ஏய்... என்னை... விடு... எ.. எ.. என்னைக் கொன்னுடாதே!”

வைபவ் வீறிட்டுக்கொண்டே படுக்கையில் துள்ளித் துடித்து புரண்டான். டாக்டர் பத்மநாபன் வைபவின் கன்னத்தை மெல்லத் தட்டினார்.

“வைபவ்…! ஏன் இப்படி பயப்படறீங்க? உங்களை யாரும் கொலை செய்ய வரலை... தைரியமாய் இருங்க...”

“டா.. டாக்டர்...”

“என்ன…?”

“சீ... சீலிங்... பூராவும் எவ்வளவு ர... ர... ரத்தம் பாருங்க! அவ... அவளோட நகத்தை... மொதல்ல... வெட்டுங்க... டாக்டர்!”

“நகத்தைத்தானே...? வெட்டிடலாம்.”

வைபவ் வீறிட்டான். “மறுபடியும் பக்கத்துல வர்றா டாக்டர்…! அவ.. அவ.. என்... என் கழுத்தைக் கிழிச்சே... கொன்னுடுவா டாக்டர்.”

டாக்டர் பத்மநாபன் திரும்பி சுவரோரமாய்க் கண்ணீ, ரோடு நின்றிருந்த வைபவின் அப்பாவை ஏறிட்டார்.

“இன்னிக்கு வைபவை கண்ட்ரோல் பண்ண முடியாது போலிருக்கு.

ஒரு ஊசியைப் போட்டு தூங்கப் பண்ணிட வேண்டியதுதான். என்ன சொல்றீங்க. ஊசியைப் போடலாமா?

“போட்டுடுங்க டாக்டர்” வைபவின் அப்பா தலையாட்டினார்.

டாக்டர் பத்மநாபன் ஸிரிஞ்சில் மஞ்சளாய் ஒரு மருந்தை ஏற்றி வைபவின் புஜத்தில் போட, அடுத்த அறுபதாவது விநாடி, வைபவ் ஒரு குழந்தையைப் போல் குழறிக் கொண்டே தூங்கிப்போனான்.

வெங்கடேசன் வெடிக்கிற அழுகையோடு பத்மநாப னின் கைகளைப் பற்றிக் கொண்டார்.

“டாக்டர் வைபவுக்கு இந்தக் கொடுமையிலிருந்து விடிவே கிடையாதா?”

“ஸாரி வெங்கடேசன்…! நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி ‘ஸெடிமென்டோ மேனியா’ என்கிற இந்த மனச்சிதைவு நோய்க்கு ட்ரீட்மெண்ட்டே கிடையாது. ஒரு கண்ணாடிப் பாத்திரம் உடைஞ்சா அதை எப்படி மறுபடியும் ஒட்ட வெச்சு அதைப் பழையபடி பாத்திரமாக்க முடியாதோ, அதே மாதிரிதான் இந்த மனச்சிதைவையும் குணப்படுத்த முடியாது. அதே மாதிரி வைபவை வேற எந்த ஒரு சைக்யாட்ரிஸ்ட் டாக்டர்கிட்டே கொண்டு போனாலும் அது ஆபத்துலதான் முடியும். வைபவை சப்கான்ஷியஸ் மைண்டுக்குக் கொண்டு போய் பேச வெச்சா, அவன் சம்யுக்தாவை ரோடு ஆக்ஸிடெண்ட் மூலமா கொலை செஞ்ச விபரம் வெளியே வந்துடும். நான் உங்க குடும்ப டாக்டராய் இருக்கிறதால, எல்லா விஷயங்களையும் தெரிஞ்சுகிட்டு ஊமையாய் இருக்கேன். எல்லா டாக்டர்களும் அதே மாதிரி இருப்பாங்களா என்ன?”

“என் மகன் இப்படி ஒரு கொலையாளியாய் இருப்பான்னு நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கலை டாக்டர்.”

“நான் மட்டும் எதிர்பார்த்தேனா என்ன? வைபவை சப்-கான்ஷியஸ் மைண்டுக்கு உட்படுத்தி பேசிப் பார்த்த போது தானே எனக்கே அந்த பயங்கர உண்மை தெரிஞ்சது.”

வெங்கடேசன் டாக்டரை ஒரு பெருமூச்சோடு ஏறிட்டார். “இதிலிருந்து வைபவ் விடுபட என்னதான் வழி டாக்டர்?”

“ஒரு வழியும் இருக்கிற மாதிரி எனக்குத் தோணலை வெங்கடேசன்! தான் பண்ணின கொலையை யாராவது பார்த்து இருப்பாங்களோ என்கிற பயத்தில் வருகிற சந்தேகம் மூளையை உசுப்பும்போது, சில

நபர்கள் விரிச்சுவல் இமேஜ்களாக உருவாகி வைபவை ஆபீஸிலும் வீட்டிலும் பாடாய்ப் படுத்திக்கிட்டு இருக்காங்க. இன்னிக்கு ஒரு பெண் வந்திருக்கா. அவ தன் கை நகத்தால் வைபவைக் கீறி மிரட்டியிருக்கலாம். இது மாதிரி நிறையப் பேர் வைபவோட விரிச்சுவல் இமேஜ்களாக வரலாம். ஏன் நீங்க கூட வரலாம். நான் கூட வரலாம்...”

“ஒவ்வொரு ராத்திரியும் வைபவ் இந்தக் கொடுமைகளை அனுபவிக்கத்தான் வேணுமா டாக்டர்...?”

“இந்தக் கொடுமை ரொம்ப நாளைக்கு நீடிக்காது வெங்கடேசன்.”

“ஈஸிட் எப்படிச் சொல்றீங்க டாக்டர்?”

“ஒவ்வொரு ராத்திரியும் பயந்து பயந்து வைபவின் இருதயம் செல்லரிச்சப் பலகை மாதிரி ஆயிடுச்சு. இன்னும் ஒரே மாசம்... அவனுக்கு இந்தக் கொடுமையிலிருந்து ஆகஸ்ட் பதினைந்து.”

“டா.. டாக்டர்...!”

“அவனுடைய மரணத்துக்காக நீங்க ஒரு சொட்டுக் கண்ணீர் சிந்தினாலும் அது பாவம்…”

# 27 நுனிப்புல்

“புருஷன் பொஞ்சாதின்னு சொல்லிக்க வேண்டியது, ராத்திரி பூராவும் ரூம்ல தங்கி விடியறதுக்கு முன்னாடி ரூமை காலி பண்ணிக்கிட்டு ஆளுக்கொரு திசையில போயிட வேண்டியது. த்தூ!”

லாட்ஜின் ரிசப்ஷன் அறையில் அமர்ந்தபடி அன்றைய பேப்பரைப் புரட்டிக் கொண்டிருந்த நான், எனக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தவரின் பேச்சைக் கேட்டு தலை நிமிர்ந்தேன்.

ரிசப்ஷன் கௌண்டருக்கு அருகே, எனக்கு முதுகைக் காட்டியபடி ஒரு பொண்ணும், முகத்தைக் காட்டியபடி ஓர் இளைஞனும் நின்றிருந்தார்கள். எந்த ஆடவனுக்குமே போதையூட்டக்கூடிய பின்புறச் செழுமை அவளுக்குச் சொந்தமாயிருந்தது. முன்புறத்தில் எப்படியிருப்பாள் என்கிற ஆர்வம் மனசைக்குடைய - அவளுடைய முகத்தைப் பார்க்கும் முயற்சியில் மெல்ல எழுந்து நின்றேன்.

அதே விநாடியில் - அவளும் ஏதோ பேசும் பாவனை யில் அவன் பக்கம் திரும்ப-

இவள்...? இவள்...?

மனம் ஏகப்பட்ட வியப்போடு ஆயிரமாயிரம் கேள்விக்குறிகளை எழுப்ப, மூளை இவள் 'சரவணனின் மனைவி மல்லிகா' என்றது.

இதயம் பூராவும் திக்கென்று உதறிக்கொள்ள மல்லி காவையே பார்த்தேன். கூட வந்தவனையும் மெல்ல அளந்தேன். கறுப்பாய்,தாட்டியாய், முகம் நிறைய மீசையை வைத்துக்கொண்டு ரூம் வேண்டும் என்று ஓட்டல் மானேஜரிடம் கெஞ்சிக் கொண்டிருந்தான்.

மல்லிகா அந்த இளைஞனின் தோளோடு இழைந்தபடி நின்றிருந்தாள். முகத்தில் தெரிந்த அதிகப்படியான பவுடரும், உதட்டில் உறைந்திருந்த வெற்றிலைக் காவி யும் என் பார்வையை நெருடின.

அந்த இளைஞன் ஒட்டல் மானேஜரிடம் சொல்லிக் கொண்டிருந்தான். "ஸார், நாங்க இந்த கோயமுத்தூருக்குப் புதுசு, ரெண்டு மாசத்துக்கு முன்னாடிதான் எங்களுக்கு கல்யாணமாச்சு. நாளைக்கு காத்தாலே அஞ்சு மணிக் கெல்லாம் ரூமை காலி பண்ணிட்டு ஊட்டி பஸ்ஸைப் பிடிக்கப் போயிடுவோம். எப்படியாவது அட்ஜஸ்ட் பண்ணி ரூம் குடுங்க ஸார்."

அவன் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த எனக்கு ரத்தம் தளதளத்தது.

என்ன ஒரு அப்பட்டமான பொய்.

சென்ற ஜூலை மாதக் கடைசி வாரத்தில் - சோமனூர் அய்யன் கோயில் கல்யாண மண்டபத்தில் - மண மேடையில் உட்கார்ந்திருந்த சரவணனின் கையைப் பற்றி அதிகப்படியாய்க் குலுக்கி - அவனுக்கு அருகில் அமர்ந்திருந்த மல்லிகாவைப் பார்த்தபடியே "டேய் சரவணா, நீஆசைப்பட்ட மாதிரியே பொண்ணு ஏகப்பட்ட அழகோடு கிடைச்சிருக்கா. பாத்து ஹேண்டில் பண்ணு. முதல் வருஷத்திலேயே அப்பா ஆயிடாதே!" என்று நான் சொல்ல, மல்லிகாவின் குப்பென்று ரத்தத்தைப் பூசிக் கொண்ட மாதிரி வெட்கத்தில் சிவந்த அந்தக் காட்சி...

ஒட்டல் மானேஜர் என்னைப் பார்த்துச் சிரித்தார்.

"என்ன ஸார், அப்படியே திகைச்சுப் போய் நின்னுட்டீங்க?"

நான் அவரை நெருங்கினேன். திணறும் குரலில் கேட்டேன்.

“இந்த ஜோடி..?”

ஓட்டல் மானேஜர் கீழ்ஸ்தாயியில் கிசுகிசுத்தார்...” பார்த்தாலே தெரியலையா ஸார்?”

“தெரிஞ்சும் ரூமை ஏன் குடுத்தீங்க?”

“வாஸ்தவமான கேள்விதான். இன்னிக்குன்னு பாத்து ஏகப்பட்ட ரூம்ஸ் வேகன்ஸியா இருக்கே! நான் அதிகமா சொன்ன வாடகைக்கும் ஒத்துக்கிட்டானே....”

மேனேஜர் சொல்லச் சொல்ல எனக்கு மனசெல்லாம் கசந்து வழிந்தது.

விடுவிடுவென்று என் அறைக்குப் போய் - ப்ரீஃப் கேஸைத் திறந்து டயரியை எடுத்துப் பிரித்தேன். முதல் பக்கத்தில் இருந்த சரவணன் வீட்டு போன் நம்பரை மனசில் இருத்திக் கொண்டு திரும்பவும் ரிசப்ஷன் கௌண்டரை நெருங்கினேன்.

வெற்றிலைச் சீவலை வாயில் அதக்கியபடி லெட்ஜரில் எதையோ எழுதிக் கொண்டிருந்த மானேஜரிடம் சொன்னேன்.

“ஸார், திருப்பூர்க்கு ஒரு எஸ்.டீ.டி.கால் போடணும்.”

“தாராளமா போடுங்களேன்!” போனை நகர்த்தி வைத்தார் மானேஜர்.

நான் எண்களைச் சுழற்றினேன் படபடப்போடு. இரண்டு தடவை என்கேஜ்ட் டோன் கேட்ட பிறகு மூன் றாவது தடவை லைன் கிடைத்தது.

“ஹலோ!” உரக்கக் கத்தினேன்.

மறுமுனையில் சரவணனின் அம்மா பேசினாள். “ஹலோ! யார் பேசறது?”

“நான் தாம்மா, ராஜேஷ் பேசறேன்.”

மறுமுனையில் சரவணனின் அம்மா வாய்விட்டு சிரித்தாள். “எமப்பயடா நீ சோமனூர்லே தாலி கட்டறதுக்கு முன்னாடி சரவணனைப்பார்க்க வந்துட்டுப் போனவன்... இப்பத்தான் போன்லே பேசறையாடா? ஒடுகாலிப் பயலே! டூர் போற வேலை எல்லாம் எப்படி இருக்கு? கோயமுத்தூர்லேருந்தா பேசறே?”

“ஆமாம்மா, சரவணன் இல்லையா?”

“இல்லையேப்பா, சினிமாவுக்குப் போறதாச் சொல்லிட்டுப் போனான்.”

“அவன் மட்டுமா? இல்லே பெண்டாட்டியையும் கூட் டிட்டுப் போயிருக்கானா?”

டெலிபோனில் ஏதோ கொறகொறவென்ற சப்தம். “ஹலோ... ஹலோ...”

நான் பரபரப்புடன் காத்திருந்தேன்.

லைன் மறுபடியும் நிதானித்தது. “அம்மா, நான் ராஜேஷ்! சரவணன் பெண்டாட்டியையும் கூட்டிக்கிட்டு சினிமாவுக்கு போயிருக்கானா?”

“இல்லப்பா, அவன் தனியாத்தான் போயிருக்கான்.”

“அந்தப் பொண்ணு வீட்லதானே இருக்கு?”

“இல்ல. அது கோயமுத்தூர்லேயே இருக்கணும். அதை யெல்லாம் போன்ல பேச வேண்டாம். நீ திருப்பூருக்கு வரும்போது வியாக்யாணமாச் சொல்றேன்.”

டெலிபோனை வைத்துவிட்டுக் குழப்பத்துடன், அறைக்குள் போய் விழுந்தேன். பக்கத்து அறையிலிருந்து அந்தச் சிரிப்பும், கொஞ்சலும், சிணுங்கலும், வளையல் சத்தமும் கதம்பமாய் எழுந்தது.

“ச்சீர் விடுங்க.. கட்டியிருக்கிற புடவையெல்லாம் கசங்குது.”

மல்லிகாவின் குரல்தான்!

இனி விடிய விடிய இந்த அவஸ்தை இருக்கும்.

மல்லிகா குழந்தையாய்க் கொஞ்சிக் கொஞ்சிப் பேசிக் கொண்டிருந்தாள். “நீங்க மொதல்ல குளிச்சிட்டு வாங்க. அதுக்குள்ளாற என்ன அவசரமாம்!”

“பாத்ரூம்ல தண்ணி வரல்ல மல்லிகா.”

“ஓட்டல் மானேஜரை போன்ல கூப்பிட்டு சொல்லுங்க.”

சிறிது நேரம் நிசப்தம். ஒரு வேளை மானேஜரைக் கூப்பிட்டுச் சொல்லப் போயிருக்கிறானோ, என்ன கருமமோ...

மல்லிகா சிரிக்கும் சப்தம் கேட்டது.

“அந்த பாத்ரூம்லேயும் தண்ணி நின்னுடப்போவது. இந்தாங்க டவல், சோப்பு, சீக்கிரமா போய் குளிச்சிட்டு வாங்க. நீங்க குளிச்சிட்டு வந்ததும் நான் குளிக்கக் கிளம்பணும்.”

“மல்லிகா!”

“உம்..”

“நாம ரெண்டு பேரும் தனித்தனியா குளிச்சு எதுக்காக டயத்தை வேஸ்ட் பண்ணனும்? ஒண்ணாவே குளிச்சுடலாமா?”

“ச்ச்சிய்!”

கதவை அடித்துச் சாத்தினாள் மல்லிகா.

அவன் டவலோடும், சோப்புப் பெட்டியோடும் என் அறையைக் கடந்து கொண்டிருந்தான்.

பாத்ரூமுக்குள் நுழைந்த அவன் குளித்துவிட்டு வர எப்படியும் ஒரு கால்மணி நேரமாகும்.அவன் வருவதற்குள் மல்லிகாவின் அறைக்குப் போய், அவளுடைய வேஷத்தைக் கலைத்துப் பார்த்தால் என்ன?

புறப்பட்டேன்.

“டொக்... டொக்... டொக்...” தட்டினேன்.

“யாரது?”

நான் பதில் பேசாமல் நின்றேன்.

“டொக்... டொக்...”

தாழ்ப்பாள் விலக - கதவு திறந்தது.

மல்லிகா நின்றிருந்தாள். என்னைப் பார்த்ததும் அவளுடைய அழகான நெற்றியில் சின்னதாய் ஒரு குழப்ப முடிச்சு.

“நீங்க..?” என்றாள்.

“என்னை உனக்குத் தெரியலையா?”

“எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கு. ஓ... ரிசப்ஷன்லே...”

அவள் அலட்சியமாய்ச் சொல்ல என்னுள் எரிச்சல் கிளம்பியது. என் மோவாயைத் தேய்த்தபடி - அவளையே குறுகுறுவென்று பார்த்தபடி

சொன்னேன்.

“என்னோட பேருராஜேஷ், சரவணனோட நண்பன்.”

மல்லிகாவின் முகம் சட்டென்று இருண்டது.

எல்லாமே சில விநாடிகளுக்குத்தான்.

மல்லிகா பழைய நிலைக்குத் திரும்பினாள். உதடு களில் ஒரு ஏளனப் புன்னகை, குரலில் எகத்தாளம்.

“ஓ! நீங்க சரவணனோட பிரண்டா?”

“ஆமாம்.... உன் கணவர் சரவணனுக்கு நான் ப்ரண்ட்.”

“சரவணன் என்னோட கணவரா... என்ன உளர்றீங்க?”

“பின்னே அவன் உனக்கு அண்ணனா? போன ஜூலை மாசம் இருபதாம் தேதி சோமனூர் அய்யன் சன்னதியில்...”

நான் பேசப் பேச மல்லிகாவின் முகத்திலிருந்த கோபம் மெல்ல மெல்ல விலகி, மெல்லிய குரலில் கேட்டாள்.

“சோமனூர் அய்யன் கோயிலுக்கு வந்திருந்தீர்களா?”

“ஆமா!”

“இதுவரைக்கும் நீங்க சொன்னதெல்லாம் சரிதான். ஒத்துக்கறேன். இப்போ நான் கேக்கப்போற ஒரு கேள் விக்கு மட்டும் யோசிச்சு பதிலைச் சொல்லுங்க. உங்க நண்பர் சரவணன் எனக்கு தாலி கட்டினதைப் பார்த்தீங்களா?”

யோசித்தேன்.

ஆபீஸ் விஷயமாய் மும்பை, புறப்படுகிற நாளும் சரவணனுடைய திருமண நாளும் ஒரே தேதியில் வர - ரயிலை திருப்பூர் ஸ்டேஷனில் பிடிப்பதற்காக அவசரப் பட்டு - மணவறையில் அமர்ந்திருந்த சரவணனின் கையைப் பற்றி குலுக்கி வாழ்த்துக்களை உதிர்த்து விட்டு ஓடின சம்பவம் என் மனசின் ஓரத்தில் நெளிந்தது.

“உங்க நண்பர் சரவணன் எனக்குத் தாலி கட்டியிருந்தா அவர் எனக்கு கணவர்தான்! ஆனா அவர்தான் தாலி கட்டாம எழுந்திரிச்சுப் போயிட்டாரே!”

“ஏன்?” ஆழமாய் திகைத்துப் போய்க் கேட்டேன்.

“அவர் உங்ககிட்ட ஒண்ணும் சொல்லலையா?”

“இல்லே. அதுக்குப் பின்னாடி நான் அவனைப் பார்க்கல்ல.”

“அப்ப... நான் சொல்றேன்... பேசின வரதட்சணைப் பணத்தை வச்சாத்தான் பையன் கையில தாலியைத் தொடுவான்னு, அவங்கப்பா சொல்லிட்டார். எங்கப்பா வாலே திரட்ட முடியலே. பேசினபடி தந்துறதா அவகாசம் கேட்டுப் பார்த்தார். அவங்க கேக்கல்லே. கெஞ்சிப் பார்த்தார். மசியல்லே. பொம்பளை மாதிரி அழுதும் பார்த்தார். பிடிவாதம் தளறலே. எங்கப்பாவுக்கு வெறிபிடிச்ச மாதிரி கோபம் வந்துடுச்சு. கத்திட்டார். நிமிஷ நேரத்துல அவங்க ஜனம் பூராவும் போய்ட்டாங்க. அதே மணவறைக்கு வந்திருந்த அப்பாவோட நண்பர் ஒருத்தர் தன் மகனை எம் பக்கத்திலே உட்கார வெச்சு கல்யாணத்தை முடிச்சார். எனக்கு கணவரா வாய்ச்சிருக்கிறவர் கறுப்புதான். ஆனா காசாசை பிடிச்சவர் இல்லை...”

“ஐயாம் ஸாரி... நான் உங்களை தப்பா புரிஞ்சுகிட் டேன்” என்ற குரல் நெகிழச் சொல்லிவிட்டு மல்லிகாவை விட்டு மெல்லப் பின்வாங்கினேன்.

# 28. வேலி

“அய்யா.....!”

பஸ் ஸ்டாண்டின் ஒரு மூலையில் இருந்த - தன் சிறிய பெட்டிக் கடையை சாத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்த சோலையப்பன் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான்.

அந்த அழகான இளம் கிராமத்துப் பெண்ணும், அந்த இளைஞனும் தெரிந்தார்கள். பெண் கையில் பெயிண்ட் அடித்த தகரப் பெட்டியும், அவன் கையில் ஒரு காக்கி நிறத் துணிப் பையும் இருந்தன. நேரம் ராத்திரி பதினோரு மணியைத் தாண்டியிருந்தது.

“என்ன?”

“அய்யா! கோயமுத்தூர் போற கடைசி பஸ் போயிருச்சுங்களா?”

“அது எப்பவோ போயிருச்சு. இனிமே விடிகாலை அஞ்சு மணிக்குத்தான்.”

இரண்டு பேரின் கண்களிலும் பீதி படர்ந்தது. சோலை யப்பன் கடைசிப் பலகையால் கடையை அடைத்துக் கொண்டே கேட்டான்.

“உங்களுக்கு எந்த ஊரு?”

“கொள்ளேகாலம்.”

“புருஷன் பொஞ்சாதியா?”

“ஆமாங்க.”

“ஏதாவது ஓர் ஊருக்குப் போகணும்னா, நேரா நேரத்துக்குப் புறப்பட்டு வர்றதில்லையா?”

“வழியில பஸ்ஸு... ரிப்பேர்ங்க...”

“அப்படிப் போய் அந்த பஸ் ஷெல்டர்க்குக் கீழே ஒண்டிக்குங்க. அஞ்சு மணிக்கு கோயமுத்தூர் போற மொத பஸ் வரும். பிடிச்சு ஊர் போய்ச் சேருங்க.”

சோலையப்பன் பூட்டை இழுத்துப் பார்த்து விட்டுக் கிளம்பிவிட, அந்தக் கிராமத்துப் பெண்ணும் இளைஞனும் பஸ் ஷெல்டர்க்கு வந்து, அங்கிருந்த சிமெண்ட் பெஞ்சில் உட்கார்ந்தார்கள்.

“என்னங்க, இப்படி ஆயிப்போச்சு.”

“எல்லாம் உன்னாலதான். உன்ற ஆத்தாளைப் பாக்கிறதுக்குக் காத்தாலே பொறப்பட்டுப் போகலாம்னு சொன்னேன். நீதான் கேட்கலை.”

“சரி. சரி. கத்தாதீங்க. அந்த தாணாக்காரர் நம்மளையே பார்த்துட்டு வர்றாரு.”

“வரட்டுமே. நாமென்ன கொள்ளை அடிச்சமா? கொலை பண்ணினமா?”

அந்த கான்ஸ்டபிள் பக்கத்தில் வந்தார். கையில் வைத்திருந்த லாட்டியால் அந்த இளைஞனின் தோளைத் தட்டினார்.

“எந்த ஊருடா?”

“கொள்ளேகாலம்ங்க”

“எங்கே போகணும்...?”

“கோயமுத்தூரு.”

“இவ யாரு..?”

“என் பொஞ்சாதிங்க.”

“ஏண்டா, நீ கரிக்கட்டையாட்டம் இருக்கே... இவ சிவப்பா அழகா இருக்கா. இவ்வளவு அழகான பொண்ணு உன்னைக் கட்டிக்குவாளா? நிஜத்தைச் சொல்லிடு. இவளை யாருக்கு சப்ளை பண்றதுக்காக எங்கிருந்து கூட்டிட்டு வர்றே?”

இளைஞன் ‘திக்’கென்று விழித்தான். கான்ஸ்டபிள் சிரித்தார்.

“என்னடா அப்படி பார்க்கறே? உன்னை மாதிரி எத்தனை மாமா பசங்களை நான் பார்த்திருப்பேன்? உண் மையைச் சொல்லுடா... இவளை வெச்சுத் தொழில் பண்றவன் தானே நீ?”

கிராமத்து இளைஞன் பதை பதைத்துப் போய் கும்பிட்டான் “அய்யா, தாணாக்காரரே! இவ என் தாலி கட்டின பொஞ்சாதிங்க. கழுத்திலே பாருங்க தாலி.”

கான்ஸ்டபிள் கையில் இருந்த லாட்டி இப்போது நீண்டு அந்த கிராமத்துப் பெண்ணின் கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த தாலிக் கயிற்றைத் தொட்டது. “ரெடிமேட் தாலி. நல்லாதான் இருக்கு.”

பெண் மருட்சியோடு விலக - கான்ஸ்டபிள் அவளை நெருங்கினார்.

“ஏய். உம் பேர் என்ன?”

அவள் உடம்பு நடுங்கியது.

“மரிக்கொழுந்து.”

“ஊ...ஹூம்... உன்னோட பார்வையே சரியில்லை. நீ தொழில்காரிதானே?”

அவள் கணவனுக்குப் பின்னால் ஒண்டிக் கொண்டாள். “என்னங்க இவர் என்னென்னவோ சொல்றாரு…”

கான்ஸ்டபிள் கணவனின் புஜத்தைத் தட்டினார். “சரி ரெண்டு பேரும் புறப்படுங்க…”

“எங்கேங்க?”

“போலீஸ் ஸ்டேஷனுக்கு.”

“எதுக்கு?”

“டேய். என்ன எதுக்குன்னு கேள்வி கேட்ட, உன்னோட முட்டியை இங்கே வெச்சே பேர்த்துருவேன். நட்றா, ஸ்டேஷனுக்கு, அங்கே போய் உன்னை விசாரிச்சா எல்லா உண்மையும் தானாக வெளியே வரும்.”

இருவரையும் நெட்டித் தள்ளிக் கொண்டு, போலீஸ் ஸ்டேஷன் இருந்த திசைப் பக்கமாய் நடக்க ஆரம்பித்தார், கான்ஸ்டபிள்.

போலீஸ் ஸ்டேஷன்.

வைரம் பாய்ந்த உடம்புக்கு காக்கி யூனிஃபார்மைக் கொடுத்து ஒரு கல் தூண் மாதிரி இருந்த இன்ஸ்பெக்டர் கலியபெருமாள் தன் எதிரே வெடவெட உடம்புகளோடு நின்றிருந்த அந்தக் கிராமத்துத் தம்பதிகளைப் பார்த்தார். அவருடைய இடது கையின் ஆட்காட்டி விரல் காலையில் டை அடித்த மீசையையும், கிருதாவையும் தன்னிச்சை யாய் தடவிக் கொண்டிருந்தது. கிராமத்து இளைஞனின் மேல் பார்வை அழுத்தமாய் விழுந்திருந்தது.

“உம் பேர் என்னடா?”

“மயில்சாமிங்க.”

“இவ உன் பொஞ்சாதியா?

“ஆமாங்க.”

“எப்ப கல்யாணமாச்சு?

“ஆறு மாசத்துக்கு முன்னாடி.”

“கோயமுத்தூர் பஸ்ஸை பிடிக்கிறதுக்காகவா கொள்ளே காலிலிருந்து இந்த ஊருக்கு வந்தே?”

“ஆமாங்க.”

“கோயமுத்தூர்ல யாரு இருக்கா?”

அந்தப் பெண் மரிக்கொழுந்து குறுக்கிட்டுச் சொன்னாள்.”கோயமுத்தூர் என்னோட அம்மா ஊருங்க. அம்மா வுக்கு உடம்பு முடியலைன்னு கடுதாசு வந்ததுங்க. உடனே

பொறப்பட்டு வந்தோம்.”

“கடுதாசி வெச்சிருக்கியா?”

மரிக்கொழுந்து திருதிருவென்று விழித்துவிட்டு தலையாட்டினாள். “அந்தக் கடுதாசி வுட்ல இருக்குங்க.”

“சரி. ரெண்டு பேரும் போய் அந்தச் சுவரோரமா உட்காருங்க.”

“அய்யா, நாங்க எந்தத் தப்பும் பண்ணலை.”

“போய் அப்படி உட்காருங்க மொதல்ல...” குரலை உயர்த்தி இன்ஸ்பெக்டர் சொன்னதும் மயில்சாமியும், மரிக்கொழுந்தும் மிரட்சிப் பார்வைகளோடு சுவரோரமாய்ப் போய் குத்துக்காலிட்டு உட்கார்ந்தார்கள்.

இன்ஸ்பெக்டர் கலியபெருமாள் கொஞ்சம் தள்ளி நின்றிருந்த கான்ஸ்டபிளை கையசைத்துக் கூப்பிட்டார்.

“இங்க... வாய்யா...”

“ஸார்...”

கான்ஸ்டபிள் பக்கத்தில் வந்தார்.

“ஏன்யா, ஒரு பெண்ணோட முகத்தைப் பார்த்தாலே இவ குடும்பப் பெண்ணா, அவிசாரியான்னு புரிஞ்சுக்க முடியாது? ஒர் அப்பாவி கிராமத்துப் பெண்ணைப் போய், சந்தேகப்பட்டு கூட்டிட்டு வந்திருக்கியே...”

“அது... வந்து. ஸார்...”

“என்னய்யா வந்து போயி..? தொழில் பண்றவகிட்ட யெல்லாம் காசை வாங்கிக்க வேண்டியது. பஸ்ஸுக்காகக் காத்துக்கிட்டிருக்கிற குடும்பப் பெண்ணை அவிசாரின்னு சொல்லி கூட்டிட்டு வந்துட வேண்டியது.”

“ஆள் கரிக்கட்டி நிறத்துல ஒரு மாதிரியா இருந்தான். பொண்ணு அம்சமா இருந்தா... அதான் ஸார்... சந்தேகம் வந்து...”

“நீயெல்லாம் போலீஸ் வேலைக்கே லாயக்கு கிடையாது. ஏதாவது ஒரு பங்களா கேட் வாசல்ல காக்கி யூனி ஃபார்மை போட்டுக்கிட்டு வாட்ச்மேனாநிக்கத்தான் சரி…” சொன்ன கலியபெருமாள் நாற்காலியை வேகமாய் பின்னுக்குத் தள்ளிக் கொண்டு எழுந்தார்.

சுவரோரமாய் குத்துக்காலிட்டு உட்கார்ந்திருந்த அந்த இருவரிடமும் வந்து நின்றார்.

அவர்கள் மிரண்டுபோய் கும்பிட்டார்கள். கலியபெருமாள் அவர்களிடம் குனிந்தார்.

“பயப்படாதீங்க... பஸ் இறங்கினதும் ஏதாவது சாப்பிட்டீங்களா?”

“இ... இல்ல...”

“சாப்பிடறிங்களா?”

“ஒ... ஒண்ணும் வேண்டாங்க…”

“வேண்டாமா? சாப்பிடாமே இருந்தா எப்படி? உங்க ரெண்டு பேரையும் பார்த்தா தப்பு பண்றவங்களா எனக்குத் தோணலை. நாங்க உங்களை ஒண்ணும் பண்ணிட மாட்டோம்.”

“அப்படீன்னா, எங்களை விட்டுருங்கய்யா...” அழுகைக் குரலில் சொன்ன மயில்சாமியை புன்னகையோடு பார்த்தார் கலியபெருமாள்.

“விட்டுட்டா இந்த ராத்திரியில எங்கே போவே? உன் பெண்டாட்டி லட்சணமா வேற இருக்கா. ராத்திரி பதினோரு மணிக்கு மேல இந்த ஊரு ரொம்பவும் கெட்ட ஊரு. பேசாம இங்கேயே சாப்பிட்டுட்டுப் படுத்துத் தூங்கிட்டு நாளைக்குக் காலையில அஞ்சு மணிக்கு முதல் பஸ்ஸை பிடிச்சுக் கோயமுத்தூர் போயிடலாம்.”

சொன்ன இன்ஸ்பெக்டர், கான்ஸ்டபிளிடம் திரும்பினார்.

“இங்கே வாய்யா..!”

அவர் வேகமாய் வந்தார்.

“நாயர் புரோட்டா ஸ்டால் இந்நேரத்துக்கு திறந்து இருக்குமா?”

“திறந்திருக்கும் ஸார்...”

“போய் ரெண்டு செட் புரோட்டா வாங்கிட்டு வந்து குடு. அப்புறம் உள்ளே இருக்கிற ரிக்கார்ட் ரூமை கொஞ்சம் சுத்தம் பண்ணி பெட்வீட் விரிச்சிரு. சாப்பிட்டு ரெண்டு பேரும் ஒரு தூக்கம் போடட்டும்.”

“எ... எஸ்... ஸார்...” கான்ஸ்டபிள் சல்யூட் அடித்து விட்டு நகர, மயில்சாமியும் மரிக்கொழுந்தும் இன்ஸ்பெக்டரின் முகத்தையே

பிரம்மிப்பாய் பார்த்தார்கள்.

விடியற்காலை நாலரை மணி.

ரிக்கார்ட் அறையில் தூங்கிக் கொண்டிருந்த இரண்டு பேரையும் கான்ஸ்டபிள் எழுப்பினார். “இன்ஸ்பெக்டர் அய்யா கூப்பிடறார். எந்திரிச்சு வாங்க.”

மயில்சாமியும் மரிக்கொழுந்துவும் கலக்கமாய் எழுந்து போனார்கள். கலியபெருமாள் சிகரெட் புகை வாயோடு சிரித்தார்.

“நல்லா தூங்கினிங்களா?”

தலையை ஆட்டினார்கள்.

“சரி. உங்க பெட்டியையும், பையையும் எடுத்துக்குங்க. நான் இப்ப வீட்டுக்குக் கிளம்பிட்டிருக்கேன். ஜிப் போற வழியிலதான் பஸ் ஸ்டாண்ட். அங்கே இறக்கி விட்டுட்டுப் போறேன்.”

“அய்யா... நீங்க நல்லாயிருக்கணும்.” இருவரும்கும் பிட்டார்கள்.

“ம்... வாங்க...”

வாசலில் நின்றிருந்த ஜிப்பை நோக்கிப் போனார், கலியபெருமாள். இருவரும் பெட்டி, பையோடு பின் தொடர்ந்தார்கள்.

“ஏறி உட்காருங்க...”

ஜீப்பின் பின்பக்கக் கதவைத் திறந்துவிட்டு - அவர்கள் ஏறிக் கொண்டதும் - ட்ரைவிங் சீட்டுக்கு வந்து ஸ்டீரி யங்கைப் பிடித்தார் கலியபெருமாள். கான்ஸ்டபிளும் ஏறிக் கொண்டார்.

ஜிப்பில் ஐந்து நிமிஷ வேகமான பயணம்.

பஸ் ஸ்டாண்ட் வந்தது.

வெவ்வேறு ஊர்களுக்கு புறப்பட்டுப் போகக் காத்திருந்த பஸ்களில் சொற்பமான ஜனக்கூட்டம்.

கோயமுத்தூர் பஸ்ஸைக் கண்டுபிடித்து - அதற்கு முன்பாய்ப் போய் ஜிப் நின்றது. கலியபெருமாள் திரும்பிப் பார்த்தார்.

“பஸ் தயாரா நிக்குது. போய் ஏறிக்குங்க. இனிமேல் இப்படி எந்த ஊர்ல போயாவது மாட்டிக்காதீங்க.”

“அ... அ... அய்யா...”

“கும்புடாதீங்க. போய் பஸ்ல ஏறுங்க. பத்திரமா போய் ஊர் சேருங்க.”

மயில்சாமியும் மரிக்கொழுந்தும் நனைந்த கண்களோடு போய் பஸ்ஸில் ஏறிக் கொள்ள ஜிப் புறப்பட்டது.

பஸ் ஸ்டாண்டுக்குள் வெளியே ஜீப் வந்ததும் - கான்ஸ்டபிள், இன்ஸ்பெக்டர் கலியபெருமாளை ஆச் சர்யமாய் ஏறிட்டார்.

“ஸார்.”

“ம்...”

“கிராமத்துப் பொண்ணு. அழகா வேற இருந்தா. உங்களுக்குப் பிடிக்குமேன்னு கூட்டிட்டு வந்தேன். நீங்க என்னான்னா. அவளைத் தொட்டுக்கூடப் பார்க்காம ராஜ உபசாரம் பண்ணி அனுப்பிச்சுட்டீங்க. எதுக்கு சார் இந்த உத்தமபுத்திரன் வேஷம்?”

கலியபெருமாள் மீசைக்குக் கீழே வெள்ளையாய்ச் சிரித்தார்.

“காரணமாத்தான்...”

“என்ன காரணம் ஸார்?”

“நம்ம டிபார்ட்மெண்ட்ல இருக்கற மேல் அதிகாரிகள் என்னைக் கையும் களவுமா பிடிக்கறதுக்காகப் பொறி வெச்சாங்க. அதிலிருந்து தப்பிக்க வேண்டாமா?”

“பொறியா?”

“ஆமா..! நம்ம ஸ்டேஷன்ல வெச்சு ரெண்டு மூணு பெண்களை கெடுத்த விஷயம் எப்படியோ மேலிடத்துக்குத் தெரிஞ்சிருக்கு தகுந்த ஆதாரம் இல்லாததால நம்ம மேல எந்த நடவடிக்கையும் எடுக்க அவங்களால முடியலை. இப்ப என்னைக் கையும் களவுமா பிடிக்கிறதுக்காக மரிக்கொழுந்து, மயில்சாமிங்கற பேர்கள்ல ரெண்டு பேரை - கிராமத்துப் புருஷன் பொஞ்சாதி மாதிரி அனுப்பி வெச்சு என்னை ஆழம் பார்த்திருக்காங்க. மரிக்கொழுந்து கிட்ட நான் தப்பா நடந்திருந்தா, அந்த நிமிஷமே நான் மாட்டியிருப்பேன்.”

கான்ஸ்டபிள் கண்களை அகல விரித்தார்.

“மயில்சாமியும் மரிக்கொழுந்தும் மேலதிகாரிகளால அனுப்பப்பட்டவங்கன்னு உங்களுக்கு எப்படி ஸார் தெரியும்...?”

“நீ அந்த ரெண்டு பேரையும் ஸ்டேஷனுக்குக் கூட்டிட்டு வர்றதுக்கு பத்து நிமிஷத்துக்கு முந்தி எனக்கு ஒரு டெலிபோன் கால் வந்தது. போன்ல ஒரு குரல். ‘ஸார்... நான் உங்க டிபார்ட்மெண்ட்தான். க்ரைம் ப்ராஞ்ச். உங்களை ‘ட்ராப்’ பண்றதுக்காக மேலிடம் திட்டம் போட்டிருக்கு. ஒரு கிராமத்துக் கணவன் - மனைவி மாதிரி ஒரு ஜோடி. ஸ்டேஷனுக்கு வருவாங்க. பெண்கள்கிட்டே நீங்க வழக்கமா காட்ற வேலையை அவங்கக்கிட்டே காட்டிடாதீங்க. கைக்கு விலங்கு ஏறிடும். வர்றவங்களை ஸ்டேஷன்ல பாதுகாப்பா வெச்சு அனுப்பிடுங்க! எனக்கு மனசு கேட்காததினால போன் பண்ணி விஷயத்தை உங்ககிட்டே சொல்லிட்டேன்! இப்படி ஒரு போன் வந்த பிறகு நான் உத்தம புத்திரன் வேஷம் போட்டுத்தான் ஆகணும்” சொல்லிவிட்டு கலியபெருமாள் சிரிக்க –

“நல்ல காரியம் பண்ணிங்க ஸார்...” தலையாட்டிய கான்ஸ்டபிளும் அந்த சிரிப்பில் கலந்து கொண்டார்.

அதே விநாடிகளில் –

பஸ் ஸ்டாண்டில்... பெட்டிக் கடையைத் திறந்து கொண்டிருந்த சோலையப்பன் பக்கத்தில் உதவிக்கு நின்றிருந்த தன்னுடைய மனைவியிடம் நமட்டுச் சிரிப்போடு கண்ணைச் சிமிட்டியபடி சொன்னான்.

“நான் மட்டும் சரியான நேரத்துக்கு போலீஸ் ஸ்டேஷனுக்கு போன் பண்ணி க்ரைம் ப்ராஞ்ச் டிபார்ட்மெண்ட் ஆள் மாதிரி பேசி ஒரு பொய்யைச் சொல்லாமே இருந் திருந்தா, அந்த இன்ஸ்பெக்டர் கலியபெருமாள் அந்த அப்பாவி கிராமத்துப் பொண்ணைத் தொட்டு நாசமாக்கி யிருப்பான். நான் போன்ல சொன்ன பொய்க்கு எவ்வளவு மரியாதை பார்த்தியா? கிராமத்துப் பொண்ணையும் அவ புருஷனையும் தானே ஜீப்ல கொண்டு போய் பஸ்ல ஏத்திவிட்டுட்டுப் போறான்.”

ஒரு கிராமத்துப் பெண்ணின் கற்பை காப்பாற்றிவிட்ட சந்தோஷத்தில் அன்றைய தின பெட்டிக் கடை வியா பாரத்தை ஆரம்பித்தான், சோலையப்பன்.

# 29. பனித்துளி கிரீடங்கள்

மழை லேசாகத் தூறிக்கொண்டிருந்த அந்த மத்தியான நேரத்தில் தன் அறையிலிருந்து வெளிப்பட்ட ஃபாதர் பரிசுத்தம், புல்தரை வழியே நடந்து ‘சர்ச்’சை நோக்கிப் போனார்.

இது கன்ஃபெஷன் நேரம்.

யாராவது வந்து காத்துக் கொண்டிருக்கலாம். மார்பிள் படிக்கட்டுகளில் உயரும்போது துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த இரண்டு பெண்கள் “வணக்கம் ஃபாதர்” என்று சொல்லி விலகி நிற்க. அவர்களை ஆசீர்வதிக்கிற விதத்தில் வலது கையை உயர்த்திக் காட்டி விட்டு சர்ச் ஹாலின் மூலையில் இருந்த கன்ஃபெஷன் நாற்காலியை நோக்கிப் போனார்.

நாற்காலிக்கு மூன்று பக்கமும் முகம் தெரியாத படிக்கு நெட் அடிக்கப்பட்டிருக்க, ஃபாதர் பரிசுத்தம் உள்ளே போய் நாற்காலிக்குச் சாய்ந்து கொண்டார்.

‘நெட்’டுக்குப் பின்பக்கம் யாரோ உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

ஃபாதர் தலையைச் சற்றே சாய்த்து காதுகளுக்கு மட்டும் உன்னிப்பைக் கொடுத்துவிட்டுக் கண்களை மூடிக் கொண்டார்.

மறுபக்கம் குரல் ஒலிக்க ஆரம்பித்தது.

ஓர் இளைஞனின் குரல் சற்றே உடைந்த அழுகை கலந்த குரல்.

“ஃபாதர்... கடந்த அஞ்சு வருஷகாலமா என்னோட மனசுக்குள்ளே ஒரு சுமைதாங்கிக்கல் மாதிரி நின்னுட்டிருந்த பாரத்தை - அந்தப் பாவத்தை இறக்கி வைக்கிறதுக்காக வந்திருக்கேன். கர்த்தரின் ரட்சிப்பு எனக்குக் கிடைக்குமா ஃபாதர்...?”

“ரட்சிக்கத்தான் கர்த்தர் இந்தப் பூமிக்கு வந்தார். அவர் யாரையும் தண்டிக்கமாட்டார். உன்னோட பாரத்தை இறக்கி வைக்கலாம்...”

அவன் சில விநாடிகள் மௌனமாக இருந்துவிட்டு பின் அதே உடைந்து போன குரலில் பேச்சை ஆரம்பித்தான்.

“ஃபாதர். நான் சிறு வயசிலேயே அப்பா அம்மாவை இழந்துட்டவன். மாமா வீட்லதான் தங்கிப் படிச்சேன். படிப்பை முடிச்சுட்டு வேலைக்காக முயற்சி பண்ணிட்டிருந்த நேரம் அது. மாமா வீட்டுக்கு எதிர்வீட்ல ஒரு விதவைத் தாயும் அந்த அம்மாவோட பெண்ணும் இருந்தாங்க. மனநிலை சரியில்லாத அந்தப் பெண் பார்க்க அழகா இருப்பா... அந்தப் பெண்ணைப் பார்க்கும் போதெல்லாம் என் மனசுக்குள்ளே காமத்தீ கொழுந்து விட்டு எரியும். என்னோட மனசைக் கட்டுப்படுத்திக்க எவ்வளவோ முயற்சி பண்ணியும் முடியாம ஒரு நாள் ராத்திரி அந்த அம்மா இல்லாத நேரமா பார்த்து வீட்டுக்குள்ளே நுழைஞ்சு அந்தப் பொண்ணுகிட்டே தப்பா

நடந்துகிட்டேன்.”

குரல் ஒரு அழுகைக்கு உட்பட்டு... சட்டென்று நின்று பின்தொடர்ந்தது.

“நான் தொட்டதோட விளைவு - அடுத்த மாசமே அந்தப் பெண் கர்ப்பமாயிட்டா. பொண்ணோட கர்ப்பத்துக்கு யார் காரணம்னு தெரிஞ்சுக்க அந்த அம்மா படாத பாடு பட்டாங்க. பெண்ணை ஹாஸ்பிட்டலுக்குக் கூட்டிட்டுப் போய் சுத்தம் பண்ணிட்டு வந்தாங்க. அதுக்கப் புறம் அவங்களால அந்தத் தெருவில் மானம் மரியாதை யோடு குடியிருக்க முடியலை. ஒருநாள் ராத்திரி வீட்டைக் காலி பண்ணிட்டு வேற ஊருக்குப் போயிட்டாங்க. இந்தச் சம்பவம் நடந்து கிட்டத்தட்ட அஞ்சு வருஷமாயிடுச்சு ஃபாதர். ஆரம்ப நாட்களில் இதைப் பத்தி நான் அதிகமாக ஃபீல் பண்ணலை. ஆனா, கடந்த ஆறு மாச காலமா என் மனசுக்குள்ளே ஒரே போராட்டம். என்னால ஒழுங்கா சாப்பிட முடியலை... சரியா தூங்க முடியலை... நெஞ்சு பூராவும் நெருஞ்சிமுள் அடைச்சுட்டு இருக்கிற மாதிரி யான ஓர் உணர்ச்சி. இந்த அவஸ்தையில் இருந்து எனக்கு விடுதலை வேணும் ஃபாதர்.”

அவன் இப்போது அழவே ஆரம்பித்திருக்க, ஃபாதர் பரிசுத்தம் மூடிய கண்களைத் திறக்காமல் மெல்லிய குரலில் கேட்டார்.

“மறுபடியும் அவங்களை நீ பார்க்கலையா?”

“பார்க்கலை ஃபாதர்.”

“எந்த ஊர்ல இருக்காங்கன்னும் தெரியாதா?”

“தெரியாது ஃபாதர்.”

“இன்னும் நீ உன்னோட மாமா வீட்லதான் இருக்கியா?”

“இல்ல ஃபாதர்... மாமா வீட்லேயிருந்து நான் வெளியே வந்துட்டேன். இப்ப தனியா வீடு எடுத்துத் தங்கியிருக்கேன்.”

“உனக்குக் கல்யாணம்..?”

“இன்னும் ஆகல ஃபாதர். ஆனா, ஆபீஸில் என்கூட வேலை பார்க்கிற ஒரு பெண்ணைக் கூடிய சீக்கிரமே கல்யாணம் பண்ணிக்கப்போறேன். அதுக்கான ஏற்பாடுகள் நடந்துட்டு இருக்கு...”

“ஒ...! அதுக்கு முன்னாடி உன்னோட மனச்சுமையை இங்கே இறக்கி

வைக்க வந்திருக்கியா?”

“ஆமா ஃபாதர்… அஞ்சு வருஷத்துக்கு முந்தி ஏதோ ஒரு வேகத்துல உணர்ச்சிவசப்பட்டு அந்தத் தப்பைப் பண்ணிட்டேன். அது பெரிய பாவம்தான். இந்தப் பாவ அழுக்கை கர்த்தரோட ரட்சிப்பு மூலமா சுத்தப்படுத்திக்க வந்திருக்கேன்.”

ஃபாதர் பரிசுத்தம் கண்களை மூடியபடி உதடுகளை அசைத்தார். “தப்பை நீ எந்த விநாடி உணர்ந்தாயோ அந்த விநாடியே உன் பாவத்தில் பாதி காணாமப் போயிடுச்சு. மீதிப் பாவத்தையும் கழுவ கர்த்தரோட ஸ்தோத்திரங்களைப் பத்துப் பேருக்காவது தினசரி படிச்சுக்காட்டு. கை முடமாகி. கால் ஊனமாகி சர்ச் வாசல்ல பிச்சை எடுக்கிற ஏழை எளியவர்களுக்கு வாரம் ஒரு முறையாவது உணவு வாங்கிக் கொடு. மனநிலை பாதிக்கப்பட்ட நபர்கள் இருக்கிற ஹாஸ்பிட்டலுக்கு ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் போய் அவங்க மனநலத்துக்காக ஜெபம் பண்ணு. இது தவிர…”

ஃபாதர் சொல்லிக் கொண்டே போக ‘நெட்’டுக்குப் பின்னால் கண்களில் மின்னும் நீரோடு உட்கார்ந்திருந்த அவன் பவ்யமாகத் தலையாட்டிக் கொண்டிருந்தான்.

திருமங்கை நகர். புறநகர்ப்பகுதி.

இரவு பதினோரு மணி. தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்த கிறிஸ்டோபர், யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டு எழுந்து உட்கார்ந்தான்.

‘இந்த ராத்திரி வேளையில் யார்..?’ மூளையைப் பிறாண்டும் யோசனையோடு கட்டிலினின்றும் இறங்கிக் கதவை நோக்கிப் போய்த் தாழ்ப்பாளை விலக்கித் திறந்தான்.

வெளியே -

கொட்டியிருந்த சாம்பல் இருட்டில் ஒரு பெண் சேலைத் தலைப்பை முக்காடு போட்டுக் கொண்டு சிலை மாதிரி நின்றிருந்தாள். கிறிஸ்டோபர் கேட்டான்.

“யார் வேணும்…?”

“நீ தானே கிறிஸ்டோபர்…?”

“ஆமா…”

“உன்கிட்டே கொஞ்சம் பேசணும்...” சொன்னவள், கிறிஸ்டோபரின் அனுமதியை எதிர்பார்க்காமல் உள்ளே நுழைந்து அங்கிருந்த சோபாவுக்குப் போய் சாவதானமாகச் சாய்ந்து கொண்டாள்.

கிறிஸ்டோபர் பிரமிப்பாக அவளைப் பார்த்தான். வந்த பெண்ணுக்கு வயது முப்பது இருக்கலாம். ஏதோ உலோகத்தால் செய்யப்பட்ட மாதிரி முகம் ஓர் இறுக்கத்துக்கு உட்பட்டிருந்தது.

‘இதற்கு முன் இவளை எங்கேயாவது பார்த்திருக்கிறோமா..? - மனதின் நினைப்புப் பக்கங்களை புரட்டிப் பார்த்தான் கிறிஸ்டோபர். முகம் பிடிபடவில்லை.

அவளுக்கு முன்பாகப் போய் நின்றான். சிறிது கோபமான குரலில் கேட்டான்.

“யார் நீ..? என்கிட்ட நீ என்ன பேசணும்?”

அவள் உதட்டில் ஓர் அரைகுறை புன்னகை உற்பத்தியாகி அதே விநாடி அபார்ஷனாயிற்று.

“நீ கேட்ட ரெண்டு கேள்விக்கும் பதில் சொல்றேன். மொதல்ல போய் கதவைச் சாத்திட்டு வா...”

கிறிஸ்டோபர் தயங்கினான்.

“ம். போ...”

போய் கதவைச் சாத்தி தாழிட்டு வந்து அவளுக்கு எதிரே இருந்த நாற்காலியில் சாய்ந்தான்.

“சொல்லு...! நீ யாரு... இந்த நேரத்துல என்னை எதுக்காகத் தேடிட்டு வந்திருக்கே..?”

“சம்பளத்தைக் கொடுத்துட்டுப் போக வந்தேன்.”

“சம்பளமா..?”

“ஆமா..! உனக்குச் சேரவேண்டிய சம்பளம்.”

“புரியலையே..?”

“புரியவெச்சுடறேன். இன்னிக்கு மத்தியானம் மூணு மணி சுமாருக்கு சர்ச்சுக்கு வந்து ஃபாதர் பரிசுத்தத்துகிட்ட கன்ஃபெஷன் கேட்டது நீதானே?”

கிறிஸ்டோபரின் முகம் உடனே ஒரு வியர்வை கோட்டிங்குக்கு உட்பட்டது.

“அ.. அ.. அது உனக்கு எப்படித் தெரியும்...?”

“உன்னை அந்த சர்ச்ல நான் பார்த்தேனே…!”

“நீ… நீ… நீ…?”

“அந்த சர்ச்சில் வேலை பார்க்கிற ஒரு பணிப்பெண். பேர் பிலோமினா. எம்.ஏ.சைக்காலஜி படிச்சிருக்கேன். காலேஜ்ல படிக்கிற வாழ்க்கைக்குத் தயாராகாம சமுதாயப் பணிகளில் என்னை ஈடுபடுத்திக்கிட்டேன். இப்போ என்னோட வேலை சர்ச்சை சுத்தப்படுத்தறது மட்டு மில்லை. அங்கே அழுக்கோடு வர்ற மனுஷங்களையும் சுத்தப்படுத்தறதுதான்...”

“சரி.. இப்ப உனக்கு என்ன வேணும்?”

“உண்மை வேணும்...”

“என்ன உண்மை...?”

“ஃபாதர்கிட்ட உன்னோட கன்ஃபெஷன் என்ன?”

“அதை உன்கிட்ட சொல்லவேண்டிய அவசியம் கிடையாது. ஏன்னா. கன்ஃபெஷன்ங்கிறது ஓர் அந்தரங்கமான விஷயம். அது எனக்கும் ஃபாதருக்கும் நடுவில் நடந்த ஒரு சடங்கு.”

பிலோமினாவின் உதட்டில் மறுபடியும் ஓர் அரை குறை புன்னகை உற்பத்தியாயிற்று.

“உன்னோட கன்ஃபெஷன் என்னன்னு நீ சொல்ல வேண்டாம். எனக்கே தெரியும்…” சொன்னவள் தான் கொண்டு வந்திருந்த வானிடி பேக்கைப் பிரித்து தீப்பெட்டி சைஸில் இருந்த மைக்ரோ டேப்ரிக்கார்டரை எடுத்து ஓடவிட்டாள்.

கிறிஸ்டோபரின் குரல் கேட்டது. “ஃபாதர். கடந்த அஞ்சு வருஷகாலமா என்னோட மனசுக்குள்ளே ஒரு சுமை தாங்கிக்கல் மாதிரி நின்னுட்டிருந்த பாரத்தை. அந்தப் பாவத்தை இறக்கி வைக்கிறதுக்காக வந்திருக்கேன். கர்த்தரின் ரட்சிப்பு எனக்குக் கிடைக்குமா ஃபாதர்...”

கிறிஸ்டோபர் உறைந்துபோய் உட்கார்ந்திருக்க… மைக்ரோ டேப்ரிக்கார்டரை அணைத்துவிட்டுப் புன்னகைத்தாள் பிலோமினா.

“கன்ஃபெஷன்ல நீ என்ன சொன்னியோ அதெல்லாமே ஒரு அட்சரம் பிசகாம இந்த டேப் ரிக்கார்டர்ல பதிவாகியிருக்கு. இது ஒரு ஸ்டிக்கி மைக்ரோ டேப்ரிக் கார்டர். பகல் பூராவும் கன்ஃபெஷன் நாற்காலிக்கு அடியில் ஒட்டிகிட்டு இருக்கும். ஃபாதருக்கு இந்த விஷயம் தெரியாது.”

கிறிஸ்டோபர் இரண்டு கைகளாலும் முகம் வியர் வையை வழித்துக் கொண்டு கோபமாகப் படபடத்தான்.

“இ... இ... இது.. பாவம் இல்லையா..? இது கிறிஸ்டியானிடிக்கு எதிரான செயல்... நீ உண்மையான கிறிஸ் டியன் கிடையாது...”

“இருக்கலாம்... ஆனா, இது பாவம் கிடையாது. பாவம் எது தெரியுமா..? மனநிலை சரியில்லாத ஒரு பெண்ணை உன்னோட சாக்கடைத்தனமான உணர்ச்சிகளுக்காகப் பலிவாங்கினியே... அதுதான் பாவம்...”

“அந்தப் பாவத்துக்குத்தான் நான் மன்னிப்பு கேட்டுட்டேனே...?”

“மன்னிப்பு கேட்டுட்டா சரியா போயிடுமா?”

“அதுக்குத்தானே கன்ஃபெஷன் இருக்கு.”

“அது ஒரு சடங்கு. சின்னச் சின்ன தப்புகளுக்காக உண்டாக்கப்பட்ட சடங்கு. உன்னை மாதிரியான கிரி மினல்கள் அதை உபயோகப்படுத்தக்கூடாது…”

“சரி... நீ இப்ப என்ன பண்ணப் போறே... என்னை போலீஸ்ல காட்டிக் கொடுக்கப் போறியா?”

“நோ...”

“பின்னே..?”

“நான் மொதல்ல சொன்ன மாதிரி சம்பளம் கொடுக்கப் போறேன். என்ன அப்படிப் பார்க்கிறே...? பாவத்துக்குச் சம்பளம் மரணம்தான். நீ நினைச்சுட்டிருக்கிற மாதிரி மன்னிப்பு கிடையாது. கன்ஃபெஷன் ‘நெட்’டுக்குப் பின்னாடி ஒரு கோழை மாதிரி முகத்தை யாருக்கும் காட்டாம உட்கார்ந்து நீ பண்ணின தப்பைச் சொல்லிட்டுப் போயிட்டா எல்லாம் சரியாயிடுமா? மனநிலை சரியில்லாத பெண் ஒரு குழந்தைக்குச் சமம். அந்தக் குழந்தையை நீ நாசம் பண்ணிட்டே! அதுக்கான தண்டனையை நீ அனுபவிக்க வேண்டாமா?

பிலோமினா சொல்லிக் கொண்டே சட்டென்று தன் வானிடி பேக்குக்குள் கையை நுழைத்து பிஸ்டலை உருவினாள்.

கிறிஸ்டோபரின் மார்புக்குக் குறி வைத்தாள்.

விழிகளில் உறைந்துவிட்ட மரண பயத்தோடு கிறிஸ்டோபர் வாய் உலர்ந்தான். கைகூப்பினான்.

“எ... என்னைக்... கொன்னுடாதே... நான் பண்ணினது தப்புதான்... எ.. என்னை... மன்னிச்சுடு...”

பிலோமினாவின் உதட்டில் ஒரு கோணல் சிரிப்பு ஜனித்தது. “உன்னை மன்னிக்க எனக்கு உரிமை கிடையாது. உன்னை மன்னிக்கப் போறது இந்த துப்பாக்கிதான். என்னோட சமூக சேவையில் இதுவும் ஒரு வகை. உணர்ச்சி வேகத்தில் நீ மட்டும் ஒரு பெண்ணை நாசம் பண்ணலாம். அதே உணர்ச்சி வேகத்தில் நான் உன்னைக் கொலை பண்ணக்கூடாதா என்ன..?

ஒரு கம்பெனி நிர்வாகம் நலிவடையும்போது அந்த நலிவை மேற்கொண்டு தடுத்து நிறுத்தறதுக்காக அந்த கம்பெனியில் இருக்கிற திறமை குறைந்த வேலையாட்களை வி.ஆர்.எஸ்.-ங்கிற போர்வையில் கட்டாய ஓய்வு கொடுத்து வீட்டுக்கு அனுப்பி வைப்பாங்க. நானும் இப்ப அந்தக் காரியத்தைப் பண்ணிகிட்டிருக்கேன். இந்தச் சமுதாயம் நலிவடையாம இருக்கணும்னா உன்னை மாதிரியான ஆட்களுக்குக் கட்டாய ஓய்வு கொடுத்து மேலே அனுப்பி வைக்கிறதைத் தவிர, எனக்கு வேற வழி தெரியலை. இதுக்கு முன்னாடி ரெண்டு பேருக்கு இப்படிக் கட்டாய ஓய்வு கொடுத்திருக்கேன். நீ மூணாவது ஆள்...”

பிலோமினா சொல்லிக் கொண்டே பிஸ்டலை உயர்த்த முயன்ற விநாடி.

அவளுக்குப் பின்பக்கம் இருந்து நீண்ட ஒரு கை சட்டென்று அவளுடைய மணிக்கட்டை இரும்புப் பிடியாகப் பிடித்தது.

திடுக்கிட்டுப் போய்த் திரும்பினாள்.

ஒரு இன்ஸ்பெக்டர் உதட்டில் சிரிப்பு தெரிய நின்றிருந்தார். கொஞ்சம் தள்ளி ஃபாதர் பரிசுத்தம்.

அதிர்ச்சியில், பிலோமினாவின் கையிலிருந்த பிஸ்டல் ஸ்லோமோஷனில் உதிர

கிறிஸ்டோபர் சிரித்தான்.

“ஸாரி பிலோமினா... உன்னோட சமூக சேவைக்கு இடையில் தடங்கல் ஏற்பட்டதுக்காக வருந்துகிறேன். உன்னை இப்படி வளைச்சு பிடிக்கறதுக்காக நாங்க எல்லாருமா சேர்ந்து ஒரு மாசத்துக்கு முந்தியே போட்ட திட்டம்தான் இது. நான் ஃபாதர்கிட்டே பேசினது உண்மையான கன்ஃபெஷன் கிடையாது. மாமா வீடு, மன நிலை சரியில்லாத பெண், கற்பழிப்பு எல்லாமே என் கற்பனை, உனக்காக நாங்க விரிச்ச வலை இது. கடந்த ஆறு மாத காலத்துல சிட்டியில ரெண்டு பேர் மர்மமான முறையில் சுட்டுக் கொலை செய்யப்பட்டாங்க. ஒருத்தர் ஹென்றி டானியேல். இன்னொருத்தர் ஆப்ரஹாம். இந்த ரெண்டு கொலைகளையும் இன்வெஸ்டிகேட் பண்ணும் போது எங்களுக்கு ஒரு ஒற்றுமையான தகவல் கிடைச்சது. அவங்க டைரிகளைப் படிச்சுப் பார்த்தபோது ரெண்டு பேருமே ஃபாதர் பரிசுத்தத்துக்கிட்டே கன்ஃபெஷன் கொடுத்தவங்க என்கிற உண்மையும் கன்ஃபெஷன் கொடுத்த அதே தினத்தின் ராத்திரியில் கொலை செய்யப்பட்டிருக்காங்கங்கிற உண்மையும் தெரிந்தது. உடனே நாங்க உஷாரானோம். யாரோ சட்டத்தைக் கையில் எடுத்துக்கிட்டு தண்டனை கொடுக்க ஆரம்பிச்சிருக்காங்கன்னு புரிஞ்சுது. ஃபாதர்கிட்ட கலந்து பேசி னோம். சர்ச்சில் நிறைய பேர் வேலை பார்க்கிறாங்க. அவங் கள்ல யாராவது ஒருத்தர் குற்றவாளியா இருக்கலாம்னு யூகம் பண்ணினார். அவருடைய ஒத்துழைப்போடு இந்த வலையைப் பின்னினோம்.”

பிலோமினா உதட்டைக் கடித்துக் கொண்டு இறுகிய முகத்தோடு தலைகுனிந்து நிற்க, ஃபாதர் பக்கத்தில் வந்தார்.

“பிலோமினா...”

நிமிர்ந்தாள். சலனமில்லாத பார்வை.

ஃபாதர் சொன்னார்: “கடவுளின் சிருஷ்டியில் மனிதனே ஒரு தப்பான படைப்புதான்! அவன் தப்பு பண் ணாம இருப்பானா..? எந்த நூற்றாண்டிலும் அவன் தப்பு பண்ணிட்டுத்தான் இருப்பான். தப்பு பண்ணினவங்களையெல்லாம் உன்னை மாதிரி தண்டிக்க ஆரம்பிச்சா யாருமே இருக்க முடியாது. ஒரு தப்பான வழியைத் தேர்ந்தெடுத்து அதுல பயணம் பண்ண இருந்த உன்னைத் தடுத்து நிறுத்திட்டோம். இப்போதைக்கு அந்தச் சந்தோஷமே எனக்குப் பெரிசா தெரியுது.”

கீழே விழுந்து கிடந்த துப்பாக்கியை எடுத்துக் கொண்ட இன்ஸ்பெக்டர், பிலோமினாவைப் பார்த்தார்.

“ஜிப்புக்குப் போலாமா..?”

# 30. ஓர் அம்பு எய்யப்படுகிறது!

ஊர் எல்லையில் உட்கார்ந்திருந்தது அந்த அடர்த்தியான முந்திரிக்காடு. சூரியன் இன்னமும் தன் சிவப்பான மொட்டைத் தலையை நீட்டாத நேரம். கிழக்குத் திசை யில் கெட்டியான இருட்டு.

முந்திரித் தோப்பின் இருட்டுக்குள் சில டார்ச் வெளிச்சங்கள் உற்பத்தியாகியிருக்க - நிழல் உருவங்களாய் நான்கைந்து பேர். காற்றில் கிசுகிசுப்பான குரல்கள்.

“என்ன சத்யம்... காரியம் முடிஞ்சுதா..?”

“ம்... ஆச்சு...”

“எத்தனை மணிக்கு டைம்பாம் வெடிக்கிற மாதிரி ஃபிக்ஸ் பண்ணியிருக்க..?”

“எட்டு மணிக்கு...”

“கரெக்ட்…! ஏழரை மணியிலிருந்து எட்டரை மணிக்குள்ளே மந்திரி ராஜ பெருமாள் தன் பொண்ணோட முகூர்த்தத்தை வெச்சிருக்கார். எட்டு மணிக்கு கல்யாண மண்டபம் நிரம்பி வழியும்... அந்த சமயத்துல குண்டு வெடிச்சா நூறு பேராவது சாக மாட்டாங்களா... என்ன..?”

“நூறு பேர் சாகிறது முக்கியமில்லை... அதுல ரெண்டு ஸ்டேட் முதல் மந்திரிகளும் இருக்கணும்… பத்து பதினைஞ்சு பேராவது வி.ஐ.பி.க்களா இருக்கணும்...”

“கண்டிப்பா இருப்பாங்க…”

சத்யம் இப்போது – ‘டிக் டிக்’ என்று ‘டிக்கிக்’ கொண்டிருந்த டைம்பாமை ஒரு சின்ன கண்ணாடி பேழைக்குள் வைத்து வர்ண மயமான கல்யாண பரிசளிப்பு பேப்பரை - மேலே சுற்றினான்.

“நல்லா பேக் பண்ணு சத்யம்... கிஃப்ட் பாக்ஸ் மாதிரியே இருக்கணும்… உன்னையும், உன் கையில் இருக்கிற இந்த கிஃப்ட் பாக்ஸையும் பார்த்தா மண்டபத்தில் இருக்கிற யார்க்கும் சந்தேகம் வரக்கூடாது...”

“வராது...”

வர்ணத் தாளை சுற்றிய பின் - பாக்கெட்டில் வைத்திருந்த வெல்வெட்

ரிப்பன்களை எடுத்து பரிசுப் பெட்டிக்குக் கட்டி - “மணமக்களுக்கு வாழ்த்துக்கள் என்ற அட்டையை சொருகினான்.

“நான் ரெடி...” சத்யம் நெட்டி முறித்தான்.

“டாக்ஸியும் ரெடியாக காத்திட்டிருக்கு... கிளம்பு.” சத்யம் பரிசுப்

பெட்டியை எடுத்துக் கொண்டு எழுந்தான்.
“மத்தியானம் பனிரெண்டு நாற்பது தமிழ் நியூஸ்ல எவ்வளவு பேர் செத்தாங்க... அதுல யாரு வி.ஐ.பி. யாரு வி.வி.ஐ.பி.ன்னு தெரியும்…”

முந்திரி தோப்பில் டார்ச் வெளிச்சங்களோடு நடந்து - தோப்பின் மறைவான பகுதியில் நிறுத்தி வைக்கப்பட் டிருந்த டாக்ஸிக்கு வந்தார்கள்.

காத்திருந்த டாக்ஸி டிரைவர் வாசு கையில் வைத்திருந்த சிகரெட்டை வீசியெறிந்து விட்டு கேட்டான்.

“புறப்படலாமா... ஸார்...?”

“ம் ”

சத்யம் டைம்பாமை தாங்கியிருக்கும் பரிசுப் பெட்டியோடு - டாக்ஸியின் பின் சீட்டில் ஏறி சாய்ந்து உட்கார்ந்தான்.

சகாக்கள் டார்ச் வெளிச்ச கைகளை வழியனுப்பி வைக்க டாக்ஸி புறப்பட்டது. வேகம் எடுத்தது.

பாண்டிச்சேரி.

அரவிந்தர் ரோட்டில் அமைந்திருந்த ‘வேணுகானம்’ கல்யாண மண்டபம் - அந்த விடியற்காலை வேளையில் ஜனங்களால் நிரம்ப ஆரம்பித்தது. வி.ஐ.பி. நாற்காலிகளைத் தவிர மற்ற நாற்காலிகளில் ஆண்களும் பெண் களும் - நிறம் நிறமாய் தெரிந்தார்கள். மண்டபத் தூண் களில் கட்டியிருந்த சதுர ஸ்பீக்கர்களில் வயலின் கசிந்து கொண்டிருந்தது. மண்டபம் பூராவும் சளசளவென்று பேச்சுச் சத்தம்.

வாசலில் அமைச்சர் ராஜபெருமாளும் அவருடைய மனைவியும் நின்று வருகின்றவர்களை வரவேற்றுக் கொண்டிருந்தார்கள். மனைவி சொன்னாள்…

“இன்னும் பெரிய மண்டபமா பார்த்திருக்கலாம். இப்பவே இவ்வளவு கும்பல்…”

“இடம் நிறைய இருக்கே...”

“எனக்கென்னமோ காணாதுன்னு தோணுது...”

“போதும்... போதும்...”

ராஜபெருமாள் சொல்லிக் கொண்டிருக்கும்போது - ஒரு போலீஸ் அதிகாரி அவர்க்குப் பக்கத்தில் வந்து பவ்யமாய் நின்றார். குனிந்தார்.

“ஸார்...!”

“என்ன?”

“தமிழ்நாடு சி.எம். எத்தனை மணிக்கு மண்டபத்துக்கு வர்றார்...?”

“சரியா ஏழே முக்கால் மணிக்கு…”

“மண்டபத்தை விட்டு எத்தனை மணிக்கு புறப்படறார்..?”

“எட்டரை மணிக்கு...” என்ற ராஜபெருமாள் அந்தப் போலீஸ் அதிகாரியை எரிச்சலாய் ஏறிட்டார். “ஏற்கெனவே இதெல்லாம் சொன்ன விஷயம்தானே..? திரும்பத் திரும்ப ஏன்யா கேட்டு உயிரை வாங்கறீங்க..?”

“இல்ல ஸார்... சென்னையிலிருந்து ஸ்பெஷல் க்ரைம் பிராஞ்ச் ஆபீஸர் மிஸ்டர் விவேக் தமிழ்நாடு சி.எம்.மோட பாதுகாப்பு ஏற்பாடுகளை கவனிக்கிறதுக்காக வந்திருக்கார். மண்டபத்துக்கு வெளியே வயர்லெஸ் ஜீப்ல உட்கார்ந்துகிட்டு பாதுகாப்பு ஏற்பாடுகளை அப்ஸர்வ் பண்ணிட்டிருக்கார். அவர்தான் உங்ககிட்ட விளக்கமா கேட்டுட்டு வரச் சொன்னார்...”

“நல்ல கேலிக் கூத்தய்யா... இது பாண்டிச்சேரி போலீஸ் மேல தமிழ்நாடு சி.எம்.க்கு நம்பிக்கை இல்ல போலிருக்கு? நம்ம பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பத்தி எடுத்துச் சொன்னீங்களா..?”

“சொல்லியிருக்கு ஸார்...”

“அந்த க்ரைம் பிராஞ்ச் ஆபீஸர் விவேக்கிட்ட இதை யும் சொல்லி வையுங்க… மந்திரி ராஜபெருமாள் வீட்டுக் கல்யாணத்துல... தப்பா ஒரு பயலும் எதையும் பண்ணிட முடியாதுன்னு சொல்லுங்க...”

டாக்ஸியைக் கல்யாண மண்டபத்துக்கு சற்று தள்ளி கார் பார்க்கிங்கை கடந்து - தனியாய் நிறுத்தினான் வாசு.

சத்யம் பரிசு பெட்டியோடு இறங்கினான். மணிக்கட்டு கடிகாரத்தில் சரியாய் ஏழரை மணி. கார்களுக்கு மத்தியில் நிதானமாய் நடந்து - இடது கையால் டையை நெருடிய படி - மண்டபத்துக்குள் நுழைந்தான்.

ராஜபெருமாள் ஒரு மந்திரியை மார்புறத் தழுவி வரவேற்றுக் கொண்டிருக்கும்போதே - ஒரு பெண் நீட்டிய சந்தனக் கிண்ணத்தில் விரலை நனைத்தபடி உள்ளே போனான்.

மண்டபம் கொள்ளாத கூட்டம்.

வி.ஐ.பி. வரிசைகளும் வேகமாய் நிரம்பிக் கொண்டிருந் தன. சத்யத்தின் மனசுக்குள் சந்தோஷம் கும்மியடித்தது.

“எத்தனை பேர் சாவார்கள்…!”

யோசித்தபடி - சத்யம் நடந்தான்.

மேடையில் மலர்க்காடாய் மணவறை தெரிய வீடியோ.

கேமிராவின் லைட் வெளிச்சத்தில் பெண்ணும், மாப்பிள்ளையும் தெரிந்தார்கள். மணவறைக்கு சற்று தள்ளி - இரண்டு பேர் நின்று பரிசுப் பெட்டிகளை வாங்கி - ஓர் ஒரமாய் குவித்து வைத்துக் கொண்டிருந்தார்கள்.

வண்ண வண்ணமாய் - பல்வேறு சைஸ்களில் பரிசுப் பெட்டிகள். சத்யம் அவர்களை நெருங்கி - பெரிய புன்னகையோடு - தன் கையில் வைத்திருந்த பரிசுப் பெட்டியை நீட்டினான்.

“மணமக்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களை சொல்லுங்கள்!”

“தேங்க்யூ” சொன்ன அவர்கள், அதை வாங்கி - மற்ற பரிசுப் பெட்டிகளோடு வைத்துவிட - சத்யம் காலியாய் இருந்த ஒரு நாற்காலிக்குப் போய் உடம்பைக் கொடுத்தான். முகத்தை இயல்பாய் வைத்துக் கொண்டு - திரு மண நிகழ்ச்சிகளை ஆர்வமாய் கவனிப்பவனைப் போல் நடிக்க ஆரம்பித்தான்.

பைலட் சைரன்களை ஒலிக்க - சி.எம்.மின் கார் மண்டப வாசலில் வந்து நிற்க - தமிழக முதலமைச்சர் தெய்வநாயகம் கும்பிட்டுக் கொண்டே கீழே இறங்கினார். காத்திருந்த ராஜபெருமாள் ஒரு பெரிய ரோஜா மாலையை கழுத்தில் போட்டார். குழைந்தார்.

“வணக்கம்...! உங்களை மாதிரியான பெரியவங்க எம்பொண்ணை

வாழ்த்த வர்றதுநான் செய்த பாக்கியம்...”

தெய்வநாயகம் ராஜபெருமாளைத் தட்டிக் கொடுத்து விட்டு உள்ளே போனார். போட்டோ ஃபிளாஷ்கள் அவரை மொய்த்தன. வீடியோ வெளிச்சம் விடாமல் அவரை நனைத்தது.

“எல்லாரும் வந்துட்டாங்களா..?”

“வந்துட்டாங்க... சடங்குகள் நடந்துட்டிருக்கு. சரியா எட்டு மணிக்கு தாலியைக் கட்டிடலாம்...”

மண்டபமே எழுந்து நிற்க - முதலமைச்சர் தெய்வ நாயகம் எல்லோரையும் பார்த்து கும்பிட்டுக் கொண்டே - மணவறைக்கு முன்பாகப் போய் – பாண்டிச்சேரி முதலமைச்சரின் இருக்கைக்குப் பக்கத்தில் காலியாய் இருந்த ‘பிரின்ஸ்’ நாற்காலியில் உட்கார்ந்தார். இரண்டு பேரும் கைகுலுக்கி - ஏதோ சிரித்துப் பேச - கேமிராக்கள் கண் சிமிட்டின... கோஷ்டி கோஷ்டியாய்.

மண்டபத்தில் கட்சிக்காரர்களின் உற்சாகம் அலை மோதியது. இரண்டு முதலமைச்சர்களையும் வாழ்த்தி கோஷம் போட்டார்கள்.

ஐந்தாவது வரிசையில் தள்ளி உட்கார்ந்திருந்த சத்யம் மணிக்கட்டில் இருந்த வாட்சைப் பார்த்தான்.

எலக்ட்ரானிக் வாட்ச் சிவப்பாய் ஒளிர்ந்தது.

7.45.

எழுந்தான்.

இன்னும் கொஞ்ச நேரத்தில் - சுடுகாடாய் மாறப் போகிற அந்த கல்யாண மண்டபத்தை பார்வையால் தீர்க்கமாய் அலசிவிட்டு - கல்யாண மண்டப வாசலை நோக்கி நடந்தான்.

வேகமான நடை.

வாசலை நெருங்கியபோது.

தோளை யாரோ தொடுவது போன்ற உணர்ச்சி.

திரும்பினான்.

ஒரு பெரியவர். கல்யாண வீட்டைச் சேர்ந்தவர்.

“என்ன தம்பி...? முகூர்த்தம் நடக்கப் போற நேரத்துல வெளியே போறீங்க... எட்டு மணிக்கு தாலி கட்டிடு வாங்க... டிபன் சாப்டுட்டுப் போயிடலாம்...”

“இல்லீங்க பெரியவரே…! உடம்பு கொஞ்சம் சரியில்லை. வெளியே காத்தோட்டமாக இருக்கணும்.. நான் மத்தியானம் வர்றேன்…” அவசர அவசரமாய் சொல்லி விட்டுத் திரும்பினான்.

“த்தட்...”

யார் மீதோ மோதிக் கொண்டு நிமிர்ந்தான்.

விவேக்!

முகம் மாறி - “ஸாரி...” என்றான்.

“ஸோ வாட்...?” விவேக் புன்னகைத்து விட்டு - முதலமைச்சர் இருந்த பக்கமாய் போனான். பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பார்வையிட்டபடி - மண்டபத் தூண் ஓரமாய் நின்று கொண்டான்.

சத்யம் வியர்த்து வழிகிற முகத்தோடு வெளியே வந்தான்.

மண்டபத்துக்கு சற்று தொலைவில் காத்திருந்த வாசு டாக்ஸியை உயிர்ப்பித்துக் கொண்டான்.

சத்யம் கர்ச்சீஃப்பால் முக வியர்வையை ஒற்றிக் கொண்டு வேகவேகமாய் நடந்து போய் டாக்ஸிக்குள் திணிந்து கொண்டதும் அது சீறலோடு புறப்பட்டது.

“என்ன ஸார்... வெச்சிட்டீங்களா..?”

“ம்….”

“யார்க்கும் எந்த சந்தேகமும் வரலையே?”

“வரலை...”

“இப்ப கரெக்டா டயம் என்ன ஸார்?”

“ஏழு அம்பது... அடுத்த பத்து நிமிஷத்துக்குள்ளே. நாம பாண்டிச்சேரி அவுட்டரைத் தாண்டியாகணும்...”

“தாண்டிடலாம் ஸார்...” வாசுவின் வலது கால் ஆக்ஸி லேட்டரை மிதித்தது. பாண்டிச்சேரியின் போக்குவரத்து இல்லாத காலை நேர

வீதிகளில் டாக்ஸி இறக்கைகளைக் கட்டிக் கொண்டது.

“வாசு…”

“ஸார்...”

“நம்ம இயக்கத்துக்கு இன்னிக்கு மகத்தான நாள். செத்தவங்க லிஸ்ட் எப்படியும் நூறைத் தாண்டிடும். அந்த லிஸ்ட்ல ரெண்டு சீஃப் மினிஸ்டர்களோட பேரும் இருந்துட்டா... ஆஹா..!”

டாக்ஸி கடலூர் போகும் ரோட்டில் வேகம் பிடித்துக் கொண்டது.

கல்யாண மண்டபம் நாதஸ்வரத்தில் நனைந்து கொண் டிருந்தது.

நேரம் 7.55.

ராஜபெருமாள் இரண்டு முதலமைச்சர்களையும் நெருங்கி குனிந்து கேட்டார்.

“தாலி கட்டிடலாமா?

“ம்... ஆகட்டும்...” இருவரும் தலைகளை அசைக்க - ராஜபெருமாள் மணவறையை நோக்கி - பட்டு வேஷ்டி புரள போனார்.

விவேக் கூல்ட்ரிங்கை சாப்பிட்டுவிட்டு - காலி பாட்டிலை மண்டப தூணுக்குப் பக்கத்தில் ஜாக்கிரதை யாய் குனிந்து வைத்தான்.

வயிற்றின் இடது பக்கம் அந்த வலி சுரீரென்றது.

‘எதனால் இந்த வலி..?’

யோசித்தான்.

சில நிமிஷங்களுக்கு முன் எவனோ மோதிவிட்டு ‘ஸாரி’ சொல்லியபடி வேகமாய் மண்டபத்தை விட்டு வெளியே போனது ஞாபகத்துக்கு வந்தது.

“யார் அந்த ஆள்..?’

க்ரீம் நிற சூட், முகத்தில் லேசாய் தாடி,

விவேக் புருவ மத்தியைக் கீறிக் கொண்டான். ‘தாலி கட்டுகிற இந்த நேரம் பார்த்து அந்த ஆள் வெளியே ஏன் போனான்...? அதுவும் அவசர அவசரமாய்.

விவேக்கின் மூளைப் பகுதி பரபரவென்று யோசிக்க ஆரம்பித்தது. ‘மண்டபத்தை விட்டு அவசர அவசரமாய் ஏன் வெளியேற வேண்டும்... எதற்கோ பயந்து ஒடு பவனைப் போல்?’

‘அந்த ஆள் யார் என்பதைத் தெரிந்து கொள்வது அவசியம். ஏதாவது பரிசுப் பெட்டி கொண்டு வந்து கொடுத்திருக்கலாம். அதன்மேல் இருக்கும் பெயரைப் பார்த்தால் யார் என்று தெரிந்துவிடும்…!”

பரிசுப் பெட்டிகளை வாங்கி வைக்கும் அந்த நபர் களிடம் போனான் விவேக், “எக்ஸ்க்யூஸ் மீ...! ஒரு சின்ன தகவல்...”

“என்ன ஸார்...?”

“க்ரீம் கலர்ல சூட் போட்டுக்கிட்டு லேசான தாடியோட ஒருத்தர் வந்து கிஃப்ட் பாக்ஸ் குடுத்துட்டுப் போனாரா..?”

அவர்களில் ஒருவர் சட்டென்று சொன்னார்.

“ஆமா... ஸார்... வெல்வெட் ரிப்பன் சுத்தின ஒரு கிஃப்ட் பாக்ஸை குடுத்துட்டுப் போனார்…”

“அவர் யார்ன்னு தெரியுமா?

“தெரியாது ஸார்...”

“அவர் குடுத்த அந்த கிஃப்ட் பாக்ஸை எடுங்க...”

அவர்கள் பரிசுப் பெட்டிகளின் நடுவே - வெல்வெட் ரிப்பன் சுற்றப்பட்ட கிஃப்ட் பாக்ஸை தேடினார்கள்.

வெல்வெட் ரிப்பன் சுற்றப்பட்ட அந்த கிஃப்ட் பாக்ஸ் பத்து விநாடிகளுக்குள் கிடைத்தது.

“இதான் ஸார்... அவர் கொடுத்தது...”

விவேக் வாங்கிப் பார்த்தான்.

பெட்டியின் மேல் பெயரில்லை.

லேசாய் சந்தேகம் வந்தது.

“அந்த ஆள் மேல கொஞ்சம் சந்தேகமாயிருக்கு... பெட்டியைத் திறந்து பார்க்கணும்.”

சொன்ன விவேக், அவர்களுடைய பதிலுக்குக் காத்துக்

கொண்டிருக்காமல், பரபரவென்று ரிப்பனை அவிழ்த்து - சுற்றியிருந்த வர்ண பேப்பரை உருவினான். கடைசியில் - கண்ணாடிப் பெட்டிக்குள் உட்கார்ந்திருந்த அந்த டைம்பாம் சங்கதி கண்ணில் பட அதிர்ந்தான். வெடி குண்டோடு பொருத்தப்பட்டிருந்த டைம்பீஸ் எட்டு மணியைக் காட்டிக் கொண்டிருக்க - விவேக் தன் மணிக் கட்டில் இருந்த வாட்சைப் பார்த்தான்.

7.58.

இன்னும் இரண்டே நிமிடங்கள்!

“மை குட்னஸ்!” சத்தமில்லாமல் உள்ளுக்குள் அலறிய விவேக், அந்தக் கண்ணாடிப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு - மண்டபத்துக்குப் பின்பக்கமாய் ஓடினான். அசுர ஓட்டம்.

போலீஸ் அதிகாரிகள் பின்னாலேயே ஓடி வந்தார்கள்.

“என்ன..? என்ன..?”

“டைம்பாம்….! இன்னும் ஒரு நிமிஷத்துக்குள்ளே வெடிச்சுடும். எல்லாரும் மண்டபத்துக்கு முன் பக்கமா போயிடுங்க...”

எல்லோரும் பீதியோடு - மண்டபத்தின் முன்பக்கத்தை நோக்கி ஓடிக் கொண்டிருக்கும்போதே –

காதை செவிடாக்கும் அந்த சத்தம் கேட்டது.

“ட்டொம்ம்ம்ம்...”

கல்யாண மண்டபமே லேசாய் அதிர்ந்த மாதிரி இருந்தது.

மண்டபத்துக்குப் பின்பக்கம் இருந்த கருவேல மரங்கள் மண்டிய பகுதி புகைந்து கொண்டிருக்க - விவேக் மண்டபத்தின் முன் வாசலுக்கு ஓடினான். நாதஸ்வரம் நின்று ப்ோயிருக்க, மண்டபம் முழுவதும் குழப்பமான பேச்சுச் சத்தம்.

விவேக் மண்டபத்தின் வாசலில் போலீஸ் இன்ஸ் பெக்டர் ராமமூர்த்தியிடம் கேட்டார்.

“க்ரீம் கலர் சூட் ஆள். மூஞ்சில் லேசா தாடி, இந்த அடையாளங்களோடு - யாராவது கார்ல அல்லது மற்ற வாகனங்கள்ல ஏறிப் போனதை பார்த்தீங்களா..?”

ராமமூர்த்தி - யோசித்துவிட்டு –

“நான் கவனிக்கலை ஸார்” என்றார்.

“பத்து நிமிஷத்துக்கு முன்னாடி புறப்பட்டான்... வேகமா வெளியே வந்திருப்பான். நல்ல உயரம்... யாராவது பார்த்தாங்களான்னு கேளுங்க...”

“ஏஸ்... ஸார்...”

கார்கள் நின்றிருந்த பக்கம் - அவர் ஓடினார்.

கமிஷனர் வேகவேகமாய் விவேக்குக்குப் பக்கத்தில் வந்தார்.

“மிஸ்டர் விவேக்! உங்களை சி.எம். கூப்பிடறார்.”

விவேக் கமிஷனரை பின் தொடர்ந்து போய் - வியர்வை முகங்களோடு உட்கார்ந்திருந்த இரண்டு ஸ்டேட் சி.எம்.களுக்கும் சல்யூட் அடித்தான்.

“என்னாச்ச்?”

“கிஃப்ட் பாக்ஸ்ல டைம்பாமை யாரோ ஃபிக்ஸ் பண்ணிக் கொண்டு வந்து வெச்சிட்டுப் போயிருக்காங்க ஸார். அதைக் கண்டு புடிச்சு - பின்பக்கமா கொண்டு போய் வெடிக்க வெச்சிட்டேன்... நோ... ஹார்ம்...”

“ஆள் யாரு..?”

“ஆளை நான் பார்த்துட்டேன் ஸார்…! ஆனா, யாருன்னு தெரியலை... அவன் எந்த வாகனத்துல தப்பிச்சுப் போனான்னு இன்வெஸ்டிகேட் பண்ணிட்டிருக்கேன்... நாம உடனடியா செயல்பட்டா ஆளை மடக்கிடலாம்...?”

“டு இட் இம்மீடியட்லி...”

விவேக் திரும்பவும் சல்யூட் அடித்துவிட்டு - மண்டப வாசலுக்கு ஒட- இன்ஸ்பெக்டர் ராமமூர்த்தி எதிர்ப்பட்டார்.

“ஸார்..! யார்க்கும் எந்த விபரமும் தெரியலை... கார்கள் வந்துட்டும் போயிட்டும் இருந்ததினால ஒரே குழப்பம்...”

விவேக்கின் பார்வை - மண்டப வாசலில் நின்று கொண் டிருந்த அந்த வீடியோ கிராஃபரின் மேல் விழுந்தது.

“ராமமூர்த்தி அந்த ஆளைக் கூப்பிடுங்க.”

ராமமூர்த்தி வீடியோ கிராஃபரை கூட்டிக் கொண்டு வந்தார். இளைஞன்-தலையை படிய வாரி - கண்களுக்கு சோடாபுட்டி கண்ணாடி கொடுத்திருந்தான்.

விவேக் கேட்டான்.

“உம் பேர் என்ன..?”

“செல்வராஜ்... ஸார்..!”

“எவ்வளவு நேரமா வாசல்ல நின்னு வீடியோ கவரேஜ் பண்ணிட்டிருக்கே...?”

“அரை மணி நேரமா ஸார்…! கார்ல இருந்து இறங்கற வி.ஐ.பி.க்களை கவரேஜ் பண்ணனும்னு மினிஸ்டர் சொல்லியிருக்கார்...”

“இந்த கேஸட்டை நான் போட்டு பார்க்கணும்...”

டெக்கின் வாய்க்குள் கேஸட் சுழல - டி.வி. திரையில் கல்யாண மண்டப வாசல் தெரிந்தது. போலீஸ் அதிகாரிகளின் நடமாட்டம். ஒவ்வொரு காராய் வந்து நிற்க, அதிலிருந்து இறங்கும் வி.ஐ.பி.க்கள் கேஸட்டின் ஒரத்தில் படம் பதிவான நேரம் மின்னிக் கொண்டிருந்தது.

விவேக் யோசித்துப் பார்த்தான்.

“அவன் மண்டபத்தை விட்டு வெளியேறும்போது மணி 7.45 இருக்கலாம். 745லிருந்து 7.50க்குள் அவன் ஏதாவது வாகனத்தில் - மண்டபத்தை கடந்து சென்றிருக்க வேண்டும்.

கேஸட்டில் படம் பதிவான நேரம் 744 வர - விவேக் உன்னிப்பாய் கவனிக்க ஆரம்பித்தார்.

கார்கள் வந்தன.

வி.ஐ.பி.க்கள் இறங்கினார்கள். மண்டபத்துக்குள் நுழைந்தார்கள்.

விவேக்கின் பார்வை கூர்மையாயிற்று.

எதிர்ப்பக்கமாய் திரும்பிச் செல்லும் கார்கள். கார்களின் ஜன்னல்களில் முகங்கள். போக்குவரத்தை ஒழுங்கு படுத்தும் போலீஸ் சார்ஜெண்ட்கள். வெளியே வேடிக்கை பார்க்கும் ஜனங்கள்.

பதிவான நேரம் 747.

பெரிய பெரிய தொப்பைகளோடு இரண்டுவி.ஐ.பி.க்கள், பட்டுப் புடவையில் பெண்கள்.

7.48.

7.49.

7.50.

விவேக்கின் பார்வை சட்டென்று கூர்மையாக - கத்தினார்.

“ஸ்டில் போடு...”

ரிமோட் கண்ட்ரோலில் ஸ்டில் போடப்பட - விவேக் எழுந்தான். பக்கத்தில் இருந்த கமிஷனரிடம் சொன்னான்.

“காட் இட்... ரோட்டோட ரைட் சைடில் தெரியற அந்த க்ரே கலர் பிரைவேட் டாக்ஸியைப் பாருங்க. பின் சீட்டு ஜன்னலருகே ஒரு முகம் தெரியுதே. ஹி... ஈஸ்... த பர்ஸன் கேஸட்டை “ஆன் பண்ணு.”

கேஸட் சுழல - -

டாக்ஸி ஓடியது.

“என்ன வேகம் பார்த்தீங்களா..?”

“டாக்ஸி நம்பரைப் பாருங்க. நல்லாவே தெரியுது...”

விவேக் பார்த்தான்.

“டி.எம்.ஒய். 5747.”

அடுத்த அரை மணி நேரத்திற்குள் தகவல் கிடைத்து விட்டது.

டி.எம்.ஒய்.5747 ஒரு அம்பாஸிடர் டாக்ஸி. ஒனர் மற்றும் டிரைவரின் பெயர்: எல்.வாசு. வயது: முப்பது. லைசென்ஸ் தாரரின் முகவரி: எல்.வாசு, த.பெ. லோகநாதன். நெ356-ஏ, பழமலைநாதர் கோயில் தெரு, விருத்தாசலம்.

விவேக்கும், பாண்டிச்சேரி போலீஸ் கமிஷனர் சந்திர குமாரும் கார் மூலமாய் ஒன்றரை மணி நேரம் பயணம் செய்து - எழுபது கிலோ மீட்டரை விழுங்கி - விருத்தா சலம் வந்து சேர்ந்தபோது - பதினோரு மணி.

நல்ல வெய்யிலில் இருந்தது விருத்தாசலம். மணி முத்தாறில் தண்ணீர்

யோசித்து ஓடிக் கொண்டிருந்தது.

கார் பாலத்தை நெருங்கியபோது - இரண்டு பக்கங்களிலும் வாகனங்கள் தேங்கியிருக்க - பாலத்தின் நடுவே கும்பல்...

கும்பலின் நடுவே போலீஸ் தலைகள்.

விவேக்கும், கமிஷனரும் காரை விட்டு இறங்கிப் போக - விருத்தாசலம் போலிஸ் அடையாளம் தெரிந்து கொண்டு விறைப்பாய் சல்யூட் போட்டார்கள்.

“என்ன... ஆக்ஸிடெண்டா..?”

“இல்ல ஸார்... மர்டர்... ஒரு டாக்ஸி டிரைவரை வெட்டிப் போட்டிருக்காங்க...”

விவேக் காரைப் பார்க்க - அதிர்ந்தான்.

டி.எம்.ஒய்.5747.

டாக்ஸிக்குள் எட்டிப் பார்த்தான்.

டிரைவரின் முன் சீட்டிலும் - உடல் பின் சீட்டிலும் தெரிந்தது. டாக்ஸி முழுக்க ரத்தம். பக்கவாட்டு கண்ணாடிகள் உடைந்து - ரோடு முழுக்க கண்ணாடித் துண்டுகள்.

விவேக் அதிர்ச்சியை ஜீரணித்துக் கொண்டு கேட்டாள்.

“ஆர்.சி. புக் கிடைச்சுதா..?”

“கிடைச்சது ஸார்.”

“டிரைவர் பேர் என்ன..?”

“வாசு ஸார்…”

“சம்பவம் எப்ப நடந்தது?”

“அரை மணி நேரத்துக்கு முன்னாடி…”

“கொலையைப் பார்த்த ‘ஐ விட்னஸ்’ யாராவது இருக்காங்களா?”

“இல்ல ஸார்...”

“உங்களுக்கு தகவல் கொடுத்தது யாரு..?”

“டிராஃபிக் கான்ஸ்டபிள் ஒருத்தர்…”

“ஆர்.சி. புக்கை குடுங்க…”

விவேக் வாங்கிப் பார்த்தான். அழுக்கான ஆர்.சி.புக். வாசுவின் போட்டோ இளமையாய் இருந்தது. புத்தகத்தைப் புரட்டினான். கடைசி பக்கத்திற்கு வந்தபோது - பென்சி லால் லேசாக ஏதோ எழுதப்பட்டிருப்பது தெரிந்தது.

விவேக் உற்றுப் பார்த்தான்.

13 - 13 - 5 GDCA.

“என்ன. அது..?”

கமிஷனரிடம் காட்ட- அவர் பார்த்துவிட்டு, உதட்டைப் பிதுக்கினார். “தெரியலையே..! ஆர்.சி. புக்குக்கு சம்பந் தப்பட்ட வார்த்தைகளா இது தெரியலை…”

“13 - 13 - 5 இந்த எண்களைப் பார்த்தா டெலிபோன் நெம்பர் மாதிரியும் தெரியலை…”

“GDCA - இந்த ஆங்கில எழுத்துக்களை எப்படித் திருப்பிப் போட்டு படிச்சாலும் அதுல மீனிங் இல்லை...”

“ஆர்.டி.ஓ.வை கேட்டுப் பார்க்கணும்...”

விவேக்கும், கமிஷனரும் தங்கள் காருக்கு திரும்பினார்கள்.

“மிஸ்டர் விவேக்! வாசுவோட மரணத்தை நான் எதிர்பார்க்கலை. அந்த வாசுவை வெச்சு அந்த வெடி குண்டு வெச்ச ஆளை பிடிச்சுடலாம்னு நினைச்சேன்...”

“வாசு கொலையானது அதிர்ச்சியான விஷயம்தான். நாம டாக்ஸியை டிரேஸ் அவுட் பண்ணின விஷயம் அந்த வெடிகுண்டு ஆசாமிக்கு தெரிஞ்சிருக்கு... வாசு காட்டி குடுத்துடுவானோங்கிற பயத்துல - அவனைத் தீர்த்துக் கட்டியிருக்காங்க.”

விவேக் கமிஷனரிடம் பேசிக் கொண்டிருந்தாலும் - ஆர்.சி.புக்கில் எழுதப்பட்டிருந்த அந்த பென்ஸில் எழுத்துக்கள் மனசை லேசாய் கீறின.

அதென்ன 13 - 13 - 5 - GDCA2?”

பழமலைநாதர் கோயில் தெருவுக்குள் கார் நுழைந்து - 356 - எண்ணிட்ட அந்த வீட்டுக்கு முன்பாய் நின்றது.

சிறிய ஒட்டு வீடு.

கதவில் பூட்டு.

விவேக்கும், கமிஷனரும் இறங்கி - வாசற்படி ஏறினார்கள். விவேக் பூட்டை இழுத்துப் பார்த்துவிட்டு - பக்கத்து வீட்டு வாசலில் நின்றிருந்த பெரியவரிடம் திரும்பினான்.

“இது டிரைவர் வாசு வீடுதானே…?”

“ஆமா…”

விவேக் கார் டிரைவரைக் கூப்பிட்டான்.

“செந்தில்... ஒரு கல்லைக் கொண்டு வந்து இந்த பூட்டை உடை...”

கார் டிரைவர் சேகரித்து வந்த ஒரு பெரிய கல்லை பூட்டின் மேல் போட அது எகிறி விழுந்தது.

விவேக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனான்.

கமிஷனர் தொடர்ந்தார்.

சிறிய வீடு. இரண்டே அறைகள். கட்டிலின் மேல் அவிழ்த்து வீசப்பட்ட லுங்கி, ஜட்டி, சுவரோரமாய் காலியான பிராந்தி பாட்டில். வாழை இலை பொட்டலத்தில் நேற்று சாப்பிட்ட பிரியாணியின் மிச்சம் நாறியது. சுவரில் நடிகை காலண்டர்.

கொட்டாங்குச்சியில் சிகரெட் துண்டுகள்.

சுவரோர மர டேபிளுக்கு வந்தான் விவேக். அதன் இழுப்பறையை திறந்து பார்த்தான்.

ஸ்பேனர் செட், க்ரீஸ் பாட்டில், அறுந்து போன ஒரு ஃபேன் பெல்ட் - இவற்றுக்குப் பொருத்தமில்லாமல் உடை பட்ட ஒரு நிரோத் பாக்கெட். இரண்டாவது அறையைத் திறந்தான் விவேக். சில புத்தகங்கள். எடுத்துப் பார்த்தான்.

தமிழ் கதை புத்தகங்கள்.

புத்தகங்களை புன்னகையோடு பார்த்துக் கொண்டிருந்த விவேக் -

அந்த புத்தகங்களைப் பார்த்ததும் லேசாய் ஆச்சரியப்பட்டான்.

எல்.கே.ஜி. குழந்தைகளுக்கான நர்ஸரி ரைம்ஸ் புத்தகம்.

‘இது எதற்கு இங்கே?’

‘ஒண்டிக்கட்டையான வாசுவுக்கு அந்த நர்ஸரி ரைம்ஸ் புத்தகம் எதற்கு...?’

புத்தகத்தை பிரித்துப் பார்த்த விவேக் - ஒரு பெரிய ஆச்சரியத்திற்குள் விழுந்தான்.

விவேக் தன் கையில் இருந்த நர்ஸரி ரைம்ஸ் புத்தகத்தில் பக்கத்தில் நின்றிருந்த போலீஸ் கமிஷ னரிடம் காட்டினான்.

“ஸார்...! இதைப் பார்த்தீங்களா..?”

அவர் வாங்கிப் பார்த்தார்.

புத்தகத்தின் முதல் பக்கத்திலேயே A B CD ஆங்கில எழுத்துக்கள் இருபத்தியாறும் அச்சிடப்பட்டிருக்க - அந்த எழுத்துக்களின் தலைமேல் வரிசைப்படி எண்கள் தெரிந்தன.

1. 2 3 4. 5 6 7 8 9

A B C D E. F G. H.I

1O 11 12 13 14 15 16 17 18

J K L M N O P Q R

19 2O 21 22 23 24 25 26

S T U V W X Y Z

எண்கள் பென்சிலால் எழுதப்பட்டிருக்க - விவேக் தன் சட்டைப் பையில் வைத்திருந்த வாசுவின் ஆர்.சி. புத்தகத்தை எடுத்து, கடைசிப் பக்கம் எழுதப்பட்டிருந்த - பென்சில் எழுத்துக்களைப் பார்த்தான்.

ஒரே மாதிரியான கையெழுத்து.

விவேக் மலர்ந்தான் கமிஷனரிடம்.

“ஸார்…! ஐ... காட்... இட்...”

கமிஷனர் புரியாமல் பார்க்க, விவேக் தொடர்ந்தான்.

“ஸார்! ஆங்கில எழுத்துக்களையும், எண்களையும் வைத்துக்கொண்டு - யார்க்கும் புரியாதபடி - வாசுவும், அவருடைய சகாக்களும் நடந்திருக்கிறார்கள்.”

“எப்படி..?”

“அந்த ஆர்.சி. புத்தகத்தில் இருக்கிற பென்சில் எண்களையும், எழுத்துக்களையும் படியுங்க...”

“13 – 13 – 5 – GDCA.”

“நெம்பர் 13க்கு என்ன ஆங்கில எழுத்து?”

“M.”

“அடுத்த 13க்கும்M. அடுத்து வர்ற ‘5’க்கு E…”

“ஏஸ்...! அப்படீன்னா... MME.”

“கரெக்ட்... அடுத்தபடியா GDCA அவற்றைப் பார்ப்போம். ‘G’யோட நெம்பர் 7 ‘D’யோட நெம்பர் 4. ‘C’யோட நெம்பர் 3, ‘A’யோட நெம்பர் 1...”

“அதாவது 7431...”

“இப்ப முழுவதையும் சேர்த்து படியுங்க.”

“MME. 743 1...”

“இது எதைக் குறிக்குது..? ‘MME’ன்னா... என்ன?”

“ஒருத்தரோட பேராயிருக்கலாம். உதாரணமா எம்.எம்.ஏகாம்பரம். இல்லே கார் ரெஜிஸ்ட்ரேஷனாக இருக்கலாம். ஆர்.டி.ஓ. - டெலிபோன் நம்பராகவும் இருக்கலாம். ஆர்.டி.ஓ. - டெலிபோன் எக்சேஞ்ச் ரெண்டையும் காண்டாக்ட் பண்ணி - விபரத்தை கறக்க முடியுமான்னு பார்க்கணும். மொதல்ல ஆர்.டி.ஓ.”

இருவரும் வீட்டை விட்டு வெளியே வந்தார்கள்.

டெலிபோன் எக்ஸ்சேஞ்ச்.

சூப்பரிண்டெண்டண்டுக்கு முன்பாய் உட்கார்ந்திருந்தார்கள். விவேக்கும், கமிஷனரும். விவேக் அவரிடம் சொல்லிக்

கொண்டிருந்தான்.

“ஆர்.டி.ஓ.வில் என்கொயர் பண்ணிட்டோம். MME 7431 வெஹிக்கிள் ரெஜிஸ்ட்ரேஷன் இல்லைன்னு சொல்லிட்டாங்க. ஸோ... இந்த எண் அநேகமா ஒரு டெலிபோன் நெம்பராய் இருக்கலாம். இது யாரோட நெம்பர்னு வெரிஃபை பண்ணி சொல்ல முடியுமா?”

சூப்பரிண்டெண்டண்ட் அந்த எண்ணைப் பார்த்து விட்டு, தீர்க்கமாய் தலையாட்டி உதட்டைப் பிதுக்கினார்.

“நிச்சயமா... இந்த நெம்பர் இந்த எக்ஸ்சேஞ்ச் சர்க்கிளில் கிடையாது. எண் 74ல் டெலிபோன் எண்கள் இன்னும் ஆரம்பிக்கவே இல்லை. இட்... மே... பி... நெய்வேலி எக்ஸ்சேஞ்ச், ஒரு பத்து நிமிஷம் வெயிட் பண்ணீங்கன்னா. நெய்வேலியில் இந்த டெலிபோன் நெம்பர்யாருக்கு சொந்தம்ங்கிறதை கேட்டுச்சொல்றேன்…”

“ப்ளீஸ்…”

ப்ளிஸ்.” சூப்பரிண்டெண்டண்ட் மேஜை மேல் இருந்த டெலிபோனை நகர்த்தி வைத்துக் கொண்டு ரிஸிவரை எடுத்தார். டயல் கோர் பட்டன்களைத் தட்டி சில விநாடிகள் மெல்லிய குரலில் பேச ஆரம்பித்தார். பரஸ்பர அறிமுகத் துக்குப் பின் விஷயத்துக்கு வந்தார்.

“போலீஸ் ஒரு இன்ஃபர்மேஷனுக்காக வந்திருக்காங்க... உங்க எக்ஸ்சேஞ்ச் சர்க்கிளில் யாரோட நெம்பர்...?”

“ப்ளீஸ் பி... ஆன்... தி... லைன்...”

சூப்பரிண்டெண்டண்ட் காத்திருந்தார். முழுதாய் ஒரு நிமிஷம் கரைந்திருந்தபோது - ரிஸிவரில் குரல் கர கரத்தது.

“7431 டெலிபோன் கே.சிக்கந்தர் என்பவருக்கு சொந்தமானது. நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான குவார்ட்டர்ஸில் அவர் இருக்கிறார். முழு முகவரி கீழ்க்கண்டபடி… ஜே.சிக்கந்தர், நெம்பர் 186-ஏ, “பி” டைப் குவார்ட்டர்ஸ், திலக் ரோட், நெய்வேலி...”

“ஒரு நிமிஷம் லைன்ல இருங்க
” சொன்ன சூப் பரிண்டெண்டண்ட், ரிஸிவரை விரல்களால் பொத்திக் கொண்டு - விவேக்கை ஏறிட்டார்.

“7431 டெலிபோன் ஜே.சிக்கந்தர் என்பவருக்கு சொந்தமானது என்று சொல்கிறார்கள்...”

விவேக் தன் உதட்டுக்குள் பெயரை உச்சரித்தான்.

“ஜேசிக்கந்தர்... இந்தப் பெயரில் MIME இல்லையே...?

“மே ஐ ஸ்பீக் வித் தட் பர்ஸன்...?” விவேக் கேட்க, சூப்பரிண்டெண்டண்ட். “பை ஆல் மீன்ஸ்” என்று சொல்லி ரிஸீவரை நீட்டினார்.

விவேக் வாங்கிப் பேசினான்.

“நாங்க... போலீஸ்...! 7431 டெலிபோன் எண் ஜே.சிக்கந்தர் என்பவருக்குச் சொந்தமானதுதானா?”

“ஆமாம்...”

“MME என்பதற்கு என்ன அர்த்தம்?”

“MME...?”

“எஸ்…”

“குரல் யோசித்துவிட்டு சொன்னது. “ஸாரி... தெரியவில்லை...”

“சிக்கந்தர் நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனில் வேலை பார்க்கிறார்... இல்லையா..?”

“ஆமாம்...”

“என்ன டெஸிக்னேஷன்?

“தெரியவில்லை...!”

“கேட்டுச் சொல்ல முடியுமா?

“ரிஸீவரை வைத்து விடுங்கள். என்.எல்.சி.யில் விசாரித்துவிட்டு மறுபடியும் டெலிபோன் செய்கிறேன்...”

“தேங்க்ஸ்...”

விவேக் ரிஸிவரை வைத்துவிட்டு - நாற்காலிக்கு சாய்ந்தார். சூப்பரிண்டெண்டண்ட் வரவழைத்துக் கொடுத்த டீயை சாப்பிட்டு முடிப்பதற்குள் டெலிபோன் கூப்பிட்டது. விவேக் ரிஸிவரை எடுத்தான்.

“எஸ்…”

“ஸார்…! சிக்கந்தர் நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனில் “மைன்ஸ் மெயின்டனென்ஸ் இன்ஜினியர்’ டெஸிக்னேஷனில் வேலை பார்க்கிறார்..!”

“மைன்ஸ் மெயின்டனென்ஸ் இன்ஜினீயரா..?”

“ஆமாம் ஸார்...”

விவேக் பிரகாசமானான்.

‘MME’ இங்கே ஒளிந்து கொண்டு இருக்கிறது.

விவேக் குரல் கொடுத்தான்.

“ஹலோ...”

“நானும்... கமிஷனரும் இப்போது நெய்வேலி புறப்பட்டு வருகிறோம். சிக்கந்தர் பற்றி நாங்கள் விசாரித்ததை வெளியே யார்க்கும் சொல்ல வேண்டாம்… கான்ஃபி டென்ஷியலாக இருக்கட்டும்…”

“எஸ்... ஸார்...”

“தேங்க்யூ...”

விவேக் ரிஸீவரை வைத்துவிட்டு எழுந்தான்.

நெய்வேலிக்கு விவேக்கும் கமிஷனரும் வந்து சேர்ந்தபோது, மத்தியானம் இரண்டு மணி.

நெய்வேலியில் அமில வெய்யில்.

‘பி’ டைப் குவார்ட்டர்ஸ் இருந்த திலக் ரோட்டில் ஜிப்பை நுழைத்து - 186 -ஏ எண்ணிட்ட வீட்டுக்கு முன்பாய் நிறுத்தினார்கள்.

குவார்ட்டர்ஸ் ஏரியா முழுவதும் நிசப்தம்.

வீட்டின் சிறிய காம்பௌண்ட் கேட்டை திறந்து கொண்டு விவேக் உள்ளே போக - கமிஷனர் தொடர்ந்தார். வீட்டுக் கதவில் பிளாஸ்டிக் பெயர்ப் பலகை தெரிந்தது.

J.SIKKANDER (MME).

முன்பக்கம் ஸ்கூட்டர் நின்றிருந்தது.

திறந்திருந்த பக்கவாட்டு ஜன்னல் வழியே - ஃபேன் சுழல்வது

தெரிந்தது.

டி.வி.யில் கிரிக்கெட் ஆரவாரம்.

விவேக் காலிங்பெல் பொத்தானின் மேல் கை வைக்க முயன்ற விநாடி திறந்திருந்த கதவு காற்றுக்கு ஆடுவது தெரிந்தது.

கதவை மெல்ல தள்ளினான்.

வரவேற்பறை.

சுவர் போட்டோவில் அந்த இளைஞன் சிரித்தான். போட்டோவுக்குக் கீழே பொடி எழுத்துக்களில் 'சிக்கந்தர்' என்று தெரிந்தது.

விவேக் உள்ளே போனார்.

ஆள் யாரும் இல்லை.

விவேக் பக்கவாட்டில் தெரிந்த படுக்கையறையை எட்டிப் பார்த்து அதிர்ந்தான்.

முகம் திரும்பியிருக்க - படுக்கையில் -

ரத்தமாய் குப்புற விழுந்திருந்தான் அவன்.

விவேக் வேகவேகமாய் பக்கத்தில் போய் பார்க்க - சிக்கந்தர்.

முதுகில் நான்கைந்து தோட்டாக்கள் குழி பறித்திருக்க எந்த நிமிஷமோ பிணமாகியிருந்தான்.

விவேக் நெற்றியைப் பிடித்துக்கொண்டு ஆயாசமாய் கமிஷனரை பார்த்த விநாடி -

டீபாயின் மேலிருந்த டெலிபோன் அலற ஆரம் பித்தது.

தூர்ந்து போன நிலக்கரி சுரங்கம் ஒன்றின் உட் பகுதியில் - சத்யம் உட்கார்ந்திருக்க - அவனைச் சுற்றிலும் ஐந்து பேர் தெரிந்தார்கள்.

எல்லோர் முகங்களிலும் கவலை. சத்யம் சற்றே கோபம் கலந்த குரலில் பேசிக் கொண்டிருந்தான்.

"அந்த போலீஸ் ஆபீஸர் விவேக்கால் எல்லாக் காரியமும் கெட்டது. இந்தத் தோல்வி நம்மை இனி தொடரக்கூடாது. தமிழ்நாட்டையும், பாண்டிச்சேரியையும் கதிகலங்க வைக்கக்கூடிய அளவுக்கு நம் அடுத்த திட்டங்கள் வெற்றிகரமாக நடைபெற்றாக வேண்டும்..."

ஒருவன் குறுக்கிட்டான்.

“டிரைவர் வாசு நமக்காக எவ்வளவோ உதவி பண்ணியிருக்கான். அதே மாதிரி மைன்ஸ் மெயின்டெனன்ஸ் எஞ்ஜினியர் சிக்கந்தரும் நம்ம இயக்கத்துக்காக எத்தனையோ ஒத்துழைப்பு கொடுத்துட்டு வந்தார். அவங்க ரெண்டு பேரையும் கொல்லாமல் இருந்திருக்கலாம்...”

சத்யம் அவனை ஏறிட்டான். “வாசுவையும், எஞ்ஜினியர் சிக்கந்தரையும் போலீஸ் ஸ்மெல் பண்ணிட்ட பிறகு - அவங்களை உயிரோடு இருக்கவிட்டா. போலீஸ் கையில் அவங்க மாட்டிக்கிட்டு - அடிக்கும், உதைக்கும் பயந்து நம்ம இயக்கத்தைக் காட்டிக் கொடுக்க தயங்கியிருக்க மாட்டாங்க...”

“டிரைவர் வாசுவை தீர்த்துக் கட்டியது சரி… எஞ்ஜினியரை விட்டிருக்கலாம். தூர்ந்து போன நிலக்கரி சுரங்கங்களை... வெடிகுண்டுகளை பதுக்கி வைக்கிற கிடங்குகளாக பயன்படுத்த அவர் நமக்கு உதவி பண்ணியிருக்கார்...”

“புரியாமே பேசாதே…! எஞ்ஜினியர் சிக்கந்தர் ஒரு கோழை. போலீஸ் போய் அவரை மிரட்டினா போதும்… வெடிகுண்டுகளை பதுக்கி வைச்சிருக்கிற தூர்ந்து போன நிலக்கரி சுரங்கங்களைக் கைகாட்ட அவர் தயங்க மாட்டார். சிக்கந்தரை நாம இப்ப கொன்னுட்டதால... எந்தப் பிரச்சினையும் நமக்கு இல்லை...”

“சரி... நம்ம அடுத்த திட்டம் என்ன..?”

“அடுத்த திட்டம் இந்த நெய்வேலியில் தான். நிலக்கரி சுரங்கங்களோடு முக்கியமான கேந்திரங்களை வெடி குண்டுகள் வைத்து ஒரே நேரத்துல வெடிக்க பண்ணிட்டு பாண்டிச்சேரி போயிடறோம்...”

“திட்டத்தை என்னிக்கு நிறைவேத்தப் போறோம்...?”

“இன்னிக்கு ராத்திரியே..! எஞ்ஜினியர் சிக்கந்தர் இருந்த வரைக்கும் நம்மாலே பயம் இல்லாமே தூர்ந்து போன நிலக்கரி சுரங்கங்களுக்குள்ளே பாதுகாப்பா இருக்க முடிந்தது. இனிமே அப்படி இருக்க முடியாது. இந்த லிக்னைட் கார்ப்பரேஷனை நிர்மூலம் பண்ணிட்டு உடனே கேம்ப்பை மாத்த வேண்டியதுதான்...”

சத்யம் சொல்லிக் கொண்டிருந்தபோதே –

பின்பக்கம் அந்தக் குரல் கேட்டது.

“அது அவ்வளவு சுலபமில்லை சத்யம்...”

எல்லோரும் திடுக்கிட்டுப் போய் திரும்ப –

சிக்கந்தர் நின்றிருந்தான்.

கையில் லைட் மெஷின்கள்.

“உங்கள்ல... எவன் அசைஞ்சாலும் சரி... எல்லோரோட உடம்பும் ரத்தப் பொத்தலாயிடும்... கைகளை தலைக்குப் பின்னாடி கோர்த்துக்கிட்டு ஒரு ஒரமா அப்படி நில்லுங்க...”

உடனே கட்டுப்பட்டார்கள்.

சத்யம் சிக்கந்தரை வியப்பாய் பார்த்தான். ‘கட்டிலில் குப்புறப்படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த சிக்கந்தரை திறந்திருந்த ஜன்னல் வழியே - சைலன்ஸர் துப்பாக்கியால் நான்கைந்து தோட்டாக்களை அனுப்பி - சுட்டுக் கொன்றோமே…! இப்ப இவன் எப்படி உயிரோடு வந்தான்?

“பிணமா கிடந்தவன் எப்படி உயிரோடு வந்தான்னு பார்க்கறியா..? நீ சுட்டுக் கொலை பண்ணினது என்னையில்லை. என்னை மாதிரியே இருக்கிற என் துபாய் தம்பி... பேரு... ஷ்யாம்... இன்னிக்கு காலையிலதான் அவன் துபாயிலிருந்து வந்தான். ஒரு ஹார்ட் ஆபரேஷனை பண்ணிக்கிட்டு திரும்பவும் துபாய்க்குப் போக இருந்தவனை... உன்னோட அவசரம் பலியாக்கிடுச்சி...”

“செ... செத்தது... உன் தம்பியா..?”

“பாவிகளா…! ஆபத்து இருக்குன்னு தெரிஞ்சும் உங்க இயக்கத்துக்கு உதவி பண்ணினேன். தூர்ந்து போன நிலக்கரி சுரங்கங்களை நீங்க வெடிகுண்டு கிடங்குகளாய் மாத்தினபோது... அதுக்கு பாதுகாப்பு குடுத்தேன். ஆனா... உங்களுக்கு நன்றி விசுவாசம் இல்லை... போலீஸ் என்னை நெருங்கி வர்றது தெரிஞ்சதும்... என்னை பிணமாக்க முடிவு பண்ணிட்டீங்க... உங்க வெறிச் செயலுக்கு என் தம்பி பலியாக - விருத்தாசலம் வரைக்கும் வேற வேலையா போயிருந்த நான் தப்பிச்சுட்டேன். மத்தியானம் ரெண்டு மணி சுமாருக்கு விருத்தாசலத்திலிருந்து தம்பியோட பேச வீட்டுக்குப் போன் பண்ணினேன். போனை அட்டெண்ட் பண்ணினது யார் தெரியுமா...?”

“நான்தான்...” விவேக் பின்னாலிருந்து கையில் ரிவால் வரோடு காணப்பட்டான். அவனுக்குப் பின்னால் கமிஷனர்.

விவேக் புன்னகைத்து இரண்டடி முன்னால் வந்தான்.

“சத்யம்! சிக்கந்தர் அப்ரூவராக மாறி ஒரு மணி நேரமாச்சு… உங்க கும்பல் இந்த நேரத்துக்கு இந்த இடத்தில் தான் இருக்கும்னு துல்லியமா கணிச்சு எங்களை கூட்டிட்டு வந்தார். அவர் கணிப்பு தப்பாயிடலை.”

சத்யத்தின் கும்பல் வியர்த்து வழிய, விவேக் தொடர்ந் தான்.

“வெடிகுண்டு கிடங்குகளாய் மாறியிருக்கிற தூர்ந்து போன நிலக்கரி சுரங்கங்கள் பூராவும் இப்போ போலீஸ் கஸ்டடியில்… ஒவ்வொரு வெடிகுண்டையும் ஊமையாக் குற முயற்சியில் பாம் ஸ்க்வாட் ஈடுபட்டிருக்கு. இந்த மண்ணில் விளையற உணவை சாப்பிட்டுக்கிட்டே. இந்த மண்ணில் சுரக்கிற தண்ணீரை குடிச்சுக்கிட்டே… இந்த மண்ணுக்கு துரோகம் பண்ண நினைக்கிறீங்களே..? இது எவ்வளவு பெரிய அதர்மம்? வெளிநாட்டு சதி கும்பல் வீசி எறியிற டாலர் நோட்டுகளுக்கு ஆசைப்பட்டு. பெத்த தாய்க்கு சமமான நாட்டைக் காட்டிக் கொடுக்கலாமா? ஒரு பாவமும் அறியாத ஜனங்களை வெடிகுண்டு வீச்சுக்குப் பலியாக்கலாமா? இந்த இந்திய மண்ணை ரத்தக் களறியாக்கி பார்க்கிறதுல அப்படி யென்ன சந்தோஷம்…?”

சத்யமும், அவன் சகாக்களும் தலைகுனிந்து நிற்க - விவேக்குக்குப் பின்னால் பூட்ஸ் சத்தங்கள் ‘தபதப’ வென்று எழுந்தன.

*****